ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# இராமாயண சூடாமணி

## பாலகாண்ட மூலம்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

இது
சென்னைபுரி வித்துவான்
விஷ்ணு பாத சேகரர் அவர்களால்
இயற்றப்பெற்றது.

இதற்குச்
சென்னைப் பச்சையப்பன் காலேஜ் உயர்தரக் கல்விச்சாலை
மாஜித் தலைமைத் தமிழாசிரியர்
கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களால்
இயற்றப்பெற்ற
அருங்கவியுரையும் அரும்பதவுரை முதலிய உரைகளும்
இறுதியிற் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இவை
சென்னைத் தேவேந்திரா முத்திராக்ஷர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றன.

ஆங்கில ஆண்டு 1941க்கு நேர் விக்கிரம ஆண்டு.

ஸ்ரீ:

## இராமாயண சூடாமணிப் பாலகாண்டத்தின்

# பொருளடக்க அட்டவணை


| வரிசைக்கிரமம் | | பக்கம் |
|---|---|---|
| (1) | பாசுர முதற்குறிப்பகராதி | (க) முதல் (ய) வரை |
| (2) | படல அகராதி<br>இதைப் 'படல அட்டவணை' என்று திருத்திக்கொள்க. | (யக) ல் மாத்திரம் |
| (3) | பாலகாண்டமூலத்தின் பிழைதிருத்தம் | (யஉ) ல் மாத்திரம் |
| (4) | படல மொத்தத்தொகையின் பிழை திருத்தம்<br>இதைப் 'படலச்செய்யுள் மொத்தத் தொகையெண்ணின் பிழைதிருத்தம்' என்று திருத்திக்கொள்க. | (யரு) ல் மாத்திரம் |
| (5) | முகவுரை | (யசு) முதல் (யஎ) வரை |
| (6) | சிறப்புப்பாயிரம்<br>இதன் 26-ஆம் அடியின் 3-ஆம் சீர் 'களனைத்து' என்றிருப்பதை 'ளனைத்து' என்றும், இதன் 58-ஆம் அடி முதற்சீர் 'நயந்தேனச்' என்றிருப்பதை 'நயந்தேனக்' என்றும் திருத்திக்கொள்க. | (யஅ) முதல் (உய) ,, |
| (7) | இராமாயண சூடாமணிப் பாலகாண்டத்தின் காப்புச்செய்யுட்கள் (ஆங்கில எண்ணில்) | (1) முதல் (2) வரை |
| (8) | தற்சிறப்புப்பாயிரம் | (3) முதல் (5) வரை |
| (9) | நூற்பயன் | (5) முதல் (6) வரை |
| (10) | நூல் | (7) முதல் (102) வரை |
| (11) | இந்நூலாசிரியர் திருமால் பேரிலும் திருமகள் பேரிலும் பாடியுள்ள இரண்டு தனிப்பாடல்கள். | (102)ல் மாத்திரம் |

| வரிசைக்கிரமம் | | பக்கம் |
|---|---|---|
| (12) | பாலகாண்டத்தின் அருங்கவியுரையும் அரும்பதவுரை முதலிய உரைகளும் (கடிகார எண்ணில்) | (i) முதல் (xxxiii) வரை |
| (13) | இந்நூலாசிரியராலியற்றப்பெற்றுள்ள திருவேங்கடச் சந்தப்பதிகம் | (xxxiv)ல் மாத்திரம் |


இப்பதிகத்தின் பத்தாவது செய்யுளின் முதலடியின் ஐந்தாஞ்சீர், 'உடல் சேர்ங்' என்றிருப்பதை 'உடல் சோர்ங்' என்று திருத்திக்கொள்வதோடு இப் பதிகத்தின் தலைப்பில் 'விஷ்ணுபாத சேகரால்' என்று இருப்பதை 'விஷ்ணுபாத சேகரரால்' என்று திருத்திக் கொள்க.

---

## செய்ந்நன்றி பாராட்டல்


சென்னைப் பச்சையப்பன் காலேஜ் உயர்தரக் கல்விச்சாலையின் மாஜித் தலைமைத் தமிழாசிரியர், கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களும், மேற்படி உயர்தரக் கல்விச்சாலையின் தலைமைத் தமிழாசிரியர், ஆ. வி. கன்னைய நாயுடு அவர்களும், முன்னமே அச்சிடப்பட்டனவும் இப்போது அச்சிடப்படுகின்றனவுமாகிய இவ்விராமாயண சூடாமணியின் சில பகுதிகளை ஒப்புநோக்கிக் கொடுத்தும் இன்றுவரையில் ஒப்புநோக்கிக் கொடுத்துக் கொண்டும் வருகின்றார்கள். சென்னைப் புரசை ஹுத்தரன் மிஷன் உயர்தரக் கல்விச்சாலையின் மாஜித்தலைமைத் தமிழாசிரியரும் வித்வானுமாகிய மே. வி. வேணுகோபாலப் பிள்ளை யவர்களும் மேற்சொல்லிய வண்ணமே மேற்படி பகுதிகளை ஒப்புநோக்கி வருவதேயன்றி இவ்விராமாயண சூடாமணியின் பாலகாண்டத்திற்கும் அயோத்தியா காண்டத்திற்கும் பாசுர முதற்குறிப்பகராதிகள் வகுத்துக் கொடுத்திருக்கின்றனர். ஆக இம்மூவர்களின் இத்தகைய செயல்களே இவர்களுக்கு என்மீதுள்ள பேரன்பையும் மிகுந்த விசுவாசத்தையும் விளக்குகின்றன. ஆதலின், இத்தகைய இம்மூவர்களின் மேற்கூறிய பேருதவிச் செயல்களை நான் என்றைக்கும் மறவாமலிருக்கக் கடமை பூண்டிருக்கின்றேன். இம்மூவர்களும் எம்பெருமான் திருவருளால் நீடிய ஆயுளும் நோயற்றவாழ்வும் குறைவற்ற இருவகைச் செல்வ முதலியனவும் மேன்மேலும் பெருகப்பெற்று இப்பூவுலகில் பற் பல்லாண்டு வாழ்ந்த பின்னர் நித்திய மங்கள அந்தமில் பேரின்ப வீட்டை யடைவார்களாக.

இங்ஙனம்

விஷ்ணு பாத சேகரன்.

ஸ்ரீராமஜெயம்.

# இராமாயண சூடாமணிப் பாலகாண்டத்தின்

# பாசுர முதற்குறிப்பு அகராதி


| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் | பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| அ | | அதுமுதலா விதைநாடி | 78 |
| அக்கரை முன்செல் | 82 | அந்தணா ளனடிவ | 28 |
| அகழிகீ ழுலகேழ் | 17 | அந்த ரந்தணி | 7 |
| அகிலங் காக்க | 1 | அந்தவேந்தன தமைச்ச | 85 |
| அகிலமே யிஃதென் | 94 | அந்தச்சேதியாங் | 57 |
| அங்கயற் கண்ணி | 82 | அந்தப்பாதகி | 44 |
| அங்கழ காயநற் | 42 | அந்தணர் முதலியோர் | 97 |
| அங்குமேவிய | 14 | அந்தநற் காட்சி | 31 |
| அங்குசம் படுக்கச் | 9 | அந்தமக மாற்றுதற்காங் | 32 |
| அங்கெழும் பயிர்க்கண் | 11 | அந்தமாமுனியோ | 41 |
| அசுவமக | 56 | அந்தமே மிகுந்து | 3 |
| அசைவிலதாகி | 18 | அந்தமொழி தன்னைக்கேட்டாங் | 54 |
| அஞ்ச லஞ்சல்நின் | 40 | அந்தரங்கடந்து | 21 |
| அஞ்ச லஞ்சலென் | 51 | அந்தரத் துயர்ந்த | 95 |
| அஞ்சுமானே | 57 | அந்தவில் லீதுகண்டாய் | 100 |
| அட்டுண்காகங் | 63 | அந்நிறயாற்றினின் | 83 |
| அடல்மிகுமங் | 80 | அம்பகமொத்திக் கொண்டாங் | 52 |
| அடித்தபேரிகை | 35 | அம்பிகாபதியாங் | 59 |
| அடிமலர்சூடு | 26 | அம்புய மலரயன்றனை | 58 |
| அடியெனு | 25 | அம்மொழி கேட்டு | 62 |
| அண்டம்பிளாங் | 80 | அமிழ்ந்தெழுங் கராக்க | 17 |
| அண்டமே லணவு | 22 | அரசமாமுனிவனுக | 73 |
| அண்ணல்வான் மீகி | 5 | அரியபொன் னுலகினி | 8 |
| அணிகளுக் கணிதா | 96 | அருகுறுங் கோசிகப்பே | 73 |
| அத்தகை நகரங் | 24 | அருந்ததி கொழுனன் | 71 |
| அத்தகை யகங்க | 21 | அருந்தவம் புரிந்தாங் | 47 |
| அத்தகை யாய | 74 | அருந்தவன் முனும் | 29 |
| அத்தகைப் பரம்பொரு | 49 | அருந்துதற்கென | 14 |
| அத்தகைய மாதரெறி | 87 | அலகிலா வுலகனைத்து | 51 |
| அத்ததியவ் | 32 | அலகில்நற் சுழிக | 64 |
| அத்தமே யாதிசம்பத் | 6 | அவன்கரந் தாழ்ந்திட | 48 |
| அதன்கரை மேவிநின்ற | 17 | அற்பமின் னிடையின் | 84 |
| அதிசிறுகாலை | 13 | அன்றியு மன்னவ | 42 |

| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் | பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| அன்றியும் பசுமுன் | 5 | அன்னவன்றன் சுதனஞ்சு | 56 |
| அன்றில்நின் னகன்றில் | 68 | அன்னவன்றன் சொற்கேட் | 57 |
| அன்றுபன் னிரண் டாந்தின | 37 | அன்னவ னஃதுணர்ந் | 59 |
| அன்றெழு சகரநல் | 58 | அன்னவ னாதி | 65 |
| அன்ன சாலை தோறு | 35 | அன்னவ னொருதின | 25 |
| அன்ன சாலைகள் | 15 | அன்னவா றியங்கு | 37 |
| அன்னசொல் லமிழ்தந் | 32 | அன்னையரோ டருங்குருவை | 88 |
| அன்னசொற் கேட்டாங் | 72 | அனந்தமா மந்தவீதி | 22 |
| அன்னசொற் கேட்டே | 31 | அனைத்தையும் விழுங்கிப் | 9 |
| அன்னசொற் செவியுற | 25 | அனைய நங்கைய | 86 |
| அன்னதோ ரகழி | 17 | அனைய நால்வரா | 46 |
| அன்ன போதாங் | 35 | அனைய பாலையி | 43 |
| அன்ன மொழியுணர்ந் | 29 | அனைய வாம்பெயர் | 38 |
| அன்ன வன்றனை | 29 | அனையநற் கங்கையைத் | 60 |
| அன்ன வாறவர் | 99 | அனையநற் காட்சியோ | 81 |
| அன்ன வாறவற் | 43 | அனையநற் சரிதங் | 61 |
| அன்னணஞ் சூழ்கி | 17 | அனையநன் மாடி | 21 |
| அன்னண மமைச்ச | 37 | அனையமா முனியு | 32 |
| அன்னண முலகம் | 40 | அனையமால் சயன | 33 |
| அன்ன தன்பின் | 88 | ஆ | |
| அன்னதனா லெவ்வுலகு | 53 | ஆக்கிய யனிகங் | 71 |
| அன்னதென் றிசையை | 72 | ஆங்குவந் துற்றோ | 31 |
| அன்னதேர் வீதிக் | 19 | ஆசிலார் கூர்வேற் | 20 |
| அன்னதோ ரகழி | 17 | ஆடவர் நங்கைய | 83 |
| அன்னநல் லமயந் | 37 | ஆடுவார் பல | 94 |
| அன்னநற் சாலை | 20 | ஆண்டொரு பரதன் | 98 |
| அன்ன பொன்னாட்டவ | 82 | ஆதலா லிதனை | 5 |
| அன்னமாச் சோலை | 22 | ஆதலாற் றிருவேயாக | 66 |
| அன்னமும் வீடும் | 5 | ஆதலி னிவனைக்கோற | 45 |
| அன்னவர் கலைந்த | 11 | ஆதலி னினியிவணுற்ற | 49 |
| அன்னவர் சென்றபி | 101 | ஆதவ னுச்சியி | 83 |
| அன்னவர் தங்க | 66 | ஆய காதை | 27 |
| அன்னவர் மாற்றங் | 47 | ஆய பின்னரச் | 38 |
| அன்னவர் முறைசொற் | 26 | ஆயவ ரனைவர் | 91 |
| அன்னவர் மூவர் | 41 | ஆயிரங்கை யீருருவா | 54 |
| அன்னவரை | 34 | ஆயினு மன்னவள் | 75 |
| அன்னவள் கௌசிகைப்பே | 47 | ஆரண வாக்கி | 31 |
| அன்னவள் போந்தா | 92 | ஆலயப் பூசை | 10 |
| அன்னவன் கண்ணொன் | 49 | ஆற்றுநீர் கால்கட் | 11 |
| அன்னவன் துடிக்கை | 48 | ஆறுநாள்வரை | 50 |

| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|
| ஆனதே யோரிடத்தி | 2 |
| ஆனையாயிர மாற்ற | 44 |
| ஆனைமா முகங்கொண் | 8 |
| இ | |
| இசைமிகு வதுவர | 97 |
| இடியுரு ரரவம் | 40 |
| இடையரோ டுழவர் | 15 |
| இத்தகைய பெரியவொலி | 81 |
| இத்தகை யகத்தின் | 93 |
| இத்தகை யாளன் | 24 |
| இத்தகை யொளியினால் | 82 |
| இத்தகை விளையாட் | 85 |
| இதுவரை யுரைத்த | 4 |
| இந்தநற் சோலை | 52 |
| இந்திர நீலத்தாய | 96 |
| இந்திர நீலநிறத்தோடு | 69 |
| இந்திரன் முதலா | 95 |
| இரதங் கரிபரிக | 23 |
| இரதியோடு | 43 |
| இரவியத்ததி | 68 |
| இரவெனு மரக்க | 75 |
| இராமனைச் சீதாராம | 91 |
| இருசுடர் வியாழன் | 26 |
| இருடியு மகத்தினை | 50 |
| இருதிறக் கவிகைக் | 90 |
| இருதிற நடன | 90 |
| இருதிற வரசர் | 90 |
| இருதிற விரதப் | 89 |
| இரும்பினாற் செம்பீங் | 4 |
| இல்லாரே யில்லை | 16 |
| இல்லையாங் கியற்ற | 16 |
| இழையும்மை யில்லா | 16 |
| இற்றவிற் றுண்டிரண் | 78 |
| இறுதியாங் காலந் | 6 |
| இன்னவாய்மை | 27 |
| இன்னமூவரு மேகும் | 42 |
| இன்னலென் சாகரத் | 101 |
| இன்னவா மகங்க | 20 |
| இன்னணம்பின் தொடர்ந் | 87 |
| இன்னணம் நற்றுயாதி | 70 |
| இன்னணம் நீர்விளை | 83 |
| இன்னணம் போந்தார் | 36 |
| இன்னண மியாரு | 76 |
| இன்னண முனிவனோத | 62 |
| இன்னவன் காதி | 71 |
| இன்னன மேம்பொருட் | 3 |
| இனைய செய லெழுமடவார் | 87 |
| இனைய சேதியை | 44 |
| இனைய மாற்றங்கேட் | 99 |
| இனையநற் காட்சி | 90 |
| உ | |
| உங்கட் காயுளின் | 45 |
| உடலோடாங் குயிர்சேர்ந் | 96 |
| உதயங்கண் | 85 |
| உந்தித் தாமரை | 8 |
| உம்பர்கட் கிறைவ | 24 |
| உம்பர்மீ தணவு | 19 |
| உம்பராம் புலவரெல்லா | 2 |
| உமையவட்குச் சுதனை | 55 |
| உயர்ந்துநற் கதிர்கள் | 12 |
| உலகங்க ளெவற்று | 66 |
| உலக நங்கைதன் | 63 |
| உலகனைத்துஞ் | 54 |
| உலகனைத்தையு முந்தியிற் | 3 |
| உழவர்தா மழையைக் | 11 |
| ஊ | |
| ஊரெல்லாம் பொழிலும் | 13 |
| எ | |
| எங்கணும்போய் விசயமொடும் | 29 |
| எண்ணிலா தவத் | 50 |
| எண்ணுநம் படைக | 71 |
| எண்ணெ யாதிய | 13 |
| எந்தத் தேவரு | 18 |
| எந்த மன்னர்கட்கு | 35 |
| எந்தை தந்தை | 27 |
| எந்தைக்கு மெற்கும் | 4 |
| எந்தையே பரம | 48 |
| எல்லையி லாங்க | 9 |
| எழுந்தனன் | 40 |
| என்றங் கோதலு | 41 |

| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|
| என்றகோ சிகன்சொற் | 70 |
| என்றநன் மாற்றங் | 62 |
| என்றவ னங்கப் | 70 |
| என்றிந்த வாறு | 75 |
| என்றினும் பலவாறாக | 69 |
| என்று கூறிமுன் | 99 |
| என்று சோதிடத்தி | 35 |
| என்னருந் தவமோ | 40 |
| என்னையாள் திருமா | 33 |
| என்னையு நாடகத்தோ | 3 |
| ஏ | |
| ஏதமில் முனி | 46 |
| ஏழிலே யொன்றைச் | 2 |
| ஏனைமாத ரிருவ | 34 |
| ஐ | |
| ஐந்தையு மடக்க | 62 |
| ஐய னின்னவை | 99 |
| ஒ | |
| ஒருங்கு நூலையர்க | 13 |
| ஒருபது சிரங்க | 45 |
| ஒருரதமீது தூய | 28 |
| ஒருவனை யேவி | 28 |
| ஒளிமிகுந் தோங்கு | 20 |
| ஒன்பது கோள்கட்கும் | 96 |
| ஒன்றினிக் குரியவ | 34 |
| ஓ | |
| ஓடினர் திசைகடோறு | 26 |
| ஓடினர்கள் | 57 |
| ஓது மொழி | 99 |
| ஓர்ந்தன ரிதனைத் | 72 |
| க | |
| கங்கைமுத லாநதிக | 30 |
| கசரத துரகங் | 24 |
| கட்டுரையாக | 4 |
| கட்டுற்ற மகசாலை | 30 |
| கடந்தெழி லந்த நாட்டை | 61 |
| கடுத்துளம் வாட்டத்தோ | 100 |
| கடும்பெருஞ் சூலத்தோடு | 18 |
| கண்டதை யவனுமம் | 60 |
| கண்டனன் வலாரி | 61 |
| கண்டி ராகவன் | 50 |
| கண்டிடு மகிபர் | 33 |
| கண்டு நிட்டைகொள் | 57 |
| கண்ணிமை கொட்டின | 74 |
| கண்வழியாக | 69 |
| கணவனைப் பிரிந்தோர் | 64 |
| கதிர்மிகுந் தோங்கும் | 3 |
| கந்தி மாமரத் | 14 |
| கந்திக ளிரண்டி | 64 |
| கம்ப நின்றுக | 8 |
| கம்பங்க டோறுங் | 30 |
| கம்பர் பற்பல | 43 |
| கமழ்மகிழ் மாலை | 4 |
| கரகம்வெண் படிக | 9 |
| கரியபெருமலை தன்றலைக் | 44 |
| கரியமாமுகி லனைய | 39 |
| கரியமாவொடு வெளிய | 39 |
| கரும்பிழி யிரத | 5 |
| கருமுகி லனையா | 101 |
| கல்லகமீர மணி | 81 |
| கல்லுருமாறி | 61 |
| கலவியின் | 63 |
| களித்தவ ணொண்பெண் | 36 |
| கலைகலைக் கலைந்த | 12 |
| கன்னல்வில் லான்விடும் | 75 |
| கன்னல்வில் லானினு | 69 |
| கன்னலின் மொழியினள் | 34 |
| கன்னலோ டரிய | 12 |
| கன்னிகா மாடந் | 70 |
| கன்னியை யீன்றநற் | 78 |
| கனைகையின் கேள்வ | 62 |
| கனப்பொருப் பிழிந்த | 10 |
| கனிவகையொடு செந் | 85 |
| கா | |
| காகம் விச்சுளி | 99 |
| காசிப முனிவற் | 48 |
| காசிபனு மஃதுணர்ந்தே | 55 |
| காட்டில்வாழ் கிராத | 2 |
| காதமி ரண்டவர் | 81 |
| காலைக்கடன் முடித்துக் | 23 |

| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் | பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| காலைவந் தனமே யாதி | 75 | கோவைவாய் நல்லார் | 65 |
| காவற் கோபுரங் | 63 | ச | |
| காவியை நேர்விழி | 75 | சக்கர வர்த்தி | 85 |
| காவின் மேவிரு | 14 | சகத்திரத் தொருநூ | 89 |
| காவெலா | 13 | சகரர்கள் தோண்டிய | 60 |
| காவெனுங் கூந்தல் | 68 | சகுனம் நன்றெனச் | 63 |
| கானகத் தோடு | 26 | சங்கநிதி பதுமநிதி | 53 |
| கி | | சங்கம் பேரிபூரி | 35 |
| கிள்ளைகை யேந்திப் | 84 | சதங்கை வெண்முத்து | 63 |
| கிள்ளையைப் பிடித்தீ | 84 | சதுரமா மறையோர் | 41 |
| கு | | சந்த வெற்படித் | 7 |
| குணவாள ராமுனிவ | 1 | சந்தனத் தம்பங் | 94 |
| குருக்கள் மாதவர் | 36 | சந்திர காந்த மேய | 21 |
| குருவம் மன்னனைக் | 40 | சம்பரன் தன்னைக் | 62 |
| குன்றினை நிகர்த்த | 76 | சரசரென் றகத்திற் | 61 |
| குன்றெறி செவ்வேள் | 6[illegible] | சரசரென் றெழுந்தாங் | 26 |
| கே | | சரயுநீர்க் கால்கள் | 10 |
| கேட்டனன் மகிழ்ந்தே | 76 | சரயு வாகிய | 46 |
| கேத னங்கள் | 23 | சரவணப் பொய்கை | 9 |
| கை | | சலமுறுங் கெண்டியைச் | 49 |
| கையும் பாதமுங் | 67 | சலவைக் கற்களைச் | 18 |
| கொ | | சவுள மோடுப | 39 |
| கொங்கண மவந்தி | 91 | சனகமா வேந்த னந்தச் | 96 |
| கொட்டுங் குப்பையின் | 23 | சனகமா வேந்தன் றன்னைத் | 93 |
| கொடிய பாலை | 43 | சனகனுந்தன் மந்திரிக | 88 |
| கொடுக்கும் வேலைசெய் | 36 | சா | |
| கொண்டெழுந் தன்னவர்க் | 42 | சாகையங் கனந்த மாய | 33 |
| கொந்துலா மலர் | 41 | சாரண ரியக்க | 95 |
| கொப்பித் தட்டிக்கை | 94 | சி | |
| கொற்றவர் கோனுடன் | 83 | சித்திரக் கோல மைந்தர் | 12 |
| கோ | | சித்திரச் சிகரி மேய | 10 |
| கோசிகன் வசிட்டப் | 91 | சிந்து மாமுனி | 44 |
| கோசிகன் றன்னையக் | 79 | சிந்துவி னெவியி | 69 |
| கோதில் மாடமே விட்டார் | 93 | சிரமிலாக் குன்றி | 45 |
| கோதில்மாத் தவத்த | 61 | சிலதியர்கள் தமிற்சில | 34 |
| கோதிலச் சனகன் | 93 | சிலைமழு நெடுவா ளாதி | 19 |
| கோதிலவ் வானவர் | 25 | சிலைவளைத் தொரு | 51 |
| கோதிலா முனிவன் | 70 | சிவனயன் முதலோர் | 26 |
| கோமேத கத்தாற் | 68 | சிற்சிறு காலையி | 42 |
| கோவைவாய்த் தேவி | 84 | சிறந்தபெருஞ் செய்தியிதை | 79 |

| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|
| சிறுகலி யப்பேர் | 16 |
| சிறுமணி சிறிய சம்பா | 12 |
| **சீ** | |
| சீதரன் முனிவர் | 96 |
| சீதன மாக | 98 |
| சீதையென் றோது | 66 |
| சீரிய இருலி | 12 |
| சீவர மங்கைச் | 69 |
| **சு** | |
| சுந்தரமா மேனியினள் | 32 |
| சுரபியைக் கழுத்தில் | 71 |
| சுருள்கருங் கூந்தல் | 74 |
| **சூ** | |
| சூரியன் குலத்தில் | 76 |
| சூலத்தை யவர்மே | 45 |
| **செ** | |
| செகம்புகழ் தவங்க | 40 |
| செண்டிணைப் பழிக்கு | 16 |
| செந்தமிழ்ரா மாயணசூ | 1 |
| செந்துவர் வாயாரெல்லாஞ் | 84 |
| செந்துவர் வாயா ரோர்சார் | 95 |
| செம்பொற் பூரண | 86 |
| செயவிசயீ பவவென்று | 80 |
| செருக்கிலா மைந்தர் | 22 |
| செருக்கொடு நீயுமிக்க | 4 |
| சென்றது மம்பரீடன் | 73 |
| சென்றபின் னந்திநங்கை | 68 |
| சென்றவர் கோசலப்பே | 61 |
| சென்றனன் றன்னெழிற் | 101 |
| **சே** | |
| சேடியர் தம்மைக் | 92 |
| சேர்ந்தபின் மனைவி | 91 |
| சேருதன் குலப்பிற்பேரன் | 95 |
| சேலை யுற்றுச் | 8 |
| சேனையாங் கடல்க | 91 |
| **சொ** | |
| சொரிந்திட்ட தானப். | 98 |
| **சோ** | |
| சோர்ந்து வீழ்ந்துறுந் | 68 |

| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|
| **ஞா** | |
| ஞானமா மலைமே | 1 |
| **த** | |
| தக்கவர் துணையொன் | 4 |
| தங்கின ரந்நதித் | 82 |
| தசமுக னுதிய | 25 |
| தசரதன் சென்ற பின்பு | 28 |
| தசரதனே யாதியர்செல் | 81 |
| தண்ணுமை யொலியி | 13 |
| தத்து ருக்கொடு | 38 |
| தந்த பூவைச் | 23 |
| தந்தம நகில மொக்குஞ் | 64 |
| தந்தை யேமப்பொ | 44 |
| தந்தை முறைகொடு | 44 |
| தந்தையாங் குசநா | 47 |
| தம்பியர் மூவர்க்குந் | 98 |
| தம்பொருள் தந்து | 66 |
| தம்மகந் தன்னிற் | 67 |
| தமர கம்மொடு | 8 |
| தரித்திரந் தீர | 73 |
| தருப்பணக் காந்தக் | 89 |
| தருப்பைநாற் புறமுறத் | 96 |
| தரையி னோர்க்கெலாந் | 7 |
| தவசியை நோக்கி | 75 |
| தவமுடிவிற் பூரணமாய்க் | 55 |
| தறையிற் போமவன் | 67 |
| தன்மனைவி யிடங்காட்டப் | 77 |
| தன்னுடைய சதுரங்க | 88 |
| தனயர்க ளழிந்த பின்னர் | 71 |
| தனியாக வேயொரு | 74 |
| தனைநிக ரயோத்தி | 70 |
| **தா** | |
| தாம்புலங் கொண்டா | 83 |
| தாமரை மேவி | 9 |
| தாயினு மேமிகு | 70 |
| தாரணி சென்னியற்றுத் | 45 |
| **தி** | |
| திக்கெட்டு மாய வீதித் | 64 |
| திங்க ளத்தகை | 14 |
| திசையனைத்தும் விசயம் | 30 |

| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|
| திருமக ளனைய நல்லா | 15 |
| திருமண முடிந்த பின்னர் | 98 |
| திருவி னாயக | 43 |
| திரைசெலுத் தரச ரெல்லாங் | 25 |
| திரையினிற் | 95 |
| தீ | |
| தீபமே விரும்ப கில்லார் | 16 |
| து | |
| துங்கநற் கங்கைவங் | 59 |
| துட்டனாம் நீச னாங்கே | 72 |
| துந்துமிதம் தம்மெனவுங் | 33 |
| துயிலுணர்ந்தாங் கன்னவரு | 55 |
| துலக்க மாயமெய்ச் | 38 |
| தூ | |
| தூயகோ சலையி னோடு | 24 |
| தெ | |
| தெப்பமீ தைம்மயிற் | 82 |
| தெய்வமா நதியனை | 59 |
| தே | |
| தேசுறு மேடத் திங்கள் | 33 |
| தேடியாங் குற்றோர் | 84 |
| தேர்கரி பரிமா | 22 |
| தேவ பூசனை | 52 |
| தேவர்க்கு மரிய | 71 |
| தேவர்க ளிடுக்கண் | 2 |
| தேவரூர்த் தாசி யாய | 72 |
| தேவரே யாதி யாவர் | 65 |
| தேவரை யளிக்க வந்த | 64 |
| தேவியர் மூவருஞ் | 83 |
| தோ | |
| தோகையர் தமக்கு | 69 |
| தோடு லாஞ்செவித் | 68 |
| தோரணம் வீதிதோ | 22 |
| ந | |
| நகரக் கோலமும் | 94 |
| நங்கையர் முகங்கட் | 15 |
| நங்கையர் மென்முலை | 83 |
| நங்கையும் வீதி போந்த | 92 |
| நங்கையைப் புணர்ந்தா | 61 |
| நச்சும் வான கத்திறை | 18 |
| நஞ்சமர் கண்டத்தன் | 6 |
| நரன்றனை விலைதந் | 73 |
| நவநவ மாய வண்ணம் | 19 |
| நளினத் தொட்டிலை | 15 |
| நன்று நன்றெனா | 58 |
| நண்ணிமித் தங்கள் | 11 |
| நா | |
| நாட்டு ளார்களும் | 86 |
| நாடக சாலை கோடி | 19 |
| நாலு கோட்டுமா | 7 |
| நி | |
| நித்தரு முத்தர் தாமு | 5 |
| நிதியின் சாலைக் | 35 |
| நின்றுகண் டாளொரு | 78 |
| நின்று விழுந்துபின் | 38 |
| நின்னெழிற்செம் மைதிலியை | 78 |
| நீ | |
| நீங்களவ் வெய்ய | 44 |
| நீசற்காம் வேள்வி | 72 |
| நீடிசை யியம்வா | 11 |
| நீரர மகளி ரந்த | 17 |
| நீல மேனியன் | 93 |
| நீல வண்ணனை | 41 |
| நோ | |
| நோக்கிப் பாங்கியர் | 67 |
| ப | |
| பகைத்திடற் குரிய | 25 |
| பங்கயத் தவிசுறை | 26 |
| படியில் நெற்றியும் | 100 |
| படியினு மலரப் பெற்ற | 21 |
| படைகள் நால்வகை | 85 |
| பண்டரு மொழியி | 64 |
| பண்ணவர் யாவரும் | 101 |
| பண்ணுங் கேது | 23 |
| பணித்தியே லரக்க | 40 |
| பத்தரை மாற்றுத் தங்கப் | 2 |
| பதியையாள் வேந்தற் | 76 |
| பந்தர்க ளெங்கும் வேய்ந்து | 36 |
| பந்து லாவுகைப் | 22 |
| பரசி ராமப்பேர் | 100 |

| பாசுர முதற்குறிப்பு | பக்க எண் |
|---|---|
| பரிமள மிகுந்த தூய | 53 |
| பரிமாவை யலங்கரித்தாங் | 56 |
| பலவகை யாய பறைகளி | 89 |
| பளிங்குசு வடுக்கி | 17 |
| பளிங்குகற் படிகள் | 64 |
| பற்றெரி நீல னைப் | 27 |
| பன்னிய போதே | 62 |
| பன்னுந்தனுர் வேதம் | 24 |
| பன்னுந் தேவர்கள் | 46 |
| பன்னும்பல் வீதி மேவும் | 21 |
| பா | |
| பாங்கா மம்மரத் | 14 |
| பாட்ட னாரிடம் | 57 |
| பாட்டி னின்மொழிப் | 7 |
| பாத நிலத்தினிற் | 69 |
| பாதலத் தவன்றனைப் | 49 |
| பார்த்தனன் கோசிகன் | 78 |
| பாரகத் திருப்போர் | 47 |
| பாரக மனைத்தையு | 58 |
| பாரமிக் குடைய தாலே | 76 |
| பாரின் மிக்கதிப் | 7 |
| பாரின ருலகாள் மன்னர் | 98 |
| பாருளா ரெவரு மிந்தப் | 95 |
| பாரெனு நங்கை | 93 |
| பாவலர் தங்க ளாலும் | 65 |
| பாவையர் கீத சாலை | 65 |
| பி | |
| பிரமன்யா னெண்கின் | 27 |
| பிரமனு மரிய மாலும் | 65 |
| பின்னரத் தேவ ரெல்லாம் | 46 |
| பின்னரம் மறையோர் | 31 |
| பின்னரே கோசி கப்போர்ப் | 73 |
| பின்னரே சிறிது தூரம் | 47 |
| பின்னரே யவ்வி லந்தப் | 100 |
| பின்னரே யனையாள் | 65 |
| பீ | |
| பீதக வாடை யீடில் | 3 |
| பு | |
| புகலுமவ் வீதிக் கப்பாற் | 21 |
| புகுந்தபின் னவையின் | 92 |
| புத்திர காம வேள்வி | 31 |
| புரந்தர னாதி தேவர் | 45 |
| பூ | |
| பூக்களைப் பறித்து | 84 |
| பூக்களை வாரி வாரிப் | 37 |
| பூங்கா வுற்றவ | 46 |
| பூதந்தான் கொணர்ந்த | 33 |
| பூதலந் தானே தூய | 66 |
| பூமணி மண்டபம் | 97 |
| பூவுஞ் சிவந்த கனியுங் | 74 |
| பெ | |
| பெரியவா ணிபங்கள் | 24 |
| பெரும்புறக் கடல்நிக | 18 |
| பெற்றவர் வந்தபின் | 79 |
| பொ | |
| பொருந்திநின் றெரியினிற் | 97 |
| பொலன்கருஞ் சுருள்கொள் | 92 |
| பொழிலில் மாங்குயில் | 15 |
| பொன்னிநன் னயக | 101 |
| பொன்னு மொன்பது | 14 |
| பொன்னெடும் பொருப்பின் | 9 |
| போ | |
| போதர லாயிற் றீதே | 5 |
| ம | |
| மகமிரண்டு முடித்தருளம் | 32 |
| மங்களம் பாடினர் | 97 |
| மடநாண மொழித்திட்டார் | 86 |
| மடித்தலை வீசு மந்த | 20 |
| மணப்பரி சிந்தனர் | 97 |
| மணிவகை யொன்ப தானு | 92 |
| மணிவண னதனைக் கேட்டம் | 48 |
| மதிக்கிலா திகழ்ந்த | 72 |
| மந்தர மனைபீ தாய | 65 |
| மந்தரமா மலையையொரு | 53 |
| மயிலொடு மன்ன மான்கள் | 84 |
| மராமரா வென்றோர் | 6 |
| மருக்னா மவன்றன் | 73 |
| மல்லிகை வாசக் கூந்தல் | 16 |
| மலர்மகள் கொழுந | 100 |
| மழுவிற் றைக்கொண்டாங் | 99 |

| பாசுர முதற்குறிப்பு. | பக்க எண் |
|---|---|
| மளமள வென்றக | 7 |
| மற்றும்பல் பொருள்கொண் | 96 |
| மற்றைநா ளெழுந்தாங் | 31 |
| மற்றொரு குருவை | 72 |
| மறைகள் நான்கொடு | 39 |
| மன்குல மூன்றினுள் | 42 |
| மன்னர் மன்னவிம் | 29 |
| மன்னர் மன்னன்றன் | 99 |
| மன்னவர்க்கு மன்ன | 80 |
| மனுவிட்சு வாகு வாதி | 93 |
| மா | |
| மாக்கி ரிக்கலை | 8 |
| மாகமா முகத்தின் | 68 |
| மாடப் பித்தியின் | 23 |
| மாடியுள் வாசல் | 94 |
| மாத வர்க்கிணை | 37 |
| மாதவர் தலைவ | 92 |
| மாதவன் மற்றோ | 45 |
| மாதவிப் பந்தர் நாப்பண் | 13 |
| மாமணி வண்ணற் | 82 |
| மாவலி கேட்டுள | 48 |
| மாவலி தன்பாற் | 48 |
| மாவலிப் பெயர்கொண் | 47 |
| மாற்றுயர் பொன்னின் | 15 |
| மி | |
| மிதிலை நற்றிரு | 67 |
| மிதிலைமா நகரின் | 76 |
| மிதிலையை நோக்கி | 52 |
| மீ | |
| மீண்டவ ரிருக்கை | 27 |
| மீதற மகளிர் | 92 |
| மு | |
| முக்கணெழிற் பெருமானே | 77 |
| முக்கியப் பசுவ தான | 31 |
| முடித்தவ் வேள்வியை | 58 |
| முந்தி வேதன் | 43 |
| முந்திசெய் பூசை | 74 |
| முன்னர்க்கை விளக்கொடு | 97 |
| முன்னர்யா முரைத்த | 12 |
| முன்னர்யா னழித்த மன்னர் | 101 |
| முன்ன ரோதுநல் | 13 |
| முனிவர் யாவரு | 51 |
| முனிவர னவரை நோக்கி | 74 |
| முனிவர னொருவன் செய்த | 100 |
| மூ | |
| மூட்டின னுபாய மாக | 100 |
| மூவுல கினையுமாங் | 60 |
| மே | |
| மேக மேனியன் | 67 |
| மேதினியா ளரசரெலா | 77 |
| மேருவே வில்ல தாக | 76 |
| மேற்புகன்ற வகையனைத்து | 87 |
| மை | |
| மைந்த ரின்றி | 43 |
| மைந்தர்க ளுதிக்குங் | 33 |
| மைந்தர்கா ளும்மிலென் | 73 |
| மைந்தரும் வனிதை மாரும் | 63 |
| மைந்தரும் வெவ்வே றுக | 91 |
| மைந்தனும் பிரம தத்த | 47 |
| மைந்துறவ் வீதிக் கப்பால் | 20 |
| மொ | |
| மொழிந்திடு மனையசொன் | 48 |
| யா | |
| யாக சாலையின் | 50 |
| யாவ தீதென | 46 |
| யாவதிது வெனக்கேட்டாங் | 56 |
| யாவரு மத்ததி | 82 |
| யானையே யனைய மேதி | 12 |
| வ | |
| வச்சிரா யுதங்கொடு | 19 |
| வண்டிக ளெல்லா | 95 |
| வணக்கஞ்செய் யிறைவன | 70 |
| வயல்கட்குப் பாயுங் | 11 |
| வரம்பிலவ் வீதிக் கப்பால் | 20 |
| வரமிகும் விசிட்டாத் | 2 |
| வருந்தி யாரையு | 38 |
| வரும்வழி பறித்துயிர் | 49 |
| வரையினின் றிழிந்த | 9 |
| வளைந்தவிண் ணுதிய | 49 |

| பாசுர முதற்குறிப்பு. | பக்க எண். | பாசுர முதற்குறிப்பு. | பக்க எண். |
|---|---|---|---|
| வா | | விந்தையான விபுத | 28 |
| வாகைநற் பரதனை | 102 | வியனுறும் பதிற்று நூறு | 66 |
| வாங்கியோர் நொடிக்குள் | 101 | விரக வெப்பத்தம் | 67 |
| வாங்கினனற் சுமந்தி | 79 | விரத மேவுதன் | 57 |
| வாங்கினான் தோட்டி யாலே | 53 | விரதமேவு முனிவன் | 27 |
| வாங்குமின் வருக்கை | 67 | விருந்தாய் வந்தாரோ | 15 |
| வாச்சியத் திசையொலி | 97 | விளம்புபல் வீதி | 21 |
| வாசச் சந்தனச் | 14 | விளைவய லகம்பொன் | 10 |
| வாளை வீசிப்பின் | 8 | விற்கதையிங் ஙனமிருப்ப | 77 |
| வாளினின் றேங்கி | 27 | விற்பன மிக்கோ ராக்கும் | 3 |
| வி | | வீ | |
| விஞ்சையர் குலத்தோ | 52 | வீதிகள் தோறு மேவும் | 93 |
| விட்டதோர் படையை | 71 | வெ | |
| விட்டிடும் வாளிகள் | 42 | வெள்ளறி வுடையநீ | 49 |
| விடுத்தா ரோலை | 35 | வெளியாய பொருள்களி | 54 |
| விண்ணக மோகட | 74 | வே | |
| வித்தகமா முனிவரனும் | 32 | வேங்கைமுன் பின்னுக் | 3 |
| வித்துமுத லாயபொருள் | 34 | வேதம் படித்துரைப்பார் | 23 |
| வித்துவச் சபைசிலம்ப | 20 | வேதமே யென்ன முந்நூல் | 4 |
| விதியினை யளித்த | 10 | வேந்தர் வேந்தன்றன் | 29 |
| விதைத்திடு நெற்கள் | 11 | வை | |
| விந்தைக் கோபுர | 22 | | |
| விந்தையா மணவீட் | 94 | வைய மேத்துயர் வசிட்டனன் | 37 |


பாசுர முதற்குறிப் பகராதி முற்றிற்று.

---

இந்தப் பாசுர முதற்குறிப் பகராதியின் ௪ வது பக்கம் ஓ வரிசையிலுள்ள 'ஓர்ந்தன ரிதனைத்' என்ற முதற்குறிப்புச் சொற்களையுடைய பாசுரம் எடுக்கப் பட்டு 'இன்னசொல் லோர்ந்த தேவ' என்ற முதற்குறிப்புச் சொற்களையுடைய பாசுரம் அமைக்கப் பட்டிருப்பதால் மறு பதிப்பில் ஓ வரிசையில் உள்ள 'ஓர்ந்தன ரிதனைத்' என்னு முதற்குறிப்புச் சொற்களை விட்டு விட்டு 'இன்ன சொல் லோர்ந்த தேவ' என்ற முதற்குறிப்புச் சொற்களை இ வரிசையில் அதற்குரிய இடத்திற் சேர்த்துக் கொள்ள வேண்டுவதோடு ஏனைய முதற்குறிப்புச் சொற்களையும் நன்கு பரிசோதிக்க வேண்டுவது அவசியமாகும்.

ஸ்ரீ:

## இராமாயண சூடாமணிப் பால காண்டத்தின்

# படல அகராதி


| படல வரிசை. | படலப் பெயர். | படல ஆரம்ப பக்க எண் | படல முடிவு பக்க எண் |
|---|---|---|---|
| முதலாவது | ஆற்றுப்படலம் | 7 | 10 |
| இரண்டாவது | நாட்டுப்படலம் | 10 | 16 |
| மூன்றாவது | நகரப்படலம் | 17 | 24 |
| நான்காவது | அரசியற்படலம் | 24 | 25 |
| ஐந்தாவது | உபய வேள்விப் படலம் | 25 | 32 |
| ஆறாவது | திருவவதாரப்படலம் | 33 | 39 |
| ஏழாவது | கையடைப்படலம் | 40 | 41 |
| எட்டாவது | தாடகை வதைப்படலம் | 42 | 46 |
| ஒன்பதாவது | கௌசிக வேள்விப்படலம் | 46 | 52 |
| பத்தாவது | அகலிகைப்படலம் | 52 | 62 |
| பதினோராவது | மிதிலைக்காட்சிப்படலம் | 63 | 75 |
| பன்னிரண்டாவது | கார்முகப்படலம் | 75 | 79 |
| பதின்மூன்றாவது | எழுச்சிப்படலம் | 80 | 81 |
| பதினான்காவது | வழி விளையாட்டுப்படலம் | 81 | 85 |
| பதினைந்தாவது | எதிர்கொள்படலம் | 85 | 91 |
| பதினாறாவது | ஊரலங்காரப்படலம் | 92 | 94 |
| பதினேழாவது | திருமணப்படலம் | ·94 | 98 |
| பதினெட்டாவது | பரசிராமப்படலம் | 99 | 102 |

ஸ்ரீ

# இராமாயண சூடாமணியின்

## முகவுரை*

---

நம்பரதநாட்டிற் பண்டைக்காலந்தொட்டு வழங்கிவருவது வைதிக மென்பது, யாவருக்கும் ஒப்பமுடிந்த பொருளாம். வைதிகமதமென்ப பொருள், வேதத்தை யொட்டிய மதமென்பது. வேதம், பூர்வபாகம் உ பாகம் என இருபகுப்பினது. வேதத்தின் பூர்வபாகம்—கடவுளின் ஆரா ரூபமான கருமத்தின் சொரூபத்தையும், உத்தரபாகம்—ஆராத்யனை வுளின் சொரூபத்தையும் பிரதானமாகப் பேசுவனவாகும்,

இவ்வாறுள்ள வேதத்தின் பொருள், எளிதிலுணர்தற்கு உரியத அந்த வேதத்தின் பூர்வபாகத்தின் பொருளை யறுதியிடுதற்கு ஸ்மிருதி யும், உத்தரபாகத்தின் பொருளை யறுதியிடுதற்கு இதிஹாஸ புராணங் யும் ஞானவான்களான மஹர்ஷிகள் இயற்றியுள்ளனர்.

எல்லா மாநுடர்க்கும் ஒப்ப உதவுவது, வேதபாக மிரண்டனுள் ப னுடைய சொரூபத்தை முக்கியமாக வெளியிடுவதான உத்தரபாகமே. உத்தரபாகத்தின் பொருளை யறுதியிடுதற்கு மிகவும் உதவுவது, இதிஹா யாகும். ஆகவே, புராணங்களினும் இதிஹாஸமே சிறந்தது.

இதிஹாஸமாவது:—மஹர்ஷியாற் கூறப்பட்டதாய்ப் பல கிளைக் களுடன் கூடியதான ஒரு பழைய சரித்திரம். அவ்வாறான இதிஹாஸ சேர்ந்த நூல், ஸ்ரீராமாயணமும் மஹாபாரதமுமாகும். புராணங்களைக் டினும் இதிஹாஸத்துக்கு ஏற்றம் எவற்றால்? என்னில்—புராணங்களிலே கொண்டாடப்பட்டிருத்தல், எந்தப் பொருளையும் நடுநிலைமையாற் கூ உண்மையையுணர்ந்து உணர்ந்த உண்மையை யுள்ளபடியே சொல்லும் பந்த கர்த்தாவை யுடைமை என்பவைகளாலாகும்.

இதிஹாஸங்களுள்ளும், ஸ்ரீராமாயணத்துக்கு ஏற்றம் ஸர்வலோக மகனை பிரமாவினாற் கௌரவிக்கப்பட்ட ஸ்ரீவால்மீகிமஹர்ஷியால்

---

* இது சென்னைத் திருவல்லிக்கேணிச் செந்தமிழ்த் தெளிபொருள் வி பேருரையாசிரியர், ஸ்ரீமத் - வை. மு. கோபால கிருஷ்ணமாசாரிய சுவாமிக எழுதப்பெற்றது.

ளிச்செய்யப்பட்டதாகையாலும், 'இந்தக்காவியத்திற் பொய்யான வாக்கு ஒன்றும் உனக்கு உண்டாகாது' என்று பிரமாவின் அநுக்கிரகத்தை அந்த ஸ்ரீ வால்மீகி பகவான் பெற்றிருத்தலாலும், எல்லா வுலகத்தாராலும் கைக்கொள்ளப்பெற்றிருத்தலாலும் என்பர். இன்னமும், "வேதவேத்யே பரேபும்ஸி, ஜாதேதஸரதாத்மஜே வேத: ப்ராசேதஸா தாஸீத், ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்கிறபடியே பகவான் ஸம்ஸாரிசேதநரை உய்விக்க ஸ்ரீராமனாகத் திருவவதரித்ததற்கு ஏற்ப எல்லாப் பிரமாணங்களினும் மேம்பட்ட வேதமும் அப்பிரான் தன் அரும் பெருஞ் செயலால் அவனியைக் காத்தமையை உலகோர் உணர்ந்து உய்வுபெற ஸ்ரீராமாயணமாகத் திருவவதரித்ததாகையால், இதனேற்றம் குன்றின்மேலிட்ட விளக்காகும்.

இவ்வாறான ஸ்ரீராமசரிதையைப் பலமொழிக் கவிஞரும் பல மொழிகளில் இயற்றியிருக்கின்றனர். தமிழ்மொழியிலும் சங்க காலத்திலேயே இராமசரிதம் செய்யுள் நடையில் அமைந்திருந்ததாகத் தெரிகின்றது. கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரும், தன்னோடொத்தேனும் மிக்கேனுமுள்ள காவியம் வேறொன்றில்லையென்று யாவரும் உடன்பட்டுப் புகழ, இனிதுற இராம சரிதையைப் பாடியுள்ளார். பெரும்பான்மையும் அந்தக் கம்பராமாயணக் கருத்துக்களையே சென்னைபுரி வித்வான் விஷ்ணுபாதசேகரர் சுருக்கிச் சிறுபான்மை வால்மீகி ராமாயணக் கருத்தையும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் கருத்துக்களையும் அமைத்துப் பாடியுள்ளார்.

இங்கே முராரியென்று பெயரிய வடமொழி மகாகவி கூறியதொரு பத்தியம், ஞாபகத்துக்கு வருகிறது: அது "யதிக்ஷுண்ணம் பூர்வைரிதி ஜஹதி ராமஸ்ய சரிதம், குணைரேதாவத்பிர்ஜகதி புநரந்யோ ஜயதிக: ஸ்வமாத்மாநம் தத்தத் குண கரிம கம்பீர மதுர ஸ்புரத் வாக் ப்ரஹ்மாணா: கதமுபகரிஷ்யந்தி கவய: [இதன்பொருள்—இராமசரிதத்தைப் பூர்வர்கள் பயின்றதென்று விடுவோமென்றால், இவ்வளவு குணங்களுடன் சகத்தில் வேறு எவன் வெற்றி பெற்றுள்ளான்? அந்தந்தக் குண கௌரவங்களுக்கு ஏற்பக் கம்பீரமாகவும் மதுரமாகவும் விளங்குகின்ற சொற்பிரமத்தையுடைய கவிகள் (இந்த ராம சரிதத்தைச் சொல்லாமல்) தங்களான்மாவை எங்ஙன் பயன்பெறுத்துவார்கள்? என்பது.] இதனால், வாய்படைத்த பயன் "கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" என்றபடி இராமபிரானைப் பற்றி மொழிவதே யென்பது தெளிவாம்.

இனி, 'கம்பராமாயணமென்று பேர்பெற்ற தமிழ்க்காவியம் இராமசரிதத்தைப் புனைவுபெற இனிதாகக் கூறிச் செல்லாநிற்கையில், இராமசரிதத்தைத் தமிழ்ப்பாவாற் கூறுவதாய் வேறொருநூல் வேண்டுமோ?' என்று ஒரு வினா எழலாம்: கம்பராமாயணமோ, தமிழ்மொழியில் நன்கு கற்றுத்தேர்ந்தார்க்கு அன்றி மற்றையோர்க்குப் பொருள் விளங்குவதன்று; நன்கு கற்றோ

ரும் கம்பராமாயணச் செய்யுட்குப் பொருள்காண்பதிற் சிற்சில இடத்து இடர்ப்படவேண்டியிருக்கின்றது. அன்றியும், தமிழிற் பேரறிவு படையாதார் தாமாகவே கம்பராமாயணத்தை யோதி இராமசரிதையை இனிது அறிதல் இயல்வதன்று. ஐயம் நேர்ந்த இடத்தும் பெரியாரை யடுத்துக் கேட்டுப் பொருள் தெரிந்து முற்றிலும் இராமசரிதையை யுணர்வதென்றாலோ பல்லாண்டு செல்லும். இந்த இராமாயண சூடாமணியோ, அவ்வாறன்றி, ஓதற்கு எளியதாய், சிலமாதங்கட்குள் முற்றிலும் படித்துப் பிறர்க்கும் பிரசங்கிக்குமாறு சிற்றளவினதாகவும் அமைந்துள்ளது.

இயற்கையிற் கவிபாடும் வல்லமை படைத்த நமது விஷ்ணுபாதசேகரர் தாம் ஸ்ரீ ராமாயணத்தைத் தமிழ்ப்பாவால் யாத்ததற்கு,

''பெருக்கமா மவைமுற் றெய்தப் பெரிதும்நா ளாவ தன்றிக்
குருக்கள்பா லல்லால் நம்மாற் கோள்ளுதற் கரிய வாமால்.''

''தக்கவர் துணையோன் றின்றித் தரையுளா ருணரு மாறும்
மிக்கசொற் பொழிவு செய்வோர் விரைவினில் முடிக்கு மாறும்
இக்கதைப் பகுப்பு தம்மி லேதனையு மோவ்வோர் நாளில்
புக்கிசைக் கருவி யோடு புகலுவோர்க் காகு மாறும்.''

''உமைக்கர னுரைத்த காதை யுரைத்தனன் தோகுத்து மன்னோ''

என்று தற்சிறப்புப் பாயிரத்தில் நான்கு காரணங்கள் காட்டியிருப்பது இங்குக் கவனித்தற்கு உரியது.

இனி, இந்நூலாசிரியர் முன்புள்ளார் செய்த இராமாயணத்தினும் தாம் இயற்றிய இராமாயணமே திருமகள் கொழுநன் திருவுள்ளத்துக்கு மிகப்பாங்கானதாகு மென்பதை,

''அன்றியும் பசுமுன் பீன்ற வங்கன்றே பலவுண் டேனும்
அன்றளித் திட்ட கன்றின் மீதுறு மன்பாற் பாங்கர்
நின்றவர் தம்மை யெல்லாம் நீள்கோம்பு குளம்பால் தாக்கும்
ஒன்றுமே மக்கள் தாய்க்கும் உதித்தசேய் மேல்மிக் கன்பே.''

''நித்தரு முத்தர் தாமும் நீள்விசும் பதன்க ணுள்ளார்
எத்தனை கோடி யேனு மெம்பிரா னன்று போந்த
முத்தனை மடிக்கோண் டார்த்து முகமன்செய் துவத்தல் போலும்
இத்தரை புதிதாய்த் தோன்றும் இதனையே உகப்போ டேற்கும்''

என்று தெரிவித்துள்ளனர். இவ்வாறான மனப்பான்மை யமைந்ததனால்தான். இந்நூலாசிரியரால் இந்நூல் இனிதுறப்பாடலாயிற்றென்று கருதுகின்றேன்.

இந்நூலுக்கு ஆசிரியர் 'இராமாயணசூடாமணி' என்று பேர் புனைந்தது, உலகத்திலுள்ள இராமாயணங்களுள் இந்நூல் தலைசிறந்தலா லாகுமென்று கொள்வதைவிட, இராமசரிதத்தைத் தெரிவிப்பதான சிறந்த நூல் என்று கொள்வதே தக்கதாகுமென்பது என் கருத்து.

இயற்கையான கவித்துவசக்தி அமையாமல், "காரிகை கற்றுக் கவிபாடுவ தனினும், பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று'' என்றவாறு காரிகையைக் கற்று அதன்பிறகு எழுத்தெண்ணிக் கவிபாடும் செயற்கைக் கவித்துவ சக்தி படைத்தவரிற் சேராது கவிபாடும் வல்லமையை இயற்கையிலேயே பெற்ற இந்நூலாசிரியர் தம்முடைய வாக்குப்பயனுறப் பாடத் தொடங்கிய இந் நூலில், இக்காலத்துக்கு ஏற்பப் புதிய பொருள்களையும் சிற்சில இடத்துக் கற்பனையில் அமைத்துள்ளார்: அவற்றுட் சில இந்நூலாசிரியரால் முதலிற் பாடப்பெற்று முதலிலேயே அச்சிட்டு வெளிவந்துள்ள இதன் சுந்தரகாண்டத் தின் முகப்பில் இந்நூலாசிரியரின் மாணவராற் காட்டப்பட்டுள்ளன: யானும் எடுத்துக்காட்டாகச் சில பாடல்களைக் காட்டுவேன்.

அவை பின்வருவன:—

"இரும்பினுற் செம்பீங் காரு லியற்றிய குழையின் மார்க்கம்
வரும்புது நீருங் கோள்வார் மற்றதே போலும் என்நா
வரும்புது நூலுங் கோள்வர்.''

எல்லையி லரங்க மேவி யிணையில்கா வேரி மூழ்கிக்
குல்லைகன் னிகையி னேடு கோமுந்திரு மண்ணுற் றுடி
நல்லியற் பாடி வந்து நறுமல ரிறைத்தந் நீத்தம்
பல்லியல் மேவும் பாக வதரேனப் பரவிற் றன்றே.

(வெள்ளத்திற்கும் பாகவதர்க்கும் சிலேடை)

இங்ஙனம் இனிய எளியநடையி லமைந்திருத்தலோடு பற்பல புதிய கற் பனைகளையும் கொண்டிருத்தலால், இந்நூல் பாவலர்க்கு ஓர் விருந்தாம். ஆகவே, இதனைச் சுவைப்பார்க்கு இஃது ஒருபொழுது போக்காகுமென்பது திண்ணம்.

இத்தகைய நூல் காகுத்தனருளால் முற்றிலும் முற்றுப்பெற்று விட்டதால், முற்றிலும் அச்சு ஆகித் தமிழுலகில் நிலவுமாறு கருணைக்கடலான திருமகள் கொழுநன் இன்னருள் புரிவாஞக என்று மனப்பூர்வமாய் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

வை. மு. கோபால கிருஷ்ணமாசார்யர்.

ஸ்ரீ

## இராமாயண சூடாமணியின்

# சிறப்புப்பாயிரம்

---

இது சென்னைப் பச்சையப்பன் காலேஜ் உயர்தரக் கல்விச்சாலையின் மாஜித் தலைமைத் தமிழாசிரியரும், திருவேங்கடப் பதிற்றுப்பத்தந்தாதி, வாக்கிய இலக்கண சிந்தாமணி முதலிய பல நூற்களின் ஆசிரியரும், பல ஆன்றோர் நூற்களின் உரையாசிரியருமாகிய

*கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களால்*

இயற்றப்பெற்றது.

உலகங்க ளெல்லா முந்தியி லுதவி
இலகுற யாவையு மினிதுகாத் தருளி
ஓதுறு முடிவினிற் றன்பா லொடுக்கும்
ஆதியம் பரம னவனியி னல்லோர்
அருந்துயர் களையா வறந்தமை வளர்க்கவும்
அறப்புற மானோ ரடலற வழிக்கவும்
நெடுநிலை மாட நீணக ரயோத்தியில்
வசையறு புகழ்செறி தசரதன் செல்வனாய்த்
தோன்றின னவன்செயல் சொல்புகழ்ச் சரிதையாம்
இராமா யணந்தனை யெழில்வட மொழியினில்
அம்புவி மாந்தர்க ளறிந்தற முதலா
நாற்பய னெய்துதற் கேற்புறு வகையில்
மொழிந்தனர் மூவர் முனிவர்மூ வகைநூல்
அவற்றுட் சிறந்ததென் றனைவரும் போற்றும்
அரியவான் மீகி யருளிரா மாயணக்
காவியந் தன்னையுங் கலைவலோர் வியந்துகொள்
கம்பரா மாயணக் காவியந் தன்னையும்
பண்புறு பெரியராம் பன்னிரு வோரருள்
அருந்தமிழ் மறையா மருளிச் செயல்களில்
இராமனற் சீர்த்திக ளியைபல கருத்தையும்

நாடுபு தழுவி நவநவ மாம்பல
நீடிய வணிகள் நிகழ்தர லாய
பற்பல கற்பனை பொற்புற வமைத்தும்
சொற்பொரு ளாதிய சுவைபல வமைத்தும்
சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
ஆதிய வழகுக ளனைத்து மமைத்தும்
தக்கன விடங்களிற் சந்தங்க ளமைத்தும்
கற்றவ ரோடு மற்றவர் தாமும்
எளிதிற் பொருள்தெரி யின்றமிழ் நடையில்
இராமா யணசூ டாமணி யெனுநூல்
சுவைமிகு மமிழ்தெனத் தொகுத்துப் பாடினன்
தண்ணரு ளன்பொடு தகுபொறை மேன்மை
நண்ணிய சீலன் நயந்தரு செந்தமிழ்
நுண்ணிய பொருள்சேர் நூல்பல செய்தோன்
அம்புயை நாயக னாதி யாகவும்
நாத யாமுனர் நடுவ னாகவும்
அவரவ ராசிரிய ரிறுதி யாகவும்
வழிவழி முறையினில் வந்தினி தொளிரும்
குருபரம் பரையெனுங் கொடிபடர்ந் தோங்குறும்
வைணவ மதத்தின் மாண்நெறி யுணர்ந்தே
பேசரு மாமறைப் பூசுர ராதிய
மாசிலார் புகழ்மண வாள மாமுனி
அமைத்தரு ளட்ட திசைக்கய வாரியர்
தம்முட் டலைவனற் சந்ததி வளர்தரு
தேனிலாஞ் சோலை வானமா மலைதிகழ்
மாமடத் ததிபனாய் மகிதலம் புகழ
ஐயைந் தாம்பட்டத் தாரிய னுய்வரு
சிறுகலி யப்பெயர்ச் சீயர் பெருமான்
அடியிணைக் கடியவ னாகி யன்னவன்
தந்தரு ளம்பொருள் தமைக்கொண் டவற்கே
தக்கணை யாயிரு தமிழ்க்கவி மாலைகள்
இயற்றி யளித்தவ னின்னருள் பெற்றோன்
அவிர்மணி யார்பண வரவணை யமலன்
ஒண்புகழ்க் கல்லா லுருகா வுளத்தோன்
எந்தையி னன்புட னெனக்குமுன் பற்பல
நற்றமிழ் நூல்புகல் நால்வரில் முதல்வன்
அன்பினிற் சிறந்த வன்னையே யென்ன

நயந்தேனச் கினியன நலம்பல புரிந்தோன்
மன்னவர் தமக்கா மாநகர் தமக்கெலாஞ்
சிறந்தநன் னகரெனச் செப்பிடு மரிய
சென்னையம் பதியினில் மன்னிய வாழ்க்கையன்
செந்தமிழ் வேந்தர்தஞ் சந்ததி போந்ததி
தயைபொறை முதலிய சற்குண மேய்ந்தசீர்
முனியப்ப நாயக னினியநற் புதல்வனாய்ப்
பொற்போடு சிறந்த கற்புடைச் செல்வி
உண்ணு முலைப்பெய ருடையநன் னங்கைதன்
திருவயி றெனும்பாற் கடல்வரு திங்கள்
இசைமிகும் பசுபதி யெனுமியற் பெயருடன்
பன்னெழில் விட்டுணு பாத சேகரன்
என்னுநற் பெயர்கொள் ளிருந்தமிழ் முகிலே.



ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

# இராமாயண சூடாமணி

## பாலகாண்டம்

### காப்புச் செய்யுட்கள்

அகிலங் காக்க வயோத்தி யுதித்தருள்
முகிலங் காதை முடிக்கத் தொகுத்தியான்
துகிலங் காடகத் தோல்குரு கூர்நங்கை
நகிலங் காணகில் நற்சுதன் காப்பரோ. (1)

செந்தமிழ்ரா மாயணசூ டாமணிநூல் வாரிதிசூழ்
சேகத்தி லோங்க
அந்தமிலா மாமறையைச் செந்தமிழ்ப்பா வாயிரத்து
ளடக்கித் தந்து
பந்தமிலா நாரணற்குப் பங்கயத்தா ளாமவற்குப்
பதமாய் நிற்கும்
எந்தமிரா மாநுசனுந் தண்ணளிசெய் தெம்முளத்தே
யிருப்பன் மாதோ. (2)

குணவாள ராமுனிவ ரனைவருஞ்சேர்ந் தோருருவங் கொடேகின் ற்றுபோல்
பணவாள ராவரைய னங்கிசம்பெற் றுதித்துலகைப் பரிந்து காத்து
நிணவாள தாயிதர சமயகோ டரமறுத்த நிகரில் சீர்த்தி
மணவாள மாமுனிகள் திருவடியை யொருநாளும் மறவோம் யாமே. (3)

ஞானமா மலைமே லுய்த்து நான்கோடோன் றருள்செய் தாண்டாங்
கீனமா மலைக ளாக்கு மிறப்போடு பிறப்பைப் போக்கும்
மானமா மலைபோல் கீர்த்தி வளர்சிறு கலிய னென்னும்
வானமா மலைவாழ் சீயர் மலர்ப்பதம் வழுத்தல் செய்வாம். (4)

தேவர்க ளிடுக்கண் போக்கச் சேகத்தில்வந் தடவி சென்று
மாவுவர் கடந்தீ ரைந்து மணிமுடி யோனைக் கொன்று
தேவிமற் றனைவ ரோடுந் திரண்டுதன் னகரின் மேவிப்
பூவுல களித்த வெம்மான் பொற்பத முளத்திற் கொள்வாம். (5)

பத்தரை மாற்றுத் தங்கப் படிவநற் குவளைக் கண்கள்
முத்தவெண் முறுவற் செவ்வாய் முழுமதி வதன மின்சொல்
வித்தபோற் கலசக் கொங்கை மின்னிடைக் காந்தட் செங்கைச்
சித்திரக் கமல பாதச் சீதைதாள் சிரமேற் கொள்வாம். (6)

வரமிகும் விசிட்டாத் வைத பாடியம் வரைந்திட் டாற்கே
திரமுட னதனு லாம்பேர் சிறக்கத்தந் தருளுந் தேவி
பரமனு மவற்குத் தாசன் பகர்ந்திடு மிந்நூல் முற்றித்
தரைமிசை யோங்கி யென்றுந் தழைத்திட வருள்செய் வாளால். (7)

ஏழிலே யொன்றைச் சென்னி யேற்றவன் கூற தாவான்
ஏழிலே யொன்றில் வாழ்வா ரிருக்கைபெற் றுய்தற் கென்றே
ஏழிலே யொன்றில் வந்தா னிணையடிக் கன்ப னுவான்
ஏழிலே யொன்றின் தீவி லிருந்தாட்கண் ணுரைத்தான் காப்பே. (8)

காட்டில்வாழ் கிராத னுகிக் கணிப்பிலாத் தீமை யாற்றிப்
பாட்டில்யாழ் வல்லோன் சொன்ன படிசெபித் தனேக நாள்மட்
கூட்டினி லிருந்து வெய்யோன் குலக்கோழுந் திராமன் காதை
யேட்டில்யாம் படிக்கத் தந்தா னிணையடி யிறைஞ்சி வாழ்வாம். (9)

உம்பராம் புலவ ரெல்லா முணுஞ்சுவை யமிழ்தே யென்னக்
கம்பரா மாய ணப்பேர்க் காவிய வமிழ்த வைப்பை
இம்பராம் புலவ ரெல்லா மேற்றைக்கு முணற்கே தந்த
கம்பராம் புலவர் தம்மைக் கருத்தகத் திருத்தி வாழ்வாம். (10)

ஆனதே யோரி டத்தி லருந்திடா துணவை யென்பர்
நானதே போலுங் கல்வி நாவலர் பலர்பா லேகிப்
போனதே போக்க தாகப் புகுந்திறை யிறைகேட் டேள்ளேன்
ஆனதா லவர்தம் பாத வலர்களென் னுளங்கொள் வேனுல். (11)

காப்புச் செய்யுட்கள் முற்றுப் பெற்றன.

## தற்சிறப்புப் பாயிரம்.

உலக னைத்தையு முந்தியிற் பூப்பவன்
இலக வைப்பவ னீற்றி லழிப்பவன்
நலங்கொள் முற்குணன் நாரணன் யாவர்க்குந்
தலைவ னன்னவன் தாள்மலர் தஞ்சமே. (1)

விற்பன மிக்கோ ராக்கும் விழுப்பொருட் காவி யத்தும்
அற்பர்தா மென்று காட்டி யறைகுவ ரவைய டக்கம்
சொற்பமுங் கல்வி யில்லேன் சொல்லுமிந் நூலின் கண்ணே
நற்பொரு ளவைய டக்கம் நவில்கிலே னெற்றுக் கென்னில். (2)

வேங்கைமுன் பின்னுக் கேகி வீறுமிக் கோங்கிப் பாயும்
ஆங்கதே போலு நங்க ளற்புதக் கவிஞர் தம்மை
மூங்கையான் போல்வே மென்றே மொழிந்துபின் புயர்வோப் பில்லாத்
தீங்கவி யனந்த மேய காவியஞ் செய்து ளாரால். (3)

பீதக வாடை யீடில் பெரும்பணி யாதி யாய
மேதகு பொருள்க ளுள்ளார் விளம்பிலா ரகத்துள் வைப்பார்
நாதக வோதிச் சேர்த்த ஞானநூற் பொருள்வைத் துள்ளார்
ஏதமக் கரிய கல்வி யென்றுரை செய்வர் மாதோ. (4)

கதிர்மிகுந் தோங்கும் பைங்கூழ் கால்வரை வணங்கி நிற்கும்
அதிகனத் துலையின் தட்டே யடியுறத் தாழு மாங்கே
எதிரொரு வருமின் றென்ன வெல்லையில் நூலாய்ந் துள்ளார்
மதியிலே மடிய மென்றே வணக்கஞ்செய் துரைப்பர் மன்னோ. (5)

அந்தமே மிகுந்து கற்போ டணிகள்பூண் டொளிரு மாதர்
சந்தனம் பூச லாகுந் தந்தன மறைத்துச் செல்வர்
இந்தமா நிலத்தில் மேலா மியலிசை நாட கங்கை
வந்தவ ரவற்றைக் காட்டார் மதியிலே மியாமே யென்பர். (6)

இன்னன மேம்பொ ருட்கும் பெரியர்க்கு மியற்கை யாமால்
அன்னமேம் பொருள்க ளவ்வா றுவன மற்றும் மேலோர்
பன்னுமாக் காவி யத்தும் பகர்வர்தா மவைய டக்கம்
அன்னண மவைய டக்க மடியேனுஞ் சொல்வே னுயின். (7)

என்னையு நாட கத்தோ டியலிசை வல்லா னென்பர்
அன்னதாற் புலமை மிக்கார்க் காஞ்சுதன் போல்வேன் யான்செய்
இன்னநூல் தலைப்பின் கண்ணே யியம்பிலே னவைய டக்கம்
அன்னவர்க் கெங்ங னேநீ யாஞ்சுதன் போல்வா யென்னில். (8)

எந்தைக்கு மேற்கும் வாழ்க்கை யாண்டிலாம் வாசி போலாங்
கந்தமில் புலமை யோர்க்கு மடியேற்கும் புலமை நோக்கில்
விந்தமால் வரையும் பார்க்கண் மேவிய பரலு நேரால்
நந்தமாப் புலவர் யார்க்கும் நான்சுதன் போல்வே னன்றே. (9)

கட்டுரை யாக விந்தக் காவியத் தலைப்பின் கண்ணே
எட்டுநேற் கவிகள் தம்மா லியம்பிய மாற்றம் யாவும்
தட்டிலின் கவிவல் லோர்தாஞ் சரியெனத் தகுவ வேனும்
மட்டில்மா தவத்தர் மற்றோர் மதித்திட வல்லார் மூவர். (10)

வேதமே யென்ன முந்நூல் செய்துளார் விளம்ப வற்றுள்
ஆதிகா வியமென் றோது மரியநூல் மலைபோ லோங்க
ஏதினி யிதற்கிங் கீடு மேடுமென் றெவரு மோத
மேதினி தன்னிற் கம்பர் விரித்ததுந் தமிழி லோங்க. (11)

செருக்கோடு நீயு மிக்க செந்தமிழ் வல்லான் போன்றே
சுருக்கமா விதனைப் பாடத் துணிந்ததே னென்னில் வான்போல்
பெருக்கமா மவைமூற் றெய்தப் பேரிதும்நா ளாவ தன்றிக்
குருக்கள்பா லல்லால் நம்மாற் கொள்ளுதற் கரிய வாமால். (12)

தக்கவர் துணையோன் றின்றித் தரையுளா ருண்ரு மாறும்
மிக்கசொற் பொழிவு செய்வோர் விரைவினில் முடிக்கு மாறும்
இக்கதைப் பகுப்பு தம்மி லேதனையு மோவ்வோர் நாளில்
புக்கிசைக் கருவி யோடு புகலுவோர்க் காகு மாறும். (13)

கமழ்மகிழ் மாலை யெம்மான் கழலிணைக் காப்பி னாலும்
அமிழ்தினை நிகரு ஞான வாரிய னருள்தன் னாலும்
தமிழெனக் கருள்செய் தோர்முன் சாற்றிய ஆசி யாலும்
உமைக்கர னுரைத்த காதை யுரைத்தனன் தொகுத்து மன்னோ. (14)

இதுவரை யுரைத்த வெல்லாம் யாஞ்சரி யென்போ மிந்நூல்
மதியிலி யாய வுன்றன் வாய்மொழி யாகை யாலும்
புதியநூ லாகை யாலும் புவியிதைக் கொளுமோ வென்னில்
நதிகுளங் கேணித் தொல்லை நல்லறற் கொளலோ டிக்கால். (15)

இரும்பினாற் செம்பிங் கானு லியற்றிய குழையின் மார்க்கம்
வரும்புது நீருங் கொள்வர் மற்றதே போலு மென்னு
வரும்புது நூலுங் கொள்வர் மற்றதே யாற்றி னின்றும்
வருவது போலு மிந்நூல் வந்ததாங் கேதினின் றென்னில். (16)

அண்ணல்வான் மீகி கம்ப ரருளிரு நூலாற் றேடே
புண்ணியச் சாத்து வீகப் புராணமா நதிகள் தம்மில்
எண்ணரும் பதின்ம ராண்டா ளியல்மொழி நதிகள் தம்மில்
நண்ணுரைப் பொருள்நீ ரென்றன் நாவெனுங் குழையின் மார்க்கம். (17)

போதர லாயிற் றீதே யானிவண் புகலிந் நூலாம்
ஆதலான் மேலே யோது மரும்பெரும் நூற்க ளெல்லாம்
ஓதுறை தழுவி யேயீ துரைத்ததென் றுணரு கிற்பார்
காதலோ டிதைவா சிப்பர் கழறுவர் பிறர்க்கும் மாதோ. (18)

அன்றியும் பசுமுன் யீன்ற வங்கன்றே பலவுண் டேனும்
அன்றளித் திட்ட கன்றின் மீதுறு மன்பாற் பாங்கர்
நின்றவர் தம்மை யெல்லாம் நீள்கொம்பு குளம்பால் தாக்கும்
ஒன்றுமே மக்கள் தாய்க்கு முதித்தசேய் மேல்மிக் கன்பே. (19)

நித்தரு முத்தர் தாமும் நீள்விசும் பதன்கண் ணுள்ளார்
எத்தனை கோடி யேனு மெம்பிரா னன்று போந்த
முத்தனை முடிக்கொண் டார்த்து முகமன்செய் துவத்தல் போலும்
இத்தரை புதிதாய்த் தோன்று மிதனையே யுகப்போ டேற்கும். (20)

ஆதலா லிதனை யானிங் கச்சிடத் துணிந்த தன்றித்
தீதற வைந்தெற் கீந்த சீயர்தம் பெருமா னூர்க்கும்
காதலோ டேற்குக் கல்வி கற்பித்த புலமை யோர்க்கும்
ஈதலுக் கேற்ற தின்று லிணையடி யிறைஞ்சி னேனால். (21)

### தற்சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

---

### நூற்பயன்

கரும்பிழி யிரத வின்சொற் கமலநோக் குளதா மத்தால்
விரும்பிய பொருள்க ளெல்லா மிகமிகப் பெருகி யோங்கும்
வரும்புவி யரசர் கேண்மை மன்னுமிக் கதைசொல் வோர்க்காங்
கரும்பொருள் கொடுத்துக் கேட்போர்க் கனுதின மோது வோர்க்கே. (1)

அன்னமும் வீடும் நாடு மகிலமு நிலமும் பொன்னும்
கன்னியும் பரியுங் கோவுங் கலைகளு மாதி யாகப்
பன்னும்பல் தானஞ் செய்யும் பலனெலாம் பெறுவ ரெங்கும்
மன்னுமிவ் வீராம காதை மகிழ்வொடிங் கோது வோரே. (2)

அத்தமே யாதி சம்பத் தனைத்தையும் பெற்று வாழ்வர்
புத்தியிற் சேடற் கொப்பர் போதமிக் குடைய ராவர்
வித்தைக ளெல்லாங் கொள்வர் மேதினி தன்னி லிந்த
வுத்தம விராம காதை யோதுவோர் கேட்போர் தாமே. (3)

இறுதியாங் காலந் தன்னி லிராமவென் றுரைப்போ ரெல்லாம்
அறுதவில் வைகுந் தத்து ளமர்வதாங் குண்மை யென்னில்
உறுதியோ டவன்றன் காதை யோதுவோர் கேட்போர் செய்வோர்
பெறுதலவ் வுலக மென்று பேசுதற் கைய முண்டோ. (4)

மராமரா வென்றோர் வேடன் மாமுனி யாகி யிந்த
இராமமாக் கதையை வைய மேழுமோர்ந் துய்யத் தந்து
புராதன மறைபோல் வைத்துப் புகுந்தனன் திருநா டென்னில்
இராமரா மென்போர் தங்க ளேற்றம்யா மியம்பற் பாற்றே (5)

வேறு

நஞ்சமர் கண்டத்தன் நாயகிக் கோதுமிச்
செஞ்சுவை மிக்கதாய்ச் சீர்வளர் காதையைப்
பஞ்சம பாதகர்ப் பாதகர் கேட்பினும்
கஞ்சம லர்க்கணான் கான்மலர் காண்பரே (6)

நூற்பயன் செய்யுட்கள் முற்றுப்பெற்றன.

## முதலாவது ஆற்றுப் படலம்.

நூல்

பாட்டி னின்மொழிப் பாவையர் நீர்விளை
யாட்டில் வீழ்மணி யாங்கலை வீசஅல்
மேட்டிற் றீபம்போன் மேவெழிற் கோசல
நாட்டி னூற்றணி நாஞ்சிறி தோதுவாம். (1)

தரையி னோர்க்கெலாந் தாயென நிற்பதும்
அரிய நீரது மாரமிழ் தன்னதும்
பெரியர் யாவரும் பேசுந் திறத்ததும்
சரயு மாநதி தானென்பர் மேலையார். (2)

நாலு கோட்டுமோ நன்னிற வான்பல
வேலை மேய்ந்திடி மின்னொ டெழுந்தன
ஓல மிட்டெழு மோடையெண் திக்குமா
போலு மேயவை போந்தவ னின்றுமே. (3)

அந்த ரந்தனி லார்த்திடித் தேய்ந்தன
சிந்தொ ளித்துறுந் திண்மலை மக்களைத்
தந்த ழைத்துப்போய்ச் சண்டைசெய் வாயென
இந்தி ரற்கெதி ரேய்வது போலுமால். (4)

பாரின் மிக்கதிப் பானுமன் னூடிதே
பேரின் மிக்கதும் பெய்வெமிங் காமெனு
மாரி மூவெழு வள்ளிய ராமெனத்
தாரை கான்றன தண்பொலன் வெற்பின்கண். (5)

சந்த வெற்படித் தட்டதன் பண்டிகை
அந்த வானக மாதவன் மேன்முடி
தந்த தாரைகள் தம்பங்க ளொக்குமால்
வந்த திந்திர மானமங் கென்னலாம். (6)

வேறு

மளமள வென்றக மணிபோன் யானையுங்
கோளைகோடு விரைந்தெழுங் கோடியர் போன்மலை
யுளவுள பொருள்பல வொருங்குத் தாங்கொடு
சளசளென் றருவிகள் தரைக்கண் வீழ்ந்தன. (7)

அரியபோன் னுலகினி லமர்ந்த நீரரன்
புரிசடை யிழிந்துடன் புடவி யோடல்போல்
கிரிமிசை விழுந்துடன் கிளர்ந்த நீத்தமே
யுரியநன் னெறிகடந் தோடிற் றெங்குமே. (8)

வேறு

சேலை யுற்றுச் செழுமணி மேலுற
மாலை யுற்று வளைகளங் கோலிட
ஓலைப் பந்தர்க்கண் ணுற்றெழ லால்மணக்
கோலப் பெண்ணெனக் கூடுமேந் நீத்தமே. (9)

கம்ப நின்றுக யிற்றின்மே லேகியோர்
கொம்பெ டுத்துக் கொடியெடுத் தாடிநற்
பம்ப ரத்தின் படிசுழன் றோடலால்
தொம்ப ரத்தி நிகர்த்தறல் தோன்றுமால். (10)

வாளை வீசிப்பின் மண்டல மாய்முழந்
தாளை யிட்டுடன் தண்டுகொண் டார்த்தொரு
வேளை வென்றநன் மெய்யுடைப் போர்த்தொழில்
ஆளை யொத்துள தாங்கெழு நீத்தமே. (11)

மாக்கி ரிக்கலை வாரியவ் வேடரிற்
றாக்கித் தூள்படத் தாலநின் றூர்களைத்
தூக்கி வீழ்த்திப்பின் தூரஞ்சென் றோடலாற்
போக்கி ரிப்பயல் போன்றதவ் வெள்ளமே. (12)

உந்தித் தாமரை யுற்றங் குயர்வோடு
மிந்தப் பாருள யாவுமே தன்னிலாய்
அந்த நாற்றிசை யாமுக மேவலால்
நந்தம் போதனை யொத்ததந் நாரமே. (13)

தமர கம்மொடு தண்ணங் கரங்கொடு
சமரி மெய்யுறத் தாவுங் கலைகொடு
கமையின் றேயிடு காட்டிற் புகுதலால்
உமையின் ஞுயகற் கோப்பந்த நீத்தமே. (14)

வேறு

ஆனைமா முகங்கொண் டாங்கே யங்குச பாச மேந்திக்
கானமா வருக்கை வாழை களம்விள மாதி யோடு
ஆனமா வுருண்டை மோச்சை யவல்பல கார முண்டு
மானமா கணநா தன்போல் வந்ததந் நீத்த மன்றே. (15)

கரகம்வெண் படிக மாலை கின்னரங் கலைக ளேந்திச்
சுரமொடு பாடி யேகித் தூயவெண் மேனி யோடு
வரதநற் பாணி காண வையகத் தெழுத லாலே
திரைகெழு நீத்தங் கல்வித் தேவியை மானு மாதோ. (16)

அங்குசம் படக்கச் சென்றுங் களகையுற் றரிய வாய
சங்கநற் பதும மாதி சகலமா நிதியுங் கொண்டு
எங்கணும் விரைந்து செல்லும் புட்பக மேற லாலே
அங்கெழு நீத்த மந்த வருநிதிக் கிழவன் போலும். (17)

சரவணப் பொய்கை மேவித் தலையாறுற் றிளமை யோடு
வரைபக வெறிந்து கான்போய் வள்ளியைப் புணர்ந்து வெய்ய
திருகுறு வேல்கொண் டாங்கே சிகிமிசை யேக லாலே
அரன்திருக் குமரன் செவ்வே ளனையதவ் வெள்ள மாலோ. (18)

அனைத்தையும் விழுங்கிப் பின்ன ரால்படுத் துந்தி பூத்துப்
புனத்துள வணியி னேடு பொன்னையு முரத்திற் றங்கிச்
சனத்தினைக் காக்க வேண்டிச் சகமெலாம் பரவ லாலே
கனத்தெழில் மேனி யானைக் கடுக்குமந் நீத்த மன்றே. (19)

தாமரை மேவி மேனி தப்னிய மயம தாகிக்
காமரு சிவந்த கூறை காணுறப் பணிகள் பூண்டு
சேமநன் னிதியும் பொன்னுஞ் சேகத்தினர்க் களித்த லாலே
பூமக ளனைய தாங்குப் பொங்குறு நீத்த மாலோ. (20)

பொன்னெடும் பொருப்பின் கண்ணும் பொருளெலாம் வாரிப் போந்து
மின்னெழு வலைக்கை யாலே வீசலாற் சுயோத னப்பேர்
மன்னகப் பொருளை வாரி வழங்கிய வள்ள லான
கன்னனை நிகர்க்கு மந்தக் கணிப்பிலா நீத்த மம்மா. (21)

எல்லையி லரங்க மேவி யிணையில்கா வேரி மூழ்கிக்
குல்லைகன் னிகையி னேடு கொழுந்திரு மண்ணுற் றுடி
நல்லியற் பாடி வந்து நறுமல ரிறைத்தந் நீத்தம்
பல்லியன் மேவும் பாக வதரெனப் பரவிற் றன்றே. (22)

வரையினின் றிழிந்த நீத்த மாநில மெங்கு மேவி
அரியநற் றடங்க ளேரி யாதிகள் நிரப்பி வாசம்
விரிமலர்ப் பொழில்முன் னுய விடமெலா முயிர்போல் மேவிச்
சரசரேன் றேகி யந்தச் சலதியுட் சேர்ந்த தன்றே. (23)

கனப்பொருப் பிழிந்த நீத்தங் கயங்களோ டேரி யாகி
நனிப்பெரு நதிக ளாகி நளிர்கட லமர்ந்த பான்மை
சனித்துயிர் யோனி தோறுஞ் சலித்துநன் முமுட்சு வாகிச்
செனிப்பிலா வைகுந் தத்துட் சேர்வது போலு மாதோ. (24)

விதியினை யளித்த வெந்தை விண்ணவர்க் கென்றே தற்காம்
பதியினை நீத்துத் தோன்றிப் பற்பல்லாண் டளித்த தாகி
நிதியினை யளகை போற்கொள் நிகரில்கோ சலத்தைச் சூழும்
நதியினை யுரைத்தோ மந்த நாட்டினை யுரைசெய் வேமால். (25)

## முதலாவது ஆற்றுப் படலம் முற்றிற்று.

| | | | |
|---|---|---|---|
| ஷ படலத்தின் மொத்தப் பாசுரம் | | ... | 25 |
| காப்புப் பாசுரம் | ... | ... | 12 |
| தற்சிறப்புப் பாயிரப் பாசுரம் | | ... | 21 |
| நூற்பயன் பாசுரம் | ... | ... | 6 |
| ஆக மொத்தப் பாசுரம் | ... | ... | 63 |

---

## இரண்டாவது நாட்டுப் படலம்.

சரயுநீர்க் கால்கள் கோடி தண்ணெனு மந்நீர் மேவிப்
பரவுதண் ணேரி கோடி பங்கயத் தடம்பல் கோடி
விரைபொழில் கோடி தம்மில் விருக்கங்க ளனந்தங் கோடி
கரைகோளம் வயல்க ளாங்கே கணிப்பிலாக் கோடி மாதோ. (1)

சித்திரச் சிகரி மேய தேவர்தங் தலம னேகம்
சத்திர மயுத மாங்கே சாவடி யனந்த மாகும்
நித்திய மன்னதான நிகழ்த்திடு மடம னேகம்
வித்துவச் சனங்கள் போந்தால் மேவிடு மடம னேகம். (2)

விளைவய லகம்போன் ஞதி விழுமிய பொருள்கள் மிக்கார்
களமர்வே ளாள ரென்னுங் கனப்பெருங் குடிகள் வாழும்
அளவிலாத் தவள மாட மணியணி யாக மேவி
யொளிர்தரத் தெங்கின் சாலை யோங்கிடுந் தெருவ னேகம். (3)

ஆலயப் பூசை யாற்று மருச்சகர் வீதி நூறும்
சீலநற் சுபாசு பங்கள் செய்விப்போர் வீதி நூறும்
தாலத்தைந் தொழிலில் வல்லார் தாமுறை வீதி நூறும்
கோலத்திண் ணகங்கள் கட்டுங் கோத்தர்வாழ் வீதி நூறும். (4)

நீடிசை யியம்வா சிப்போர் நிலைத்துவாழ் தெருநூ றாங்கே
ஆடைகள் வெளுப்பித் தீவோ ரகங்கள்சூழ் தெருநூ றாகும்
நாடிவந் துரோமஞ் சீக்கும் நாவிதர் வீதி நூறாம்
கோடிலா தேவற் செய்யுங் குடிச்சுதர் தெருநூ றாங்கே. (5)

உழவர்தா மழையைக் கண்டாங் குழுதொழிற் புரியப் பேரும்
கொழுமட்காண் பொன்னு முத்துங் குரம்பின்கண் ணேறியா நிற்பர்
அழகுறுந் தங்கட் பெண்க ளவற்றினாற் சிற்றில் கோலி
வழிதோறும் பதுமை கட்கே வதுவைசெய் திருப்பர் மாதோ. (6)

அன்னவர் கலைந்த பின்ன ரவர்செய்யச் சிற்றில் மீதே
பன்னரு மந்த நாட்டுப் பகட்டோடு பசுக்கள் போங்கால்
பின்னர்போங் கன்ற னைத்தும் பெரிதுங்காற் றளர்தல் கண்டம்
முன்னவை யொதுங்கி யேக முனைந்துபின் னவையுஞ் செல்லும். (7)

நன்னிமித் தங்கள் நோக்கி நவையிலா வுழவ ராங்கே
பொன்னிற நெற்க டம்மைப் பொங்கிற்கூய் விதைக்குஞ் சும்மை
சென்னியிற் கருணை யுண்டி திகழும்பொற் குடங்கொண் டன்னார்
பன்னிய ரிருந்து பேசப் படுமொலி மாய்க்கு மன்றே. (8)

ஆற்றுநீர் கால்கட் கேகு மரவமு மந்தக் கால்நீர்
தோற்றும்பல் லேரிக் கேகுந் தோணியுமவ் வறல்கள் செய்க்காங்
கேற்றுங்கால் நீர்களேகு மிசையுமந் நீரை மள்ளர்
போற்றித்தஞ் செய்க்குப் பாய்ச்சப் புகுமொலி மாய்க்கு மன்றே. (9)

வயல்கட்குப் பாயுந் தண்ணீர் வழிந்தவ ணிழியு மோதை
கயல்களோ டோடு மந்நீர் கயங்களிற் பாயு மோதை
அயலுறு மேதிக் கூட்ட மவற்றில்வீழ்ந் துழக்கு மோதை
புயல்படி யளக்க ரோதை புலப்படா தொழிப்ப மாதோ. (10)

விதைத்திடு நெற்கள் யாவும் மென்முளை யாகி நாற்றாய்
நதிக்கணு மறல்கள் பாய நளிர்கொடு பச்சென் றாகிக்
குதித்திடைக் கயல்கள் பாயக் குவளைசெங் கமல மல்லி
மிதித்தவண் களையாய் மேவ விளங்குதல் விளம்பற் பாற்றே. (11)

அங்கெழும் பயிர்க்கண் மள்ளர்க் காயதம் மனைவி மார்தங்
கொங்கையம் முகஞ்செவ் வாயுங் கொடுஞ்செயற் கண்ணும் போன்ற
பங்கய முகையப் பூவை பகரல்லி காவி தம்மை
இங்குயாங் களையோ மென்றாங் கேங்கிப்பின் களைவர் மாதோ. (12)

களைகளைக் களைந்த பின்னர் கமுகெனப் பயிர்கள் யாவும்
மளமளென் ரோங்கி வான மட்டமோய்க் கதிர்க டம்மைப்
பளபளென் றிருக்கும் பொன்போற் பருத்தவை யாகப் பெற்றும்
வளைந்துடன் தரைக்கண் வீழ்வ வைணவர் போலு மாதோ. (13)

சீரிய இருலி ளோடு செழுமலர் கனித்தேன் பாய
ஆரியம் வரகு சோள மருந்தினை பயறு மொச்சை
கோரிடு முதிரை சூரங் கோதுமை யுழுந்தேள் மற்றும்
ஏரிநீர்ப் பாய்ச்ச லில்லா விடமெலாம் விளையு மன்றே. (14)

சித்திரக் கோல மைந்தர் சிசியிய லின்சொல் நல்லார்
நித்தியங் குளிக்கும் வாசம் நிறையுநற் றடநீர்ப் பாய்ச்சால்
கத்தரி யவரை பாகல் கருணையம் புடலை பீர்க்கு
கொத்தவ ரைக்காய் மற்றும் பரிமளங் கூரு மாதோ. (15)

உயர்ந்துநற் கதிர்கள் முற்றி யொளிர்நன்செய்ப் பயிர்க ளோடு
வியந்திடக் கதிர்கள் முற்றி மிளிர்புன்செய்ப் பயிர்க டம்மைப்
புயந்திட மாய மள்ளர் புகுந்தரிந் தரிக டம்மை
உயர்ந்தமட் களங்க டோறு முய்ப்பர்வெவ் வேறு மாதோ. (16)

யானையே யனைய மேதி யினம்பல புணையிட் டோட்டி
ஆனபின் வைக்கோற் போர்க ளனேகமா மலைபோல் வேய்ந்து
மானமாச் செந்நெல் லாதி தானிய வகை கடம்மில்
தானநற் றரும மாதி தந்தபின் மிகுதி யாய. (17)

சிறுமணி சிறிய சம்பா சீரக மிளகு சம்பா
நறுமண வூசிச் சம்பா நவரைகார் வாடைச் சம்பா
மறுவில்நற் குண்டு சம்பா மற்றும்பல் வகையாம் நன்செய்த்
தறைமிசை விளையு மேலாந் தானிய வகைக ளோடு. (18)

முன்னர்யா முரைத்த மொச்சை முதிரையெள் ளுழுந்தே யாதிப்
பன்னரு மனேக தானி யங்களும் பையிற் றைத்து
மின்னெழிற் கயிலை போலும் விடைகொளும் பாண்டி லேற்றி
உன்னதத் தங்க ளில்லி னுறைகளிற் சேர்ப்பர் மாதோ. (19)

கன்னலோ டரிய வாழை கமுகந்தம் வகைய னேகம்
தென்னைமா வருக்கை கொய்யா தினுசுக ளனந்த மென்றால்
தன்னைத்தா னிகரந் நாட்டுத் தருவகை யோவ்வொன் றுகப்
பன்னுதற் கெம்மா லாமோ பணிபதிக் கரிதா மென்னில். (20)

ஊரெலாம் பொழிலும் வீடு முறையெலா மணியு நெல்லும்
நீரெலா மீனும் புள்ளும் நிலனெலாங் குளமுந் தோப்பும்
வேரெலா மாமை ஞெண்டும் வெளியெலாம் பவள முத்தும்
போரெலா மன்னஞ் சிட்டும் பொழுதெலா முறுவ மாதோ. (21)

காவெலா மைந்தர் மாதர் கரையெலாம் பணிலம் ஞெண்டும்
பூவெலாம் ஞிமிறுந் தேனும் புடையெலா மயிலோ டன்னம்
மாவெலாங் குயிலும் புள்ளும் மடையெலா முத்தும் பொன்னும்
தீவெலா மணலின் குன்றுஞ் சேனவிளை யாட்டு மாதோ. (22)

தண்ணுமை யொலியி னோடு சதியொலி யிசைந்து நிற்கப்
பண்ணெழு மகர யாழின் பாணர்தா மிசைக்கும் பாடல்
வண்ணவெண் மாடி யும்பர் மஞ்சத்துட் டுயில்கொள் மாதர்
கண்ணெழச் செய்யச் சென்று கயந்தோறுங் குடைவர் மாதோ. (23)

அதிசிறு காலை முல்லை யாயர்தஞ் சிறுவ ரெல்லாம்
நிதிதமக் காய மேதி நிகரிலாப் பசுக்கள் கானில்
வதிதரற் கெழுப்பி யோச்சி வாய்க்கொளும் வேயி னோதை
புதியறல் பாய்ச்ச மள்ளர் போந்ததி காட்டு மாதோ. (24)

மாதவிப் பந்தர் நாப்பண் மாதர்போல் மயில்க ளாலத்
தாதகத் தத்தா வென்னுத் தடத்தலை சதிகள் காட்டக்
கோதில்வண் டிசைகள் பாடக் கோகிலஞ் சுதிகள் காட்டப்
போதுதேன் விருந்து செய்யப் பூரிக்கு மருத மானே. (25)

வேறு

எண்ணெ யாதிய நெய்பிழி செக்கினத் திசையும்
கண்ணி னின்கரும் பினம்பிழி யாலைதங் கலிப்பும்
நண்ணி யென்றென்றும் பேரொலி யாகலின் நடுங்கி
வண்ணக் கிள்ளையம் மயில்குயில் பதுங்குவ பொழிற்கண். (26)

ஒருங்கு நெய்தல ரொலிகடற் புணைவிடற் கெழவே
கருங்கண் ணனங்கலார் நெய்தலிற் கழறுசெவ் வழிதான்
திரங்கொள் முல்லையின் திருமக ளனையவர் மின்னின்
மருங்கு லொல்குற வண்டயிர் கடைந்திடற் கெழுப்பும். (27)

முன்ன ரோதுநல் லாய்ச்சியர் தயிர்கடை முழக்கும்
துன்னு மாயர்கள் தூண்வடத் ததுகடை யொலியும்
பன்னும் வேங்கையோ டரியினத் தொலியெனப் பயந்து
மன்னுங் காவுறை மயில்களு மான்களு மறையும். (28)

கந்தி மாமரத் தாதவ னுச்சியிற் காண்டல்
விந்தை யாந்தம்பத் தாடிவி ளக்கென விளங்கும்
அந்தத் தாருமே லண்டையி லேயது வமர்தல்
இந்தி ரற்கிம்ப ரிட்டபோன் விசிறிபோ லிசையும். (29)

பாங்கா மம்மரத் துச்சியி லம்புலி படிதல்
பீங்கா ளுடியின் தம்பவி ளக்கெனப் பிறங்கும்
ஆங்கா மஃதின்மே லண்டையி லேயது வணைதல்
நீங்கா வானிறைக் கிடுவெள்ளி விசிறியை நிகர்க்கும். (30)

அங்கு மேவிய கொடிச்சியர் கொங்கைக ளனைய
தங்க மாமணி மலைபல வவற்ருென்று தன்னில்
தங்கு மாதவன் தோற்றமங் நிலமங்கை தனக்காம்
பொங்கு மாவொளி மகுடத்தின் மேன்மணி போலும். (31)

திங்க ளத்தகை மலைகளி லொன்றினிற் சேர்தல்
எங்கு மேவிய பொருள்பல கோணருதற் கேகும்
வங்கங் கங்குற்கண் வழிதெரிந் தேகிட வகுத்த
புங்க மாளிகை விளக்கென வேயங்குப் பொலியும். (32)

பொன்னு மொன்பது மணியுமேய் பொருப்பின தொளியால்
அன்ன சாரற்கண் ணுறைதரும் வனசர ரகத்தே
என்ன வல்லினுந் தீபம்வைத் திலர்மண மியற்றும்
அன்ன பொழ்தினின் மங்கலதீ தினுக்கது வமைப்பார். (33)

வாசச் சந்தனச் சோலையவ் வானள வோங்கல்
தேசு லாவிய சத்திய பாமைக்கத் திருமால்
நேசத் தால்தருங் காதன தூரின்கண் ணினைவால்
மீசு ரத்தொடு மதையெக்கிப் பார்த்தலை மேவும். (34

காவின் மேவிரு காடைபோ ருத்துநர் கலிப்பை
ஆவ லோடிரு சேவற்போ ருத்தொலி யடக்கும்
தீவி ரத்தொடு மறிகளை பொருத்தொலி தினமும்
ஓவி லாதிரு மேதிபோ ருத்தொலி யொழிக்கும். (35

அருந்து தற்கென வறுசுவை யுணவுசெய் புகையும்
பொருந்தச் செய்தொழிற் சாலைகள் தமிலெழும் புகையும்
விரைந்து கன்னற்சா றடுபுகை தன்னொடும் விம்மிப்
பருந்து போற்பறந் தெழிலியாய் வானெலாம் படரும். (3

விருந்தாய் வந்தாரோ டொக்கல்மற் றோர்தமை வேண்டி
யிருந்தா ருஞ்சுவைக் கறிவகை யோடன்ன மிட்டு
மருந்தேய் பாயச முழுந்தடை யாதிய வழங்கி
அருந்தீ ருண்ணுமி னெனுமொழி யகந்தோறு மடங்கா. (37)

அன்ன சாலைகள் தமிலரி சிக்கமு வறவும்
மன்ன கந்தோறு மெழுங்கழு நீர்களும் வழிந்து
பன்னும் வாழைநற் கமுகத்தந் தோட்டத்துட் படிந்து
கன்னல் கட்குறத் தெங்கென வுயர்ந்தவை கவினும். (38)

நளினத் தொட்டிலை நல்லனை யெனக்கய லசைப்பக்
களிவண் டாங்குகைத் தாயெனக் கனிந்தவண் பாட
ஒளிர்நற் காவிகண் திறந்துகள் செவிலியி னூட்ட
இளவந் தூவன்னந் தடந்தோறுங் கண்வளர்ந் திருக்கும். (39)

பொழிலில் மாங்குயில் சுகமன்ன மயில்களும் பொருவில்
எழில்கொள் நங்கையர் மொழிநடை யியல்தமைப் பழக
எழுந்தங் கன்னவர் பின்செல்வ வினுஞ்சில வவற்றிற்
கழிந்து வென்னிட்டங் கோடுவே மேற்பறந் தவனே. (40)

வேறு

மாற்றுயர் பொன்னின் மேனி மகளிர்தம் விழிக்குத் தங்கண்
தோற்றதேன் றவர்க்காண் மான்கள் துனைவிற்காற் றென்னச் செல்வ
ஆற்றறல் மறைவ வன்று ரம்பகங் காணு மீன்கள்
தோற்றிடு மம்பும் வேலுந் தூணியி லொளிப்ப மாதோ. (41)

திருமக ளனைய நல்லார் செழுமுலைக் கோவ்வா வாய
பருமலை பலவும் வெட்கிப் பயோதரம் போர்த்து நிற்ப
அருமலை சிலதாம் வீம்போ டாமுரு மாற வேண்டி
உரலமி தம்ப மாதி யுருக்களா யொழிவ மன்னே. (42)

நங்கையர் முகங்கட் கோவ்வா நளிர்மதி தேய்ந்து மாய்ந்து
திங்கட்குட் டோன்றி யோங்கித் திரும்பவுந் தேய்ந்து மாயும்
அங்கதன் கதியற் றாக வம்புய மலரோ வென்னிற்
பங்கப்பட் டுலர்ந்து வாடும் பண்ணைகள் தோறு மன்றே. (43)

இடையரோ டுழவர் பெண்டி ரிடைக்கோவ்வா தேங்கி மின்னற்
கொடிசற்றும் நிற்கா தாகிக் கொண்டலின் மறைந்து செல்லும்
துடியிரு மாப்பை நோக்கித் தொடர்வெறி யாளர் பற்றி
அடித்திடப் புலம்பி யன்று ரகந்தோறுந் தொங்கு மன்றே. (44)

மல்லிகை வாசக் கூந்தல் மகளிர்தம் வாய்க்கு நேரா
அல்லிதான் வெட்கி யெல்லி லவர்வரு வாரென் றெண்ணிப்
புல்லிதழ் போர்த்து நின்று பொழுதுபோ யிருண்ட பின்னர்
அல்லியம் மிதழ்கள் தோன்ற வலர்ந்துபின் சலத்தில் வாடும். (45)

இல்லையங் கியற்ற லந்நாட் டிருப்பவ ரெத்தீங் கும்மே
தொல்லையத் துயர்க் கென்று மாதுலர்த் துருவிச் சேர்தல்
கொல்லையங் கவர்க்குப் பொன்னு முத்தமுங் கொள்ளுந் தானம்
எல்லையந் நாட்டு வேந்தற் கெழுல களவு மாதோ. (46)

தீபமே விரும்ப கில்லார் திகழ்மணி யொளியி•னாலே
கோபமே யிலதா மாங்கே கொடியவ ரின்மை யாலே
சாபமே நாடா தாங்கே சற்குண ருறைத லாலே
தூபமே வேண்டா ராங்கே தூமலர் மணத்தால் மன்னே. (47)

செண்டினைப் பழிக்கு மந்தச் சேயிழை நல்லார் கொங்கை
கண்டினைப் பழிப்ப வன்னார் கழறுமின் சொற்க ளெல்லாம்
வண்டினைப் பழிப்ப வன்னார் மதர்த்தொளிர் கண்கள் யாழின்
தண்டினைப் பழிப்ப வன்னார் தகைமிகுந் தோள்கள் மாதோ. (43)

இல்லாரே யில்லை சம்பத் தெல்லார்க்கு முண்மை யாலே
கல்லாரே யில்லை யாருங் கவிவலோ ராகை யாலே
பொல்லாரே யில்லை யாரும் புண்ணியம் புரித லாலே
ஒல்லாரே யில்லை யாரு மொருமித்தாங் குண்மை யாலே. (49)

இழையும்மை யில்லா வேந்த னேந்துசெங் கோன்மை யாலும்
பிழையின்மை யாய மைந்தர் பெரியர்தந் தூய்மை யாலும்
உழையின்மை விழியி னார்தம் மோங்கிய கற்பி னாலும்
மழையின்மை யவணென் றேது மாற்றமே யில்லை மாதோ. (50)

சிறுகலி யப்பேர் மேவுஞ் சீயர்தம் பெருமான் சீர்த்தி
தறைமிசை யளவின் றேங்குந் தரமென வளங்க ளோங்க
மறையினுங் காணுச் செங்கண் மாலிருந் தளித்த நாட்டை
யறைந்தன மினியா மந்த வணிநக ருரைசெய் வாமால். (51)

*இரண்டாவது - நாட்டுப்படலம் முற்றிற்று.*

**ஆகப்படலம் இரண்டிற்கும் மொத்தப் பாசுரம்—114.**

## மூன்றாவது நகரப் படலம்.

அகழிகீ ழுலகேழ் மட்டு மாழ்ந்திட மதில்வாய் மேலாஞ்
சிகரிமே லுலகேழ் மட்டுஞ் சேரத்தன் கீழ்நி லைக்கண்
புகுந்தென்று மதியு நித்தம் போதலா லயோத்தி யென்னும்
நகரின தேற்ற மின்னும் நாஞ்சொல வேண்டா வன்றே. (1)

அன்னதோ ரகழி நீர்மே லாட்களிற் பெரிய புட்கள்
துன்னிநின் றெழுந்து போதல் தொடர்ந்தந்தச் சகர ரெல்லாம்
முன்னரே யகழ்ந்த பள்ளத் தறலெழ முனைந்து பாய்ந்தாங்
கன்னவ ரெழுதல் போலு மமையுமத் தோற்ற மன்றே. (2)

அமிழ்ந்தெழுங் கராக்க ளாங்கே யடர்ந்துநின் றிகலுந் தோற்றம்
திமிங்கில மொன்றோ டொன்று சிந்துவிற் பொருதல் போலும்
நிமிர்ந்துமேற் றுள்ளு மீன்கள் நிசிசரர்க் கொளித்தே யாங்கே
சமர்வலார் வாட்கள் வீசல் சரம்பல வெய்தல் போலும். (3)

அதன்கரை மேவிநின்ற வதிபெருங் கராவ தன்கண்
குதித்துமூழ் கிடுதல் தேவர் கோன்றனக் கஞ்சிப் போந்தாங்
குததியுள் மைநா கப்பே ரோங்கல்வீழ்ந் தொளித்தல் போலும்
இதழலர் பங்க யங்க ளேங்கணு மேவுந் தோற்றம். (4)

நீரர மகளி ரந்த நீரின்மல் லாந்து மூழ்கிச்
சீரிய முகமே காட்டித் திகழ்வது போலு மந்த
வாரியின் குமுத மன்னார் வாயையே காட்டல் போலும்
காரெழிற் குவளை யன்னார் கண்ணையே காட்டல் போலும். (5)

பளிங்குக ளடுக்கி நன்கு பசும்பொனிற் பதிய வைத்துக்
களங்கமாங் கில்லா தாகக் கட்டிய கரைக்கீழ் மட்டம்
விளங்குபா தாள மேவ வெண்மணல் மிசையாம் வெண்ணீர்
துளங்குபே ரகழி சூழுந் தோற்றம்யாம் விளம்பற் பாற்றே. (6)

அன்னணஞ் சூழ்கி டங்காங் கமரரைக் காக்க வேண்டிப்
பொன்னணங் கிறைவ னுங்கே போந்ததா லவனை நாடிப்
பன்னவன் துயின்ற வந்தப் பாற்கடல் வலமாய் வானோர்
பொன்னின்மா நகரும் போற்றப் புரியினைச் சூழ்தல் போலும். (7)

வேறு

அன்ன மாகிடங் கப்புறஞ் சூழ்தருஞ் சோலை
தன்னிற் பல்வகைப் பூக்களுங் கனிகளுந் தாங்கிப்
பொன்னின் மாமணிப் புரிசையி னப்புறத் தந்தச்
சொன்ன மாநகர் மட்டுமே ளாவிய தோற்றம். (8)

நச்சும் வானகத் திறையந்த நாற்றிசை மதிலை
மேச்சி யன்னதன் மேற்றுக ளெய்திடா வண்ணம்
பச்சைப் பட்டினிற் பற்பல தொழில்புரி திரையைத்
தைச்சி வானின்றுந் தரைவரை விட்டது போலும். (9)

சலவைக் கற்களைச் சுதையினிற் பதித்தவண் சமைத்தாங்
கிலகு பன்மணி யழுத்திய பொற்றக டமைத்த
அலகில் மாமதி ஞற்றிசை வாயினு மமைந்த
நிலைக ளேழுறுஞ் சிகரியே மூலகினு நெடிய. (10)

எந்தத் தேவரு முனிவருங் காணரி தாம்வை
குந்தத் தார்களு மந்நகர்க் கண்டிடக் குழுமி
வந்து போவதற் கிடமிது வாமெனு மதித்தே
யந்தக் கோபுரக் கதிகமா நிலைகள்வைத் திலரால். (11)

வேறு

பெரும்புறக் கடல்நிக ரகழியோ டிருட்பிழம்
பினைநிகர் பொழிற்புறத் துளதாம்
திருமதில் சக்கர வாளவன் கிரியெனத்
திகழ்தர வதன்சதுர்த் திசையும்
விரவிய வாயில்கள் மிசையுறுஞ் சிகரிகள்
வேதண்டம் நான்கென வுயர்தல்
அரியவந் நகரினுக் ககிலமும் போதரற்
காம்படி மாடிக ளெனலாம். (12)

அசைவில தாகிவிண் வரையினு மோங்கியங்
கந்நகர்ச் சூழ்தரும் புரிசை
திசையொரு நான்கினு முடிச்சிர மாமெனச்
சிகரிகள் நான்குபெற் றுளதால்
திசைமுகன் போன்றதங் கனைத்தையு முட்கொடு
திகிரிசங் கேற்றலி னரியாம்
இசைமதி தன்றலை மேலுற வோண்மழு
வேற்றலிற் சிவனெனப் படுமால். (13)

கடும்பெருங் குளிருட னுக்கிர மேவலிற்
காளியை நிகர்க்குமங் கெழுவாம்
நெடும்பெரு முசலமுங் கட்கமு மேற்றலின்
நிசிசரர் போன்றுள தரிய

கோடுேந்தனு வேற்கனைத் தாங்கிட லாற்பெருங்
கோற்றவர் தமைநிகர்த் துளதாம்
அடும்பல பொறிகளை யடக்கலின் முனிவர
ரனையதச் சதுரவன் மதிலே. (14)

வச்சிரா யுதங்கோடு விண்ணக மேவலின்
வானவர்க் கிறைவனை நிகர்க்கும்
உச்சமாய் வளைந்தந்த மாநகர்க் காத்தலி
னுயர்கலை யூர்தியைப் பொருவும்
பிச்சுவா கேடயந் தண்டுவாட் கோடலின்
பெருவலி வீரரைப் புரையும்
நிச்சமாம் நான்கெனுஞ் சிகரிவாய் தமைக்கோடு
நிகமங்கள் நான்கையு நிகர்க்கும். (15)

வேறு

உம்பர்மீ தணவு நாற்பாங் கோண்மதி லுட்பு றத்தே
பம்புமுண் ணிடங்க டோறும் பகுப்புக்க ளோருநான் காய
செம்பொனு லாக்கப் பெற்றுத் திகழ்மணி யிழைக்கப் பெற்ற
ஐம்பதி னுயி ரந்தே ரணியுறும் வீதி நூறும். (16)

அன்னதேர் வீதிக் கப்பா லடுக்கலிற் பெரிய வாய
பொன்னின்பூண் மருப்பி னோடு பொற்கழ லுரலின் கால்கள்
மின்னுகிண் கிணிகள் பூண்ட விழுப்பிட ருடைய யானை
யின்னின மனேகம் யாத்தாங் கிருக்குமில் வீதி நூறும். (17)

நவநவ மாய வண்ணம் நண்ணியாங் கழகில் மிக்காய்த்
தவமணி யாதி யாகச் சாற்றுநற் சுழிக ளேற்றுத்
திவளொளிப் பணிகள் பூண்டு சேகமெங்கு மரிய வாய
இவுளிக ளனந்த மேவு மிற்றெரு வைந்நூ றுங்கே. (18)

சிலைமழு நேவோ ளாதித் திறற்படைப் பயிற்சிக் காய
கலையெலா முணர்ந்தோ ரேந்தக் காவல ரெதிர்த்திட் டாலும்
மலைவதற் கஞ்ச கில்லார் மாப்படை வீர ராவார்
அலகிலா ருறையு மாட மனேகமேய் தெருவைந் நூறும். (19)

நாடக சாலை கோடி நான்மறை யாளர் வேதப்
பாடக சாலை கோடி பரதத்தின் படியே மாதர்
ஆடக சாலை கோடி யாயவிச் சாலை யெல்லாங்
கூடக மாய வீதி கோடிக்கு மேலா மாதோ. (20)

அன்னநற் சாலை கோடி யருத்தியாய்க் கலைகள் யாவும்
பன்னுநற் சாலை கோடி பந்தயப் பொருள்க ளெல்லாம்
மன்னுநற் சாலை கோடி மாசிலச் சாலை யெல்லாந்
துன்னுமஞ் சாலை வீதி தோன்றுவ கோடி மாதோ. (21)

வித்துவச் சபைசி லம்ப வித்தைவில் வித்தைக் கூடம்
மத்துவர் சைவர் தூய வைணவர் சாக்த ரேக
தத்துவர் காணு பத்யர் கௌமரர் சபைக ளோடு
புத்தர்மற் றமண ராதிப் புறமதச் சபைய னேகம். (22)

மடித்தலை வீசு மந்த வாரியிற் பெரிய வாய
கடைத்தெரு வனந்தம் தம்மிற் கடல்மணற் றொகையின் மிக்காய்த்
தொடுத்தொளிர் கடைகள் மிக்காம் சொல்லுமக் கடைக ளாய
இடத்துறும் பொருளி னங்கட் கெண்ணிலை யென்ப மாதோ. (23)

ஆசிலார் கூர்வேற் கண்ணு ரரம்பையர் வெட்குந் தேசார்
நேசமோ டுற்ற போர்க்கு நிசியெலா முறிப்பெண் போல்வார்
கூசிலா ரலகி லின்பங் கொடுப்பர்வா யமிழ்து மீவார்
வேசிமார் தெருவ னேகம் மிளிர்கடை வீதிக் கப்பால். (24)

மைந்துறவ் வீதிக் கப்பால் வணிகர்தாம் வாழும் வீதி
ஐந்தயு தம்மாந் தம்மி லாயபே ரகம்பல் கோடி
அந்தமில் படிகக் கல்லா லாயவை வயிரத் தாய
விந்தமால் வரைபல் கோடி மேவுவ போலு மாதோ. (25)

ஒளிமிகுந் தோங்கு மந்த வுன்னத வகங்க டோறும்
அளகையன் போலுஞ் செல்வ மனைத்தினும் பெரிய ராகிக்
களங்கமோர் சிறிது மில்லா வணிகர்தாங் கனிவிற் கொண்ட
விளங்கிழை மாதர் மக்கள் மேம்பட வாழ்வ ரன்றே, (26)

வரம்பிலவ் வீதிக் கப்பால் மகிபர்கோன் கிளையாம் ராச
பரம்பரை யார்கள் வீதி பத்துநூ றவற்று ளாங்கே
விரும்புமா ளிகைகள் கோடி மிளிரும்பொன் மலைபோ லோங்கல்
இரும்பொன்மா மலையென் றேது மிமயமோர் கோடி போலும். (27)

இன்னவா மகங்க டோறு மிரவிதன் குலத்தோ னுய
மன்னர்கோன் மரபா ரோடு மற்றிரு குலத்து வேந்தர்
பன்னியர் மக்கள் மக்கட் பயந்தவ ரொக்க லோடும்
மன்னியாங் கெந்த நாளும் வாழ்ந்திருப் பார்கள் மன்னே. (28)

புகலுமவ் வீதிக் கப்பாற் பூசுரர் தெருவைந் நூற்றுள்
அகலிடத் தவளமாட மனேகமாங் கோங்குந் தோற்றம்
சகலமாக் கணமுஞ் சூழச் சங்கர னுமையோ டேயும்
பகலொளி செய்யும் வெள்ளிப் பருப்பத மனேகம் போலும். (29)

அத்தகை யகங்க டோறு மருந்ததி கணவ னாதி
வித்தக முனிவர் தூய வேதியர் மனைவி மார்கள்
புத்திர ராதி யோர்கள் புரவல னளிப்பத் தங்கி
நித்தமு மகங்க ளாற்றி நிகமங்க ளோதி வாழ்வார். (30)

பன்னும்பல் வீதி மேவும் பவனங்கட் கிறையே யென்ன
மன்னர்கோன் குடும்பத் தோடு மன்னிவா ழகமொன் றுண்டால்
அன்னதே முன்சொல் வீதி யனைத்துந்தற் சூழ நிற்கும்
இன்னதன் மேன்மை யாதி யியம்புவேஞ் சிறிது மாதோ. (31)

அந்தரங் கடந்து சென்றுங் கலகிலா தோங்கி நின்று
எந்திர மனைத்து மேந்தி யேழ்நிலை யுடைய தாகிச்
சுந்தர நீலக் கல்லாற் சுவர்கள்பெற் றுள்ள தாலே
இந்திர நீலத் தாலு மேருவோன் றிருத்தல் போலும். (32)

சந்திர காந்த மேய தபனியத் தரையின் மீதே
இந்திர நீலக் கல்லா லெழிற்சுவர் வயிரத் தூண்கள்
மைந்துறுந் தூல மாதி மாணிக்க மற்ற வெல்லாம்
விந்தையா மற்றக் கல்லால் வேய்ந்ததம் மாடி மன்னோ. (33)

அனையநன் மாடி முன்ன ரரசர்கோன் கோலுசெய் கிற்கும்
தனிமணி மண்ட பந்தான் தகதகென் றொளிரு மன்னன்
மனைவியர் வெவ்வே றாக வைகிவாழ்ந் திருக்குந் தூய
புனைமணி யகமுன் றந்தப் புரத்தினி லொளிரு மாதோ. (34)

விளம்புபல் வீதி தோறும் வெண்கலாற் சுவர்க ளேற்றுப்
பளிங்கிடை மணிக ளேயும் படிகள்பெற் றுழ மாகிக்
களங்கமில் லறல்க ளோடு கமலஞ்சேவ் வல்லி காவி
விளங்கெழிற் றடம்நன் னான்கு மேவுவ நன்கு மாதோ (35)

படியினு மலரப் பெற்ற பதுமமே யாதிப் பூப்போல்
இடையிடை மணிகள் வைத்தாங் கிருப்பதாற் படிக்கும் நீர்க்கும்
திடமொடு பேதங் காணச் சிறுமியர் திகைத்துப் பின்னர்
இடைவிடா தவணேய் மாத ரிழியக்கண் டிழிவர் மாதோ. (36)

அனந்தமா மந்த வீதி யனைத்தினும் விசித்தி ரம்மாப்
புனைந்தோளி ரகங்கட் காய புறக்கடை தோறு மேவும்
இனம்பல வாந்த ருக்க ளின்முக மலர்கள் பூப்பக்
கனந்திகழ் சோலை யெல்லாங் ககனமே லோங்குந் தோற்றம். (37)

அன்னமாச் சோலை யாவு மகிலங்கள் யாவும் போற்றும்
போன்னகர்ச் சோலை யோடு புரத்தையு நோக்கி யெங்கள்
மன்னகர் தன்னோ டெம்மை மானவே மாட்டீ ரென்றுங்
கின்னகை செய்து கோண்டே யியம்புதல் போலு மாதோ. (38)

அண்டமே லணவு மிஞ்சி யலகில்பல் கோபு ரங்கள்
மண்டப வகைக ளாதி. வாய்ந்துநற் றிருமால் நீல
கண்டனே யாதி தேவர் கருணைகோண் டிருக்குங் கோவில்
எண்டிசை யோரு மேத்த விமைப்பன வனேக மாங்கே. (39)

செருக்கிலா மைந்தர் மாதர் சேர்ந்துவா ழகங்கள் மேய
தெருக்களி னிருபு றத்துந் தெங்கோடு கமுகஞ் சாலை
திருக்கிள ரகங்கள் தோறுஞ் சித்திரக் கோடிகள் மேவும்
மருக்கிளர் தூபக் கால்கள் மாநக ரெங்கு மேவும். (40)

தோரணம் வீதி தோறுந் தோன்றுவ வரிசை யாக
பூரண முத்தின் பந்தர் போலிவன வனந்த மாங்கே
சாரண ரியக்கர் மாதர் சரளியி னிசைக ளேல்லாம்
ஆரண வோலியால் மாய்வ வாங்குறும் வீதிதோறும். (41)

தேர்கரி பரிமா வோதை திரைகட லோலியின் மிக்காம்
ஏர்படை யாட்க ளோதை யியங்களி னொலியால் மாயும்
ஊர்சனத் தோலியோ டன்ன முபசரித் தளிக்குஞ் சும்மை
கார்களி னிடியின் மிக்காய்க் ககனமே லோங்கு மன்றே. (42)

வேறு

விந்தைக் கோபுர மேனிலை மார்க்கமா
வந்து வானவர் மாநகர் நோக்கியாங்
கிந்த வூரைப்போ லில்லைத்தம் மூரேனுச்
சிந்தை நோந்துபின் தம்மகஞ் சேருவர். (43)

பந்து லாவுகைப் பாவையர் மாடமேல்
வந்து லாவுவர் வான்பேண்டி ரைந்தரு
தந்த பூவவர் தந்தலைச் சூட்டிப்பின்
இந்தி ராணிக்கேன் றிந்நகர்ப் பூகேட்பர் (44)

தருத பூவைச் சசிதலைச் சூட்டுவர்
இந்தப் பூந்தரு வீங்கிலை யால்கோடு
வந்து வையயென்பள் வானவர் கோனதைச்
சிந்தை செய்யினுந் தீங்கென்ப னன்னள்பால். (45)

கேத னங்கள் கிளர்ந்துநீண் டாவே
ஆத வன்னே ரரிவையர் கைநீட்டிப்
போத மாமணிப் பூரிப்புண் டிங்ஙனே
ஏதுக் குன்னொளி யேகெனல் போலுமே. (46)

பண்ணுங் கேது படபடென் றுவே
வண்ண மாயவன் மாநகர்ப் போதுவ
தெண்ணி மண்மக ளேந்திழை யாரோடும்
நண்ணி யோகை நடமிடல் போலுமே. (47)

மாடப் பித்தியின் வீழ்மணி மாதர்கள்
ஊடி நின்றெறி யொள்ளணி மைந்தர்கள்
கூடி வீழ்மணிக் குப்பைகள் தம்மையே
சேடி மார்தந் தெருத்தொறுங் கொட்டுவர். (48)

கொட்டுங் குப்பையின் கூரொளி வீதியி
லிட்ட பந்தரா லேயிருள் மாய்த்திடும்
கட்டு மாலைகள் காலுந்தேன் வெள்ளமாங்
கிட்ட குப்பையை யீர்த்துக்கொண் டேகுமால். (49)

வேறு

காலைக் கடன்முடித்துக் கடவுளரைப் பூசிப்பர்
நூலைப் படித்தவற்றின் நுட்பமெலா மோர்ந்துரைப்பர்
மாலைக் கடன்முடித்து மற்றிரவி லுண்டதற்பின்
கோலத் தெரிவையர்பாற் கூடுவரப் புரியினரே. (50)

இரதங் கரிபரிக ளிவர்ந்துபின் னெம்பெருமான்
சரிதம் படித்ததனைச் சரளியோடும் பாடுகிற்பர்
விரத மிருந்திடுவர் வேள்விசெய்வர் நிசிகடொறுஞ்
சுரத மகளிரோடுஞ் சுகிப்பர்களந் நகரினரே. (51)

வேதம் படித்துரைப்பர் வீணைகுழல் வாசிப்பர்
கீதம் பலபாடிக் கிளைமுதலாம் விருந்தினர்க்குச்
சாதம் படைப்பர்தஞ் சகிகளோடு முபசரித்தாங்
கோதுந் திருநகரி லுறைகின்ற பற்பலரே. (52)

பன்னுந் தனுர்வேதம் படித்துணர்வர் சிலம்பவித்தை
யென்னுங் கெரடிகளு மியற்றுகிற்பர் மற்போரோ
டின்னும் பலயுத்தப் பயிற்சிகளு மியற்றுகிற்பர்
மன்னு மவ்வரிய மாநகர்வாழ் மேலவரே. (53)

பெரிய வாணிபங்கள் பிரபலமாச் செய்துறைவர்
அரிய தொழிற்சாலை யாங்காங்கு வைத்திருப்பர்
பிரிய மோடருத்தம் பெரிதளிப்பர் யாவருக்குந்
தெரியு மயோத்தியெனுந் திருநகர்வாழ் மானவரே. (54)

*மூன்றாவது நகரப்படல முற்றிற்று.*

ஆகப்படலம்மூன்றுக்கும் மொத்தப் பாசுரம்—1[illegible].

---

## *நான்காவது அரசியற் படலம்*

அத்தகை நகரங் காக்கு மரசன்யா ரென்னில் மன்னர்
முத்தகைக் குலத்துள் ளிந்த மூதுல கேத்தா நிற்கும்
மித்திரன் குலத்து வேந்தர் தங்களின் மேன்மை யாய
வித்தகன் அசனென் றேதும் வேந்தர்கோற் கரிய மைந்தன். (1)

கசரத துரகங் காலாள் கணிப்பில வாகி யோங்கப்
புசபல மிகுதி யாலே புரவலர் மன்ன னாகித்
திசையொரு பஃதுந் தன்றேர் சென்றுமீண் டிடுகை யாலே
தசரத னெனும்பே ரெங்குந் தழைக்கப்பெற் றுயர்ந்த கோமான். (2)

தூயகோ சலையி னோடு சுமித்திரை யங்கை கேயி
ஆயமுத் தேவி மார்க ளமையப்பெற் றிக்கா தைக்கே
நாயக னாகித் தேவர் நடுக்கங்க ளொழிக்கப் போந்த
மாயவற் சுதனைப் பெற்ற மாப்பெரும் பாக்கி யத்தோன். (3)

உம்பர்கட் கிறைவ னோடி யொளித்திடச் செய்தோ னான
சம்பரன் தன்னை மிக்க சமர்த்தள்கை கேயி யாம்பூங்
கொம்பர்தேர் கடவச் சென்றக் கொடியனைக் கொலைசெய் தும்பர்
தம்பதம் நிலைக்கச் செய்த தனிப்புக ழாளன் மாதோ. (4)

இத்தகை யாளன் செய்யா யாகமு மறமு மின்றால்
சத்தியம் பொறுமை வண்மை தயைசாந்த மாதி யான
உத்தம குணங்கட் கெல்லா முறைவிட மிவனே யாவான்
இத்தரை யுயிர்கள் யாவு மிவனுயி ரென்னக் காப்பான். (5)

திறைசெலுத் தரச ரேல்லாந் தினம்பணிந் திடுங்கால் மௌலி
யுறைதலி லாந்த மூம்பாங் குடையபோற் கழற்கா லோடு
மறையவ ராதி யோர்க்கு நிதம்பொருள் வழங்க லாலே
இறையங்கை சிவக்க நீண்ட விருகர முடையான் மாதோ. (6)

பகைத்திடற் குரிய மன்னர் பயந்துதன் னடிக்கண் வீழச்
சேகத்திலா மாந்தர் யாருஞ் செழிப்போடும் வாழ்ந்து நிற்க
உகப்போடு புலியுங் கோவு மோர்துறை நீருட் கொள்ள
மிகத்திறத் தோடு மிந்த மேதினி காத்தான் மாதோ. (7)

### நான்காவது அரசியற் படல முற்றிற்று.

ஆகப்படலம் நான்கிற்கும் மொத்தப் பாசுரம் 17௫.

---

### ஐந்தாவது உபயவேள்விப் படலம்.

அன்னவ ஞெருதின மகில மேத்துயர்
தன்ஞெரு•குருசரண் பணிந்து நங்குல
முன்னவ ரிப்புவி முழுது மோம்பின
ரன்னவர் தமக்குநே ரார்கோல் லேன்னவே. (1)

அடியெனு மூவிரண் டயுத மாண்டிந்தப்
படியினை யோம்பினன் பழுதில் பாரினி
இடருறு மெற்பினேன் றேங்கு மென்மனம்
கடவுளை மானுமுன் கருத்தி யாதேன்ருன். (2)

அன்னசொற் செவியுற வதிட்ட வாரியன்
முன்ஞெரு பகற்கணே முகுந்தன் தேவர்க்குச்
சொன்னநன் மாற்றமாஞ் சூழ்ச்சி யுன்னிஞன்
அன்னசொல் யாதேனி லறைவெங் கேண்மினே. (3)

கோதிலவ் வானவர் குழுமித் தங்களைப்
பாதக நிசிசரர் பகைத்துச் செய்திடுந்
தீதுகள் யாவையுஞ் சிவபி ரானிடம்
ஓதினர் கேட்டந்த வுமைதன் ஞயகன். (4)

தசமுக ஞதிய சழக்க ரேன்றஞல்
அசைகில ரேன்றன னவரன் ஞஞெடுந்
திசைமுகன் பாற்சென்ருர் திரண்டு மேருவின்
மிசையுறு மண்டப மேவிப் பேசிஞர். (5)

பங்கயத் தவிசுறை பகவ னத்ததி
எங்கடம் மாலந்த வினர் மாள்கிலர்
பங்கயக் கண்ணனைப் பரவிற் றுனெழுந்
திங்கதற் காம்வழி யியம்பு மென்றபின். (6)

வேறு

சிவனயன் முதலோர் யாருஞ் சிரத்திற்கை கூப்பி நின்றே
பவனம்பாற் கடலேன் றுங்கே பாம்பின்மேற் பள்ளி கோள்வோய்
புவனமீ ரேழு முந்தி பூத்துளாய் பரம மூர்த்தி
கவனமோ டிவண்போந் தெம்மைக் காத்தரு ளென்று ரேம்மான். (7)

இருசுடர் வியாழன் வெள்ளி யிந்திர தனுமின் கோண்டாங்
கொருமுகில் போற்குன் றேறி யோப்பிலா தெழுந்த தென்ன
வரிவளை யாழி யேந்தி மணிக்குழை பல்லா ரம்பூண்
டருந்திரு வோடுள் வேந்தி னம்புய மிசைவந் தானல். (8)

சரசரேன் றெழுந்தாங் கன்னேன் சரணில்வீழ்ந் தெழுந்து நின்றார்
பரமனு மென்னை யுன்னும் பான்மையா துரைமி னென்னச்
சிரமோரு பஃதோன் முன்னோர் சேகமேலாம் புகுந்து தங்கள்
வரவலி வாலே யெம்மை வதைக்கின்றார் சகியோ மென்றார். (9)

அன்னவர் முறைசோற் கேட்டாங் கரவணைச் சேல்வன் சோல்வான்
புன்னெறி பரக்கர் வீய்ந்து போகுநா ளணுகிற் றெம்மால்
தன்னிக ரயோத்தி வேந்தன் தயரதன் புதல்வ ராக
என்னிரு படைநற் பாயல் யானும்வந் துதிப்போம் நீங்கள். (10)

கானகத் தோடு குன்றிற் கடிதட மிவற்றி லேகி
வானரக் குருவை யாகி வளர்ந்துகோண் டிருமி னென்றான்
ஆனனம் நான்கோ டைந்தாங் காயவ ராதி யோரத்
தேனினு மினிய சேஞ்சோற் சேவிக்கோண்டாங் கெழுந்து துள்ளி. (11)

ஓடினர் திசைக டோறு முவகையின் மிகுதி யாலே
ஆடினர் நிலங்க ளேங்கு மானந்தக் கண்ணீர் வாரப்
பாடினர் சுரங்க ளோடு பங்கயக் கண்ணன் சீர்த்தி
சூடினர் சிரத்தி லன்னோன் துளவத்தாண் மலர்கள் மாதோ. (12)

அடிமலர் சூடு மந்த வமரர்கட் காசி கூறிக்
கடிமல ரவர்கள் தூவக் கலுழன்மேற் பதங்கள் வைத்தான்
நொடியினி லவன்கோண் டேக நுகருதற் கமிழ்த மீய்ந்து
படியினை யளந்த மாயன் பாற்கடற் பள்ளி கோண்டான். (13)

பிரமன்யா னெண்கின் வேந்தாய்ப் பிறந்துளேன் முன்பே யென்றான்
அரனும்யான் வாத சேயா யவதரித் திடுவே னென்றான்
சுரரிறை வாலி யோடு சுதனு மாய்ப் பிறப்பே னென்றான்
பிரியமோ டிரவி வாலிப் பின்னவ னாவே னென்றான். (14)

பற்றெரி நீல னாகப் பருப்பதத் துதிப்பே னென்றான்
மற்றவ ரோவ்வோர் வான ரங்களா வருவோ மென்றார்
பற்றலர் வீவர் வேடம் பழிப்புள தேற்கி லென்றால்
கோற்றவ ரேனு மேற்கச் சம்மதங் கோள்வர் மாதோ. (15)

வானினின் றேங்கி வாடி வந்தவவ் விபுதர் மேகம்
போனிறத் தேந்தை தீஞ்சோற் புதியதே னுண்டு ளாரால்
பூனைபோல் மதுவை நாடிப் போனவ ரதனை மாந்தி
ஆனைபோல் மதர்த்து மீண்டா ராமென விருக்கை சென்றார். (16)

மீண்டவ ரிருக்கை நின்றும் விண்டுமுன் பணித்த வாறே
மாண்டவஞ் செய்வோர் மேவும் வனத்தோடு குன்று தோறுங்
காண்டகு முருவ மேய கவிகளாய்த் தோன்றி யாங்கே
தாண்டவ மாடி நின்றார் தானுக்க ளனேக ரென்ன. (17)

சந்தம்.

ஆய காதை யுன்னவ் வைய னரையர் கோவை நோக்கியே
தூய சோதி மரபில் வந்து தோன்று மன்னர் மன்னகேள்
சேயர் வேண்டு மாயின் சேயின் காம வேள்வி செய்வையேல்
மாயன் சேடன் ஆழி சங்குன் மைந்த ராவ ரேன்றனன். (18)

இன்ன வாய்மை செவிகோண் டந்நல் லிறைவ னெங்க ளையனே
அன்ன வேள்வி யாரைக் கோண்டிங் காற்ற வேண்டு மேன்றனன்
சென்னி மீது மானின் கோடு திகழ நிற்கு முனிவனோர்
மன்னன் ரோம பாதன் மாடி மன்னு வான்கோண் டெழுகேன்றான். (19)

விரத மேவு முனிவன் றளில் விழுந்தங் கனைவ ரோடுமே
இரத மேறி ரோம பாத னிருக்கு நாடு மேவினான்
துரித மாக வெதிர்கோண் டந்தத் தோன்றல் சேனை யோடுபோய்க்
கரத லங்கள் நிலனில் மேவக் கழல்ப ணிந்து பேசுவான். (20)

எந்தை தந்தை தந்தை யோடு யானுஞ் செய்த தவங்கோலோ
இந்த நாடு தாங்கள் மேவ யாங்கள் மேன்மை பெற்றதேன்
றந்த மன்னர் மன்னன் றன்னை யானை மீது கோண்டுபோய்
அந்தண் வான மேவு மாடி யம்போற் பீட மேற்றினான். (21)

விந்தை யான விபுத ருண்டி விருந்த ளித்தவ் வேந்தனும்
வந்த சேதி யாவ தென்ன மருக னான முனிவனே
மைந்தர் காம வேள்வி செய்ய வரிக்க வந்த தென்றனன்
அந்த மன்ன னவனைக் கொண்டங் கணுகு வேனென் றேதலும். (22)

அந்த னாள னடிவ ணங்கி யவன்ற னாசி பெற்றபின்
சிந்தை மகிழ்வோ டிரத மேறித் திருவ யோத்தி வந்தனன்
பந்து லாவு கரங்கொள் மாதர் பலர்க ளிக்க வின்பமே
தந்து லாவு மழக னாய தரணி மன்னர் மன்னனே. (23)

வேறு சந்தம்.

தசரதன் சென்ற பின்பு தகைமிகு ரோம பாதன்
தவசிகள் புகழு ஞான முனிவேந்தை
திசைமுகன் போன்ற நீயோர் வரந்தர வேணு மென்று
திருவடி தொழுது நின்றுங் குறுகாலே
புசபல மோங்கி நிற்போய் அதுவெது வோது கென்ன
புதல்வர்க ளுதவு வேள்வி செயவேண்டித்
தசரதன் நாடு மேவ வருள்செய வேணு மென்றான்
சரிசரி வருவே னென்றம் முனிதானும். (24)

ஒருரத மீது தூய வுமையொடு தானு மான
ஒளியிழை யொடுவேந் தந்த முனியேற
பிரிதொரு தேரின் மீது மகிபதி ரோம பாதன்
பெரியநன் முனிவ ராதி பலரேற
அருமறை யோதை யோடாங் கமரர்பூ வாரி தூவ
வலகில்பல் லியங்கள் வான மதிலோங்க
தரைமிசை வாயு வேக மொடுசெலக் காத தூரம்
தசரதன் நாடு காணு மெனலோடும். (25)

ஒருவனை யேவி முன்பே வருகையை யோது கென்ன
உளமகிழ் வொடுமேங் கேகி யவனோதை
குருமுனி யாதியான தவசிகள் நாவ லோர்தங்
குழுவொடு மகிபர் கோனும் பொறியேறி
கரிபரி மாவி னோடு குடைகொடி யேவ லாளர்
கவரிக ளொடுமேங் கேகி யெதிராகி
அருமறை யாவு மேவு மகமுனி தூய பாத
வலர்தமை மகுடம் பூண்ட முடிசூட. (26)

அருந்தவன் ருனும் வேத மொழிகளி லாசி கூற
வவனொடுந் தொடர்ந்த பேர்கள் பலரேயும்
பெருந்தகை யான தேர்கள் கரிபரி மாவின் மீதும்
பெருமகிழ் வொடுமேங் கேறி வரவோதி
யருந்திரு போலுந் தேவி யொடுமுனி யேற வோர்தே
ரரசர்மன் குருவோ டோர்தேர் தனிலேறப்
பொருந்தலர் மேவ கில்லா தசரத னுடு போந்து
புகுந்தனர் நகரின் மேவு மிறைமாடி. (27)

வேறு

வேந்தர் வேந்தன்றன் னரண்மனைக் கண்வந்த வேய்த்தோள்
பூந்தண் பாவையை யந்தப்பு ரத்துறப் போக்கிச்
சாந்தர் சாந்தனைச் சதுரரி யாசனத் திருத்திச்
சேந்த தாள்களிற் சிரம்வைத்துச் செய்கடன் செய்தான். (28)

அன்ன வன்றனை யருந்தவ முனிவரன் நோக்கி
என்ன யாகஞ்செய் திடவேனை யழைத்ததிங் கென்னப்
பின்னர் நீணிலங் காக்கவோர் பிள்ளையு மிலையா
லன்ன தெய்துதற் காமக மாற்றுதற் கென்ருன், (29)

மன்னர் மன்னவிம் மகிதல மாத்திர மன்று
பொன்னின் மாநக ராதிய புரமெலாம் புரக்கும்
உன்னி னுெப்புயர் வில்சுதர் தோன்றுவ ருனக்கே
முன்னர் கற்கிமா மகமுடித் ததுசெய வென்ருன். (30)

அன்ன மாற்றமோர்ந் துடன்சுமந் திரனையாங் கழைத்துப்
பன்னு மேர்மிகு நமதொரு பரியலங் கரித்தே
இன்ன பார்முழு தினும்புக விட்டமீட் டிடுகே
என்ன வேந்தனுங் கதன்படி யியற்றின னவனே. (31)

வேறு

எங்கணும்போய் வியசமொமேம் வரும்பரியைக்
கண்ணுேக்கி யிறைவர் கோமான்
பொங்குளத்தோ டேவலர்கா ளலங்கோணர்க
வெனக்கோணர்ந்தார் பொலன்கார் பூட்டி
அங்கதனுல் நிலந்திருத்த மாயதற்பின்
மகசாலை யமைத்தே யாங்குத்
தெங்கிலையே யாதியவை கொடுபெரிய
காவணமுஞ் செய்திட் டாரால். (32)

கம்பங்க டோறுங்கதலி கமுகங்கள்
குலைகளோடுங் கட்டி யாங்கே
சிம்பங்க ளாதியுருக் கேதனங்க
ளெண்டிசையுந் திகழ நாட்டி
அம்பங்க யம்மலர்மா விலைதாழைத்
தோரணங்க ளனந்தம் வேய்ந்து
செம்பங்க யம்முகத்தார் தமைக்கொண்டு
தரைக்கோலஞ் செய்வித் தாரால். (33)

கங்கைமுத லாநதிக ளின்தீர்த்த
மோடிமுதின் கடங்கள் சேர்த்தார்
அங்கதற்கா தருப்பைசமித் தாதியவை
யாவையுங்கொண் டாங்கு வைத்தார்
சங்கரனே யனையமுனி வசிட்டமுனி
முதலெவருஞ் சார்ந்தா ராங்கே
திங்களேழிற் குடையரசர் யாவருமே
யவண்போந்து சேர்ந்தார் மாதோ. (34)

கட்டேற்ற மகசாலை தனின்மேவும்
வேதியர்கள் கோசலைப்பேர்ப்
பட்டத்துத் தலைத்தேவி யோடமர்ந்தத்
தசரதனைப் பரிந்து வாழ்த்திப்
பொட்டேற்ற குடப்புனித தீர்த்தமேலா
மவர்சிரத்தே பொழிந்தார் பின்னர்ப்
பட்டுடுத்துப் பணிபூண்டு மகவறைக்கண்
வீற்றிருந்தார் பான்மை நோக்கில். (35)

திசையனைத்தும் விசயம்பெற் றொருகுடைக்கீ
ழுலகளித்துத் திகழவ் வேந்தன்
நசையோடுகைக் கொண்டணைத்து முத்தமிடத்
தனக்குப்பின் னாற்பார் காக்க
இசையுறுமோர் புதல்வனைத்தந் திலர்முவ
ரிருந்துமென் றுருங் கெண்ணி மற்றோர்
வசமுடைநற் பெண்மணியை மணவறைக்கண்
மணம்புரிதல் மானு மாதோ. (36)

வேறு

அந்தநற் காட்சி யோடே யாங்குறு மன்னைக் கொண்டாங்
கிந்தமா மகத்தை யாற்று மிருத்துவிக் குக்க ளாவார்
விந்தையா முருக்கொள் புட்கள் விலங்கின மாதி தம்மி
லந்தந்தத் தேவர்க் காய வாகுதி பலவுந் தந்தார். (37)

முக்கியப் பசுவ தான மொய்ம்புறு மசுவந் தன்னின்
தக்கவுள் வவையைக் கொண்டு தனிப்பெரு மோமஞ் செய்து
மிக்கவா மங்கந் தம்மை வெவ்வேறு வோமஞ் செய்தார்
மொய்க்கும்ப் புகையுள் மூழ்கி மொய்வேந்தன் புனித ஞானன். (38)

பின்னரம் மறையோ ரந்தப் பிரபல யாகந் தன்னை
மன்னிகர் பெரியோர் மற்றோர் மகிழ்ந்திட முடித்தார் மன்னன்
இன்னவர் தமக்குத் தற்கா மெண்டிசை நாடுந் தந்தான்
அன்னவை திருப்பித் தந்தாங் கலகில்பொன் னவன்பால் பெற்றார். (39)

ஆங்குவந் துற்றோ ராய வந்தண ராதி யோர்க்குத்
தாங்கரும் *புரா மான தனமுதற் பலவுந் தந்தான்
பாங்கராங் கலைக்கோட் டானை வசிட்டனைப் பணிந்தான் பின்னர்
ஆங்குறு முனிவ ராதி யனைவர்க்கும் வணக்கஞ் செய்தான். (40)

ஆரண வாக்கி யத்தா லனைவரு மாசி கூறப்
பூரண மகிழ்ச்சி யோடும் போயினன் தன்மா டிக்கே
வாரண மீதி லேறி மங்கைபொற் சிவிகை மேவச்
சாரண ரியக்கர் பாடத் தையலர் நடிக்க மாதோ. (41)

மற்றைநா ளெழுந்தாங் கந்த மன்னர்க்கு மன்ன னவான்
கற்றைவார் சடையான் போன்ற கலைக்கோட்டு முனிவன் பாதம்
பற்றிவீழ்ந் தெழுந்தாங் கைய பரமநின் னருளி னாலே
முற்றிய தசுவ மேத மொழிந்தருள் *பின்ன தென்றான். (42)

அன்னசொற் கேட்டே யந்த வமலனு மன்னர் மன்ன
முன்னரே யசுவ மேத முற்றிய நதியின் பாங்கர்
பின்னருந் திருத்த மாகப் பெரியதோர் பந்தர் வேய்ந்து
தன்னிகர் யாக சாலை யாதிய சமைத்திட் டாங்கே. (43)

புத்திர காம வேள்வி புரிவதற் காக வேண்டுஞ்
சுத்தநற் பொருள்கள் யாவுந் துரிதமாத் தருவித் தாங்கே
வைத்திடு கஃதி யற்றற் காயநல் வளநாள் சொல்வேன்
அத்தின மகமி யற்ற லாமென மொழிந்தான் மன்னே. (44)

அன்னசொல் லமிழ்தந் தன்னை யரசனுஞ் செவியா லுண்டு
பன்னுதற் கரிய ஞானி பகர்ந்தவை யாவுஞ் செய்து
சொன்னபற் பொருளுஞ் சேர்த்துத் தூயமா முனிபாற் சென்று
பன்னிய யாவுஞ் சித்த மாயின பரம வென்றான். (45)

அனையமா முனியு மன்ன தாற்றுநாள் நாளைக் காமால்
முனிவர்கோன் வதிட்டன் வேந்தர் முதலிய பேர்க ளோடும்
கனிவினோ டதிகா லைக்குள் கடுகியாங் குறுக வென்றான்
அனைவரு முதயந் தன்னி லாங்குவந் திட்டார் மாதோ. (46)

சந்தம்.

அந்தமக மாற்றுதற்காங் கதிபதியா முனிவன்
இந்திரனை யாதியரா மிமையவருக் கெல்லாம்
அந்தமினல் லோமமுஞ்செய் தாகுதிகள் தந்தே
மைந்தர்தரு வோமமொன்று வழங்கினனால் மகத்தாய். (47)

அத்ததியவ் வங்கியினின் றழகியநற் பூதம்
புத்தமிழ்தம் போலடிசிற் பொற்குடங்கொண் டெழுந்தே
வைத்ததவண் மீண்டதுடன் வந்தவழி கொண்டே
அத்தகைய வின்னடிசி லம்பொற்குடங் காணு. (48)

வித்தகமா முனிவரனும் வேந்தன்றனை நோக்கிச்
சித்தமகிழ் வோனேது திருத்தேவி மார்க்கே
பத்திரமா வவ்வடிசிற் பகுந்தளித்தி டென்றான்
அத்தகையாப் பகிர்ந்தளித்தா னயபிதி ரெல்லாம். (49)

சுந்தரமா மேனியினள் சுமித்திரைக்கே தந்தான்
பைந்துளவ மாலையினன் பாயலோடு சங்கும்
வந்தவடன் வயிறுதனில் வாய்ப்பதற்கே யந்தப்
புந்தியவற் காயதுகோல் புகல்வதினி யென்னே. (50)

மகமிரண்டு முடித்தருளம் மாதவனுந் தற்காம்
அகவாழ்க்கைக் குரியவளா மரிவையொடு மகில
சேகம்புகழுந் தசரதன்றன் றிருத்தேரிற் சென்று
புகுந்தனனால் ரோமபதன் புரியொளிர்தன் மனைக்கே. (51)

*ஐந்தாவது உபயவேள்விப்படல முற்றிற்று.*

ஆகப்படலம் ஐந்திற்கும் மொத்தப் பாசுரம் 226.

---

## ஆறுவது திருவவதாரப் படலம்.

பூதந்தான் கொணர்ந்த வுண்டி புசித்தமுத் தேவி மாரும்
மாதங்கள் தோறு மேனி மதியென வெளுத்துக் காணச்
சாதநன் கருந்த கில்லார் சத்திசெய் திருந்தார் பத்து
மாதங்க ளாய பின்னர் வயிறுமிக் குயர நின்றார். (1)

கண்டிடு மகிபர் கோமான் கழிபெரு முவகை யாற்றன்
பெண்டிர்பால் நிதமு மேகிப் பேரன்பு பூண்டு நின்றான்
அண்டர்கோ னாதி தேவ ரகமகிழ்ந் திருந்தா ரந்த
விண்டுமுன் பணித்த வாறே மேவுவ னவர்பா லென்றே. (2)

மைந்தர்க ளுதிக்குங் காலம் வந்ததான் மங்கை மார்தம்
உந்திநோய் மிகுதி யாலங் குலைதலோர்ந் தரசர் கோமான்
தந்திடாய் மருத்து வஞ்செய் தையலர் தம்மை யென்ன
வந்தன ரவரு மாங்கோர் வனிதைசென் றழைக்க மாதோ. (3)

தேசுறு மேடத் திங்கள் திகழ்புனர்ப் பூசத் தோடாங்
காசிலா நவமி ஞெண்டே யாதிய நெடுநாட் செய்த
பூசனை யுள்தாம் போலும் புகலவைக் குரிய போதிற்
கோசலை யென்பாள் செய்யாட் கோண்கனைச் சுதனை வீன்றாள். (4)

சாகையங் கனந்த மாய சாற்றரு மறையுங் காணா
வாகையன் வலக்கை யேந்தும் வண்படைத் திகிரி தன்னைக்
கேகையன் புதல்வி பூசங் கிளருமீ னோரை தன்னிற்
றோகையர் வியந்து பேசத் தூய்ச்சுத னாகப் பெற்றாள். (5)

அனையமால் சயன மாய வரவுகட் கரையன் றன்னைக்
கனமுறுங் ககன மேய கடகநல் லோரை தன்னில்
அனைவரும் புகழ வாயில் லியமெனு மருநா ளன்னிற்
றனைநிகர் சுமித்தி ரைப்பேர்த் தையல்நற் சுதனைப் பெற்றாள். (6)

என்னையாள் திருமா லேந்து மிடக்கைநற் சங்கந் தன்னை
மன்னெழிற் சிங்க வோரை மகமெனு நாளின் கண்ணே
பின்னுமச் சுமித்தி ரைப்பேர்ப் பெட்புறு நங்கை நல்லாள்
பன்னுமச் சங்க வண்ணப் பாலக னாகப் பெற்றாள். (7)

### சந்தம்.

துந்துமிதம் தம்மெனவுந் துகளில்சுரம் பாடிக்
கந்தருவர் கின்னரர்கள் கணிகையர்கள் நடிக்கக்
கந்தமலர் தூவினர்கள் கடவுளர்க ளெல்லாம்
அந்தரநின் றுடினர்க ளலகில்மகிழ் வாலே. (8)

சிலதியர்கள் தமிற்சிலர்தஞ் சிந்தைமகிழ்ந் தோடி
யுலைவில்புக ழிறைவனிட மோதினர்க ளதுகேட்
டலகில்மகிழ் வோடவர்கட் கணிகள்பரி சளித்தான்
திலமெழுநெய் சிரனில்கொடு தீர்த்தநதி யாடி (9)

வித்துமுத லாயபொருள் வேதியர்கட் கீந்தான்
எத்திசையும் புகழுமந்த வேந்தல்பணி யாட்குள்
புத்திமிகு வோனொருவன் போயழைக்க வந்த
உத்தமநற் சோதிடர்க ளோகையொடங் குற்றார். (10)

அன்னவரை நோக்கியெனக் கரும்புதல்வ ருதித்தார்
பொன்னனைய நுங்கள்பெரும் புண்ணியநற் பயனால்
இன்னவர்தஞ் சாதகங்க ளெழுதித்தரு கென்றான்
பொன்னினெழி லோலைதமிற் பொறித்தவற்றைச் சொல்வார். (11)

வேறு

கன்னலின் மொழியினள் கௌசலை யளித்திடுங் கரியமுகில் தோன்றிய தாய
கடகநல் லோரையிற் குருவுச்ச மெய்தினன் கலைமதி யாட்சிபெற் றுள்ளான்
மன்னெழிற் றுலையினிற் சனியுச்ச மெய்தினன் மகரத்திற் சேயுச்ச னானான்
வனமுறு மீனத்திற் சுக்கிர னுச்சனாய் வந்தன னலரியென் பானே
தன்னுடன் புந்தியு மிருந்திட மறியினிற் றானுச்ச னாகிநின் றானால்
தனுவினிற் கரியபாம் பிருந்திட வதற்குநேர்ச் சயமகட் கேதுவு நின்றான்
பன்னுதற் கரியளாங் கோசலை தன்னொடேன் பாக்கிய மென்சொலு வேமால்
பாரகத் தேவர்க்கிவா றிருந்தன கோள்களே பார்த்திப கேளெனச் சொல்வார்.

ஒன்றினிக் குரியவ னன்னதி லாட்சியாங் கோன்பதோ டாறின னுச்சம்
ஓரிரண் டானொரு பஃதினி லுச்சனா யுகந்தமால் தன்னொடு நின்றான்
நன்றுறு மேழெட்டுக் குரியவ னுச்சனாய் நான்கினில் வலித்துநின் றானால்
நவிலரு மைந்தொடு பத்திறை யுச்சனாய் நலம்பயப் பேழில்நின் றுள்ளான்
குன்றென நிதிதரும் பன்னொன்று நான்கினன் குவியுநற் பாக்கியத் துச்சன்
கோதண்ட ராகொடு யாழ்நின்ற கேதுவுங் கூறுதற் கரியராய் நின்றார்
என்றேழி யுச்சர்கள் நால்வரும் பன்னொன்றுக் கிசைந்தவ ராகியாங் குற்றார்
இன்னணங் கோள்நிலை யாவருக் குற்றன வென்றனர் பின்னையுஞ் சொல்வார்.

சந்த விருத்தம்

ஏனை மாத ரிருவ-ரீன்ற மைந்தர் மூவர்க்
கான சாத கங்க-ளனைத்து சால நன்றே
கோனே நிற்கிங் காய-குமரர் நால்வர் தாமும்
வானின் சூரன் சோமன்-மறையன் சுங்கன் போல்வார். (14)

என்று சோதி டத்தி-லிணையில் நல்லோர் புகல
மன்று ளாய முனிவர்-மற்று முள்ள பேரும்
நன்று நன்றுங் கென்றே-நவின்றார் மைந்தர்க் காசி
நின்று பல்லி யங்கள்-நீள்வி சும்பி லார்த்த. (15)

அன்ன போதாங் கந்த-வரசர்க் காய மகிழ்ச்சி
பன்னப் படுமோ வெம்மாற்-பகரப் படுமோ சொல்வீர்
தன்னந் தனியே மைந்தர்-சாதங் கணித்த பேர்க்கே
பொன்னும் பொருளும் பூணும்-பொதிமா டேற்றித் தந்தான். (16)

எந்த மன்னர் கட்கு-மிறையின் றேழாண் டளவும்
அந்த மன்னர் குடிக்கு-மவ்வா றுகு மென்னில்
நந்தங் குடிக்கு மஃதே-நவிலா தமையு மன்றே
இந்த மாற்ற மன்னோ-ரேவர்க்குந் தெரியச் செய்ம்மின். (17)

நிதியின் சாலைக் காப்பை-நீக்கி விடுமி னதன்கண்
பொதியும் யாவுங் கொண்டு-போக யாரும் நகர்க்கண்
வதியுங் கோவிற் கெல்லாம்-வரையில் சிறப்பே செய்ம்மின்
புதிய வுடைக ளணிகள்-புகுந்து கொடுமி னெவர்க்கும். (18)

அன்ன சாலை தோறு-மமிழ்தம் போவூ ணளிமின்
தென்னை யோலைப் பந்தர்-தெருக்க டோறு மிடுமின்
கன்ன லோடு வாழை-கமுகந் தருக்க ளார்த்தே
வன்ன வன்னக் கொடிகள்-வகுத்து யாத்து விடுமின். (19)

சங்கம் பேரி பூரி-தாரை நாக சுரங்கள்
எங்கு முழங்க வேணு-மிறைவ முகுந்த வென்றே
சங்கொ டாழிக் குறிகள்-தங்கள் புயத்திற் கொண்டோர்
எங்குந் துதிகள் பாடி-யிருக்கச் செய்ம்மி னென்றான். (20)

விடுத்தா ரோலை யமைச்சர்-வேந்தர்க் கெல்லா மன்றே
அடித்தார் நகரில் பேரி-யரசன் சொன்ன வாறே
தொடுத்தார் பந்த ராதி-சொன்ன யாவுஞ் செய்தார்
முடித்தோ முடித்தோ மென்றே-மொழிந்தா ரரசன் மாட்டே. (21)

வேறு சந்தம்.

அடித்த பேரிகை யோடவர் வாய்மொழி
யனைத்து மோர்ந்தக மகிழ்வொடு மாநகர் தனின்மேவுந்
தடித்துப்பொலிடை யுடையர்தம் நாயகர்
சனித்த பாலகர் தமைமறந் தேயகந் தமைமூடார்

அடித்த காலென வுடல்மறந் தோடின
ரணைக்கு நாயகர் முதலிய பேர்களு மவர்போன்ற
நடத்தை யோடுமம் மகளிரை நாடிலர்
நகைத்தங் கோடினர் தசரதன் மாளிகை தனைநாடி. (22)

கோடுக்கும் வேலைசெய் வோர்கிழ மானவர்
குறித்த மாதர்கள் மறந்திடு பாலரைக் கொடுபோனார்
கடைக்கு நாயக ரேவல ரோடவண்
கணக்குப் பார்ப்பவர் முதலிய பேர்களுங் கடைமூடார்
சடக்கென் றேகினர் வாங்கவந் தோர்களுஞ்
சரக்கு வாங்கில ரதுகோள லாயவர் கொடுபோகார்
நொடிக்கு ளேகினர் வானம ளாவிய
நுணுக்க மாமணி யொளிரிறை மாளிகை தனைநாடி. (23)

குருக்கள் மாதவர் வேதியர் சாதகங்
குறிக்குஞ் சோதிடர் நாவலர் மேலவர் கவிவாணர்
தருக்க மாச்சபை யாளர்கள் மாகலைச்
சமர்த்தர் பாடகர் வாகட ராதிய பலபேரும்
செருக்கி லாதவ ராயுல காள்பல
திசைக்கண் மேவிய வேந்தர்கள் யாவரு மொருநான்கு
வருக்க மாகிய சேனைகள் சூழ்தர
வணக்க மோடிறை மாளிகை நாடியாங் கெழலானார். (24)

வேறு

இன்னணம் போந்தார் தம்மில் யாவரே முன்னர் போந்தார்
அன்னவர் தாமே யந்த வரண்மனை நேரில் நின்றார்
பின்னரே போந்தோ ரெல்லாம் பின்பின்னாய் நிற்க லாலே
யன்னமா நகரின் வீதி யனைத்தினும் நெருங்கி நின்றார். (25)

பந்தர்க ளெங்கும் வேய்ந்து பற்பல கொடிகள் யாத்துக்
கந்திமா வாழை யோடு கணிப்பில்தோ ரணங்கள் நாட்டிச்
சந்திர னிரவி போற்பல் தருப்பணத் தீபம் நாற்றி
யிந்திர நகரம் போலு மிருக்குமந் நகர்நின் றுருள். (26)

களித்தவ னுண்பெண் ணனென்று கருதிலர் தழுவு வாரும்
தெளித்துச்சாந் தெண்ணெய் சுண்ணஞ் சேர்ந்துநின் றூடு வாரும்
விளித்துக்கண் டின்ப லங்கள் வேண்டியே வழங்கு வாரும்
அளித்தகற் கண்டே யாதி யருந்தியாங் கிருந்து ளாரும். (27)

பூக்களை வாரி வாரிப் புகுவர்மேற் றூவு வாரும்
பாக்களைப் பாடிப் பாடிப் பரமனைத் துதிசெய் வாரும்
கோக்களின் பயங்கோண் டாங்கே குடிமினேன் றுரைசெய் வாரும்
தேக்கெழ வவற்றை யுண்டு சேனங்களை விலக்கு வாரும். (28)

அன்னவா றியங்கு வோரா லாயபே ரோலியி னோடு
மன்னர்தம் மொருநான் காய வகைத்தளத் தோலியு மாங்கே
பன்னரு மியங்க ளாலே பரந்தபல் லோலியுங் கூடிப்
போன்னகர்க் கதுவத் தேவர் பூமழை பொழிந்தார் மாதோ. (29)

அன்னநல் லமயந் தன்னி லரசர்கோ னமைச்சை நோக்கி
யென்னரும் புதல்வர்க் காண விவணிற்போர் தம்மை யெல்லாம்
முன்னுறு வாயில் போக்கி முறைப்படி சுதரைக் காட்டி
யின்னொரு வாயில் போக்கி யிருத்துமின் விடுதி யென்றான். (30)

அன்னண மமைச்ச ராற்ற வருஞ்சுதர்க் கண்டோர் யாரும்
இன்னவ ரெழின்மை கண்டாங் கேகில ராகி நிற்பப்
பின்னர்போற் பிரம்பைக் காட்டப் பெயர்ந்தனர் பாங்கர் மேய
மின்னெழில் விடுதி தோறு மேவிவீற் றிருந்தார் மாதோ. (31)

வேறு

அன்று பன்னிரண் டாந்தின மாதலி னீதே
நன்று நன்றெென நங்கைய ரோடவ ரிடபக்
கன்றி னுஞ்சுதர் கட்குப்பல் சேடியர் கனிவால்
நின்று மங்கல நீர்குளிப் பாட்டின ரகத்தே. (32)

வைய மேத்துயர் வசிட்டநன் முனிவர னேனை
யைய மாரோமே் வந்துமுன் றரிவையர் தமையுங்
கையிற் பாலகர் கவினவே யாங்குநன் கிருத்திச்
செய்யு நற்சடங் கனைத்தையு நன்குசெய் வித்தான். (33)

மாத வற்கிறை யாமந்த மாமுனி பின்பு
கோதி லாதநற் கோசலை யெனும்பெயர் கொண்ட
மாது தந்தருள் மறையினோ டேவர்களுங் காணச்
சோதி தன்பெய ரிராமபி ரானெனச் சொன்னான். (34)

விரத மேவுதன் வேந்தருக் காங்கொரு தினத்தில்
இரத மோச்சுபோற் பாவையங் கீன்றநற் சுதனும்
வரதன் மாயன்றன் வலக்கரத் தாழியா மவற்குப்
பரத னென்பெயர் பரிவுட னேயவ னளித்தான். (35)

துலக்க மாயமெய்ச் சுமித்திரை முதற்றந்த சுதனும்
கலைக்கண் விஞ்சறி வுடையவ னென்றிம்பர் கழறும்
அலைக்கண் மாயவற் கரியநற் பாயலா மவற்கு
இலக்கு வப்பெயர் தகுந்தகு மிவற்கென வளித்தான். (36)

தத்து ருக்கோடு தாமத்திற் கட்டுண்டோ னிடக்கை
வைத்தி ருக்கும்வெண் வண்சங்க மாகிய வந்த
மைத்தி ருக்கணின் மங்கைபின் பீன்றிடுஞ் சுதற்குச்
சத்து ருக்கன நற்பெயர் தகுமெனத் தந்தான். (37)

அனைய வாம்பெயர் முனிவர னளித்தபின் னரசர்
முனிவ ராதியர் யாவர்க்கு முகமன்கள் கூறி
கனிவி னோடுபல் பொருளோடு கலைகளும் வழங்கி
இனிய கற்கண்டு முக்கனி தம்பல மீய்ந்தே. (38)

வருந்தி யாரையு முறைப்படி யவணவண் வைத்து
மருந்தி னுமுண வறுசுவை யோடந்த மகிபன்
விருந்து செய்தபின் விளங்குமச் சுதர்தமைப் பின்னும்
பரிந்து நோக்கித்தம் பதியினுக் கனைவருஞ் சென்றார். (39)

சந்தம்.

ஆய பின்னரச் சுதர்கள் நால்வரு
மலரி யிந்துபோன் வெள்ளிபோல்
தூய தாயர்நற் செவிலி யாதியர்
தொடையிற் சிற்றிடை மீதோடே
வாயு மார்பிலந் தொட்டி லேணையில்
வளர்ந்து மாமணி மாடியிற்
றுயர் மாரோடு தந்தை போங்கவுந்
தவழ்ந்தங் கின்மொழி பேசினர். (40)

நின்று வீழ்ந்துபின் பெழுந்து சென்றந்த
நெடிய வீதிவந் தானோடே
குன்றி னுங்கரி குதிரை நற்கலைக்
குருளை யோடுசேன் றேடிச்சேங்
கன்றி னும்நகர் மைந்தர் தம்மோடுங்
கலந்து போய்விளை யாடினர்
நன்று நன்றென வுலகின் மாந்தரும்
நல்கி னோர்களும் பொங்கவே. (41)

சவுள மோடபே நயன மாதிய
சடங்கே லாங்குரு செய்தபின்
தவள மாமணி கரிய மாமணி
தனயர் போலுரு வாகியே
திவளு மாளிகை தெருவிற் சோலையிற்
றிரிந்து லாவுதல் போலுமே
கவள யானையின் கதியிற் சேடனுங்
கரிய மாலுமங் கேகுவார். (42)

கரிய மாவோடு வெளிய மாத்தருங்
கன்றின் மற்றிரு மைந்தரும்
அரிய வீதிநற் சோலை யாறுகுன்
றுதி யெங்கணு மேகுவார்
பிரிய மோடமேந் நால்வர் தாமுமா
பெரிய யானைதே ரேற்றமும்
தெரிய லாயபின் சிலம்ப வித்தையும்
சிலைமுன் னுயவுந் தேர்ந்தனர். (43)

மறைகள் நான்கோடு கலைகள் யாவையும்
வதிட்ட னூல்நனி தேர்ந்துளார்
தறையு ளார்தமை முகிலின் மேனியன்
தயையி னும்மனை மாட்டோளார்
நிறையு மாமகிழ் வுடைய ரோவென
நினது மாநகர் மேவேமக்
குறுத லின்பமே யூழி மேலுநீ
யுலகங் காத்துவாழ் கென்பரே. (44)

கரிய மாமுகி லனைய னுதியர்
கழறு மின்மொழி யோடவ
ரரிய வாஞ்செய லாடல் பாடலோ
டழகும் நோக்கிய மன்னர்கோன்
பிரிய மேமிகுந் துளம கிழ்ச்சியால்
பெரிய மாநிலம் யாவையும்
அரியி னுசனத் திருந்து முன்னினு
மதிக மேன்மையோ டோம்பினன். (45)

ஆறுவது-திருவவதாரப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் ஆறுக்கும் மொத்தப் பாசுரம் 269.

## ஏழாவது கையடைப் படலம்.

அன்னண முலகம் யாவு மளித்திடும் வேந்தர் கோமான்
பொன்னினன் மணிக ளேய்ந்து பொலியுமா மண்ட பத்துள்
துன்னுசிங் காதனத்தே துலங்கிடு மமையந் தன்னில்
தன்னிகர் கௌசி கப்போர்த் தவமுனி வருதல் கண்டான். (1)

எழுந்தனன் மகுட மன்னே னிணைப்பத மலர்கள் சூட
விழுந்தன னெழுந்தாங் கேந்தாய் மிளிர்மணி யாச னத்தே
யெழுந்தருள் கென்றான் தூய னிருந்தபின் வேந்தர் வேந்த
னழுந்தினன் களிப்பென் றேது மளக்கருள் ளவனை நோக்கி. (2)

என்னருந் தவமோ வேந்தை யியற்றுநற் றவமோ முன்னோர்
பன்னருந் தவமோ வுன்றன் பதமிவண் படர்ந்த தென்றான்
இன்னலோன் றற்ற தாயி னிமையவர் முனிவர் தம்மில்
உன்னிடம் போந்தி லாதா ருளர்கொலோ வென்றத் தூயன். (3)

சேகம்புகழ் தவங்க ளாற்றத் தடைசெய்மூன் றைந்து மென்ன
மகஞ்செய வொட்டா தாங்கே மதர்த்தெழுந் தோடி வந்தாங்
ககமிக வுடைய ராய வரக்கர்க ளழிக்கின் றூரால்
தகைந்ததைக் காக்க வுன்றன் தலைச்சுதற் றருதி யென்ன. (4)

இடியுண ராவம் போன்றுங் கின்னல்மிக் காகிக் கைவீழ்
தடியெனத் தரையில் வீழ்ந்தான் தனயனை யிழந்தான் போலும்
இடர்சிறி தாறி யந்த வேந்தலம் முனியை நோக்கிப்
படைவிடும் பயிற்சி முற்றாப் பாலக னவன்காண் மேலோய். (5)

பணித்தியே லரக்க ரன்றிப் பங்கய னரனே யேனும்
கணத்தவர் சிரங்கொய் தாங்கே காப்பெனுன் மகத்தை யென்ன
இணைச்சொலற் கேவரு மில்லவ் விருடியம் மாற்றங் கேட்டுக்
கணித்தலில் சினமு மூளக் கண்சிவந் திடுதல் கண்டே. (6)

வேறு

குருவம் மன்னனைக் கூவினன் மட்டிலாத்
திருவு ளார்கட்கே சேர்வன யாவும்போல்
திருவின் கேள்வனிற் சேருன்றன் மைந்தற்கே
மருவும் யாவும் மறுத்தனை போலுநீ. (7)

அஞ்ச லஞ்சலுன் னம்மிகு மைந்தனைக்
கஞ்ச னோர்முனிக் கையினிற் றந்தவற்
றஞ்ச மென்றவன் றூட்கண் விழுகென்றான்
செஞ்சொற் கேட்டம்மன் சிந்தை மகிழ்ந்துடன். (8)

நீல வண்ணனை நேரில்நற் சேடனைக்
கோல மாமுனி கோள்கேன் றளித்தனன்
பால ரின்னவர் பாலித்த ருள்தந்தை
சீல நற்குரு தேவினே டாயுநீ. (9)

என்றங் கோதலு மேதமங் கொன்றிலான்
நன்று நன்றென நக்கனன் வாழ்த்திச்சேங்
கன்றின் மைந்தர்க் களிப்பினிற் கொண்டேழில்
வென்றி மாநகர் வீதியில் மேவினன். (10)

கொந்து லாமலர் மாலைநற் கொற்றவன்
சிந்தை யோடுயிர் கொண்டவண் சேறல்போல்
மைந்தர் தன்பின்வ ரச்செல்லம் மாமுனி
மந்தி ரச்சொக்குத் தூளனை மானுமே. (11)

வேறு

அந்தமா முனியோ டன்னு ரங்நகர் வீதி யேகல்
அந்தரத் தமரர் கட்காங் காயநற் குருவி னேடு
சுந்தரச் சுவர்க்க வீதி தன்னிலச் சுவர்க்கங் காக்கும்
இந்திர வுபேந்தி ரப்பே ரிருவரு மேகல் போலும். (12)

அன்னவர் மூவர் தாமு மமரர்தம் பதியேன் றேதும்
பொன்னகர் தனினு மேலாம் புரியுயர் புரிசை நீங்கித்
தன்னிக ரிலாத தூய சரயுமா நதியின் பாங்கர்
மன்னெழிற் சோலை மேவி வைகினர் சிரமந் தீர்ந்தார். (13)

சதுரமா மறையோர் மற்றேர் சாயவந் தனங்க ளாற்றக்
கோதிசுட ராறி நின்ற கொற்றநல் வெய்யோன் பொற்றேர்க்
குதிரைக ளேழு மேலைக் குன்றின்மே லேறத் தாமும்
நதிகடந் தப்பா லாய நளிர்கரை யேறி னூரால். (14)

*ஏழாவது கையடைப்படலம் முற்றிற்று.*

ஆகப்படலம் ஏழுக்கும் மொத்தப் பாசுரம் 285.

## எட்டாவது தாடகை வதைப் படலம்,

அங்கழ காயநற் சோலைகண் டேநம் மருந்திருமால்
இங்கிது யாதென மாமுனி கேட்டைய விவ்வகத்தே
சங்கரன் முன்முனம் யோகத் திருந்த சமயந்தனில்
அங்கவன் மேன்மத னம்புவிட் டானின் றறிவழிந்தே. (1)

விட்டிடும் வாளிகள் பட்டதுஞ் சம்பு விழியெரியால்
கட்டழ காமத னங்க மெரிந்து கரிந்திவணே
பட்டதன் பின்ன னங்கப் பெயர்தான் படைத்தனன்பின்
பிட்டனர் காமாச் சிரமப் பெயரிவ் விடத்தினுக்கே. (2)

அன்றியு மன்னவ னங்க மெரிந்ததிங் காகையினல்
இன்றுமிந் நாட்டினை யேயங்க நாடென் றியம்புவரால்
என்றனன் கேட்டெம் பெருமா னுகந்தபி னின்னவரைச்
சென்றரு மாதவர் கொண்டெழுந் தார்தந் திருமனைக்கே. (3)

கொண்டெழுந் தன்னவர்க் கின்னவ ரென்றுங் கொளுமுணவாங்
கண்டனை யின்கனி காய்கிழங் காய கனவுணவே
கொண்டவண் வந்துப சாரமோ டீந்தனர் கொண்டவற்றை
யுண்டவ ணித்திரை செய்திருந் தாரந்த வுத்தமரே. (4)

வேறு

சிற்சிறு காலையி லெழுந்து சென்றனர்
பொற்றட மூழ்கினர் பூசை யாற்றினர்
பற்றெரி போன்றவெம் பாலை யேகிட
நற்றுதி யீதென நடக்க லாயினர். (5)

மன்குல மூன்றினுள் மதிப்பு மிக்கதாம்
என்குல மைந்தர்க ளிறையுஞ் செல்கிலர்
வன்சுர மையநீ மறைசொல் லன்னவர்க்
கென்பவன் போன்றவ ணிரவி தோன்றினன். (6)

வேறு

இன்ன மூவரு மேகுமப் பாலைநேர்
மின்னு மேகமும் வீழ்ந்தங் கிறக்குமேல்
மன்னுந் தீயர் மனத்தினும் வெம்மைகொள்
அன்ன பாலையி லார்கோ லணுகுவார். (7)

கம்பர் பற்பல் கவிகளி ஞலதைப்
பம்ப வன்னிக்கப் பார்த்துமே வன்னிக்கத்
தெம்பெற் கில்லே சிறிதுமே யன்னதாங்
கிம்பர் யார்க்கு மிடர்செய் திடுவதால். (8)

அனைய பாலேயி லம்புவி நாயகன்
தனய ரேகல் தவசி யுணர்ந்தனன்
இனையர் வல்லவ ரேனுந்தா மெல்லியர்
இனியு மாற்றநில் லாரேன்றங் கெண்ணியே. (9)

முந்தி வேதன் மொழிந்தன வோரிரு
மந்தி ரங்களை மைந்தர்க் குரைத்தனன்
சிந்தை வைத்தவர் செப்பின ரம்மறை
அந்தப் பாலே குளிர்ந்த தவர்க்கரோ. (10)

கொடிய பாலே குளிர்ச்சியே காட்டலால்
படிய ளந்தவன் பாயா மவனோடுங்
கடுகி யேகிக் கலேகள்வல் லோயிது
நெடிய பாலேயாய் நிற்பதே னீண்டேன்றான். (11)

திருவி னுயக செப்புவேன் கேட்டியால்
உருவப் பொற்பாங் குடையவ ராயகந்
தருவ வேந்தாய்ச் சனித்திடுஞ் சற்சரன்
ஒருவ னுண்டவற் குற்ற சுகேதனே. (12)

மைந்த ரின்றி மலர்த்தவி சான்றனைச்
சிந்தித் தேதவஞ் செய்யவத் தேவனும்
வந்து தோன்றி மகிபகேள் நின்வயின்
மைந்து மிக்கபெண் வாய்ப்பளென் றோதினன். (13)

அன்ன வாறவற் காற்றலின் மிக்கவோர்
பொன்னி போலும் புதல்வி யுதித்தனள்
இன்ன வட்காங் குறுசுந்த னேன்பவன்
றன்னைக் கொண்கனுத் தந்தையன் றாக்கினன். (14)

இரதி யோடு மதனேன் றியம்பிட
இருதி றத்தரு மேய்ந்தனர் நாடோறும்
சுரதந் துய்த்துச் சுதர்க ளிருவரைக்
கரியின் கன்றேன வீன்று களித்தனர். (15)

ஆனை யாயிர மாற்றல்கொள் ளன்னையை
மானு மைந்தராய் வந்துறு மாரிசன்
தானு மேனைச் சுவாகுவன் றானுமே
வானு ளாரினும் வல்லவ ராயினர். (16)

வேறு

தந்தை யேமப்போ டகத்தியன் தவஞ்செயு மிடத்தே
வந்து மான்மர றுதிய மடித்தனன் கண்ட
அந்த மாமுனி யவன்றனை வெகுண்டேன் நோக்க
வெந்து சாம்பராய் வீழ்ந்தன னுலவ னுங்கே. (17)

இனைய செய்தியை யிவன்மனை யோடிரு வலிய
தனைய ரோர்ந்துசஞ் சலமிகுந் தேகியக் கலய
முனிவ ரன்றனை முடிப்பெமேன் றுருத்தன ரவனும்
அனைய செய்கைக ளரக்கருக் கேயுள ததனுல். (18)

நீங்க ளவ்வெய்ய நிசிசர ராகுக வென்றே
யாங்கு வெஞ்சொலிற் சபித்தன னன்னண முடனே
தாங்க ளாயினர் தனயர்க ளிருவருஞ் சென்றுங்
கோங்கு பாதலத் துறையுஞ்சு மாலியை யடைந்தே. (19)

தந்தை யின்முறை கோண்டபின் பிலங்கைமா நகரில்
வந்தவ் வூர்க்கிறை மாதுல ராகியாங் குள்ளார்
மைந்த வீதுமுன் மருதமே யிதனையவ் வரக்கி
வெந்த பாலையா மாற்றினள் வீம்போடு பின்னர். (20)

சிந்து மாமுனி மேலுறுஞ் சீற்றத்தா லன்னுள்
எந்த யோகர்க்கு மிடர்புரிந் துறைகின்றுள் தினமும்
வந்தேன் னிட்டியை மாய்க்கின்று ளினிநமக் காய
கந்த மோர்ந்திடிற் கணத்திவண் வந்திடு வாளால். (21)

அந்தப் பாதகி யாகிய தாடகை யென்பாள்
இந்தப் பூதரத் திருப்பதேன் றுன்முனி யவர்தஞ்
சந்த மோர்ந்துட னேயந்தச் சழக்கிதன் கையிற்
குந்தத் தோமேக் குன்றினின் றெழுந்தன ளாங்கே. (22)

கரிய மாமலை தன்றலைக் கண்ணெரிக் கொழுந்தே
தெரியத் தன்னகத் திருகுன்றந் திகழ்ந்திட வேந்தி
வருவ தென்னச்சேந் திடுமெயி றிருமுலை களுமே
மருவச் செல்லென வந்துரை செய்கிற்பா ளவர்பால். (23)

உங்கட் காயுளின் றேழியுநா ளாதலி னுற்றான்
இங்குப் போந்தனி ரினியுமை யான்விடு வேனோ
சிங்கத் தண்டையிற் சேர்ந்தவர் பிழைப்பரோ சொல்வீர்
உங்க ளூன்விருந் துளதெனக் கின்றென வோதி. (24)

வேறு

சூலத்தை யவர்மே லோச்சச் சுழற்றினா ளிராமன் நோக்கித்
தாலத்துட் பெண்ணைக் கோறல் தகுதியன் றென்றே நிற்கச்
சீலத்தம் முனியி ராம தேறுமிவள் பெண்ணென் றெண்ணேல்
ஞாலத்து ளுயிரை யெல்லாம் நாசஞ்செய் பதகி கண்டாய். (25)

ஆதலி னிவளைக் கோற லலகிலாத் தரும மல்லால்
பாதகஞ் சிறிது மின்றாற் பகழிவிட் டிவட்கோல் லென்றான்
சீதர னவன்சொற் கேட்டத் தீயள்மேற் பகழி விட்டான்
பாதகி யவன்மேற் சூலம் பாய்கவென் றெறிந்தாள் பின்னர். (26)

மாதவன் மற்றோ ரம்பு விட்டதை யிறுத்திட் டானால்
ஏதினிப் பிழைப்ப தென்றே மலைபல வெறிந்தாள் பின்னர்த்
தோதுறோர் பகழி தன்னாற் றூள்படத் தவற்றை யெல்லாம்
ஓதுதற் கரிய பாண மொன்றெடுத் தவள்மேல் விட்டான். (27)

ஒருபது சிரங்க ளோடு மோரரை யிரண்டு பாதம்
இருபது தோளுங் கொண்டோங் கிராவணப் பெயர்கொ ளந்தத்
தருவினுக் காய பல்வேர் தம்மிலொன் றற்ற தென்ன
அருவரை யனையாள் சென்னி யறுபட வீழ்ந்தாள் மன்னோ. (28)

தாரணி சென்னி யற்றுத் தனதுடல் கவிழக் கைகள்
ஓரிரு புறமுங் காண வுயிர்துறந் திட்டாள் தோற்றம்
மேருதன் சிகர மற்று வீழ்ந்திடத் தன்மே லாய
தாருக ளிருபாற் காணத் தரைக்கவிழ்ந் திருத்தல் போலும். (29)

சிரமிலாக் குன்றி னின்றுஞ் செவ்வற லருவி யாங்கே
வரலெனக் கவந்தக் கண்ணே வழிந்தெழு முதிரத் தாய
பரவையுள் நீந்தி யங்குப் பருமுடற் கொண்டு மேவும்
நரிகழு காதி யாவும் நல்விருந் துண்ணக் கண்டார். (30)

புரந்தர னாதி தேவர் புகழ்ந்தன ரிராமன் றன்னைச்
சுரந்தரு மியங்க ளார்ப்பத் தூமலர் தூவ வானிற்
கரந்தனில் வீணை யேந்திக் கந்தரு வோர்கள் பாடக்
கரந்தநல் லிடையின் தெய்வக் கணிகைய ராடி னாரால். (31)

பின்னரத் தேவ ரெல்லாம் பீடுறும் முனியை நோக்கி
மன்னர்தம் மன்ன னீன்ற மணிவணற் கெவர்தம் மாலும்
பண்ணுதற் கரிய தெய்வப் படைக்கல மருள்கென் றேதிப்
பின்னரும் வாழ்த்தித் தங்கட் பெருநகர்க் கேகி னூரால். (32)

## எட்டாவது தாடகை வதைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் எட்டுக்கும் மொத்தப் பாசுரம் 317,

---

## ஒன்பதாவது கௌசிக வேள்விப் படலம்.

பண்ணுந் தேவர்கள் சென்றபின் பழுதிலம் முனிவன்
மின்னு மாமணி வண்ணனுக் கேதெய்வப் படைகள்
மன்னி வாழ்கெனத் தந்தன னவற்றையுள் மகிழ்ந்தே
பொன்னி நாயக னேற்றனன் போற்றினன் பின்னர். (1)

ஏத மில்முனி யிருவரும் பின்னேழச் சென்றான்
காத மோரிரண் டாயபின் கனவொலி கேட்டாங்
காதி மூலமவ் வருந்தவன் றன்னையே நோக்கி
யீதி யாதென வினவின னிருடியு மைந்த. (2)

சரயு வாகிய புனிதமா நதியின்க ணந்த
அரிய கோமதி நீர்விழு மொலியிதா மென்றான்
பிரிய மோடதைக் கேட்டெழில் மணிவணன் பின்னர்த்
தெரியுங் கோமதி நதியைக்கண் டுறவனை நோக்கி. (3)

யாவ தீதென முனிவனு மாலினை நோக்கிப்
பூவின் மேவயன் புத்திர னுமொரு குசன்றான்
கோவிற் சிங்கமாங் குசன்குச நாபன தூர்த்தன்
ஏவில் வல்லனும் வசுவெனு நால்வரை யீன்றான். (4)

அனைய நால்வரா மரசகு மாரர்கள் தம்மில்
புனையு மாமுடிக் குசநபப் புரவலன் றனது
மனைவி பாலொரு நூறுபெண் மணிகளைப் பயந்தான்
இனைய கன்னிய ரெழில்மயி லினமெனத் தமது. (5)

பூங்கா வுற்றவ ணுலவிடல் நோக்கினன் புகுந்தே
ஆங்காம் வாயுவக் கன்னியர் தங்களை யணுகி
நீங்காக் காமுக னுயுமைப் புணருவே னென்னப்
பாங்கோ டேந்தைக்கண் பகர்ந்தவன் றரப்புணர் கென்றார். (6)

வேறு

அன்னவர் மாற்றங் கேட்டாங் கனிலனுஞ் சினங்கொண் டன்னூர்
முன்னுரு மாறி யேங்க முறித்தனன் வேரின்கோ ளோன்பைக்
கன்னியர் கூன்கொண் டேகிக் கதறிடல் கண்ட தந்தை
இன்னவர்க் கிரங்கித் தேற்றி யிருடியாஞ் சூளி யீன்ற. (7)

மைந்தனும் பிரம தத்த மாமுனிக் கேரியின் முன்பே
தந்தன னவர்க டம்மைத் தவமுனி கரங்கள் மேவ
முந்திய வடிவங் கொண்டம் முனிவனை மணந்தே யந்தச்
சந்திர வதன மாதர் சலிப்பின்றி வாழு நாளில். (8)

தந்தையாங் குசநா பன்றான் தனயரை வேண்டி யாங்கோர்
செந்தழல் வேள்வி செய்தான் செனித்தனன் காதி யென்பான்
அந்தநற் சுதற்கே யாட்சி யளித்தவன் சுவர்க்கஞ் சென்றான்
இந்தநற் காதி தன்பால் யானுமோர் பெண்ணு முற்றேம் (9)

அன்னவள் கௌசி கைப்பே ராயவள் தமக்கை யெற்கே
இன்னவள் பிருகு வீன்ற யிருசிகன் தேவி யானாள்
பன்னெடு நாள்வாழ்ந் தன்னான் பங்கய னுலகுக் கேகப்
பின்னரே யவளுஞ் செல்லப் பேதைநீ நதியே யாகி. (10)

பாரகத் திருப்போர் பாவம் பாறிடச் செய்கென் றோதிச்
சீரக முடையான் சென்றான் தெரிவையிந் நதியாய் நின்றாள்
யாரிவ்வா றாகி நிற்பா ரிதனைக்கோ மதியென் பாரால்
கூறிய மதியோ யென்று கூறினன் முனிவன் மாதோ. (11)

பின்னரே சிறிது தூரம் பெயர்ந்தனர் கண்டோர் சோலை
என்னிது வென்ன மாலாங் கிருடியு மிராம கேளாய்
இன்னமு மறையுந் தேவ ரேவருமே காண்கிலாத
பன்னக சயனன் முன்னர்ப் பதிற்றுப்பத் தூழிக்காலம் (12)

அருந்தவம் புரிந்தாங் கார்க்கு மதனெறி தெரியக் காட்டி
யிருந்தநற் சோலை யீதா மிவனுள முணர்வார் யாவர்
கருந்திரு மாலு மந்தக் காவகத் திருக்கு நாளில்
பெருந்தவப் பயனால் மிக்க பெருமித முடையோ னான. (13)

மாவலிப் பெயர்கொண் டோங்கு மன்னன்மூ வுலகும் வவ்வ
ஆவல்கொண் டரிய வேள்வி யாற்றிப்பல் லந்த ணர்க்கும்
பூவுல காதி யாவுந் தானமே புரிதல் கண்ட
தேவர்க ளெல்லா மந்தச் சீதரன் றன்பா லேகி. (14)

எந்தையே பரம மூர்த்தி யெந்தமக் கிடையூ றுக
அந்தமா வலியென் பானே யகில மும் வவ்வ லோடாங்
கெந்தமா மகமு மாற்றி யந்தணர்க் கெவையுந் தானந்
தந்துளா னாகி நின்றான் சலமினி யெமக்குண் டாமால். (15)

அன்னவன் றுடுக்கை மாய்த்தாங் கடியேமை யளித்தல் வேண்டும்
பொன்னிறக் கேள்வ வென்று போற்றின ரமலன் றானும்
இன்னல்நுந் தமக்காங் கின்றி யெதிரியை யடக்கு கிற்பேன்
என்னலும் பணிந்து சென்றா ரிமையவ ரதன்பின் மாதோ. (16)

காசிப முனிவற் கந்த வதிதியங் கடத்திற் றோன்றி
மாசில்லை குந்தக் குட்டன் வாமன வடிவ மாகிக்
கோசமுப் புரிநூல் தோன்றக்குடைபிடித் தாடை வேய்ந்து
தேசுமிக் கெவரும் போற்றுந் தேசிக னிவன்றா னென்ன. (17)

மாவலி தன்பாற் சென்றான் மன்னனு மவனை நோக்கி
ஆவலோ டெதிர்கொண் டேகி யாசனத் திருத்தித் தாழ்ந்து
பூவினைப் பழிக்கு முன்றன் பொன்னடி யடியே னிற்கண்
மேவலிற் புனித னானேன் விளம்புக பணியெற் கென்றான். (18)

மணிவண னதனைக் கேட்டம் மாவலி தன்னை நோக்கி
அணியுல கொருமுன் றுக்கு மதிபதி யாய நிற்கோ
பணிசொல்வே னைய மேற்கும் பார்ப்பன னைய வெற்கே
இணையில்நீ மூவ டிம்மண் ணீந்திட வேண்டு மென்றான். (19)

வேறு

மொழிந்திடு மனையசொன் முடியு முன்பலி
பொழிந்திடு நீரோடும் பூமி கொள்கென்றான்
எழுந்தனன் வெள்ளியு மாய னின்னவன்
அழிந்திடு நின்புவி யதுசெய் யேலென்றான். (20)

மாவலி கேட்டளே மாழ்கி வெள்ளிநீ
கேவல மின்னசொற் கிளத்தல் நன்றல
மூவுல களித்தருள் முகுந்த னென்கணே
பூவினில் மூன்றடி புகுந்திங் கேற்றலின் (21)

அவன்கரந் தாழ்ந்திட யுறல்பெய் யென்கரந்
தவவிவண் மேலுறத் தானங் கொள்வனேல்
எவரெனை நேர்பவ ரேழு பாரினும்
இவனிற்சற் பாத்திரன் யாவன் சொல்கவே. (22)

வரும்வழி பறித்துயிர் மாய்ப்பர் தம்மினுந்
தருபொருள் தடுத்திடுஞ் சழக்கர் தீயரே
லருமறை முதல்வனுக் களித்தற் றட்டுமீ
குருவினைக் கொலைபுரி வோரிற் கூரனே. (23)

வெள்ளறி வுடையநீ வெள்ளி யென்பெயர்
கொள்ளுதல் தகுமெனக் கூறி மிக்கவா
வெள்ளின னினும்பல நீதி யோதினன்
தள்ளின னவன்மொழி தானங் கொள்கெனு. (24)

சலமுறுங் கெண்டியைச் சாய்க்கக் கெண்டிவா
யலைவுறும் வண்டுரு வாகி நின்றனன்
கலைதெரி யவனையக் கமலக் கண்ணன்ருன்
கொலைபுரி யம்பெனக் குத்தப் புல்லினுல். (25)

அன்னவன் கண்ணுெென்ருங் கழிய நீங்கினுன்
மன்னனு மறலொடு மண்கொள் மூன்றடி
யென்னுமுன் னும்பர்மே லோங்கி யெம்பிரான்
பன்னகந் தாங்குமிப் படித்தா ளொன்றினும். (26)

வளைந்தவிண் ணுதிய மற்றைத் தாளினு
மளந்துகொண் டின்னுமோ ரடிக்கில் யாதென்ருன்
தளர்ந்தமா வலியுமென் தலைய தாமென்ருன்
மிளிர்ந்திடு மவன்முடி மிசைத்தன் கால்வைத்தே. (27)

பாதலத் தவன்றனைப் படுத்தி வானொடு
பூதலத் தோர்களும் போற்ற நின்றவன்
காதலித் திடுவரங் கனிவிற் றந்துதன்
மாதலக் கேகினன் மாயன் தானரோ. (28)

அத்தகைப் பரம்பொரு ளமர்ந்து யோகுசெய்
யுத்தமச் சோலையை யொருகாற் காண்பவ
ரெத்திறப் பிறப்புமாங் கிறப்பு மெய்திலர்
நித்தர்கள் மேவுமூர் நிலைத்து வாழ்வரே. (29)

ஆதலி னினியிவ ணுற்ற வெண்ணிய
வேதமில் மகத்தையின் றியற்று வேனிதைச்
சேதஞ்செய் திடவரு மரக்கர்ச் செற்றிதைப்
பாதுகாத் திடுகெனப் பகர்ந்தன் னூர்க்கந்த. (30)

இருடியு மகத்தினை யியற்ற லாயினன்
திருமறு மார்பனுந் பாயற் சேடனு
மொருகணை யிரண்டிமை யொருங்கு காத்தல்போ
லிருந்தனு கைக்கோடாங் கிருந்து காத்தனர். (31)

சந்தம்

ஆறு நாள்வரை மகத்தைக் காத்தன
ரரக்கர் வந்தில ராதலின்
பேறு தந்திடற் குரிய மாயவன்
பெருந்த வத்தனை நோக்கிநீ
கூறுந் தீயர்வந் திலரிங் கென்றனன்
கோதில் மாமுனி நிட்டையில்
ஊறி நிற்றலின் விடைதந் தானிலை
யுலக நாயக னோர்ந்ததை. (32)

யாக சாலையின் புறத்தில் வந்துவிண்
ணகத்தை நோக்கலு மன்னவர்
மேகம் பற்பல விடிமு ழக்கொடு
விண்ணின் மேவுதல் போலவே
மாக மேற்கரும் படிவ மேய்ந்துளார்
மாய்ப்பெம் நும்மையென் றிரைந்துபின்
நாக மாதரு பறித்தி யாவரும்
நடுங்க வங்ஙனம் வீசினர். (33)

எண்ணி லாதவத் தீயர் தோமர
மீட்டி யாதிபல் படையொடும்
புண்ணுண் டாக்கிடு மனலும் வீசினர்
புகையுஞ் சூழ்ந்திடச் செய்தனர்
கண்ணி லாதவர் போலு முனிவர்கள்
கதறி யோடினர் சிதறியே
மண்ணின் மான்மரை யாதி யாவையும்
மயங்கி யோடின வனமெலாம். (34)

கண்டி ராகவன் யாக சாலையைக்
கவிந்து மாளிகை போலுற
வண்ட மேற்சர கூடங் கட்டின
னனைத்து மன்னதன் கீழுற

வண்டர் யாவரு மாயன் றன்னைமுன்
னபய மென்றடைந் திட்டென
வண்டி ராமனை முனிவர் யாவரு
வபயங் காக்கவென் றேய்ந்தனர். (35)

அஞ்ச லஞ்சலென் றவர்கட் கோதியாங்
கரக்கர் தங்குல மேவுமவ்
வஞ்சர் தங்கள்மேல் வாளி விட்டனன்
மாய்ந்தங் கன்னவர் மெய்கள்செம்
பஞ்சு போற்பறந் தவனி யெங்கணும்
பரவக் குருதியா றோடின
எஞ்சி நின்றமா ரீச னோடுசு
வாகு வென்னுமவ் விருவர்மேல். (36)

சிலைவ ளைத்தொரு வாளி விட்டனன்
சீறி யன்னவர் தங்களில்
தலைவ னாயசு வாகு தன்னொரு
தலைய றுத்துமா ரீசனை
யலைகொள் மாகட லாழ்த்திச் சென்றதவ்
வமலன் விட்டதாம் வாளிதான்
கலைகொள் மாமுனி யிவற்றைக் கண்டேன்
களிப்பென் சாகர முழ்கியே. (37)

அலகி லாவுல கனைத்து மீன்றளித்
தழிக்கு நாயக னாயநிற்
கிலக வென்மகங் காத்துத் தீயரை
யிறுத்தல் பாரமோ நுந்தையாம்
உலக நாயக னுன்னைப் பாலனென்
றுரைத்திட் டானின்றன் போர்த்தொழிற்
புலமை நோக்கிலென் புகலு வானெனப்
புகழ்ந்து மாமக முடித்தனன். (38)

முனிவர் யாவரு மகிழ்வோ டாசிகள்
மொழிய வானகத் தவரெலாம்
கனிவி னோடுபூ மழைகள் பெய்தனர்
ககனத் துந்துமி முழங்கவே

தனியம் மூவரு முனிவர் வாழகந்
 தன்னி லந்நிசி மேவினர்
பனியின் மாறெனு மிரவி தோன்றினன்
 பழுதி லாதவம் மூவரும். (39)

தேவ பூசனை செய்தாங் காயபின்
 தேசி கேசனை நோக்கியே
யாவ தின்றியான் செய்வ தென்றன
 னிராம னம்முனி கேட்டைய
பூவில் நீசெயு மரிய நற்செயல்
 போத வுள்ளன மேற்செய்வாய்
போவோ மின்றியாஞ் சனகன் மாமகம்
 புரிதல் காணவேன் றேதினன். (40)

ஒன்பதாவது கௌசிக வேள்விப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் ஒன்பதிற்கும் மொத்தப் பாசுரம் ~~௩௫௪~~. 357

---

## பத்தாவது அகலிகைப் படலம்.

மிதிலையை நோக்கி யந்த மெய்த்தவ னாதி மூவர்
அதிதொலைத் தூரஞ் சென்று ரருக்கனு மேற்பாற் சாய்ந்தான்
நதிதமிற் புனிதச் சோண நதியரு கேய்ந்தா ராங்கேய்
சதுரேழிற் சோலை தன்னிற் றங்கின ரதனை நோக்கி. (1)

இந்தநற் சோலை யெவ்வா றேய்ந்ததாங் கியம்பு கென்று
சுந்தர வதன னெம்மான் துகளில்மா முனியைக் கேட்க
வந்தமா முனியு முன்ன ரசுரர்தாய் தவஞ்செய் துற்ற
திந்தவஞ் சோலை யென்றாங் கியம்புவான் பின்னு மாதோ. (2)

விஞ்சையர் குலத்தோ ராய்ச்சி விண்டுவி னுரத்தில் வாழும்
கஞ்சமா மலராள் தன்னைக் கானநல் லிசையிற் பாடிச்
செஞ்சரண் பணிந்து நின்றாள் திருவுள மூவந்தத் தேவி
யஞ்சிர மொளிர்பூ மாலை யவட்கர மீந்தா ளேற்றே. (3)

அம்பக மொத்திக் கொண்டாங் கங்கையாழ் தன்னில் யாத்தே
யம்புய னுலகுக் கேக வாங்கெதிர் தூரு வாசன்
செம்பங்க யத்தெம் மன்னை திருவுள முகப்பப் பாடு
மெம்பெரு மாட்டி யென்றேன் றேத்தின னிறைஞ்சி நின்றான். (4)

பரிமள மிகுந்த தூய பனிமல ரலங்கற் றந்தாள்
கரமல ரிரண்டி னுலுங் களிப்போடம் முனியாங் கேற்றுப்
புரிதவப் பயனே வென்று போற்றிமே லுலகஞ் சென்றான்
சுரரிறை பவனி போங்காற் றேங்கலை நீட்டி னுனல். (5)

வாங்கினன் தோட்டி யாலே வாரணப் பிடரி லிட்டான்
தாங்குமக் கரிதன் கையாற் றரினைத் தரையி லிட்டு
வீங்குதன் பதத்தி னுலே மிதித்ததம் முனிவன் கண்டாங்
கோங்கிய சினத்தோ டந்த வும்பர்கோன் றன்னை நோக்கி. (6)

வேறு.

சங்கநிதி பதுமநிதி யாதி யான
சம்பத்தை யுனக்களித்த வமலை தந்த
புங்கமிகும் பூமாலை யதனை யுன்றன்
போங்கடியின் தன்னடியால் மிதிப்பித் தாய்நீ
யங்கதனு லுனதுபொரு ளனைத்து மந்த
வளக்கர்பட நீதுயர மெய்து கென்றே
சங்கரனை யனையமுனி சபித்தா னந்தச்
சமயமேஎ கடலோளித்த வனைத்துமாதோ. (7)

அன்னதனு லெவ்வுலகும் வறுமை மேவ
வமரர்கோ னுதியநற் றேவ ரெல்லாம்
மின்னுசடை முடியரனே டயன்பா லேகி
விண்டுவின்பாற் போவெமெனத் திரண்டு சென்றங்
கன்னவன்றன் னடிவணங்கி யேத்தி யந்த
வதிசினத்து முனிச்செயலை யோத வன்னு
னின்னலொழித் தளிப்பென்யா னஞ்சே லென்றங்
கியம்புவாஅ னவருய்யும் வகையை மன்னே. (8)

மந்தரமா மலையையொரு மத்தாக் கொண்டு
மதியினையே தம்பமென வதனிற் சேர்த்துச்
செந்தலையின் வாசுகியை வடமாப் பூட்டித்
திகழ்தருநல் லோடதியை யாங்கே யிட்டவ்
வந்தரத்தாம் நீவிரும் அசுரர் தாமு
மணியணியாய் வாசுகியை யிருபால் பற்றி
விந்தைமிகும் பாற்கடலைக் கடைவீ ராயின்
விளைந்திவே கடலோளித்த யாவு மென்றான். (9)

அந்தமொழி தனைக்கேட்டாங் கமர ரெல்லா
மானந்தப் பரவசங்கொண் டாடிப் பின்னு
மிந்திரைக்கு நாயகனை யிறைஞ்சி யேத்தி
யெம்பெருமா னியம்பியவா றமைத்தே யந்தச்
சிந்துவினைக் கடைந்திட்டா ரக்கா லிந்தச்
சேகத்தணங்கின் முதுகிரிந்து வருந்த லாலே
யந்தமிலந் நாரணனுங் கூர்ம மாகி
யணிமுதுகில் மலைசுழலத் தாங்கிப் பின்னும். (10)

ஆயிரங்கை யீருருவா யிருபால் நின்றுங்
கமரர்கட்கு மசுரர்கட்கு முதவி யாகிப்
பாயலைகொள் பாற்கடலைக் கடைந்தா னங்கே
படுகடலு ளொளித்தவெலாம் விளைந்த தோடு
வேயெழில்தோட் டிருமகளுங் கவுத்து வப்பேர்
விழுமணியு மிளம்பிறையும் மரணம் போக்கி
வாயினிமை தருமமிழ்துந் தோன்று நிற்க
வாசுகிவா யுறவிடமு மெழுந்த தாங்கே. (11)

வெளியாய பொருள்களிலங் கவுத்து வப்பேர்
விழுமணியைத் திருமகளை யுரத்தி லேந்தி
இளம்பிறையை விடமதனைச் சிவனுக் கீந்தா
னிந்திரனுக் குரியபொருள் யாவுந் தந்தா
னளியதனு லினும்பலர்க்காங் கேற்ற வீந்தா
னமரர்கட்கே மோகினியா யமிழ்தந் தந்தான்
களியர்நிக ரசுரர்களை மயக்கி மாய்த்தான்
கருடன்மிசைச் சரணம்வைத் திருக்கை சேர்ந்தான். (12)

உலகனைத்துஞ் செழித்தோங்கத் தேவர் வாழ
வும்பர்கோன் தனிச்செங்கோல் செலுத்தா நின்று
னலகில்புய வலியுடைய வசுர ராய
வரும்புதல்வ ரழிந்ததனுற் றிதியேன் பாளே
கலகலவென் றிருவிழிநீர் விட்டா ளந்தக்
கணவனெனுங் காசிபனை நோக்கி மைந்தர்
கொலையுண்டா ரமரர்தம்மா லன்னூர் தம்மைக்
கொலைபுரிய வொருமைந்தற் றருதி யென்றுள். (13)

காசிபனு மஃதுணர்ந்தே நங்கா யுன்றன்
கடத்திலொரு மிகவலியேய் மைந்தற் றந்தேன்
காசினியில் நீசென்றுங் கமைதி யாகக்
கடுந்தவமோ ராயிரமாண் டியற்று வாயேல்
தேசுடைய விபுதர்தமைச் செயிக்கு மைந்தன்
செனித்திடுவோ னென்றுரைத்தா ளோர்ந்தாங் கன்னாள்
பூசுரர்கள் தவம்புரிதற் கேற்ற தாமிப்
பொழிலகத்தே போந்தரிய தவஞ்செய் தாளால். (14)

தவமுடிவிற் பூரணமாய்க் கருப்ப மோங்கச்
சதமகன்போய் வஞ்சகமோ டவள்பால் மேவி
யவனிதனி லுனக்கடிமை செய்து நிற்க
வாசையுள தெனதன்னை யென்று னன்னு
ளிவனுளத்தை யுணராமற் செய்க வென்று
ளிவளுறங்கும் பொழுதணுவி னுருவ மாகி
யிவளுதரத் துட்புகுந்து வச்சி ரத்தா
லெழுகூறுக் கருப்பத்தைத் துணித்து மீண்டான். (15)

துயிலுணர்ந்தாங் கன்னவளு மவனை நோக்கித்
துன்மார்க்கச் சேயல்தகுமோ வென்று ளென்றன்
செயல்பொறுப்பா யெழுகூறும் வடிவ மெய்தித்
திருமைந்த ராயெழுவ ருனக்கே யன்னார்க்
கியற்பெயர்யான் மருத்துவர்க ளென்றே யிட்டே
னெனப்புகன்றுங் கன்னவனை யிறைஞ்சி யந்தப்
புயலூர்வோன் தன்னகர்க்குச் சென்று னென்று
புகன்றனனக் கௌசிகனே பின்னுஞ் சொல்வான். (16)

உமையவட்குச் சுதனான கார்த்தி கேய
னுதித்தருளுஞ் சரவணமாப் பொய்கை தானு
மமைந்துளநற் பொழிலிஃதே யாகு மென்று
னமலனுங்கேட் டதிசயித்தா னிரவு சென்ற
திமைப்பொழுதிற் சூரியனு மெழுந்தான் றூய
விருடிமுதல் மூவர்களு மிதிலை நோக்கி
யமைதியொடும் போம்வழியிற் கங்கை யென்னு
மாற்றைக்கண் டிராமனிது யாவ தென்றான். (17)

வேறு

யாவதித்து வெனல்கேட்டாங் கருந்தவனுஞ்
சுந்தரநல் லிராம கேளாய்
பூவிலுயர் நின்குலத்திற் சகரனெனு
மொருகுரிசில் பூத்தா னன்னான்
தேவியர்கள் விதர்ப்பையெழிற் சுமதியெனு
மிருவர்களாஞ் செப்பி வர்க்குள்
ஆவிநிகர் விதர்ப்பைவயின் போசனப்பே
ருடையசுத னயநு மானன். (18)

அன்னவன்றன் சுதனஞ்சு மானேன்பான்
சுமதியெனு மரிவை தானும்
பன்னரிய வறுபதினா யிரம்புதல்வர்
தமையளித்தாள் பலத்தில் மிக்க
வின்னவர்தம் முதவியுள தேனச்சகரப்
பெயருடைய விறைவன் றானும்
மன்னவர்க்கா மசுவமகஞ் செயவெண்ணி
யியற்பலவும் வனப்பு மேய. (19)

பரிமாவை யலங்கரித்தாங் கஞ்சுமான்றன்
வசமீந்து பலத்தில் மிக்க
கரிபரிதே ராட்படையோ டெங்கணும்போய்
விசயம்பெறக் கடவா யென்னச்
சரிசரியென் றன்னவனு மதுகொடுசென்
றேருநகரிற் சரித்து மாலை
தருவொன்றிற் பிணித்துடனேய் தளத்தினேடுந்
தான்றுயில்கொள் தருணந் தன்னில். (20)

அசுவமக முடிவுபெறிற் றனக்கிடையூ
றுமெனவே யமரர் கோமான்
நிசிதனில்வந் தசுவந்தனைக் கொடுசென்று
பாதளத்தில் நிட்டை கொள்ளும்
மசைவில்மனக் கபிலமுனி யருகிலுறுந்
தருப்பிணித்தாங் கவன்சென் றனல்
விசையம்பெற வருமவனும் பரியின்றுற்
பிதாமகன்பால் மேவிச் சொற்றன். (21)

அன்னவன்றன் சொற்கேட்டுத் தனிச்சகரன்
சுமதியெழி லகட்டிற் போந்த
மின்னிலைவேற் கைப்புதல்வ ரறுபதினு
யிரவர்தமை மேவி யந்தப்
பொன்னனைநல் வாம்பரியைத் துருவியிவண்
கொணர்திரெனப் புகன்றிட் டானு
லன்னமொழி முடியுமுனர் யாங்கொணர்வே
மென்றெழுந்தா ரகில மெல்லாம். (22)

ஓடினர்கள் தேடினர்க ளோரிடத்துங்
காண்கிலரா வுளமே மாழ்கி
வாடினர்க ளொருநூறு யோசனையில்
வையமெனு மண்ணைத் தோண்டி
நாடினர்கள் பாதலத்திற் கபிலமுனி
புறத்திலது நண்ணக் கண்டார்
சாடினர்கள் நீகவர்ந்தா யென்றவனை
யவனுேக்கச் சாம்ப ரானுர். (23)

வேறு

அந்தச் செய்தி யறிந்திடு மன்னர்கோன்
மைந்தன் சேயஞ்சு மான்றனை நோக்கிநீ
யந்தப் பாதலத் தார்ந்தம் மாப்பெற்று
வந்து சேர்கென்றுன் மற்றவன் சென்றவண். (24)

கண்டங் கந்தக் கபில முனிவனைத்
தெண்ட னிட்டனன் தீயவர் செய்கையை
விண்டம் மாமுனி வேண்டுவை யேற்பரி
கொண்டு போகெனக் கொண்டேன் வந்தவன். (25)

பாட்ட னுரிடம் பாய்மா தனைவிட்டான்
நாட்டத் தாற்கண்டு நன்றென்றம் மைந்தர்கள்
காட்டிற் சாம்பராக் காண்கதிக் கேங்கிப்பின்
வேட்ட வேள்வி விடுவது தீதெனு. (26)

அஞ்சு மானேயிவ் வங்கற்கி யோடுநீ
யெஞ்சு தேயங்கள் யாவினுஞ் சென்றுநம்
மஞ்சு லாவரண் மாமனை சேர்கெனு
விஞ்சு கீர்த்தியம் மீளியங் கோதினுன். (27)

நன்று நன்றெனு நன்மைந்த னஞ்சுமான்
சென்று மாவொடுஞ் சேர்ந்தனன் வெற்றியோ
டின்று நற்றின மென்றந்த வேள்வியைக்
குன்று போற்புயக் கோவுந்தொ டங்கினன். (28)

முடித்தவ் வேள்வியை மொய்ம்புறவ் வஞ்சுமா
னிடத்திற் பாரெலா மீந்து ககனத்தா
மிடத்தை நாடியவ் வேந்தலன் றேகினு
னடுத்துத் தோன்று மரசர்தங் கால்வழி. (29)

வேறு

பாரக மனைத்தையு மோர்தனிப் புரந்தோன்
பகிரதப் பெயரவ னுதித்தான்
யாரகத் தினுமவன் தண்ணளி யுடையா
னவன்றன குருவினைப் பணிந்து
காரகத் தினும்புக ழோங்குநங் குலத்தார்
கதைசிறி துரைத்தரு ளெனவும்
தாரகப் பொருளுணர் தருமவ னவர்தஞ்
சரிதையை யுரைத்திடும் பொழுதில். (30)

அன்றெழு சகரநல் லரையன்றன் புதல்வ
ரறுபதி னுயிரம் பெயரும்
தன்றனை யேநிகர் கபிலன்றன் முனிவாற்
சாம்பரா யழிந்ததும் புகலக்
கன்றின தெனதுள மினியவ ரெலாநற்
கதியடை வழியரு ளாய
வென்றவன் பணியவவ் வதிட்டநன் முனியு
மியம்புவா னவன்றனை நோக்கி. (31)

அம்புயன் றனைநினைந் தயுதமாண் டளவு
மருந்தவம் புரிந்தனை யாயி
னும்பரை யவர்பெற வருள்புரி வானென்
றுரைத்தன னதனைக்கேட் டவனு
மிம்பரை மந்திரி வசமளித் திமயத்
திருந்தருந் தவம்புரிந் திட்டா
னம்பரம் பொருளெழி லுந்தியிற் பூத்தோ
னவனெதிர் வந்துரை செய்வான். (32)

துங்கநற் கங்கைவந் தவருடற் சாம்பற்
றேயில்நற் கதிபெற வாரா
லங்கவட் டரிப்பதற் கரன்றனை நோக்கி
யருந்தவம் புரிந்துபின் பந்தக்
கங்கையை நோக்கிப்பின் கடுந்தவம் புரியிற்
களித்தவள் வருவளென் றுரைத்தா
னங்கவன் சொற்படி யரன்றனை யுன்னி
யயுதமாண் டருந்தவம் புரிந்தான். (33)

அம்பிகா பதியுமாங் கவனெதிர் தோன்றி
யருந்தவம் புரிந்ததே னென்ன
வும்பர்மா நதியவள் போந்திடி லவட்காங்
குறுகதி பொறுப்பதற் கென்றுங்
கிம்பர்நா யகன்சொல வன்னதற் கிசைந்தே
னென்றவன் புகல்மொழி கேட்டு
வம்பறுக் கங்கையை நினைந்தரை யயுத
வருடமா தவம்புரிந் திட்டான். (34)

தெய்வமா நதியனை யவனெதிர் தோன்றிச்
செய்தவ மேதற்கென வன்னான்
வய்யகந் தன்னில்நீ வருவதற் கேயென
வண்கங்கை யான்வரி னிந்த
வய்யகத் தேவர்பொறுப் பாரென வவனும்
வரமரன் தந்துளா னென்னத்
துய்யமாக் கங்கையும் விஞ்ஞேதவச் சொல்லைத்
தோன்றல்நீ நம்பற்க வென்றாள். (35)

அன்னவ னஃதுணர்ந் தரையயு தம்மாண்
டரற்குறித் தருந்தவம் புரிந்தான்
பன்னகப் பணியின னவனெதிர் தோன்றிப்
பரிப்பேன்யா னிச்சய மவளை
யென்னலுங் கங்கையை யுன்னிமுன் றயுதம்
யாண்டுமோ தவம்பினும் புரிந்தான்
பொன்னுல காங்கங்கை யவன்றவ மெச்சிப்
போந்தன ளங்குவந் தரனும். (36)

அனையநற் கங்கையைத் தன்முடிச் சடைக்குள்
ளடக்கின னரசனுந் திகைப்பக்
கனிவோடு மோர்துளி யறல்விட்டா னஃதே
கடலென வேயெழ வதன்முன்
தனிமுடிப் பகிரதன் சென்றன னஃதோர்
சன்னுமா முனிதவச் சாலை
தனிலுற வவன்வெகுண் டோரகங் கையிற்
றுங்கியவ் வறலெலா முண்டான். (37)

கண்டதை யவனுமம் முனிவரன் தூய
கழல்பணிந் தருஞ்செய லோத
உண்டநற் கங்கையை யவன்செவி விடவு
மோடியச் சகரர்தஞ் சாம்பற்
கண்டதிற் றேய்ந்ததாங் கன்னவர் தாம்நற்
கதியடைந் திட்டனர் மகிபன்
அண்டர்கள் பூமழை பெய்தவண் வாழ்த்த
வயோத்திசென் றுலகளித் தானல். (38)

சகரர்கள் தோண்டிய தலத்துறுஞ் சலமே
சாகரப் பெயர்பெற்ற திவணே
பகிரதப் பெயரவன் கொடுவந்த தாலே
பாகீஇ ரதியெனும் பெயரும்
சகந்தனி லொருசனு முனிசெவி வரலால்
சானவி யெனுமொரு பெயரும்
அகிலமும் புகழுமிக் கங்கைக்கா யினவா
லன்றியுஞ் சிலபெய ருளவாம். (39)

மூவுல கினையுமாங் கீரடி யாற்கொள்
முகுந்தன தடிமலர்த் தோன்றித்
தேவுல கத்திருந் தருமறை யோன்கொள்
தீர்த்தம தாய்ச்சிவ பெருமான்
தூவெழிற் சிரங்கொளப் பகிரதன் கொணரத்
தொல்லுல கேய்ந்திதில் மூழ்கும்
யாவர்தம் பவத்தையும் போக்குகிற் பதுமிவ்
வியாறதே மைந்தவென் றுரைத்தான். (40)

வேறு

அனையநற் சரிதங் கேட்டாங் ககமகிழ் மைந்தர் தாமும்
நனியருந் தவஞ்செய் தோனும் நளிர்கங்கை நதியைத் தாண்டித்
தனிமதில் விசாலைப் பாங்கர் சார்ந்தன ரதற்காம் வேந்த
னினையவர் தம்மைக் கண்டாங் கிறைஞ்சப்பெற் றப்பாற் சென்றார். (41)

சென்றவர் கோச லப்பேர்த் தேசத்திற் குபநா டதே
யென்றிட வயல்கள் சோலை யேரிநற் றடங்கள் கோலை
குன்றேன வுழவர் மாட மாதிய கோடா கோடி
யொன்றிய விதேக நாட்டி னுட்புகுந் தேகி னூரால். (42)

கடந்தேழி லந்த நாட்டைக் காணரு மிதிலைக் காய
தடமதிற் புறத்திற் போந்து தங்கின ரந்த வாரைப்
புடையுறும் பாறை மீதே புயல்வணன் பதத்தூள் மேவத்
துடியிடை யரிவை யாகித் தோன்றிய தஃது மாதோ. (43)

கல்லுரு மாறி நின்ற காரிகை நிலனை நோக்க
வில்லெழி லிராம னுங்கே வியந்திஃ தியாவ தேன்ன
வெல்லையில் தவஞ்செய் துற்றோ னிராகவ கேளா யென்றே
சொல்லுவா னினியாங் கீழே சொல்லுறு மாறு மன்னோ. (44)

கோதில்மா தவத்த னாய கோதமன் தேவி யின்னாள்
ஆதியி லிவட்கா மிக்க வழகைக்கண் டாசை யுற்ற
தீதுறும் வலாரி போந்து சேவலாய் நிசியிற் கூவ
வேதியன் புலர்ந்த தென்று வெளியேழ வவன்போ லேகி. (45)

நங்கையைப் புணர்ந்தா னன்னாள் நாயக னென்றுங் குற்றாள்
பொங்குறு மெழிலின் மிக்காள் போகத்தின் பேதங் கண்டாள்
சங்கையுற் றேதும் பேசாள் சையோகத் தின்பந் துய்த்தாள்
புங்கவன் நதியி னின்றும் போதத்தால் நிகழ்ந்த தோர்ந்தான். (46)

சரசரேன் றகத்திற் கேகச் சசிபதி பூனை யாகித்
தரைமிசை யோடக் கண்ட தவமுனி நோக்கி யன்னான்
புரமேலாம் பற்பல் யோனி போலுறக் கடவ வென்றான்
விரவின வதுபோ லன்னான் மேனியெங் கெங்கு மாதோ. (47)

கண்டனன் வலாரி வெட்கிக் கடுகித்தன் னகம்போய்ச் சேர்ந்தான்
பெண்டினை முனிவ னோக்கிப் பேதைநீ வேசி போன்றாங்
கண்டார்நா யகனை நன்காங் கணைந்தனை யதனால் நீயே
கண்டவர் மிதிக்குங் கல்லாய்க் கடுவெளி யிருக்க வென்றான். (48)

அம்மொழி கேட்டு மாழ்கி யகலிகை முனிவன் தூய
செம்மலர்ப் பதத்தில் வீழ்ந்து தெரிகிலா தெய்ந்த குற்றம்
தம்மையே யுன்னி யென்னைச் சபித்திட்டா யிந்தச் சாபஞ்
செம்மையாய் நீங்குங் காலஞ் செப்புதி கணவ வென்றாள். (49)

சம்பரன் தன்னைக் கொன்ற தசரதற் கரிய மைந்த
னிம்பர்வந் திடுவ னன்னா னிணையடித் துகளுன் மீதே
பம்புற மக்கால் நிற்காம் பாறையி னுருவ மாறிக்
கொம்பர்சிற் றிடையா யென்னைக் கூடுவை யென்றா னன்றே. (50)

பன்னிய போதே யன்னாள் பாறையி னுருவ மானாள்
பொன்னகர்க் கிறைவன் றானும் போனபின் நிகழ்ந்த தோர்ந்த
மன்னுமா மலரோ னாதி வானவர் முனிபாற் றாழ்ந்து
சொன்னபின் னவைக ளெல்லாங் கண்களாய்த் தோன்ற கென்றான். (51)

என்றநன் மாற்றங் கேட்டாங் கிமையவர் மகிழ்ந்து சென்றார்
அன்றகல் லுருவாய் நின்ற ளவ்வுரு மாறி முன்போல்
நின்றனள் நின்காற் றூசால் நின்னடி மகிமை யின்றும்
அன்றுதோள் வலிமை தானு மறிந்தன னிராம வென்றான். (52)

இன்னண முனிவ னோத விருவரு மவனைத் தாழ்ந்தார்
பின்னரம் மூவர் தாமும் பேதையை யுடன்கொண் டாங்கே
துன்னிய கௌத மப்பேர்த் தூயவ னகத்திற் சென்றார்
அன்னவ னெதிர்ந்தன் னாரை யரியநன் முகமன் செய்தான். (53)

ஐந்தையு மடக்க வல்லா னருமறை முனிவ னானன்
அந்தநற் கௌத மப்பே ரமலனை நோக்கி மேலோய்
சிந்தையிற் றுகளி லாளைச் சேர்த்தருள் கென்றா னன்னான்
வந்தமர் நங்கா யென்றான் மகிழ்ந்தகம் புகுந்தா ளன்னாள். (54)

கனகையின் கேள்வ னோடு கனிட்டனுங் கௌத மப்பேர்
முனிவனைப் பணிந்த பின்னர் மூவரும் விடைகொண் டன்னான்
பனிமலர் வாசக் காவின் பாலுற மகத்தி னின்றும்
சனகன்மா நகரி னிஞ்சிக் கோபுர வாயிற் சார்ந்தார். (55)

*பத்தாவது அகலிகைப் படலம் முற்றிற்று.*

ஆகப் படலம் பத்திற்கும் மொத்தப் பாசுரம் 41௨.

## பதினோராவது மிதிலைக் காட்சிப் படலம்,

வேறு

காவற் கோபுரந் தன்னைக் கடந்தனர்
வாவி மூழ்கிட வந்தபல் யானைகள்
ஏவும் பாகரோ டேகின நேருற
பாவை மாரெதிர்ப் போந்தனர் பற்பலர். (1)

அட்டேண் காகம் வலத்திலங் காயின
மட்டில் வீமன்கள் வாமத்துப் போயின
ஒட்டேங் கள்தயிர்த் தாழிநே ருற்றன
எட்டேத் திக்கு மியம்பல வார்த்தன. (2)

சகுனம் நன்றெனச் சாற்று முனியோடு
மகிபன் மைந்தர் மகிழ்ந்தனர் சென்றனர்
முகில்கள் மேவிய முற்றநன் மாடமேற்
றுகில்க ளாடிடேங் தோற்றமெவ் வாறெனில். (3)

உலக நங்கைதன் னுந்தியிற் றோன்றிய
திலக வாணுதற் சீதைக்காங் கேற்றவோர்
சிலைகோள் நாதன் தெருவில்வந் தானென்றுங்
கலகில் கையா லழைப்பது போன்மவள். (4)

சதங்கை வெண்முத்துத் தாமங்க ளேய்ந்தைந்து
விதங்கோள் பட்டினல் வேய்ந்தோளிர் பல்கொடி
துதைந்த மாடங்கள் தோறுமங் காவே
மதங்கி மார்கள்நின் றுடேதல் மானுமே. (5)

வேறு

கலவியின் போருட்டாங் கேகுங் கணவனோ டரிவை தானும்
புலவிப்போர் புரிவ தென்னப் போங்கடி யாணும் பெண்ணும்
தோலைவிலாக் காமங் கொண்டு சுகிப்பதற் கிடம தின்றி
மலைவன வாய காட்சி மாநகர் வீதிக் கண்டார். (6)

மைந்தரும் வனிதை மாருங் கலவியில் வழித்து நீத்த
சந்தனச் சாந்தோ டன்னோர் சாத்துறு மாலைத் தேனும்
தோந்தமாய்க் குழம்பாய்ச் சேறாய்த் தேர்புகத் துகளாய்க் காற்றால்
கந்தநற் பொடிபோற் றம்மேற் கவியவாங் குதறிச் சென்றார். (7)

கணவனைப் பிரிந்தோர் மேனி கதமுற வெறிந்த பூணும்
பிணங்கிடு மாதர் கையாற் பிடித்தெறி யணிகள் தாமும்
புணர்ந்திடச் சிதறு மைந்தர் பூணுறு மணியு முத்தும்
குணகடல் போலும் வீதிக் குவிந்துறல் கண்டு சென்றார். (8)

அலகில்நற் சுழிக ளோடாங் கழகில்மிக் கணிகள் பூண்டு
திலகவாள் நுதலி னார்போற் றெருநடம் புரிவ தன்றிப்
புலவர்கட் புலத்தி னாலும் புகுந்துகா ணரிய வாகக்
கலினமா சுழன்றங் காடுங் காட்சிகண் டேவந்து சென்றார். (9)

திக்கெட்டு மாய வீதித் தெரிவையர் மைந்த ரோடு
துக்கமற் றார்க ளாடுஞ் சொக்கட்டான் சொழி யாதித்
தக்கசூ தாட்ட மெல்லாந் தனங்கள்பந் தயம்வைத் தாடிச்
சிக்கெனக் கெலித்தோ மென்று சிரிக்கும்பே ரொலிகேட் டேற்றார். (10)

தந்தம நகில மோக்குஞ் சத்துருத் தன்மை யுன்னிக்
கந்துகந் தனையு தைத்துக் கைகளா லறைவ தென்னச்
செந்துவர் வாயா ரந்தச் செம்பந்தாங் காடா நிற்கும்
அந்தமில் லிடங்கள் நோக்கி யகமகிழ்ந் தேகி னரால். (11)

தேவரை யளிக்க வந்த சேவகற் காண வானின்
மேவர மகளிர் மாட மீதெலாம் நிற்ப தேபோல்
மாவரை யனைய வாய மாடங்க டோறு மவ்வூர்ப்
பாவையர் நிற்குங் காட்சி பார்த்தக மகிழ்ந்து சென்றார். (12)

பண்டரு மொழியி னார்தம் பதியோடு மேவி யாங்கேய்
வண்டுகே ளலர்த்தும் பூந்தேன் மாந்தியம் மலரி னுய
செண்டுகே ளாடி யோடிச் சிரித்திடு மும்பர் மேய
தண்டலை பலவு மந்தத் தனிநகர்க் கண்டு சென்றார். (13)

பளிங்குகற் படிகள் மேவும் பட்டங்கள் தோறு மாதர்
உளங்களின் வெளிய நீரி லுடலுற முகங்கள் மேலாய்
களங்கமில் மதிய னேகங் ககனந்தோன் றிடுதல் போலும்
விளங்குமத் தடங்கள் நோக்கி யேகின ராங்கே மாதோ. (14)

கந்திக ளிரண்டி னுப்பண் கனகச்சங் கிலிகள் பூட்டும்
சந்தனப் பலகை மீதாங் தமனியத் தவிசி லேறி
மைந்தரோ டாடு மாதர் வானஃ தேகற் கஞ்சி
மந்தரப் புயம ணைக்க மகிழ்மைந்தர்க் கண்டு சென்றார். (15)

பாவையர் கீத சாலை பரதநன் னடன சாலை
சேவகச் சிலம்பச் சாலை சிலைத்தொழிற் பழகுஞ் சாலை
ஓவியச் சாலை கல்வி யோதிடுஞ் சாலை யாதி
யாவையுங் கண்டு சென்ருர் யாணரந் நகர்க்கண் மாதோ. (16)

பாவலர் தங்க ளாலும் பகுத்துரை செய்தற் காகா
பூவுல காதி யெந்தப் புவியுறும் பொருள்கள் யாவும்
மேவிய கடைக ளென்னு மிகப்பெரு மகங்கள் மேய
ஆவண வீதி சென்ருங் கரண்மனை யருகிற் சென்ருர். (17)

பிரமனு மரிய மாலும் பிஞ்சகன் ருனு மென்ன
வருமொரு மூவர் தம்முள் மதனைத்தன் வடிவிற் சிந்தும்
பரமனே யாவா னைப்பில் படிவனற் குணங்கள் மிக்கான்
கருமுகி லனைய மேனிக் காகுத்த னிராம னென்பான். (18)

தேவரே யாதி யாவர் தேசிற்கு மொப்பாச் சொல்வோன்
யாவனே வவனி ராம னெழிலெனுங் கடலின் கண்ணே
மேவலைத் திவலை யென்னில் விளம்பவற் குவமை யாவார்
யாவரே திருமா லாய விவற்கிவ னுவமை யாவான். (19)

அன்னவ னுதி மூவ ரரண்மனை மதிலின் பாங்கர்
மன்னுமுள் ளகழி யோடு மணிபல குயிற்றப் பெற்ற
பொன்னிலா மகங்கட் காய பொற்பெலா நோக்கிப் பின்னர்
கன்னிகா மாட மென்னுங் கனமணி யகத்தைக் கண்டார். (20)

மந்தர மனைய தாய மாளிகை மேல்மா டிக்கண்
அந்தரி யுமைபா மாதே யனையபல் சேடி மாரோ
டிந்திரை தானே யாவா ளிணையிலா வகில லோக
சுந்தரி யாய சீதை தோன்றிடக் கண்டான் மாலே. (21)

பின்னரே யனையாள் தானும் பெரிதுவந் தவனைக் கண்டாள்
இன்னவர் தங்கட் கப்போ தெழுந்தவா மியக்க மெல்லாம்
பின்னரே யுரைப்போ மந்தப் பெண்மணிக் குவமை மற்றும்
பன்னுவேஞ் சிறிது கேண்மின் பாரகத் துள்ளீர் மாதோ. (22)

கோவைவாய் நல்லார் யார்க்குங் கூறுதற் குவமை யாவாள்
யாவளோ வவளே சீதை யாய்வந்த துணர்ந்து மெந்தத்
தேவியை யுவமை யாகச் செப்புவே மிவட்கின் னுட்கு
மேவிய முகங்கை யாதி விழுமிய வுறுப்புக் கெல்லாம். (23)

உலகங்க ளேவற்று மில்லை யுவமையாம் பொருள்க ளென்னில்
இலகெந்தப் பொருள்கள் தம்மை யியம்புவே மவற்றுக் கிந்த
உலகிலாம் புலவ ரோது மோண்மதி யாதி யாவுஞ்
சொலத்தகா வவைக ளேனைத் தோகைய ருறுப்புக் கொப்பாம். (24)

ஆதலாற் றிருவே யாகு மவட்கவ ளுவமை யாவாள்
ஈதலா லிவளங் கங்கட் கிவளுறுப் புவமை யாகும்
ஓதுவ தினியா துண்டா மொப்பிலத் திருவு மாலும்
சீதையோ டிராம னாயிச் செகந்தனி லுதிக்க வேண்டி. (25)

பூதலந் தானோ தூய பூமக னுலகு தானோ
பாதலந் தானோ மேலாம் பண்ணவ ருலகு தானோ
மீதல மேழுந் தானோ மிதிலையோ வயோத்தி தானோ
யாதருந் தவங்கள் செய்த தென்பதை யுணர்கி லேமால். (26)

வியனுறும் பதிற்று நூறு விழியினு னவனே போந்து
புயலெழில் வண்ண னோடு பொன்னனங் கழலைக் காண
நயனமே னயுத மில்லை நமக்கென வருந்து வானேல்
பயனில்கண் துவிழுன் றுதி படைத்தவர் கதியென் னுமால் (27)

சீதையென் றோது மந்தத் தெரிவையோ டிராக வற்கும்
ஒதுவேஞ் சிலவற் றையே யுவமையா வவைக ளெல்லாம்
பூதலப் பொருள்க ளல்ல புகலுமவ் வுறுப்பிற் கொப்ப
மீதிலத் துளவா மென்னி லவையேயென் றுணர்மின் மாதோ. (28)

சந்தம்

அன்னவர் தங்க ளலகில வாய வழகெல்லாம்
இன்னமு மோதில் விரிவுறு மென்றுங் கிதைவிட்டே
முன்னவர் தாமாங் கொருவரை யொருவர் முகநோக்கிப்
புன்னகை கொண்ட போதெழுஞ் செயல்கள் புகல்கிற்பாம். (29)

குன்றெறி செவ்வேள் கூரயில் போலக் கொடிபோல்வாள்
நின்றெறி கண்வேல் நேமியன் தோட்குன் றிடைபாய
அன்றல ரம்பு மன்மதன் விடல்போ லவட்கொங்கைக்
குன்றுகள் மேற்கட் டாமரை விட்டான் குலவேந்தே. (30)

தம்பொருள் தந்து பிறர்பொருள் தம்மைப் பெறுவார்போல்
கொம்பனை யாள்கட் கூரயிற் றந்து கொளற்பால
வம்பமர் கண்தா மரைமலர் பெற்றுள் வருமால்பால்
அம்புவி யிங்ஙன் மாற்றுதல் தகுதி யாமன்றே. (31)

தம்மகந் தன்னிற் பிறர்புக வன்ஞர் தலமேவிச்
சம்மத மோடுந் தாமுறல் போலுந் தனைமீறி
விம்முறு முலையாள் தன்னக மேவ விழைவோடச்
செம்மயி லானு மன்னவ ளகத்தே சேர்ந்தானல். (32)

வாங்குமின் வருக்கை பெட்டியி லுறினு மணங்காட்டும்
ஆங்கது போல வாங்கவ ரகமே புகுமாசை
ஓங்கவர் தம்வாய்ப் புன்னகை காட்ட வுடன்மேவும்
பாங்கியர் பாங்கர் தாங்களு முணரும் படிநின்றார். (33)

வேறு

மேக மேனியன் மெய்யெழில் கண்டவன்
ஆகந் தோய்வதற் கின்மையி னுங்குற்ற
தோகை யுன்மத்த ளாயினள் தூய்முலை
ஏகுந் தாமரை யின்குண மீதன்றே. (34)

மிதிலை நற்றிரு மென்முலைக் குன்றிடைச்
சதுரன் விட்டவத் தாமரை யம்பன்றி
நிதஞ்செய் யோமத்தில் நெய்விட்ட தென்னவே
மதனுஞ் சூதமாம் வாளியோன் றெய்தனன். (35)

தறையிற் போமவன் தண்முக மாமதி
மறையக் கண்டவம் மங்கையின் பெண்மையும்
நிறையு மன்னவன் பின்செல நின்றனள்
அறையுங் கைவளை யந்தரை வீழவே. (36)

நோக்கிப் பாங்கியர் நுண்ணிடை யாட்கேது
தாக்கிற் றேரவெனத் தாங்கினர் கைகளாற்
றூக்கிக் கொண்டுபோய்த் தூமலர் பஞ்சிலாஞ்
சேக்கை யிட்டனர் செய்வதேன் யாமென்றே. (37)

கையும் பாதமுங் கண்களுந் தன்னொரு
மெய்யின் மேனியும் போன்மலர் பல்லவம்
பெய்யுஞ் சேக்கையப் பேதைக்குப் போர்க்களத்
தெய்யு மம்பின்மே லேய்ந்துறல் போலுமே. (38)

விரக வெப்பத்தம் மென்மல ராதிய
கருகிக் காய்சந்தங் கண்ணுறல் கொங்கைமேற்
பெருகி வீழ்தலின் பேறுள ருயந்தத்
திருவெம் மூச்சினுற் சிக்கெனக் காயுமால். (39)

தோடு லாஞ்செவித் தோகையின் மேன்மத
வேடன் விட்டேறி வெஞ்சரப் புண்வழி
வாடை யும்புக வாளங்கி மேலிட்ட
தோடு லாவுபூங் கொம்பெனச் சோர்ந்தனள். (40)

சோர்ந்து வீழ்ந்துறுந் தோகையின் மீதருள்
கூர்ந்து சேடியர் கொண்டால வட்டமும்
வேந்தர்க் காமயிற் பீலியும் வீசினர்
ஆர்ந்த தீயினி லாசுகம் வீசல்போல். (41)

இரவி யத்ததி யின்றிமேற் கேகினன்
கருவின் மேவிலாக் காரிகை வெம்மைநோய்
மருவி நிற்றலின் வைத்தியற் கூவற்காங்
கொருவி யத்திசைக் கோடினன் போலுமே. (42)

வேறு

காவெனுங் கூந்தல் தன்னிற் கணிப்பில்பன் மலர்கள் சூடி
மேவுமாங் குயிலி னோதை மென்மொழி யாடி யேகும்
ஆவின மணியி னோதை யடிச்சிலம் பொலிக்க வந்தித்
தேவிதன் குழலின் வாசத் தென்றலோ டேற்றாள் மாதோ. (43)

மாகமா முகத்தின் கண்ணே மதியெனுந் திலக மிட்டு
மேகமா மளகந் தன்னில் மீன்களா மலர்கள் சூடி
ஆகமா மிருள்மிக் காக வணங்கினுக் கணங்கு செய்வான்
வேகமோ டிரவென் றேதும் வேறொரு பெண்ணும் போந்தாள். (44)

சென்றபின் னந்தி நங்கை சேர்ந்தவந் நிசியாம் பெண்ணம்
மன்லறங் கோதை செவ்வாய் மதிமுகங் கற்கண் டின்சொல்
குன்றுறழ் கொங்கை யாட்குக் கொடுமைசெய் திருக்கும் வேலை
அன்றிலு மொன்று போந்தாங் கறைதல்கேட் டுரைப்பாள் மன்னோ. (45)

அன்றில்நின் னகன்றில் தன்னை யகன்றுளம் வாடி நிற்கும்
என்றனை யின்னும் வாட்டற் கேய்ந்திவண் கூவ லென்னே
நின்றனக் கிடுக்கண் யானிங் கியற்றிய துளதோ வின்னே
சென்றிலை யாகில் வானஞ் சேர்வன்யா னென்னுங் காலை. (46)

கோமேத கத்தாற் செய்த குடப்பெருந் தீப மொன்றே
ஆமோதக் கடலி னுப்ப னரிவைக்கென் றெழுந்த தென்னத்
தாமோத ரப்பே ரண்ணல் சலதியைக் கடைபோ துற்ற
தாமேக மதியங் கீழைச் சலதிக்கண் ணெழுந்த தன்றே. (47)

சீவர மங்கைச் சீயர் சிறுகலி யப்பே ரேங்கள்
தேவர்தம் புகழும் பேருஞ் சீடரு முலக மெங்கும்
மேவுறல் போலாங் கந்த விதுவினற் கிரண மெல்லாம்
பூவுல கெங்கு மேவப் போயின விருள்கள் மாதோ. (48)

சிந்துவி ஞெலியி ஞேடு தென்றலு மந்திப் போதும்
அந்தமி லிரவி ஞேடாங் கன்றிலும் வாடைக் காற்றும்
வந்தவை போதா வென்ரே மதியிலி மதிப்போர் கொண்டு
வந்தனை யென்ருள் நங்கை வருந்துவாள் பின்னுஞ் சொல்வாள். (49)

தோகையர் தமக்கு நீசெய் துனிபோமுர் சபித்த தாலோ
ஆகமெந் நாளுந் தேய்ந்தாங் கழிந்துநீ வளர்வ தம்மா
நாகமே விழுங்கி யுன்னை நனிசுட வுமிழ்வ தென்னில்
சோகமிக் குடைய வென்னைச் சுவேதற் கைய முண்டோ. (50)

என்றினும் பலவா ருக வேசினு ளிந்து தன்னை
மன்றலம் போது வாட மஞ்சத்துட் புரண்டாள் பின்னர்
அன்றுதன் மாடி வீதி யணுகிமற் றிருவர் நாப்பண்
சென்றவன் குலமும் மற்றுந் தேருவான் சிந்திப் பாளால். (51)

வேறு

பாத நிலத்தினிற் றேய்தரப் பார்வை யிமைத்திடலால்
மீதலத் தோனலன் கையகத் தேயொரு வில்லிஞேடு
சோதி யுரத்தினில் நூல்கோடு வீரமுந் தோன்றிடலால்
தீதி லரச விளஞ்சிங்கந் தானெனத் தேர்ந்தனளே. (52)

இந்திர நீல நிறத்தோடு மிந்து வெழின்முகமும்
செந்திரு மாமலர்க் கண்களும் வாயுந் திரள்புயமும்
அந்திரு மார்பு முந்தியுந் தந்தி யணிநடையும்
சிந்தையுண் மேவியென் கன்னிப் புரிசையைச் செற்றனவே. (53)

கன்னல்வில் லானினு மேலெழி லாஞெரு காளையின்று
மின்னினில் தோன்றி யுடன்மறைந் தானந்த வீரன்றன்பால்
என்னிலை யோதி வரச்செய்கு வாரேவ ரிவ்விடத்தே
இன்னலின் தன்மை பிணியாள ரன்றி யெவரோர்வரே. (54)

கண்வழி யாக வகத்தே புகுந்தேற்குக் காதல்தந்து
மண்வழி யேகி மறைந்தானைத் தந்திலர் மாரனம்பின்
புண்வழி யாந்தனத் தப்புவர் தீயினைப் பொன்வட்டிலின்
கண்ணுறும் வாசநற் சாந்தென்று சேடியர் கண்விழித்தே. (55)

தாயினு மேமிகு மன்புடை யீர்கள்நற் றுதியர்காள்
ஆயிர மாமதன் போலழ கான்முன் பணுகிச் சென்றான்
பாயலி னோர்வந்து நின்றனன் பின்னரப் பாங்கர்சென்றான்
போயினி யெங்குப் புகுந்திடு வான்கோலப் புண்ணியனே. (56)

என்றவ ளங்குப் பிதற்றுதல் கேட்டந்த வேந்திழைமார்
சென்றனை யோடு புகன்றனர் கேட்டத் திருவன்னையும்
இன்றரு நம்மகள் நாடியு ளாள்கோலோ ரேந்தலையாங்
கென்றுளம் வாடின ளென்செய லாமினி யாமெனவே. (57)

வேறு

இன்னணம் நற்று யாதி யாவரு மேங்கு மாறு
பொன்னணங் கழுங்குஞ் செய்தி புகன்றன மினியன் னுனைக்
கன்னிகா மாடந் தன்னிற் கண்டக மகிழ்ந்து சென்ற
தன்னிகர் கானை செய்தி சாற்றுவா மிங்கு மாதோ. (58)

கன்னிகா மாடந் தன்னைக் கடந்தரண் மனையின் நாப்பண்
மின்னுமா மண்ட பத்தே விதேகனுங் கனைவ ரோடும்
மன்னரித் தவிசேய் காலம் மாதவன் சிறுவ ரோடுந்
துன்னின னெழுந்தாங் கந்தத் தோன்றலும் வணக்கஞ் செய்தான். (59)

வணக்கஞ்செய் யிறைவன் றன்னை மாமுனி யாசி கூறி
இணக்கமோ டவன்று னிட்ட வெழிற்றவி சிருந்தான் வேந்தன்
பணித்தபின் மைந்தர் தாமும் பாங்கராந் தவிசி லுற்றார்
அணித்திர ளிருகூ றாகி யாங்குற்ற தென்ன மாதோ. (60)

கோதிலா முனிவன் தூய கோதமன் சுதனே யான
வேதியன் போந்தா னுங்கே வேந்திறை மைந்த ரன்னான்
பாதமேன் மலர்க்கண் வீழ்ந்தார் பகர்ந்தன னவர்கட் காசி
ஏதில்கோ சிகனை யன்னு னேத்தியா ரிளைஞ ரென்றான். (61)

தனைநிக ரயோத்தி மன்னன் தனயர்க ளிவர்கள் மேலோய்
இனையரிற் பெரியன் றானுந் தாடகைக் கிறுதி கண்டான்
முனைந்தெழு மரக்கர்ச் செற்றென் வேள்வியை முடித்தா னுன்றன்
இனியநல் லன்னை முன்போ லெழவடித் துகள்தந் தானல். (62)

என்றகோ சிகன்சொற் கேட்டாங் கிணையிலம் முனிவன் றானும்
நின்றன தருள்கொண் டார்க்கும் நிகிலமே லாகா துண்டோ
என்றவன் றன்பா லோதி யிவனருஞ் செயல்கள் பாங்கர்
நின்றோளிர் சிறுவர் தம்பால் நேயமோ டுரைசெய் வானல். (63)

இன்னவன் காதி வேந்த னீன்றருள் புதல்வன் கண்டீர்
புன்னெறி யடவி தன்னிற் போயினன் வேட்டை யாடிப்
பன்னருந் தூரஞ் சென்றான் பசியினாற் களைத்துச் சேனை
பின்னுற வசிட்டன் மேவும் பீடுறு மகம்போய்ச் சேர்ந்தான். (64)

அருந்ததி கொழுனன் நோக்கி யரையர்கோன் வருக வென்றாங்
கருந்தவி சிருத்திப் பின்ன ரருக்கிய மாதி தந்து
விருந்துசெய் யணிகத் தோடும் வேந்தற்கே சுரபி யென்ன
மருந்தினு மினிய வுண்டி மகிழ்ந்தஃ தளித்த தன்றே. (65)

தேவர்க்கு மரிய வுண்டி தேனுவாங் களிக்க வுண்டோன்
ஆவுனக் கேதுக் கைய வரசனேற் களித்தி டென்றான்
கோவேனக் குரிமை யன்றாற் கொடேக்கிலேன் வரிற்கோள் கென்றப்
பூவயற் கோப்பா னோதப் புரவல னாட்கள் மேவி. (66)

சுரபியைக் கழுத்தில் யாத்துத் தொடர்கவேன் றிழுக்கத் தானும்
வரமுனி தன்பா லேகி யளித்தையோ மன்னர்க் கென்னத்
தருவனோ நின்னை நின்றன் சம்மத மின்றி யென்றான்
வருமவர் தம்மை வீழ்த்தி மாப்படை யாக்கிற் றாவே. (67)

ஆக்கிய வனிகந் தம்மா லவன்படை யழிந்த தன்மை
நோக்கிய வரையன் மைந்தர் நூற்றுவ ருருத்தே ஞான
பாக்கிய முனியை நோக்கிப் படைமாண்ட துன்னு லுன்னைத்
தாக்குவே மெனவு மன்னான் சக்குவாற் சாம்ப ரானார். (68)

தனயர்க ளழிந்த பின்னர் தரணிபன் வெகுண்டு சீறி
முனிவனை யெதிர்த்து வெய்ய மொய்ம்படை பலவும் விட்டான்
இனையவன் பிரமதண்ட மெதிர்கவேன் றெதிரி விட்டான்
அனையதப் பகழி யெல்லா மழித்தழித் தெதிர்தல் காணா. (69)

எண்ணுநம் படைக டம்மா லிவற்றேறற் காகா வென்னாக்
கண்ணுதல் தன்னை யுன்னிக் கருணைசெய் கென்றா னந்தப்
பண்ணவன் தோன்றி மேலாம் படைக்கல மொன்று தந்தான்
அண்ணலு மதனை யேற்றாங் கருந்தவ முனிமேல் விட்டான். (70)

விட்டதோர் படையை யன்னான் விழுங்கித்தீப் பொறியாய் மெய்பால்
விட்டனன் வேந்தன் காணா வீரியம் முனிவர்க் கென்னாச்
சட்டெனக் கிழக்கின் மேவித் தவஞ்செயத் தொடங்கி னானல்
கட்டமாம் நமக்கென் றுன்னிக் கனகநாட் டிறைவ னேவ. (71)

தேவரூர்த் தாசி யாய திலோத்தமைப் பெயரா ளாங்கே
மேவின ளவள்பால் மோகம் விஞ்சினன் புணர்ந்த தாலக்
காவலன் தவங்கள் தேயக் கவலைகொண் டவளை நோக்கிப்
பூவுல குதித்தி யென்று சபித்தனன் போனான் தென்பால், (72)

அன்னதென் றிசையை மேவி யருந்தவஞ் செய்யும் வேலை
மன்னர்மன் திரிசங் கென்பான் வதிட்டனுங் குருவை நண்ணிப்
பொன்னுல குடலி னோடே போகுதற் கருள்செய் கென்ன
உன்னுடல் நீத்த பின்ன ருவந்துசெல் காங்கே யென்றான். (73)

மற்றொரு குருவை நண்ணி வான்செல்வே னின்றே யென்னாச்
சொற்றனன் கேட்டே யந்தத் தொல்முனி யதனால் நீதான்
இற்றையே நீசனாவா யென்றன னதனை யேற்றான்
நற்றவம் புரியம் மன்பால் நண்ணினன் செய்தி சொற்றான். (74)

அன்னசொற் கேட்டாங் கிட்டி யவன்பொருட் டாற்ற வேண்டி
மன்னுமவ் வதிட்டன் மைந்தர் வருகென்றான் மறுத்திட் டாரால்
புன்னெறிக் கிராத ராகிப் போகெனச் சபித்தன் னுரை
முன்னரேய் முனிவர்க் கொண்டே முடித்தனன் வேள்வி யீற்றில் (75)

நீசற்காம் வேள்வி தன்னில் நின்றவி சேற்கோ மென்றே
வாசவ னாதி தேவர் வந்திலர் வெகுண்டே யந்தக்
கோசிகன் தவமேம் பாட்டாற் கொற்றவ வான்செல் கென்று
ஏசிலஞ் சுவர்க்கந் தன்னி லேற்றின னவனை மாதோ. (76)

துட்டனும் நீச னங்கே தோன்றின னென்றே தேவர்
சட்டெனத் தள்ளி னாரால் தரணிபன் தலைகீ ழாகி
நிட்டையோ யபய மென்ன நிகரிலக் கோசி கப்பேர்ச்
சிட்டனும் நில்நில் லென்னாச் சேண்டனில் நிறுத்திப் பின்னர், (77)

மதிக்கிலா திகழ்ந்த தேவர் வான்முத லனைத்தும் வேறாய்ப்
புதுக்குவே னன்றி யிந்தப் பூதலந் தன்னில் நாளும்
உதிக்குமா வலரி யாதி யோன்பது கோளும் நாளும்
எதிர்த்திரு திசையு மாறி யெழுகவென் றுரத்திச் சொற்றான். (78)

இன்னசொல் லோர்ந்த தேவ ரிருடிபா லேகி யைய
வுன்னிருஞ் சீற்றந் தீர்க வுனைச்சரண் புகுந்த வேந்தன்
மன்னுக நாள்வட் டத்தே வடக்கிலேய் நாள்க டம்மில்
தென்னக மொளிர்க வைந்நாள் திகழநின் சீர்த்தி நீயும். (79)

அரசமா முனிவ னாக வாகுதி யினிமே லென்னாப்
பரசோரு கைய னாதிப் பண்ணவர் சென்றார் பின்னர்
துரிசிலா முனிவன் மேற்கிற் றோன்றினன் தவஞ்செய் காலை
வரிசிலை யம்ப ரீடன் மனிதமா மகஞ்செய் கிற்பான். (80)

நரன்றனை விலைதந் தேற்க நன்னிதி தேரிற் கொண்டு
திரிந்தனன் கிடைக்கி லானாற் றிகைத்தன னடவி தன்னில்
இருசிகன் மைந்தர் மூவ ரிவர்தமி லிடைவந் தானைப்
பெருநிதி யளித்தாங் கேற்றான் பெயர்ந்தன னவனைக் கொண்டே. (81)

தரித்திரந் தீர நம்மைத் தந்தனர் விலைக்கிங் கென்றே
கருத்தினிற் கொண்டாங் கன்னான் கவலையோ டேகுங் காலை
எரித்திடு முச்சிக் காலப் பூசனை யியற்றற் கான
அரித்தியோ டம்ப ரீட னாண்டோரு தடத்திற் சென்றான். (82)

அருகுறுங் கோசி கப்பே ருடையனா மம்மான் றன்பால்
இருசிக னளித்த மைந்த னேகினன் செய்தி சொன்னான்
மருகநீ யஞ்சே லுன்னை மாய்வுறா தளிப்பே னென்றான்
தருமைந்தர் நால்வ ராங்கே தப்பினார் தம்மை நோக்கி. (83)

மைந்தர்கா ளும்மி லென்சொல் மறுக்கிலா தொருவ னேகி
வந்தநல் லம்ப ரீடன் மகப்பசு வாகு கென்றான்
நிந்தனை செய்தாங் கியாரு நேர்ந்தில ராகி நின்றார்
சந்ததங் கிராத ராகிச் சரிப்பிரேன் றுரைத் தன்னானை. (84)

மருகனா மவன்றன் காதில் மந்திர மிரண்டாங் கோதி
நிருபன்றன் யூபந் தன்னில் நின்றனை நிறுத்துங் காலை
திருமந்தி ரங்கள் தம்மைச் செபிப்பையேல் மாளா யென்றான்
வருமம்ப ரீடன் தேரில் மகிழ்ந்தந்த மைந்தன் சென்றான். (85)

சென்றது மம்ப ரீடன் செய்மக யூபந் தன்னில்
ஒன்றினன் மறைக டம்மை யோதினன் தேவர் வந்தார்
வென்றிகோ ளம்ப ரீடன் விரும்பிய வரங்கள் தந்தார்
சென்றன ராசி கூறிச் சிறுவன்றன் னுயிரைக் காத்தே. (86)

பின்னரே கோசி கப்பேர்ப் பெருந்தவன் வடக்கிற் சென்று
பன்னருந் தவஞ்செய் துற்றான் பங்கய னாதி தேவர்
முன்னரே தோன்றித் தூயோய் முனிவரிற் சிறந்திட் டாய்நீ
நின்னருந் தவத்தை யின்றே நிறுத்துக வென்றார் கேட்ட, (87)

முனிவர னவரை நோக்கி வசிட்டமா முனிவன் வாக்கால்
எனையொரு பிரம ஞான விருடியென் றியம்பு வானேல்
இனியதை விடுவே னென்றா னியம்பினா னதுபோ லன்னான்
தனைநிக ரன்னான் செய்த தவமுடித் தெழுந்திட் டானால். (88)

அத்தகை யாய மேலோ னருளுமக் குளதா லெந்தச்
சித்திதா னாகா துங்கட் டிறத்தென்றாங் காசி கூறி
யுத்தம கோத மப்பே ருடையனற் புதல்வ னாய
வித்தக னுறையுள் சென்றான் விண்மணி மேற்கிற் சென்றான். (89)

முந்திசெய் பூசை யாற்றி மூவரு மிருந்த பின்னர்
அந்திசென் றிரவுண் டாக வறுசுவைக் கறிக ளோடும்
பந்திசெய் தரிய வுண்டி படைத்தனன் சனகன் பின்னர்த்
தந்தசெவ் விடுதி தோறுந் தனித்தனிச் சயனித் தாரால். (90)

வேறு

தனியாக வேயொரு மஞ்சத்தின் மீதினிற் சாய்ந்தகளங்
கனிபோலு மேனி யுறுவீரன் பிற்பகற் காலத்தாங்கே
முனியோடுந் தம்பி யவனோடும் வந்த முழுத்தெருவேய்
தனிமாடம் நின்ற வொருமானை யேயுன்னிச் சாற்றுவனே. (91)

பூவுஞ் சிவந்த கனியுங் குவளைநற் போதிரண்டும்
தேவும் விரும்பிரு செவ்விள நீர்களுஞ் சேர்ந்தொளிர
ஏவும் பணிமட வார்மென் கொடிக ளிடையகமேல்
மேவும் பசும்பொற் கொடியொன்று யாம்வந்த வீதியிலே. (92)

சுருள்கருங் கூந்தல் மதிமுக மானின் துணைவிழிபோல்
மருளிரு கண்கனி வாய்முல்லை மூரல் மணிப்பந்தெனத்
திரளிரு கொங்கை யுடன்பொலன் பாவை திகழ்வதுபோல்
தெருளொரு மாளிகை மீதுநின் றாளொரு சேயிழையே. (93)

விண்ணக மோகட லென்னக மோமலர் மேலுறைவோன்
நண்ணக மோபணி மேவக மோவொரு நால்வகையாம்
மண்ணக மோபெரு மாளிகை மேல்நின்ற வாட்கருங்கட்
பெண்ணக மோதுக வெற்கைய மேகுறப் பேதைநெஞ்சே. (94)

கண்ணிமை கொட்டின பூத்தொடை வாடின காலிரண்டும்
நண்ணின மேல்நிலை யாலவள் மானவ நன்னங்கையே
எண்ணுறு மன்னவ ளம்முக நோக்கி லிறைக்குலத்துப்
பெண்ணென லாமணஞ் செய்வதற் கேற்றநற் பெற்றியளே. (95)

காவியை நேர்விழி நஞ்சேனக் காண்கினுங் காதல்கொள்நம்
ஆவியை யோம்பு மமிழ்துறுஞ் செங்கனி வாயதன்கண்
மேவிய புன்னகை நம்மேல் விருப்பை விளக்குவதால்
ஓவிய மன்னவ ளுள்ளக் கருத்தையு மோர்ந்தனமே. (96)

ஆயினு மன்னவள் கன்னிநன் மாடத் தமர்ந்துபல
சேயிழை யாரோடு மேவிய தன்றித் திருவனையாள்
சாயலை நோக்கிடிற் கன்னிகை யேயொரு சங்கையின்றால்
மேயநம் வேட்கையிற் கோதிலை யெத்தன மேற்செய்வமே. (97)

என்றிந்த வாறு மனத்தோடு மோதி யிருப்பவன்மேல்
நின்றந்த வேளும் பகழிவிட் டானங் நிசிதனிலே
சென்றந்த மில்லத்த மின்சாரத் தீபஞ் சேணுறல்போல்
நின்றந்த மாமதி தோன்றின னீரேண் ணிலவிரித்தே. (98)

கன்னல்வில் லான்விடும் பூவாளி யோடு கவின்மதியந்
தன்னிரண் டேட்டுக் கலைவிட மேவச் சகிக்கிலனாய்
அன்னவள் தன்முகங் கண்கொங்கை யாதி யனைத்துமுன்னித்
துன்னிர வோர்யுகம் போலுற வாடித் துயின்றிலனே. (99)

*பதினோராவது மிதிலைக் காட்சிப் படலம் முற்றிற்று.*

ஆகப் படலம் பதினொன்றுக்கும் மொத்தப் பாசுரம் ~~509~~. 511.

---

## *பன்னிரண்டாவது கார்முகப் படலம்.*

இரவெனு மரக்க னோடாங் கெமனென மதியுந் தோன்றி
வருதன மரபு ளானை வதைக்கின்றா ரென்றன் னுரை
விரைந்தெழு கென்றுங் கோட்டி விடுதற்கே யெழுந்தான் போலாங்
கிரவியேழ் பரிமாத் தேர்மே லேறிவந் துதய மானான். (1)

காலைவந் தனமே யாதி கருமங்கள் முடித்தாங் காதி
மூலமோ டிளவல் தானு முனிவனுஞ் சனகன் யாக
சாலைசென் றிருந்தார் யாக முடிந்தவை சார்ந்த பின்னர்ச்
சீலநற் சனக னெம்மான் செவ்விகண் டுவகை மிக்கான். (2)

தவசியை நோக்கி நங்கட் சானகி தன்னை யிந்த
அவையில்வந் துள்ள மூத்தோற் களிக்கவெற் கருத்தி யேனும்
சிவதனு வளைப்ப வற்கே தேரிவையை யளித்த லென்னும்
நிவந்தனை யொன்று மாறாய் நிற்கின்ற தைய வென்றான். (3)

கேட்டனன் மகிழ்ந்தே யந்தக் கீர்த்திமிக் குடைய மேலோன்
வாட்டநிற் கெற்றுக் கன்னன் வளைப்பன்வில் லென்று னன்னன்
பாட்டன்முப் பாட்டன் முன்னோர் பரம்பரை யாவ தென்றே
கேட்டனன் மிதிலை வேந்தன் கிளப்பனவ் விருடி மாதோ. (4)

சூரியன் குலத்தில் முன்னர்த் தோன்றிய மனுவே யாதிச்
சீரிய மன்னர் மன்னர் திருப்பெயர் வரிசை யோடு
வீரியம் புகழே யாதி யாவையும் விளம்பி யெம்மான்
பாரிய செயலு மற்றும் பகர்ந்தனன் வகுத்து மாதோ. (5)

மிதிலைமா நகரின் கோமான் மெய்த்தவன் மாற்றங் கேட்டாங்
கதிமகிழ் வெய்தித் தற்கா மமைச்சனை நோக்கித் தெய்வ
நதிமுடிப் பெருமான் வில்லை நம்மவை வரச்செய் கென்னச்
சதுரனு மயுதம் பாதிச் சமர்த்தர்கள் கொணர்க வென்றான். (6)

குன்றினை நிகர்த்த தோளார் கொற்றமும் வலியு மிக்கார்
சென்றன ராா வாரஞ் செய்தனர் புயங்கள் தட்டி
நின்றனர் வயிரத் தூண்கள் நீண்டவை நான்கு தம்மில்
வென்றிகொள் வில்லைத் தூக்கி வெளிவந்தார் வடங்கள் யாத்தே. (7)

பாரமிக் குடைய தாலே பரிப்பவர் வருந்தல் நோக்கித்
தீரமா மொருவன் சிந்து செப்பிக்கொண் டேக மற்றைப்
பேரெலாம் ஏல ஏல என்றுகொண் டேகி னரால்
ஊரெலாந் திரண்ட தாங்கே யுலகெலாந் திரண்டாற் போலும். (8)

மேருவே வில்ல தாக மேவிற்றே விவணே யென்பார்
ஏரியற் ககன மேவு மிந்திர வில்லோ வென்பார்
யாரிதைத் தூக்கிக் கையா லேற்றுவார் நாணை யென்பார்
பாரிலெவ் வரச ரிவ்விற் பார்த்தெழுந் தோடா ரென்பார். (9)

பதியையாள் வேந்தற் கின்று பயித்திய முளதோ வென்பார்
கோதிகொள்வேற் குமர னேனுங் குனிப்பனோ விதனை யென்பார்
சதிசெய்வான் பாலன் றன்னைத் தனுவிதைக் கொணர்ந்தா னென்பார்
விதியையார் தடுக்க வல்லார் வீணிதே யென்பார் மாதோ. (10)

இன்னண மியாரு மோத வெடுப்பரும் வில்லைக் கொண்டு
பன்னரும் வலியின் மிக்கார் படிவமும் வருந்த வேகி
மின்னிடை யுலக மாதின் மெய்குழைந் தேங்கு மாறு
மன்னவை தன்னில் வைத்தார் மலையெனக் காண மன்னோ. (11)

வேறு

மேதினியா ளரசரேலா மிதைநோக்கி
மெய்விதிர்ப்ப மேவா நின்றார்
தீதில்பெருங் குணச்சனகன் மகள்பொருட்டாங்
குளக்கருத்தைத் தேர்ந்தோ னன
கோதமன்றன் னரியசுதன் தனுவந்த
வரலாறுங் கோதி லாத
சீதையின தருங்கதையுஞ் சபையிலுறு
மவரறியச் செப்பு வானல். (12)

முக்கணெழிற் பெருமானே டுமையணங்கை
மதியாமல் முனைந்தோர் யாகம்
புக்கியற்றுந் தக்கனெடு தேவரையு
மொருதனுவாற் பொருதாங் கோட்டி
அக்கணமே மகந்தனையு மழித்தேகிச்
சினந்தணிந்தாங் கிந்த வில்லைச்
சிக்கிலிவன் குலத்தோன்ற லொருவனிடம்
வைத்தனனச் சிலையீ தாமால். (13)

விற்கதையிங் ஙனமிருப்ப மகமியற்றும்
பொருட்டிந்த மிதிலை வேந்தன்
பொற்கலப்பை தனில்வயிரக் கொழுப்பூட்டி
யுழுதான்முன் பூமி தன்னை
அற்கணெழு மின்னெனவோர் பெண்மகவு
தோன்றியதவ் வங்கார்க் கண்ணே
விற்பனரும் புகழரிய வம்மகவை
யிக்குரிசில் விழைந்தாங் கேந்தி. (14)

தன்மனைவி யிடங்காட்டப் பொற்புதைகண்
டாளெனத்தன் தளிர்க்கை யேற்றாள்
தொன்மையெழிற் கொழுக்குரிய சீதையெனும்
பெயரினெடுந் துலங்கி யிற்கண்
பன்மகளி ரருமையொடுந் தினமளிப்ப
வளர்ந்தாள்நற் பருவ முற்றாள்
மன்மதனை நிகர்மகிபர் யாவருமே
தனித்தனியே மன்பாற் போந்தே. (15)

நின்னெழிற்செம் மைதிலியை யெனக்களிப்பா
யெனவேண்ட நிருபன் றானும்
என்னருமைத் திருமகளைச் சிவதனுவை
வளைப்பவற்கே யீவே னென்றான்
மன்னவரி லெவருமிதை யெடுத்திடவு
முடியாமல் மாழ்கி வெட்கி
யின்னவன்பால் போர்புரிந்து தோல்வியொடு
புறங்கொடுத்தாங் கோடி னரால். (16)

அதுமுதலா விதைநாடி வருமரச
ரிலரானா ரிவை தானும்
வதுவையிலா தகமுறைவாள் தசரதனு
மகிபர்கோன் மதலை யான
சதுரன்மணி நிறமுடையான் தனுவிதனை
வளைத்தவளைத் தளிர்க்கை பற்றிப்
புதியமல ரணியிடுவே னென்றுறுதி
யொடுமேவையிற் புகன்றிட் டானல். (17)

வேறு

பார்த்தனன் கோசிகன் பாருண் டான்றனை
தீர்த்தன்வில் வாங்கெனச் செப்ப லீதெனாச்
சீர்த்தொடை யாமெனச் செங்கை யேற்றனன்
சேர்த்துநாண் பூட்டலைத் தேர்ந்தில் லாரெலாம். (18)

இற்றவிற் றுண்டிரண் டாய தோர்ந்தனர்
அற்றவில் லோதையா லமர ருட்கினர்
நற்றவ ரோடிந்த ஞால முட்கிற்றுற்
கொற்றவேல் மன்னவர் குனிந்திட் டார்தலை. (19)

நின்றுகண் டாளொரு நீலக் கண்ணினள்
சென்றுநின் றேதினள் சீதை பாலதை
அன்றுகண் டான்சேய லாமிஃ தென்றவள்
என்றுமி லாமகிழ் வெய்தி னளரோ. (20)

கன்னியை யீன்றவன் களிப்பின் யாவர்க்கும்
பொன்னனி வாரினன் பூரி யீந்தனன்
மன்னிய பார்க்கெலாம் வந்தோர் மேகந்தான்
பொன்னினன் மாரியே பொழிந்த தென்னவே. (21)

கோசிகன் றன்னையக் கோவும் பார்த்தவன்
மாசிலிம் மைந்தற்கு மணஞ்செய் நற்றினம்
பேசுவ தின்றுகொல் பிதாவே யன்றுகொல்
யோசனை செய்தருள் மாசி லோயென்றான். (22)

பெற்றவர் வந்தபின் பேச லீதென
நற்றவன் சொன்னபின் நாதன் நன்றெனாத்
தெற்றெனத் திருமண வோலை சேர்ப்பித்தான்
கொற்றவர் பால்திறை கொளுமா மன்னற்கே. (23)

வேறு

வாங்கினனற் சுமந்திரப்பே ரமைச்சன் றானும்
வாசித்தா னதன்விடயம் பின்னு மாறே
ஓங்குறுமம் மூவுலகு முடைய கோவே
உன்பெரிய திருமகன்றான் சிவன்றன் வில்லைத்
தீங்கரும்பு போலெடுத்தீண் டிறுத்திட் டானாற்
சீதையினைத் தரற்கிசைந்தே னிதனை யேற்க
ஓங்குபுக ழுறுமுனக்கு முளமுண் டாயின்
உடன்வருக இப்படிக்குச் சனக வேந்தன். (24)

சிறந்தபெருஞ் செய்தியிதை யோர்ந்த கோமான்
சிந்தைமகிழ்ந் தற்றையோலி வில்ல தென்றாங்
கறிந்தனன்பின் சுமந்திரனை நோக்கித் தூதற்
களித்திடுகே சிறந்தபரி சுடனே யெல்லா
மறந்திகழும் புரவலர்க்கு நிருபத் தாலும்
வளநாடு நகரினர்க்குப் பறையி னாலும்
அறைந்திடுகே மணச்செய்தி யென்ன வன்னா
னங்ஙனமே யாவருக்கு மறிவித் தானால். (25)

*பன்னிரண்டாவது கார்முகப் படலம் முற்றிற்று.*

ஆகப் படலம் பன்னிரண்டுக்கும் மொத்தப் பாசுரம் 536.

## பதின்மூன்றுவது எழுச்சிப் படலம்,

மன்னவர்க்கு மன்னனொரு மணித்தேர் மீதும்
மைந்தர்களாங் கிருவருமோர் மணித்தேர் மீதும்
பன்னியர்கள் மணிச்சிவிகை மூன்றின் மீதும்
பல்கலைதேர் வசிட்டனொரு சிவிகை மீதும்
பொன்னனைய வமைச்சர்பல தேர்கள் மீதும்
புரங்காக்கு மாடவருந் தாதி மாரும்
பின்னரேழப் பல்லாண்டு மறையோர் பாடப்
பெட்புறுநீர்ப் பொற்குடநேர் போதச் சென்றார். (1)

செயவிசயீ பவவென்று சிலர்கள் சென்றார்
சிலரவணே கட்டியங்க ளோதிச் சென்றார்
நயந்துசில ரெச்சரிக்கை யோதிச் சென்றார்
நாவலர்கள் வாழ்த்துகவி பாடிச் சென்றார்
கயல்விழியின் கணிகையர்கள் நடித்துச் சென்றார்
கைதேர்ந்தோர் சிலம்பவித்தை யாடிச் சேன்றார்
உயரிரத கசதுரக பதாதி சேனை
யொருநான்கோ ரேனைத்துஞ் சென்ற மாதோ. (2)

அண்டம்பிளந் திட்டதென்றுங் கேவரு முட்க
அதிர்வெடிகுண் டாயிரத்தோ டொருநூ றேங்க
எண்டிசையுஞ் செவிபேட முரச மாதி
யியங்கள்பல வகைவகையா யொலிசெய் தோங்க
அண்டமுயர் பொறிகளின்மேற் குடைக ளோடு
மாட்படைதங் குடைகோடியா லிருண்டு பின்னர்
மண்டிரதஞ் சிவிகைமணி மகளிர் மைந்தர்
மணியணிகள் படைகளினு லொளியுண் டாமால். (3)

அடல்மிகுமந் நிருபர்தங்கோன் குடும்பத் தோடாங்
கமைச்சர்குரு வாதியரோ ரேர்ச்ச னங்கள்
படரிரத கசதுரக பதாதி யாதிப்
பரப்பெண்ணிற் பெரும்புறமாக் கடலா மந்தக்
கடலிலெழு மொலிபோலு மவரோ டந்தக்
கணிப்பில்பெருஞ் சேனையெத் தோதை யாமால்
புடையிலெழு மதிர்வெடிகுண் டோதை தானும்
புயற்கணெழு மிடிமுழக்கம் போலா மாதோ. (4)

இத்தகைய பெரியவொலி யதனு லாங்கே
யெழுமகளி ராடவரா மேவருந் தங்கள்
சித்தமெழுஞ் செய்திசெவி யேற்கா தாகச்
செவியிலரோ மைமையர்க ளென்னத் தங்கள்
கைத்தலத்தா லுணர்த்துகிற்பர் தலைய சைப்பார்
கனிந்துமைந்தர் கண்களினு லழைப்பர் பின்னும்
முத்தமிட்டாங் கணைத்தெழுவர் மனைவி மாரை
மொய்ம்புடைநல் லேவலர்கள் முடுகிச் செல்வார். (5)

தசரதனே யாதியர்செல் லிரதத் தூளும்
சதுர்வகையாம் படைகள்செல வெழுந்த தூளும்
திசையெட்டின் மேற்கதுவத் தேவர் பெய்யும்
செம்மலர்மா மாரியினுற் றரைக்கண் வீழ்ந்து
கசங்களிலா மதநீரும் மைந்தர் மாதர்
கழுத்தினோடு சிரங்களிலா மாலைத் தேனும்
விசையோடுறே வளருகி யுலர்ந்து முச்சால்
மேவியெழுந் தேர்களினுற் றுகளா மாதோ. (6)

*பதின்மூன்றுவது எழுச்சிப் படலம் முற்றிற்று.*

ஆகப் படலம் பதின்மூன்றுக்கும் மொத்தப் பாசுரம் 542.

---

## பதினான்காவது வழிவிளையாட்டுப் படலம்.

அனையநற் காட்சியோ டண்ணிந்து சென்றவர்
புனையும்பொன் மாமதிற் புறங்க டந்தனர்
கனைகுர லோடுபல கலுழன் வாமத்தும்
வனமுறும் வாயசம் வலத்து மேகின. (1)

காதமி ரண்டவர் கடந்து சென்றனர்
சீதநற் சந்திர சைலஞ் சேர்ந்தனர்
போதுபோ யிருண்டதாற் புகுந்து தங்கினர்
சோதிமா மதியமுந் தோன்றிற் றுங்கரோ. (2)

கல்லக மாமணி கனகந் தம்மொளி
மல்லெழிற் றேரளினர் மகளிர் பூணொளி
அல்லொழித் தெல்லென வவ்வணின் றேங்கலால்
எல்லெழு மதியென விருந்த தன்னதே. (3)

இத்தகை யொளியினுல் யானை கார்பரி
நத்தனை திறத்தோடு நண்ண வோவ்வொன்றே
புத்தெளி ருலகிலுண் டிந்தப் பூதரத்
தித்தனை வெண்பரி கரியே தென்பரால். (4)

அன்னபொன் ஞட்டவ ரவணின் றுண்டல்போல்
முன்னர்வந் தாக்கறு சுவைநல் லூணெலாம்
பன்னரு மாடவர் மகளிர் பந்தியாத்
துன்னியாங் கருந்தினர் துயின்ரு ரங்கரோ. (5)

மாமணி வண்ணற்கா மணத்தைக் காணுவான்
சேமமோ டேகுநீர் சிலம்பிற் றூங்கலேன்
போமெென வெழுப்புவான் புகுந்தான் பொன்மரைப்
பூமணங் கொள்பவன் போந்தா னங்கரோ. (6)

யாவரு மத்ததி யெழுந்து தாமரை
வாவியின் மூழ்கித்தே வணக்கஞ் செய்தனர்
மாவருஞ் சிற்றுணு மாந்திச் சென்றனர்
காவயற் சோணமா நதியைக் கண்டனர். (7)

தங்கின ரந்நதித் தண்ணம் மூழ்குவான்
எங்கணு மைந்தர்தம் பெண்டி ரின்முகப்
பங்கய மீதுகைப் பாணி யோச்சுவார்
அங்கவர் பெண்டிரு மவர்மீ தோச்சுவார். (8)

அக்கரை முன்செல்வோர்க் களிப்ப தீதென்னத்
தக்கநன் மைந்தர்முன் னீந்தித் தாஞ்செல்வர்
எக்கரின் முன்செல்வோர்க் கிஃதீ வோமெனச்
சிக்கென மல்லந்து சேர்வர் சில்மைந்தர். (9)

தெப்பமீ தைம்மயிற் சென்று முன்னிற்போர்க்
கிப்பரி சென்னவு மேகு வார்பலர்
செப்பதில் நங்கையர் சென்று மும்மயிற்
கப்புறங் கண்டவ ணின்றஃ தேற்பரால். (10)

அங்கயற் கண்ணியர்க் காமெய் நீருறத்
திங்களம் மாமுகந் தெரிய மல்லரல்
பங்கயந் தானல்லி பானற் பூக்கள்கொண்
டெங்கணும் நிற்பன யாற்றி லென்னலாம். (11)

ஆடவர் நங்கைய ரங்கங் காறெலாம்
கூடிநீ ராடுதல் கண்ணன் கோபிய
ரோடுதண் யமுனையிற் பன்மெய் யுற்றவ
ஞேடுநீ ராடிநின் றுவத்தல் போலுமே. (12)

நங்கையர் மென்முலை நானச் சாந்தமும்
அங்கவர் நாயக ரகலச் சாந்தமும்
தங்களம் மஞ்சனப் பொடியுஞ் சார்ந்துயா
றெங்கணும் வாசமோ டேகுஞ் சேந்நீர். (13)

அந்நிற யாற்றினின் மகளி ராடவர்
சென்னியந் தோள்களிற் சேர்பன் மாலைகள்
துன்னியெங் கெங்குமே தோன்றல் வானவில்
மன்னியாங் கெங்குமே மலிதல் போலுமே. (14)

இன்னணம் நீர்விளை யாட்டங் காறெலாம்
பன்னரு மைந்தரும் பாவை மார்களும்
அன்னவர் மக்களும் நீர்நன் காடினார்
மன்னர்மன் ஞதியர் வரலா ருேதுவாம். (15)

கொற்றவர் கோனுடன் குமர ரோர்துறை
நற்றவ ருடன்குரு நாத ஞேர்துறை
மற்றைய மன்னரோ டமைச்ச ரோர்துறை
யுற்றனர் நீர்குடைந் தும்பர்ப் பூசித்தார். (16)

தேவியர் மூவருஞ் சேர்ந்தங் கோர்துறை
கோவின மாதர்கள் குழுமி யோர்துறை
சேவைசெய் சேடியர் சேர்ந்தங் கோர்துறை
கோவையம் மேகலை குலைய மூழ்கினார். (17)

ஆதவ னுச்சியி லாம்போ துற்றவர்
ஏதினும் வந்தில ரென்றாண் செய்பவ
ரோதன மாயிற்றென் ருேத யாவரும்
போதலர் சோலையிற் போயஃ துண்டனர். (18)

வேறு

தாம்புலங் கொண்டா ராங்கே சற்றிளைப் பாறித் தங்கி
ஆம்பல்வாய் குவளை யங்கண் ணன்னமென் னடைகண் டின்சொல்
பாம்பெழிற் படத்தி னல்குற் பாவையர் மயில்க ளென்னப்
பூம்பொழி லகங்க டோறும் புகுந்தன ருலவி ஞரால். (19)

மயிலொடு மன்ன மான்கள் மாங்குயி லிவைக ளன்னார்
இயலொடு நடைகண் ணின்சொல் லிவற்றினுக் குட்கி யந்தப்
புயல்தவழ் பொழிலி னின்றும் போயின வன்னார் மீது
மயல்கொளு மைந்தர் தத்தம் மனைவியர்த் தேடிச் சென்றார். (20)

அற்பமின் னிடையின் மாத ரனைவருந் தருக்க டோறும்
நிற்பவ ராகி யாங்கே நேர்ந்தபூப் பறிக்குந் தோற்றம்
கற்பக மாதி யைந்தாக் கழறுநற் றருக்க டோறும்
பொற்புடைத் தேவ மாதர் போந்துபூக் கொய்தல் போலும். (21)

தேடியாங் குற்றோர் தத்தந் தேவிய ரின்னா ரென்று
நாடிலர் மாதர் கூட்டம் நனிமிகுந் திருத்த லாலே
சேடியர் தம்மா லோர்ந்து சென்றபின் பிரிந்த தாலே
ஊடுவோர் சிலர்தா மெள்ளி யோடுவ ரொளிப்பர் சில்லோர். (22)

செந்துவர் வாயா ரெல்லாஞ் சேர்ந்தங்கோ ரிடத்தின் மேவிக்
கந்துக மாடிப் பின்னர்க் களைத்தவண் சாய்தல் கண்டு
தந்திபூங் கொம்பர் கையிற் றரித்துக்கொண் டெழுத லென்ன
மைந்தர்தா மவரைக் கொண்டு மாதவிப் பந்தர்ச் சேர்ப்பர். (23)

கிள்ளைகை யேந்திப் பேசக் கேட்டக மகிழ்நல் லாரும்
பிள்ளையங் குதலை கேட்டு பெருமகிழ் வுறுநல் லாரும்
கள்ளைநன் கருந்திச் சொக்கிக் கணவர்தம் மடியிற் சாய்ந்து
வள்ளையஞ் செவிக்கீழ் கையை வைத்துக்கண் வளர்ந்து மீள்வார். (24)

பூக்களைப் பறித்து மாதர் பூங்குழற் சூட்டு வாரும்
காக்கினை சாய்த்துப் பூக்கொள் கண்மணி யெனச்சொல் வாரும்
ஈக்களைத் தவிர்த்துச் செந்தே னெடுத்தன்னார்க் கூட்டு வாரும்
பாக்களைப் பாடிச் சோடாய்ப் பாணிகொத் தேகு வாரும். (25)

கோவைவாய்த் தேவி மார்க்குக் கோதைகள் தொடுத்தீ வாரும்
தேவையாங் கனிகள் தத்தந் தேவியர்க் கூட்டு வாரும்
ஆவியே யமுதே யென்றாங் கவர்தமை யணைத்து ளாரும்
தேவியர் தங்கள் மேற்பூச் செண்டுக ளெறிகிற் பாரும். (26)

கிள்ளையைப் பிடித்தீ கென்று கேள்வன்பா லோது வாரும்
பிள்ளையைப் பிடியென் றன்னான் பேர்சொலா தழைக்கின் றாரும்
சள்ளையிப் பிள்ளை யென்றே தாதிபால் கொடுக்கின் றாரும்
கொள்ளையென் றலர்கள் வாரிக் கொண்கன்மே லிறைக்கின் றாரும். (27)

இத்தகை விளையாட் டோடாங் கின்னும்பல் விளையாட் டெல்லாம்
தத்தம கொழுன ரோடேந் தையல ராடா நின்றார்
மித்திரன் மேற்கிற் சாயும் வேளைகண் டன்னா ரெல்லாம்
கோத்தேழிற் சயன மேவுங் கூடரப் பந்தி சென்றார். (28)

கனிவகை யோடுசேர் தேன்நற் காய்கிழங் காதி யாய
முனிவர ருணவே யந்த மொய்ம்பரும் நங்கை மாரும்
நனிபொழி லுண்கை யாலே நாமுண்ணோ மினியூ ணென்று
புனைதுகில் விடுதி தோறும் புகுந்தன ருறங்கி னூரால். (29)

உதயங்கண் டெழுந்தேல் லோரு முனுற்றினர் கடன்கள் பின்னர்ப்
புதியநல் லுணவு கொண்டார் புத்திரர் பெண்டிர் மற்றோர்
சதுர்வகை யனிகஞ் சூழத் தசரதன் கங்கை தாண்டி
மிதிலைமா நகரின் பாங்கர் மேவியோர் சோலை நின்றான். (30)

*பதினான்காவது வழிவிளையாட்டுப் படலம் முற்றிற்று.*

ஆகப்படலம் பதினான்கிற்கும் மொத்தப் பாசுரம் ~~570~~ 572.

---

## *பதினைந்தாவது எதிர்கோள் படலம்.*

சக்கர வர்த்தி யான தசரதப் பெயர்கொள் மேலோன்
புக்கன னனைவ ரோடும் புரத்தய லென்று கேட்ட
மிக்குயர் ஞானி யான மிதிலைமா நகரின் கோமான்
சிக்கென வெதிர்கோண் டேகுஞ் செயல்சிறி துரைசெய் வேமால். (1)

சந்தம்.

படைகள் நால்வகை யுடன்வந் தேகிடப்
பழுதி லந்தணர் வாழ்த்தவெண்
குடைகள் சாமரை மகுட தோரணங்
கொடிகள் பற்பல பொற்பணித்
தடிக ளாதிய விருதே லாமெழச்
சனக வேந்தனுந் தன்னெழிற்
பிடியின் மென்னடை மனைவி தன்னொடும்
பெரிய தேரின்மீ தேகினன். (2)

அந்த வேந்தன தமைச்ச ராதியோ
ரணிகொள் தேர்கள்மீ தேகினர்
வந்த தம்பியும் வனசக் கண்ணனும்
மணிபொற் றேர்கள்மீ தேகினர்

சந்த வின்பமாந் தவளச் சங்கோடு
சகல வாத்திய வோதையும்
அந்த ரத்தினூ டெங்கு மேவுற
வமரர் பூமழை பெய்தனர். (3)

செம்பொற் பூரண கும்பம் பற்பல
தெரிவை மார்கோடு சென்றனர்
தம்ப லங்களு மின்ப லங்களுந்
தாங்கிப் பற்பல ரேகினர்
வம்பின் மாலையோ டின்பச் சிற்றுண
வகைகொண் டேபல ரேகினர்
நம்பு மென்மொழிக் கணிகை மாதர்கள்
நடன மாடியாங் கேகினர். (4)

நாட்டு ளார்களும் நகரு ளார்களும்
நாடி வந்தவண் கூடினர்
வீட்டில் யாருமே யிலரென் றேதிட
வெளிவந் தந்நகர் மாதர்கள்
பூட்டும் வில்லிறுத் தவனைத் தேரின்மேற்
போதக் கண்டவன் மீதிலே
நாட்டம் வைத்தெழுஞ் செயல்கள் மிக்கவாம்
நவிலு வேஞ்சிறி தேயரோ. (5)

அனைய நங்கைய ரவனைச் சூழ்ந்துற
லலர்க்கண் வண்டுகள் சூழ்தலும்
தனிவி ளக்கினை விட்டில் சூழ்தலும்
தகைமை யாயவோர் காந்தத்தை
முனையிற் கூரிய விருப்பு வூசிகள்
முனைந்து சேரலும் போலுமால்
முனிவர் கூறே முயன்றிட் டாரேனில்
மொழியன் றார்செயல் மேன்மையோ. (6)

வேறு

மடநாண மொழித்திட்டார் மடவார் பல்லோர்
மற்றவற்றே டச்சமுமாங் கொழித்தார் பல்லோர்
விடுமேவற்றே டொருபயிர்ப்பும் நீத்தார் பல்லோர்
விளம்பவற்றே டருநிறையுந் தவிர்ந்தார் பல்லோர்

கெடுமிவற்றே ளெம்வாடி நின்றூர் பல்லோர்
கேசமவிழ்ந் திழிதலையு நோக்கார் பல்லோர்
தடமுலைக்கச் சிரிதலையு முணரார் பல்லோர்
தானைதளர்ந் திவேதையும் பலரோ ராரே. (7)

மேற்புகன்ற வகையனைத்து மொழித்த தன்றி
மெல்லியலார் பற்பலர்தம் மிடைதள் ளாடக்
காற்சிலம்புங் கைவளையும் பூணும் போக்கிக்
கதிரொளிசெய் மேகலையு மொழிந்த தாலே
சேற்கருங்கண் செவியளவ வுடைகைப் பற்றித்
தேரையொரு கைப்பற்றிப் பின்சென் றூரால்
ஏற்குநிதி யுடையவர்க்கே யிசைவ தோன்றை
யேழையர்கள் விரும்பியெழல் போலு மாதோ. (8)

இன்னணம்பின் தொடர்ந்தேகு மடவார் தம்மை
யேனென்னுன் கடைக்கணினும் பாரா னுக
என்னிவன்றன் சிறிதேனு நோக்கான் நம்மை
யெழின்மிக்கா னேனுமிவன் பேடி தானே
மன்வலிய வுளத்தவனே மதிக்கி லானே
வம்மின்னும் போவமிவ னிசைந்தா னேனும்
சின்னமொழி நமக்குண்டா மென்றே சம்பு
சீபுளிக்கு மென்றதைப்போற் புகன்று மீண்டார். (9)

இனையசெய லெழுமடவார் மற்றோர் தம்மி
லெம்பெருமான் முகங்கண்டார் முகமே கண்டார்
புனையுமெழிற் புயங்கண்டார் புயமே கண்டார்
பொற்புடைய கழல்கண்டார் கழலே கண்டார்
சினையொன்றை நோக்கியகண் சினைமற் றென்றிற்
செலவொட்டா துளமிழுத்துப் பிடித்த லாலே
தனிமறையின் முடிவின்னுங் காணு வன்னோன்
தனுமுழுது மெவர்காண வல்லார் மாதோ. (10)

அத்தகைய மாதரெறி யணிகள் தம்மை
யவர்முலைநின் றிழிசாந்த மூட வத்தை
மத்தகரி களின்மதநீ ரோடு மைந்தர்
மலைப்புயங்க ளூறுமாலைத் தேனும் போக்கச்

சத்தபரி மாத்தேரோன் மேற்கிற் சாய்ந்த
சமயத்தும் நடுப்பகலே யென்னத் தோன்றத்
தத்துபரி மிதிலையர்கோன் வேந்தர் வேந்தன்
தங்கியுள நகர்ப்புறத்தின் பொழிற்கண் சென்றான். (11)

தன்னுடைய சதுரங்க சேனை யென்னுஞ்
சமுத்திரங்க ளொருநான்கும் மன்னர் மன்னன்
பின்னிடலில் கயதுரக பதாதி யாய
பெரும்புறமாக் கடலகத்துட் கலந்த பின்னர்
மன்னவர்மன் னடிபணிந்தா ரிருவ ராய
மைந்தர்களு மவர்கடமை வெவ்வே றாகத்
தன்னகல முறத்தழுவி யுச்சி மோந்து
தசரதனு மிகமகிழ்ந்தாங் கிருந்தா னன்றோ. (12)

அன்னையரோ டருங்குருவைப் பணிந்து நின்றா
ரன்னவருந் தமைத்தழுவி மகிழ்ந்த பின்னர்
முன்னவன்றன் றிருவடியிற் பரதன் றானும்
மூவருக்கும் பின்வந்தோன் றானுந் தாழ்ந்தார்
பின்னர்வரும் பரதனடி யிலக்கு வப்பேர்ப்
பெருந்தகையும் பணிந்திட்டா னன்னோன் றன்னைத்
தன்னருமைத் திருத்தம்பி பணிந்தான் தம்மைத்
தானைகட்குத் தலைவர்களுந் தொழுதார் மன்னோ. (13)

சனகனுந்தன் மந்திரிக ளோடேம் போந்து
தசரதனை நோக்கியிரு கையுங் கூப்பிக்
கனகநகர் காத்தளித்தோய் சரண மென்னக்
காவலர்கோன் றானுமெதிர் வணக்கஞ் செய்து
பனகபூ டணன்றனுசை யுடையோ யுன்றன்
பதியினொடு நின்குடும்பம் பாங்கோ வென்னத்
தினகரன்றன் குலத்தோயுன் னருளா லெற்குச்
சிறிதளவுங் குறைவின்றாற் பாங்கே யென்றான். (14)

அன்னதன்பின் மலர்மாலை பலவுங் கொண்டாங்
கரையர்கோன் முதலாய பலர்க்கு மிட்டான்
இன்னடிசி லாதியவும் பலங்கள் யாவும்
யாவருக்கும் வழங்கியடைக் காயு மீய்ந்தான்

மன்னவர்கோன் றனைநோக்கி நங்கட் காய
மாளிகைக்காங் கெழுந்தருள வேண்டு மென்று
னன்னவனும் பெண்டிர்குரு மைந்த ரோடு
மணிகங்கள் பலவுமெழப் புறப்பட் டானால். (15)

சந்தம்.

சகத்திறத் தோருநூ றதிர்வெடி குண்டாற்
சகமோ டேழில்வானின்
அகத்தினர் வெருவ வடித்தலப் பாம்பாங்
கனைத்தும் வெருவினவால்
மிகத்திற வெடியுப் பதிற்செயும் பாண
விதத்தா லெழும்புதுமை
தகத்தக வெனவே வொளிமிகு மத்தாப்
பதினுந் தகைமைத்தால். (16)

தருப்பணக் காந்தக் கதிரொளித் தீபந்
தமிலா மொளிகளையே
பொருப்பெனுங் கொங்கை மகளிர்கள் மைந்தர்
புனைபூ ணொளியொழிக்கும்
நெருப்பெனுந் தீவோட் டிகளிலங் காய
நிகரில் லொளிகளையே
இருப்பெழுத் தோளார் படைகளின் காந்தி
யெழுந்தாங் கொழித்திடுமால். (17)

பலவகை யாய பறைகளி னொலியைப்
பழுதில் தொழிலமைந்த
சிலவகை மேய முரசினத் தொலியே
சிதைத்தாங் கொழித்திடுமால்
நலவகை நாத சுரமுத லியவா
நவில்பல் லியவொலியைக்
கலைவகை யேய சரளிகள் தமிலாங்
கனநல் லொலியொழிக்கும். (18)

வேறு சந்தம்.

இருதிற விரதப் படைகளுஞ் சிகிரி
யொருபது கோடியங் கெனலாமால்
இருதிறக் கரிநற் படைகளு மலைக
ளிருபது கோடியங் கெனலாமால்

இருதிறக் குதிரைப் படைகளுந் திரைக
ளேழுபது கோடியுண் டெனலாமால்
இருதிற மனிதப் படைகளு மறலி
யிருசத கோடியுண் டெனலாமால். (19)

இருதிறக் கவிகைக் கணங்களு மெழுத
லேழின்மதி யயுதம்வந் தெழல்போலும்
இருதிறக் கவரிக் கணங்களு மதிநின்
றெழும்பல கலைகளங் குறல்போலும்
இருதிறக் கொடியின் கணங்களு மரம்பை
யிலைகளோ ரயுதமங் கெழல்போலும்
இருதிற மகுட தோரணநற் றுணைக
ளேழிற்றுணித் திரைபல வெழல்போலும். (20)

இருதிற நடன மகளிர்க ளெழுந்தா
ரிமையவர் மகளிர்தங் கணம்போலும்
இருதிறக் கோடி வலவர்க ளெழுந்தா
ரேழுப்புய வசுரர்தங் கணம்போலும்
இருதிறத் தொழில்செய் மகளிரு மெழுந்தா
ரிறைக்குல மகளிர்தங் கணம்போலும்
இருதிறத் தொழில்செய் வயவர்க ளெழுந்தா
ரிறைக்குலப் புதல்வர்தங் கணம்போலும். (21)

இருதிற வரசர் பலரும்வந் தெழுந்தா
ரிமையவர் தமக்குறுந் தமர்போலும்
இருதிற வமைச்சர் பலருமங் கெழுந்தா
ரிமையவர்க் கமைச்சர்தங் கணம்போலும்
இருதிறப் புலவர் பலருமங் கெழுந்தா
ரேழில்குரு புகர்களும் பலர்போலும்
இருதிற நகரச் சனங்களுந் திரண்ட
விரும்புவி யனைத்துமங் கெழல்போலும். (22)

வேறு

இனையநற் காட்சி யோடு யாவருஞ் சூழ்ந்து போதத்
தனைநிக ரயோத்தி வேந்தன் தனயர்தம் பெண்டி ரோடும்
சனகன்மா நகரின் வீதி தாண்டிப்போற் சுவரின் மீதாங்
கினமணி குயிற்றி யோங்கு மிறையரண் மனைபோய்ச் சேர்ந்தான். (23)

சேர்ந்தபின் மனைவி மார்கள் திகழுந்தப் புறத்துட் புக்கார்
ஆர்ந்ததம் புதல்வ ரோடாங் கரையர்கோன் வசிட்ட ஞதித்
தேர்ந்தமா முனிவர் பாத சேவைசெய் தாசி பெற்றுத்
தீர்ந்தபின் மஞ்ச மேறித் திகழ்மணித் தவிசி லார்ந்தான். (24)

மைந்தரும் வெவ்வே ருய மணித்தவி சேறி ஞரால்
வந்திடும் வதிட்ட ஞதி மாமுனிக் கணங்க ளெல்லாஞ்
சந்தமா மாடந் தன்னிற் சனகனுற் றக்க வாறு
தந்திடுந் தவிசு தோறுந் தனித்தனி யமர்ந்திட் டாரால். (25)

கோங்கண மவந்தி சிந்து குந்தள மருணஞ் சோழஞ்
சிங்களங் கலிங்கங் கோல்லஞ் சேரலங் குடகம் பாண்டி
தெங்கணந் துளுவ மாதி தேயங்க ளெம்பா ஞன்கிற்
றங்கியா ளரச ரெல்லாந் தனித்தனி விடுதி சேர்ந்தார். (26)

சேனையாங் கடல்க ளெல்லாஞ் சேருதற் கிடம்போ தாதால்
ஆனமா நாட்டி னெல்லை யனைத்தினுஞ் சூழ்தல் மன்னர்
சானகிப் பகையாற் போனேர் சண்டைசெய் போருட்டாய்ச் சேனை
மானகர்ப் புறத்திற் கொண்டு வந்துறல் போலு மாலோ. (27)

ஆயவ ரனைவர் தாமு மங்கங்குச் சமைக்க லான
தூயறு சுவைகோ ளுண்டி சொல்கறி வகைக ளோடு
நேயமோ டனேக ரந்த நிசிதனி லளிக்க வுண்டு
காயடை வகையுங் கொண்டு கண்வளர்ந் திருந்தார் மன்னே. (28)

இராமனைச் சீதா ராம னெனச்செய வந்தோ ராய
தராபதி யாதி யாருஞ் சௌக்கிய மாக வுண்டு
பராமுக மாகத் தூங்கல் பழுதென்றுங் கெழுப்பு வான்போல்
சரோருக மலர்த்து கிற்போன் தண்கட லுதய மானன். (29)

கோசிகன் வசிட்டப் பேரோன் கோதமன் சுதனே யாதி
மாசிலா முனிவ ரேனை மன்னவர் பலரு மேவக்
கோசலத் திறைவன் தேவர் குருமுதற் பலரோ டேயும்
வாசவன் றனு நாண மணித்தவி சிருந்தான் மாதோ. (30)

பதினைந்தாவது எதிர்கோள் படலம் முற்றிற்று.
ஆகப்படலம் பதினைந்துக்கும் மொத்தப் பாசுரம் ~~600~~. 602.

## பதினொருவது நகரலங்காரப் படலம்.

மாதவர் தலைவ னான வசிட்டமா முனிவ னந்த
மேதகு ஞானி யாய மிதிலையர் கோனை நோக்கிப்
போதக முறைவா ளன்றிப் போன்றவ ரேவரு மில்லாச்
சீதையைக் கோணர்தி யென்று செப்பலு மகிழ்ந்தம் மன்னன். (1)

சேடியர் தம்மைக் கோண்டு சீதையைத் தருவி யென்ன
ஓடினன் சேவ கர்க்கு ளோருவன்போ யதனை யோத
நீடியா ராகி யாங்கே நேர்ந்தபல் சேடி மார்போய்
ஆடினர் மகிழ்ச்சி யாலே யணங்கினுக் காய்பாற் சோற்றூர். (2)

அன்னவள் போந்தா ளந்த வணங்கினுக் கணிக ளிட்டாள்
முன்னரே யுரைத்து ளேமால் மோய்குழ லணங்கின் சேவ்வி
சோன்னதே சோல்லுங் குற்றந் தோன்றினு மஞ்ச கில்லேம்
இன்னமுஞ் சிறிது சோல்வே மிணையிலா ளழகின் மேன்மை. (3)

மணிவகை யோன்ப தாலு மாற்றுயர் சேம்போன் னாலும்
பணுமோரு பதுமை தானும் பகரவட் கோவ்வா தாமால்
அணிகளுக் கணிதா னவா ளழகினுக் கழகா வாட்கேன்
பணிபல இட்டார் தீபம் படல்களால் மறைப்பார் போலும். (4)

மீதற மகளிர் போன்றூர் தமிற்பலர் சூழ்ந்து மேவப்
பீதக வுடைமேற் கட்டி பிடித்தோரு நால்வர் போத
மேதகு கவரி பீலி வீசியோர் நால்வர் போத
நாதபல் லியங்க ளார்ப்ப நளினைபோல் நடந்து சென்றூள். (5)

போலன்கருஞ் சுருள்கோள் நீண்ட பூங்குழற் பாரத் தோடு
சிலம்பெனத் திரண்டு விம்முஞ் சேழுமுலைப் பாரத் தாலும்
நலங்கிடை முறியு மேன்றே நங்கைபோற் காற்சி லம்பு
புலம்பிடக் கலக லேன்று புகுந்தன ளவைக்குள் மாதோ. (6)

புகுந்தபின் னவையின் தோற்றம் புரந்தர னவையோ டிந்தச்
சகஞ்சேயுங் கோலுவேய் போம்மைச் சபையையு மிந்த நாட்டின்
அகந்தோறு மேழுதும் போம்மை யணியையும் போன்ற தன்னுள்
மிகுந்தபே ரழகைக் கண்ட விழியிமைத் திடாமை யாலே. (7)

நங்கையும் வீதி போந்த நம்பியைக் கடைக்கண் தன்னல்
சேங்கையம் வளைதி ருத்தஞ் சேய்தல்போல் நோக்கித் தற்காம்
சங்கைதீர்ந் துளம்பூ ரித்தாள் தாமரைக் கண்ண னன்னுள்
அங்கநன் கருகில் நோக்கி யகமிக மகிழ்ந்திட் டானல். (8)

சனகமா வேந்தன் றன்னைத் தசரத மகிபன் கூவி
யுனதரு மகளை நோக்கி யுளமிக மகிழ்ந்திட் டேனல்
எனதொரு மகற்கே யேற்று ளினிமண் நாட்கொள் கேன்றன்
நனியுயர் காதி மைந்தன் நாளைக்கம் மணநா ளென்றான். (9)

கோதிலச் சனகன் பின்னர்க் கொற்றவர் கோனை நோக்கிச்
சீதையின் தங்கை மாராஞ் சிறுமிய ருள்ளார் மூவர்
மாதகுன் னேனை மைந்தர் மணத்தையு முடிப்பே னென்றான்
ஆதவன் குலத்தோன் நேர்ந்தா னனைவரு மகிழ்ந்து சென்றார். (10)

மனுவிட்சு வாகு வாதி மன்னர்க்கு மன்னர் போந்த
தினகரன் குலத்திற் றற்காஞ் சிறுமியர் புகுத லெண்ணி
மனமகிழ் சனகன் தற்கா மாநகர் கோலஞ் செய்க
கனகமா நகர்போ லென்று கனப்பறை யறைவித் தானல். (11)

வீதிகள் தோறு மேவும் விழுமிய மாடந் தோறும்
தீதில்நற் சிவந்த பட்டிற் றிருப்பந்த ரிட்டுச் சுற்றும்
தோதுற முத்துக் கோவைத் தொங்கல்விட் டாடித் தீபம்
ஆதவன் மதிபோ லிட்டாங் கார்த்தனர் கொடிநன் நான்கே. (12)

இத்தகை யகத்தின் முற்றத் திடும்பந்தற் கால்கள் நான்கில்
கொத்துடைக் கமுகும் வாழைக் குலையுடை மரமும் யாத்துத்
தொத்தல ரிலைகள் வேய்ந்த தோரண மிருபா லிட்டுச்
சித்திரக் கோலம் வீட்டுத் தெருத்தரை தோறு மிட்டார். (13)

பாரேனு நங்கை தன்பெண் பாவையின் மணத்திற் கென்றே
தாரணஞ் செய்து கொண்ட தகைமிகும் பணிகள் போலத்
தோரணம் பந்தர் மற்றுந் துலங்குமவ் வீதி தோறும்
காரேனக் கிளம்புந் தூபக் கால்களு நட்டார் மாதோ. (14)

வேறு

கோதில் மாடமே லிட்டார் கோடிபல
போதின் மாலைகள் போலுற வேய்ந்தனர்
ஈத லால்மணி மாலைக ளிட்டனர்
சோதி மாநகர் வீடுகள் தோறுமே. (15)

நீல மேனியன் நேரிலம் மாமணக்
கால முன்னிக் கலன்களி யாவையும்
சீல மெய்யினிற் சேர்த்தன ரூரில்வாழ்
கோல மைந்தருங் கோதையர் தாமுமே. (16)

ஆடு வார்பல ரானந்தத் தாலவண்
பாடு வார்பலர் பந்தயஞ் சொல்லியாங்
கோடு வார்பல ரோடுமெம் மைந்தன்ரத்
தேடு வார்கள் திரும்புகிற் பார்பலர். (17)

கொப்பித் தட்டிக்கை கோத்தவ ளாடுவார்
அப்பில் வாசஞ்சேர்த் தாடிவெண் முத்தமுங்
துப்பும் வீதியிற் றூவிக்கற் கண்டுடன்
அப்ப முக்கனி யாங்களிப் பார்பெண்டிர். (18)

நகரக் கோலமும் நங்கையர் மைந்தர்தம்
நிகரில் கோலமும் நேர்ந்த செயலையும்
புகன்றே மேல்மணப் பந்தர் பொலிவையும்
முகிலன் ஞன்மணப் பேச்சும் மொழிகுவாம். (19)

*பதினாறாவது நகரலங்காரப் படலம் முற்றிற்று.*

ஆகப்படலம் பதி~~னாறு~~ ஏழு க்கும் மொத்தப் பாசுரம் ~~619~~. 621.

---

## *பதினேழாவது திருமணப் படலம்.*

அகிலமே யிஃதேன் ரேத வலகிலா தகன்று நீண்டு
முகிற்குல மெல்லா மீதே மொய்த்திட வானி லோங்கி
நிகரிலாப் பணிகள் மேவி நேர்த்திமிக் குடைய தாய
வகமொன்றிற் பச்சைப் பந்த ரமைத்தன ரதனைத் தாங்கும். (1)

சந்தனத் தம்பங் கட்குத் தனிப்பட்டி னுறைக ளிட்டு
விந்தைமேற் றட்டுக் கெல்லா மிளிர்பிதாம் பரங்கள் தைத்துச்
சுந்தர மணிக டம்மாற் சுற்றிலுஞ் சாலர் வேய்ந்து
கந்தியோ டரம்பை மற்றுங் கட்டினர் தம்பந் தோறும். (2)

மாடியுள் வாசல் நாப்பண் மண்டபம் மணியி லாக்கி
ஆடகம் மணியி லாய வலகில்பல் பதுமை வேய்ந்து
ஈடிலா வயிரம் பச்சை யிவற்றிஞ லிலைதா ரோடாங்
கேடுறு மரம்பை கந்தி யியற்றித்தூண் நான்கும் வேய்ந்தார். (3)

விந்தையா மணவீட் டிற்கே விழியெச்சில் தவிர்க்க வேண்டி
யந்தியாம் நங்கை சுற்ற வாலங்கொண் டெழுந்தாற் போல
முந்திசெவ் வானந் தோன்ற மூடுங்கார்த் திரையே யென்னப்
பிந்தியவ் விரவேன் றேதும் பேதையும் வந்தாள் மன்னே. (4)

திரையினிற் பிறந்திட் டாள்தன் திருமண வகமுன் காண
வருபவன் போலே யந்த மதிவந்தா னிருளேன் றேதுந்
திரைகண்டு தனதீ ரெட்டுத் தெள்ளிய கலைக ளாய
கரங்களால் விலக்கிக் கண்டு காட்டினான் யார்க்கு மாதோ (5)

சேருதன் குலப்பிற் பேரன் திருமண முடிக்க வேண்டி
வேரியங் கமலம் பூப்ப மேதினி யங்கண் பூப்ப
ஓரேழு பரிமா பூண்ட வுன்னதத் தேர்மே லேறிச்
சூரியன் முதலில் வந்து தோன்றின னங்கே மாதோ. (6)

அந்தரத் துயர்ந்த மாடி யமர்ந்துறும் வேந்தர் வேந்தன்
இந்திர னாதி தேவ ரிம்பராள் மன்னர் சூழத்
தந்திமே லேகி யந்தத் தனிமண வகத்தின் கண்ணே
யிந்திரற் கிந்தி ரன்போல் மணித்தவி சிருந்தான் பின்னர். (7)

இந்திரன் முதலா வுள்ள விமையவ ரெல்லா மோர்சார்
கந்தரு வோர்க ளாதி கணிப்பிலாக் கணங்க ளோர்சார்
சுந்தரத் தேவ மாதர் தொகுதிக ளெல்லா மோர்சார்
அந்தரத் தரம்பை மார்க ளனைவரு மோர்சா ராங்கே. (8)

சாரண ரியக்க ரோர்சார் தனித்தெய்வ முனிவ ரோர்சார்
சீரிய முனிவ ரோர்சார் திருமறை யாள ரோர்சார்
பாரிய மகிப ரோர்சார் பார்சிறி தாள்வோ ரோர்சார்
கூரிய இப்ப ரோர்சார் கொழுப்படை யாள ரோர்சார். (9)

செந்துவர் வாயா ரோர்சார் சேடிய ரெல்லா மோர்சார்
மந்திரி மார்க ளோர்சார் மாக்கவி வாண ரோர்சார்
பைந்தமிழ் வல்லோ ரோர்சார் பல்கலை வல்லோ ரோர்சார்
மைந்துறும் வீர ரோர்சார் மல்லர்க ளோர்சா ருற்றார். (10)

பாருளா ரெவரு மிந்தப் படியந்த மணவீ டேய
வாரணப் படைக ளோர்சார் வாம்பரிப் படைக ளோர்சார்
தேரணிப் படைக ளோர்சார் தெறுபடை யாட்க ளோர்சார்
தோரண வீதி யெங்குந் துதைந்துற வவர்கள் போந்த. (11)

வண்டிக ளெல்லா மோர்சார் வாகன வகைக ளோர்சார்
பண்டங்காய் வண்டி யோர்சார் பழவகை வண்டி யோர்சார்
தின்டயிர் வண்டி யோர்சார் தீம்பய வண்டி யோர்சார்
எண்டிசை யரிசி வண்டிக் கிடம்நகர்ப் புறத்தில் மாதோ. (12)

மற்றும்பல் பொருள்கொண் டேய்ந்த வண்டிகள் தாமும் மேவ
வெற்றிட மின்மை யாலே வெளிப்புறத் தவற்றைச் சேர்த்தார்
சொற்றநாற் படைக ளோடு சுற்றமும் மற்றுஞ் சூழக்
கற்றைவார் சடையோன் வேதன் ககனமீ திருந்து நோக்க. (13)

இந்திர நீலத் தாய விணையிலா ணுருவு மொவ்வான்
எந்திர மணித்தேர் மீதாங் கிளையவர் கவரி வீச
மைந்துறும் பரதன் வேய்ந்த வாம்பரித் தேர்க டாவச்
செந்திரு மாலே யென்னத் திருமண வகம்போய்ச் சேர்ந்தான். (14)

அணிகளுக் கணிதா னுவா ளவிர்மணிச் சிவிகை யேறி
மணிப்பிடிக் கவரி வீச மயில்வட்டச் சிவிறி வீச
இணையில்தாய் சிலதி மாரோ டேந்திழை மார்கள் சூழ
மணஞ்செய வேய்ந்த மாட மலர்மக ளெனப்போய்ச் சேர்ந்தாள். (15)

சீதரன், முனிவர் தந்தை தேவரை வணங்கி யன்னோர்
ஓதுபல் லாசி யேற்றுங் கொளிமண வறைக்கண் ணின்றான்
சீதையும் வசிட்டன் தேவி சிறந்ததாய் மாமி மார்தம்
பாதமே பணிந்தாங் கன்னான் பாங்கர்ப்போய் நின்றாள் மாதோ. (16)

சனகமா வேந்த னந்தச் சதுரன்கை நீர்வார்த் தீந்தவ்
வனகையை யிவளைக் கூடி யரியலர் மகள்போல் வாழ்க
கனகம்பா ரனைத்தும் பெற்றுக் காதலர் தம்மை யீன்று
தினகரன் மதிதம் மாயுட் டினம்வரை யுலகாள் கென்றான். (17)

உடலோடாங் குயிர்சேர்ந் தென்ன வொப்பிலாள் மலர்க்கை கோத்தாங்
கடல்வெற்றிச் சங்க மார்ப்ப வலகில்பல் லியங்க ளார்ப்பக்
கடவுளர் முனிவ ராசி கழன்றலர் தூவிப் பொசங்கத்
தடமண வறையைச் சுற்றித் தனித்தவி சவளோ டார்ந்தான். (18)

வேறு

தருப்பைநாற் புறமுறத் தண்டேலம் பெய்துமேல்
விருப்போடு கலசமும் வேய்ந்தல ரிட்டொளிக்
கருப்புர வார்த்தியுங் காட்டின னேத்தோடு
நெருப்புறுஞ் சமித்தினில் நெய்விட்டான் மாமுனி. (19)

ஒன்பது கோள்கட்கு மோமங்கள் செய்தனன்
தென்போடங் கெரிவலஞ் செய்தபி னெம்பிரான்
மன்பதை யோடண்டர் வகைகட்குங் காப்பென
அன்போடு தாலிநன் கார்த்தனன் நங்கைக்கே. (20)

பொருந்திநின் றெரியினிற் பொரிசொரிந் திட்டபின்
அருந்ததி பார்த்தணங் கம்மிமேற் கால்வைத்தா
ளிருந்திடு மிருவர்முன் பிட்டனர் தண்டேல
மருந்தவ முனிவரோ டண்டர்மற் றேருமே. (21)

மணப்பரி சீந்தனர் வதுவரர் தங்கட்கே
கணிப்பில்பல் லணிகள்பொற் காசுகள் தூசுகள்
மணிப்போதி பதுமைகள் மற்றுள யாவுமே
பணைப்புய வேந்தரும் பண்ணவர் தாமுமே. (22)

அந்தண ராதியோர்க் கலகில்பொன் தந்துபின்
பிந்திர ஞதிய ரியக்கர்மற் றோர்க்குமே
சந்தனந் தம்பலந் தண்ணலர் மாலைகள்
வந்தனஞ் சொல்லிமன் வழங்குவித் தானரோ. (23)

இசைமிகு வதுவர ரிருவர்தந் தேசேலா
மசைகில ரிமைத்தில ராய்நனி நோக்கியேண்
டிசையுறு மரசருந் தேவர்மற் றேருமே
பசியிலர் பாணியும் பருகில ராங்குற்றார். (24)

பூமணி மண்டபம் புகுமண மக்கள்தாஞ்
சாமள மேனியன் தாமரை யாளொடும்
மாமணி மண்டப மேவுதல் மானுமாங்
காமவை யோரேலா மம்முத்தர் நித்தரே. (25)

மங்களம் பாடினர் மங்கையர் பற்பலர்
துங்கநல் லாலமுஞ் சுற்றினர் மாலுக்கும்
பங்கய வல்லிக்கும் பல்லாண்டு பாடின
ரங்குறு முனிவரோ டந்தணர் யாருமே. (26)

முன்னர்க்கை விளக்கொடு முளையுறும் பாலிகை
கன்னியர் கொண்டெழக் காரிகை யோடவன்
மன்னுநன் மணவறை வலம்வந்தான் காரவண்
மின்னொடும் புகுந்தென விடுதியுள் மேவினன். (27)

வாச்சியத் திசையொலி மாதவர் வாழ்த்தொலி
காய்ச்சிய பறையொலி காவலர் பேச்சொலி
ஓச்சிய முரசொலி யுலகின ரார்ப்பொலி
யாய்ச்சியர் பாட்டொலி யனைத்தும்விண் ணோங்கிய. (28)

தம்பியர் மூவர்க்குந் தகுமுறை முன்சொன்ன
சம்பிர மத்தோடே சானகிப் பின்வந்த
கொம்பனுர் தங்களைக் கொடுத்தனன் தீமுன்ன
ரெம்பெரு மானுக்கோ ரேற்றப்பெண் தந்தவன். (29)

வேறு

ஆண்டொரு பரதன் சேட னவன்றனக் கிளையோ னந்த
மீண்டவி யூர்மி ளைப்பேர் மான்சுத கீர்த்தி தம்மை
மாண்டகு மலர்க்கை பற்றி மணவறை வலமாய் வந்து
வேண்டரும் விடுதி சேர்ந்தார் விளம்புமம் முறையே மாதோ. (30)

சீதன மாக வந்தச் சீதையோ டொருமூ வர்க்குங்
கோதனம் பூமி மற்றுங் கொடுத்தன னலகி லாமல்
மேதகு மருகர் கட்கு மிளிர்பல வணிக ளோடு
பீதக வாடை மற்றும் பெருந்தகைச் சனகன் தந்தான். (31)

சொரிந்திட்ட தானப் பொன்னின் தொகைக்கள வில்லை யார்க்கும்
பரிந்தெட்டுத் திசையு மாங்கே பகுத்திட்ட விடுதி தோறும்
விருந்திட்ட மேன்மை யெம்மால் விளம்புதற் காகா யாவும்
இரந்திட்டோர்க் கீந்த வெல்லாம் யார்சொல்ல வல்லார் மாதோ. (32)

திருமண முடிந்த பின்னர்ச் சீதையு மிராமன் றனு
மருமைநற் றம்பி மாரு மவரவர் தேவி மாரு
மிருமையே யன்றி யேழேழ் பிறவிக்கு முரிய ராகிப்
பெருமகிழ் வோடு நன்கு பிறங்கியாங் கிருந்தார் சின்னுள். (33)

பாரின ருலகாள் மன்னர் பண்ணவர் முனிவர் மற்றோர்
யாருந்தம் மிருக்கை சேர்ந்தா ரிணையிலாக் காதி மைந்தன்
மேருவை நாடிச் சென்றான் வேந்தர்கோன் றனும் பின்னர்க்
கோரிய தாய சேதி கூறுவேஞ் சிறிது மன்னே. (34)

*பதினேழாவது திருமணப் படலம் முற்றிற்று.*

ஆகப்படலம் பதினேழுக்கும் மொத்தப் பாசுரம் 655.

---

## பதினெட்டாவது பரசிராமப் படலம்.

மன்னர் மன்னன்றன் மாநகர்க் கெழலெனுஞ் செய்தி
முன்னர்ச் சம்பந்தி யாமவன் றன்னிட மொழிந்து
பின்னர்த் தேவியர் பிள்ளைக ளோடவர் பெண்டிர்
பொன்னி னற்பல்லக் கிரதமீ தெழுகெனப் புகன்றான். (1)

அன்ன வாறவர் போதர விருதுக ளனைத்தும்
முன்ன ரேகிட நாற்படை சூழ்தர முகிலேய்
மின்னி னுமணித் தேர்மிசை யேறினன் மிதிலை
யென்னு மாநகர் மதிற்கடந் தேகின னிறையே. (2)

காகம் விச்சுளி யாதிய இடமுறக் கருடன்
வேக மாயவண் வலமுற நோக்கிய வன்றே
னுகுஞ் சாகுன மறிந்துரைப் போன்றனை வினவ
வாகை யாம்பின்னர் வருமுன்னர்த் தீதென்று னன்றேன். (3)

இனைய சொல்லுணர்ந் தேவர்கட்கு நாயகன் பின்னு
மனைவ ரோமேங் கேகுமுன் னஞ்சடை முடிவெங்
கனலின் மாச்சிகை போலுறப் புரத்தொடு கண்ணி
லனலின் வெம்பொறி வாய்ப்புகை யும்புவிப் பரவ. (4)

மழுவிற் கைக்கொடங் கொருவனம் மகிபதி நான்கு
மழியுங் காலத்தாங் கார்முகி லிடியென வார்த்து
விழிமுன் றுள்ளவு னேவென விபுதரு மேங்க
வழியை யேற்றெம னையன்றேர் முன்னரே வந்தான். (5)

ஐய னின்னவ னுர்கோலென் றெண்ணுமுன் னவனே
பையல் நீசோத்தை வில்லிறுத் தேயிந்தப் படிகாண்
தையல் தோள்மணந் தாயிது பெருஞ்சமர்த் தாமோ
மையி லித்தனு வளைத்திடிற் காண்பெனின் வலியே. (6)

என்று கூறிமுன் நின்குலத் தோர்தமை யெல்லாஞ்
சென்று கொன்றுளன் தினவுற லாலென்றன் தோள்க
ளின்று வந்தன னிற்றவில் லோதைகேட் டுனையுங்
கொன்று விட்டெழு வேனெனக் கூறினன் கொடியான். (7)

ஓதுஞ் சொல்லுணர்ந் தெம்பிரான் புன்னகை யுற்றுன்
தாது மாறினன் மன்னர்மன் முனிவன்கண் சார்ந்தாங்
கேது மோர்ந்திலன் தீதொன்றுஞ் செய்தில னிவன்பால்
தீது செய்வதுன் திருவுளக் கேற்குமோ வென்றே. (8)

படியில் நெற்றியும் படப்பணிந் தெழுந்திந்தப் பால
னடியேன் செயல னுனதருந் திருமக னுவான்
மடியி லென்னுட னனைவரு மடிவதற் காமால்
விடுதி நின்சின மென்றன னெதனையுங் கேளான். (9)

பரசி ராமப்பேர் கொளுமந்தப் படுகொலை யாளன்
கரனி லாஞ்சிலைச் சரிதையுங் கருமுகிற் கானை
உரனி லிற்றவச் சிலைவருஞ் சரிதையு மொருங்கே
திரமொ டோதிடத் தொடங்கினன் யாவர்க்குந் தெரிய. (10)

வேறு

முனிவர னொருவன் செய்த முழுத்தவப் பயனு லந்தப்
பனிவரை நாப்பண் மொய்கொள் பணையொன்று முளைத்து முற்றக்
கனிவொடங் கதனால் விண்ணோய் கடவுளர் மயனைக் கொண்டு
முனைதருஞ் சிலையி ரண்டு முடித்தன ரவற்றி லொன்றை. (11)

மலர்மகள் கொழுன னேற்றான் மற்றொன்றை யரனுங் கேற்று
னலரயன் றன்பா லந்த வண்டர்க ளெல்லா மேகி
வலரேவ ரிருவர் தம்மில் வலியவில் யாவ தென்னப்
புலவிர்நீர் நேரிற் கண்டு கொள்கெனுப் புண்ட ரீகன். (12)

மூட்டினு னுபாய மாக முகுந்தற்கு மரற்குஞ் சண்டை
பூட்டினுர் சிலைக்கண் நாணைப் புவனமீ ரேழு மேங்கக்
காட்டினுர் தங்கள் வன்மை கனயுத்த மியற்றுங் காலை
நாட்டமூன் றுடையான் வில்லே நறுக்கென்றங் கிரியக் கண்டு. (13)

கடுத்துளம் வாட்டத் தோடு கதித்தெழுஞ் சம்பு வோடு
தடித்துறு முகிலின் மேனித் தம்பிரான் றனையுந் தேவர்
விடுத்திடும் போரை யென்றே வேண்டலு மந்த வில்லைக்
கொடுத்தனன் வலாரி தன்பால் கோதிலவ் வரன்சென் றுனுல். (14)

பின்னரே யவ்வி லந்தப் பிஞ்ஞக னேற்று முற்கால்
மன்னிய மிதிலை வேந்தன் றன்னிடம் வைத்தான் வென்றி
யென்னருந் தேவன் வில்லை யிருசிகன் றன்பா லீந்தா
னன்னவ னேந்தைக் கீந்தா னவனெனக் கீந்தான் மன்னே. (15)

அந்தவில் லீது கண்டா யற்றவில் லொடித்த நீயோர்
மைந்துறும் வீர னுகாய் வளைப்பைகொல் லிதனை யென்னத்
தந்திடு பார்ப்போ மென்று தம்பிரான் கேட்கத் தந்தான்
செந்திரு மாலின் கையிற் சிலையையம் முனிவன் மாதோ. (15)

வாங்கியோர் நொடிக்குள் வில்லை வளைத்துநாண் பூட்டி யம்பை
யாங்கதிற் றொடுத்துச் சொல்வா னம்பிது வீணு காதால்
தீங்குசெய் கிற்பா யேனுந் திருமறை யாள னீயால்
பாங்கல நின்னைக் கோறல் பகரிதற் கிலக்கென் றுனல். (17)

முன்னர்யா னழித்த மன்னர் முதுக்குலத் தோன்ற லேனும்
பன்னரு மறையுங் காணுப் பரமனீ யென்ப தோர்ந்தேன்
பின்னையுஞ் சொல்வ தென்னே பிழையினெற் கபரா தம்மா
வென்னருந் தவங்க ளெல்லா மிதற்கிலக் காகு கென்றுன். (18)

கருமுகி லனையா னிட்ட கணைக்கிலக் காகு கென்ற
வுரைமுடி வாகா முன்ன ரோடியவ் வம்பன் றுன்றன்
னருந்தவ மெல்லாங் கொண்ட தாண்மைமற் றெல்லாங் குன்றி
யிருந்திடம் முனிவ னந்த விராகவன் றன்னை நோக்கி. (19)

வேறு

பொன்னிநன் ஞயக புவனங்க ளீன்றவ
மன்னர்தம் மன்னவர் மாக்குலத் தோன்றல்நீ
முன்னிய யாவையு முடிவுபெற் றோங்குக
வென்னையு மாட்கொள்க வென்றுரைத் தேகினன். (20)

பண்ணவர் யாவரும் பனிமலர் தூவினர்
மண்ணக மேவினர் வாழ்த்தினர் தாழ்ந்தனர்
வண்ணவவ் வில்லினை வருணன்கை யீந்தன
னெண்ணிய போதென்கைக் கீந்திடென் றண்ணலே. (21)

அன்னவர் சென்றபி னண்ணலுஞ் சோகங்கொள்
தன்னருந் தந்தைக்கண் சார்ந்தனன் தாழ்ந்தன
னின்னல்தந் திட்டவ னேகினன் மாழ்கியே
யென்னலு மன்னர்மன் னெழுந்தன னுவகையால். (22)

இன்னலென் சாகரத் திருங்கரை யேறினன்
பன்னரு மகிழ்ச்சியாம் பரவையுள் மூழ்கினன்
தன்னருஞ் சேனையுஞ் சகலரும் பின்னெழ
மன்னர்மன் றன்னெழின் மாநகர் நோக்கியே. (23)

சென்றனன் றன்னெழிற் றிருநகர் சேர்ந்தனன்
வென்றிகொள் மைந்தரு மெல்லிய லாரொடு
மன்றிலு மகன்றிலு மாமென வாழ்ந்துளார்
சென்றபின் னாள்சில செய்திக ளோதுவாம். (24)

வாகைநற் பரதனை வரச்சொலேன் றார்க்கேனுங்
கேகையன் திருமுகங் கிடைத்தபின் மன்னர்மன்
னேகென வன்னவ னிளையநற் றம்பியோ
டேகின னலந்தக் கேகய நாட்டிற்கே. (25)

*பதினெட்டாவது பரசிராமப் படலம் முற்றிற்று.*

ஆகப்படலம் பதினெட்டுக்கும் மொத்தப் பாசுரம் 680.

*பாலகாண்டம் முற்றிற்று.*

---

இது வெற்றிடமாயிருந்ததால் இதை நிறைக்கும்பொருட்டே இந்நூலாசிரியரா லியற்றப் பெற்றுள்ள பல தனிப் பாடல்களில் இரண்டு பாடல்கள் இங்குப் பதிப்பிக்கப் பெற்றன.

இங்குளா னங்கிலா னென்பதற் கிடமின்றி
யெங்கெங்கு மேவி யந்த
இரணியன் றன்கேட்பச் சுதனெங்கு முளனென்ன
விருந்தூணில் நின்ற னேவன்
பொங்கடி நோந்தாதி மூலமென் றேமுனம்
பொதுவில்கூப் பிட்ட போதே
புகலுமப் பேர்க்குரிய வொருவனு னேயென்று
போந்தளித் திட்டா னேவன்
பங்கமா யுலகெலா மழிகின்ற நாளினும்
பழுதின்றி யழகோன் றிநற்
பால றய்ப் பெருவெள்ளத் தாலிலையின் மீதிலே
பள்ளிகொண் டருள்வா னேவன்
அங்கயன் றன்னொடே யகிலமு முன்போல
வலருந்தி பூப்பா னேவன்
அவனைநம் மிதயமலர் மேல்வைத்து நித்தமு
மஞ்சலிகள் செய்தேத் துவாம்.

மெய்த்தவர் விபுதர் தூய மேன்மலர்த் தவிசோன் கங்கை
மத்தகன் வணங்கி யேத்து மழைமுகி லுரத்தில் மின்போல்
நித்தமும் பொலிகிற் பானை நிமலையைக் கமலை தன்னைச்
சித்தமென் மலரில் நாவிற் செழித்திட வழுத்தல் செய்வாம்.

மங்களம் ! மங்களம் ! மங்களம்!

ஸ்ரீ

இராமாயண சூடாமணிப் பால காண்டத்தின்

# அருங்கவியுரையும், அரும்பதவுரை முதலிய வுரைகளும்

இவை, சென்னைப் பச்சையப்பன் காலேஜ் உயர்தரக் கல்விச்சாலையின் மாஜித் தலைமைத் தமிழாசிரியரும், திருவேங்கடப் பதிற்றுப்பத்தந்தாதி வாக்கிய இலக்கண சிந்தாமணி முதலிய பல நூற்களின் ஆசிரியரும், பல ஆன்றோர் நூற்களின் உரையாசிரியருமாகிய

**கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களால் இயற்றப்பெற்றன.**

## காப்புச் செய்யுட்கள்

*பாசுர இலக்கம்*

1. 'அயோத்தி உதித்தருள் முகில் அம் காதை யான் தொகுத்து முடிக்க நற்சுதன் காப்பு' என இயைக்க. அகிலம்—உலகத்து உயிர்களை யெல்லாம், காக்க — (அறநெறியில் நிறுவிக்) காப்பதன் பொருட்டு, அயோத்தி(யில்) உதித்தருள்—, முகில் அம் காதை - மேகம்போன்ற கருநிறத் தினையுடைய இராமபிரானுடைய சரித்திரத்தைக்கொண்ட காவியத்தை, தொகுத்து முடித்திட - (வான்மீக முனிவரையும், கம்பநாட்டாழ்வாரையும் போல விரிவாகவன்றிச்) சுருக்கிப்பாடி முடித்தற்கு, துகில் ஆடு அகம்-துகிற் கொடிகள் (எப்பொழுதும்) ஆடாநிற்கும் மாளிகைகளையுடைய, தொல் குருகூர் - பழைமையாகிய திருக்குருகூரின்கண் எழுந்தருளிய, நங்கை - உடைய நங்கையாரின், நகிலம் காணகில் - தனங்களைப்பற்றிப் பாலைப் பருகி அறியாத, நற்சுதன் - சிறந்த மைந்தராகிய நம்மாழ்வார், காப்பு - (இந்நூல் இடையூறின்றி இனிது முடிதற்குக்) காவலாவார் (எ-று.)

அங்கு, அரோ என்பன அசைகள். ஆழ்வார் அவதரித்த பொழுதே உலகமாயையை விளைக்கும் சடம் என்னும் வாயுவை வென்று யோகத்தில் எழுந்தருளியவராதலின், அவரை (நகிலம் காணகில் சுதன்) என்றார். ஆழ்வார் தாம் அவதரித்த குடியையும் உலகையும் வாழ்வித்தவராதலின், அவரை நற்சுதன் என்றார். ஆழ்வார் சடம் என்னும் வாயுவை வென்றவராதலின், அவருக்குச் சடகோபர் என்னும் பெயருமுண்டாயிற்று. முகில் என்பது உவமையாகுபெயர். துகில் என்பது ஒருபுடைக் காரணவாகு பெயராய்த் துகிற்கொடிகளை உணர்த்திற்று.

பாசுர இலக்கம்

3. பணம் வாள் அரா அரையன் - படத்தினையும் ஒளியினையும் உடையவனும் பாம்புகளுக்கு அரசனுமாகிய ஆதிசேடன், அங்கிசம் - கூறு (அமிசம்), இதர சமய கோடரம் - இதர சமயங்களாகிய மரங்கள்.

4. மானம் - மேன்மை, கலியன் - சிறுகலியன் ராமாநுஜ ஜீயர் என்பவர்; (வானமாமலையில் இருபத்தைந்தாம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஜீயர்; இந்நூலாசிரியருடைய ஆசாரியர்). நான்கொடு ஒன்று - பஞ்ச சம்ஸ்காரம்.

9. ஏழிலே ஒன்றைச் சென்னி ஏற்றவன் - ஏழு புண்ணிய நதிகளிலே ஒன்றாகிய கங்கையாற்றைச் சடையிலே தரித்த சிவபிரானுடைய, கூறது ஆவான் - கூறாய் (அமிசமாகி) இருப்பவரும், ஏழிலே ஒன்றில் வாழ்வார் - மேல் ஏழு உலகங்களிலே ஒன்றாகிய சுவர்க்கத்தில் வாழும் இந்திரன் முதலிய தேவர்கள், இருக்கை பெற்று - முன்போலத் தங்கள் பதவியைப் பெற்று, உய்தற்கு என்று - வாழ்தற்காக, ஏழிலே ஒன்றில் வந்தான் - ஏழு புண்ணிய நகரங்களில் ஒன்றாகிய அயோத்தியில் அவதரித்தருளிய இராமபிரானுடைய (பெரிய பெருமாளுடைய), இணை அடிக்கு-இரண்டு திருவடிகளுக்கு, அன்பனுவான்-அன்பராய் இருப்பவரும், ஏழிலே ஒன்றின் தீவில் - ஏழு சமுத்திரங்களில் ஒன்றாகிய இலவண சமுத்திரத்தின் (உப்புக்கடலின்) தீவாகிய இலங்கையில், இருந்தாள் கண்டு உரைத்தான் - (மறைத்து வைக்கப்பட்டு) இருந்த சீதாபிராட்டியைத் தேடிக் கண்டு ஸ்ரீராமபிரான் கூறிய செய்தியை அப்பிராட்டிக்குக் கூறியவரும், அப்பிராட்டி கூறிய செய்தியினை இராமபிரானிடம் வந்து கூறியவருமாகிய ஆஞ்சநேயர், (காப்பு) எ-று.

'இருந்தாள் கண்டுரைத்தான்' என்பதை இரட்டுற மொழிதலென்னுமுத்தியால் இரு பொருள்பட வைத்தார்.

11. ஆனது - பசு அல்லது எருது, ஓர் இடத்தில் உணவை அருந்திடாது என்பர்-ஓரிடத்திலே தங்கிப் புல்லை மேயாது என்று சொல்லுவார்கள், நான் அதே போல - நான் அதனையே போல, போனதே போக்கதாக - மனம் சென்ற வழியினையே வழியாகக் கொண்டு, நாவலர் பலர்பால் புகுந்து ஏகி - பல புலவர்களிடம் விரைந்து சென்று, கல்வி இறை இறை கேட்டுள்ளேன் - நூற்களைச் சிறிது சிறிது கேட்டிருக்கின்றேன், ஆனதால்-இங்ஙனம் பலர்பால் யான் கல்வி கற்றிருத்தலின், அவர்கள் பாத அலர் -(அங்ஙனம் யான் கற்க மனம் இயைந்து அருள் புரிந்தவர்களாகிய) அப்புலவர்கள் அனைவருடைய திருவடிகளாகிய மலர்களையும், என் உளம் கொள்வேன் - எனது மனத்தின்கண் கொள்வேன் (தியானிப்பேன்) (எ-று.)

'ஆனது' என்பதிலுள்ள 'அது' என்பது பகுதிப்பொருள் விகுதி.

## தற்சிறப்புப்பாயிரம்

பாசுர இலக்கம்:

1. விற்பனம் - புலமை, விழு - மேன்மையாகிய, எற்றுக்கு என்னில் - எதற்காக என்றால்.

3. வேங்கை - புலி, மூங்கையான் - ஊமையானவன்.

4. பீதக ஆடை - பொன் ஆடை (பீதாம்பரம்), பெரும்பணி-மேன்மையாகிய ஆபரணங்கள்.

5. ஓங்கும் பைங்கூழ் - உயர்ந்து வளர்ந்துள்ள பயிர், கதிர் - நெற்கதிர், கால்வரை - அடிவரையிலும், துலை - தராசு, ஆங்கு - (அவற்றைப்) போல.

8. ஆம் சுதன் - உரிய பிள்ளை.

9. மால் விந்தவரை - பெரிய விந்தியம் என்னு மலை, பரல் - பருக்கைக் கற்கள்.

10. (ஈற்றடியின் உரை) மட்டில்லாத மாதவத்தோரும் மற்ற யாவரும் மதிக்கும்படி வல்லமையுற்றவர்களுமாகிய வசிஷ்டர், போதாயநர், வான்மீகர் என்னும் மூவர்.

11. இவர்கள் மூவரும் வேதமே என்று சொல்லும்படி இராமகாதையை அமைத்து மூன்று நூற்களைச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் செய்த அம்மூன்று நூற்களுள் ஆதி காவியம் என்று சொல்லப்படும் வான்மீகி ராமாயணம் மலைபோல யாவரும் அறியும்படி விளங்கவும், 'இப்பூமியில் இதற்கு ஒப்பானதும் உயர்ந்ததுமாகிய காவியம் யாதுளது!' என்று கற்றோர் யாவரும் கூறும்படி கம்பநாட்டாழ்வார் விளக்கிச் செய்த இராமாயணம் தமிழில் இருக்கவும் (எ-று.)

12. (முதலடி இரண்டாம் அடிகளின் உரை) நீயும் செந்தமிழ் நூற்களை நன்கு கற்று வல்லவன் போன்று செருக்குடன் இந்த இராமகாதையைச் சுருக்கமாகப் பாடத்துணிந்தது எக்காரணங்களால் என்று கேட்டால் (எ-று)

17. மேன்மையை உடைய வான்மீகி முனிவரும் கம்பநாட்டாழ்வாரும் அருளிச்செய்த நூற்களாகிய ஆறுகளிலும், புண்ணியங்களைப் பயக்கும் சாத்துவிக புராணங்களாகிய ஆறுகளிலும், ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் அருளிச்செய்த இயற்றமிழ் வேதமாகிய ஆறுகளிலும் பொருந்திய பொருள்களாகிய நீர், என் நாவாகிய குழையின் வழியாக (எ-று.)

இஃது அடுத்த செய்யுளின் முதலடியில் முதலிலுள்ள 'போதராலாயிற்று' என்பதனோடு முடிகின்றது. போதராலாயிற்று—வந்தது.

பாசுர இலக்கம்

3. பணம் வாள் அரா அரையன் - படத்தினையும் ஒளியினையும் உடைய வனும் பாம்புகளுக்கு அரசனுமாகிய ஆதிசேடன், அங்கிசம் - கூறு (அமிசம்), இதர சமய கோடரம் - இதர சமயங்களாகிய மரங்கள்.

4. மானம் - மேன்மை, கலியன் - சிறுகலியன் ராமாநுஜ ஜீயர் என்பவர்; (வானமாமலையில் இருபத்தைந்தாம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஜீயர்; இந்நூலாசிரியருடைய ஆசாரியர்). நான்கொடு ஒன்று - பஞ்ச சம்ஸ்காரம்.

9. ஏழிலே ஒன்றைச் சென்னி ஏற்றவன் - ஏழு புண்ணிய நதிகளிலே ஒன்றாகிய கங்கையாற்றைச் சடையிலே தரித்த சிவபிரானுடைய, கூறது ஆவான் - கூறாய் (அமிசமாகி) இருப்பவரும், ஏழிலே ஒன்றில் வாழ்வார் - மேல் ஏழு உலகங்களிலே ஒன்றாகிய சுவர்க்கத்தில் வாழும் இந்திரன் முதலிய தேவர்கள், இருக்கை பெற்று - முன்போலத் தங்கள் பதவியைப் பெற்று, உய்தற்கு என்று - வாழ்தற்காக, ஏழிலே ஒன்றில் வந்தான் - ஏழு புண்ணிய நகரங்களில் ஒன்றாகிய அயோத்தியில் அவதரித்தருளிய இராமபிரானுடைய (பெரிய பெருமாளுடைய), இணை அடிக்கு-இரண்டு திருவடிகளுக்கு, அன்பனுவான்-அன்பராய் இருப்பவரும், ஏழிலே ஒன்றின் தீவில் - ஏழு சமுத்திரங் களில் ஒன்றாகிய இலவண சமுத்திரத்தின் (உப்புக்கடலின்) தீவாகிய இலங்கையில், இருந்தாள் கண்டு உரைத்தான் - (மறைத்து வைக்கப்பட்டு) இருந்த சீதாபிராட்டியைத் தேடிக் கண்டு ஸ்ரீராமபிரான் கூறிய செய்தியை அப் பிராட்டிக்குக் கூறியவரும், அப்பிராட்டி கூறிய செய்தியினை இராமபிரானிடம் வந்து கூறியவருமாகிய ஆஞ்சநேயர், (காப்பு) எ-று.

'இருந்தாள் கண்டுரைத்தான்' என்பதை இரட்டுற மொழிதலென்னு முத்தியால் இரு பொருள்பட வைத்தார்.

11. ஆனது - பசு அல்லது எருது, ஓர் இடத்தில் உணவை அருந்திடாது என்பர்-ஓரிடத்திலே தங்கிப் புல்லை மேயாது என்று சொல்லுவார்கள், நான் அதே போல - நான் அதனையே போல, போனதே போக்கதாக - மனம் சென்ற வழியினையே வழியாகக் கொண்டு, நாவலர் பலர்பால் புகுந்து ஏகி - பல புலவர்களிடம் விரைந்து சென்று, கல்வி இறை இறை கேட்டுள்ளேன் - நூற்களைச் சிறிது சிறிது கேட்டிருக்கின்றேன், ஆனதால்-இங்ஙனம் பலர்பால் யான் கல்வி கற்றிருத்தலின், அவர்கள் பாத அலர் -(அங்ஙனம் யான் கற்க மனம் இயைந்து அருள் புரிந்தவர்களாகிய) அப்புலவர்கள் அனைவருடைய திருவடிகளாகிய மலர்களையும், என் உளம் கொள்வேன் - எனது மனத்தின்கண் கொள்வேன் (தியானிப்பேன்) (எ-று.)

'ஆனது' என்பதிலுள்ள 'அது' என்பது பகுதிப்பொருள் விகுதி.

## தற்சிறப்புப்பாயிரம்

பாசுர இலக்கம்:

1. விற்பனம் - புலமை, விழு - மேன்மையாகிய, எற்றுக்கு என்னில் - எதற்காக என்றால்.

3. வேங்கை - புலி, மூங்கையான் - ஊமையானவன்.

4. பீதக ஆடை - பொன் ஆடை (பீதாம்பரம்), பெரும்பணி-மேன்மை யாகிய ஆபரணங்கள்.

5. ஓங்கும் பைங்கூழ் - உயர்ந்து வளர்ந்துள்ள பயிர், கதிர் - நெற்கதிர், கால்வரை - அடிவரையிலும், துலை - தராசு, ஆங்கு - (அவற்றைப்) போல.

8. ஆம் சுதன் - உரிய பிள்ளை.

9. மால் விந்தவரை - பெரிய விந்தியம் என்னு மலை, பரல் - பருக்கைக் கற்கள்.

10. (ஈற்றடியின் உரை) மட்டில்லாத மாதவத்தோரும் மற்ற யாவரும் மதிக்கும்படி வல்லமையுற்றவர்களுமாகிய வசிஷ்டர், போதாயநர், வான் மீகர் என்னும் மூவர்.

11. இவர்கள் மூவரும் வேதமே என்று சொல்லும்படி இராமகாதையை அமைத்து மூன்று நூற்களைச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் செய்த அம்மூன்று நூற்களுள் ஆதி காவியம் என்று சொல்லப்படும் வான்மீகி ராமாயணம் மலைபோல யாவரும் அறியும்படி விளங்கவும், 'இப்பூமியில் இதற்கு ஒப்பானதும் உயர்ந்ததுமாகிய காவியம் யாதுளது!' என்று கற்றோர் யாவரும் கூறும்படி கம்பநாட்டாழ்வார் விளக்கிச் செய்த இராமாயணம் தமிழில் இருக்கவும் (எ-று.)

12. (முதலடி இரண்டாம் அடிகளின் உரை) நீயும் செந்தமிழ் நூற்களை நன்கு கற்று வல்லவன் போன்று செருக்குடன் இந்த இராமகாதையைச் சுருக்கமாகப் பாடத்துணிந்தது எக்காரணங்களால் என்று கேட்டால் (எ-று)

17. மேன்மையை உடைய வான்மீகி முனிவரும் கம்பநாட்டாழ் வாரும் அருளிச்செய்த நூற்களாகிய ஆறுகளிலும், புண்ணியங்களைப் பயக் கும் சாத்துவிக புராணங்களாகிய ஆறுகளிலும், ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் அருளிச்செய்த இயற்றமிழ் வேதமாகிய ஆறுகளிலும் பொருந் திய பொருள்களாகிய நீர், என் நாவாகிய குழையின் வழியாக (எ-று.)

இஃது அடுத்த செய்யுளின் முதலடியில் முதலிலுள்ள 'போதரலாயிற்று' என்பதனோடு முடிகின்றது. போதரலாயிற்று—வந்தது.

பாசுர இலக்கம்:

18. (அல்லாமலும்) பசுவானது தான் முன்னே ஈன்ற கன்றுகள் பல இருப்பினும், அப்பொழுது ஈன்ற கன்றின்பாற் பொருந்திய அன்பினால் அக்கன்றின் பக்கம் நின்றவர்களையெல்லாம் தன்னுடைய நீண்ட கொம்பு களாலும் குளம்புகளாலும் தாக்கும். பல மக்களைப்பெற்ற தாய்மார்க்கும் அப்பொழுது பிறந்த குழந்தையின்பால் மிக்க அன்புண்டாகும் (எ-று.)

'மிக்க அன்பு ஒன்றும்' என இயைக்க. 'மிக்க' என்பதன் ஈற்றகரந் தொக்கது.

19. நீள்விசும்பாகிய பரமபதத்தின்கண் நித்தர்களும் முத்தர்களும் எத்தனை கோடி பேர்களிருந்தாலும், எம்பெருமானாகிய இறைவன் அப் பொழுது தன்பால் வந்த முத்தனைத் தன் மடியின்மீது இருத்தித் தழுவி உபசாரஞ்செய்து உவத்தல் போல இப்புவியிலுள்ளவர்கள் புதிதாய்த் தோன்றிய இந்நூலைக் களிப்பொடும் ஏற்பார்கள் (எ-று.)

21. ஐந்து ஈந்த - பஞ்ச சம்ஸ்காரம் செய்த, பஞ்ச சம்ஸ்காரமாவன, ஆசாரியர் சிஷ்யனுக்குச் சங்குசக்கர முத்திரை அளித்தல், பன்னிரு திருமண் இடுதல், தாசிய நாமம் அருளல், திருமந்திர உபதேசஞ் செய்தல், யாகஞ் செய்தல். இதைத் திருவாராதனக் கிரமத்தை அருளிச்செய்தல் என்பாரும் உளர்.

## நூற்பயன்

1. கமலை - இலக்குமி.

2. பரி-குதிரை, கோ-பசுக்கள், கலைகள்-நூற்கள்.

3. அத்தம் -பொன், சம்பத்து -செல்வம், புத்தி - அறிவு, சேடன்-ஆதி சேஷன், போதம் - ஞானம் (அறிவு).

4. இறுதியாம் காலம் - மரணகாலம், அறுதல் இல் - அழிதல் இல்லாத.

---

## முதலாவது ஆற்றுப் படலம்

1. பாட்டைப்போல் இனிமையாகிய மொழிகளைக் கூறும் பெண்கள் நீரில் விளையாடுதலால் அவர்களுடைய அணிகளினின்று விழுகின்ற மணிகளை அலைகள் மேட்டில் வீச, அம்மணிகள் இரவில் விளக்குகள்போலப் பிரகாசிக் கும் அழகிய கோசலநாட்டினது அழகை நாம் சிறிது சொல்லுவோம் (எ-று.)

மேவு - பொருந்திய, எழில் - அழகு, அணி - அழகு.

3. நாலு கோட்டுமா(வின்) நல்நிறம் பல வான் வேலை மேய்ந்து (அவண் நின்றும்) இடியோடும் மின்னொடும் எழுந்தன. (அவை எழுந்த தோற்றம்) ஒலமிட்டெழும் ஓடை எண்திக்குமா (எழுந்தோற்றம்) போலும் என இயைக்க.

இந்திரனுடைய நாலு தந்தங்களையுடைய அயிராவதம் என்னும் யானையினது சிறந்த நிறம்போன்ற வெண்ணிறத்தினையுடைய பல மேகங்கள் கடல் நீரைக் குடித்து அவை அக்கடலினின்றும் இடியோடும் மின்னலோடும் எழுந்தன. அங்ஙனம் அம் மேகங்கள் எழுந்த தோற்றம், பிளிறிக்கொண்டு எழுகின்ற நெற்றிப்பட்டம் அணியப் பெற்ற எட்டுத்திக்கு யானைகளின் தோற்றம் போன்றது (எ-று.)

வான் - மேகம், இடவாகு பெயர்.

பாசுர இலக்கம்:

4. (அந்த மேகங்கள்) வானத்தின்கண் ஆரவாரஞ் செய்து இடி இடித்துக்கொண்டு பொருந்தின. அங்ஙனம் அம்மேகங்கள் ஆரவாரஞ் செய்துகொண்டு வானத்தின்கண் பொருந்தின தோற்றம், இந்திரனுக்கு அஞ்சிக் கடலில் ஒளித்துக்கொண்டிருக்கும் வன்மையினைக்கொண்ட மைநாக மலை பல மக்களைப்பெற்று, அவர்களை அழைத்துக்கொண்டு வானத்தின்கண் சென்று (இந்திரனை நோக்கி) 'முன்னே எம்மையெல்லாம் அழித்துவிட உறுதி கொண்ட நீ இப்பொழுது எங்களோடு போரிட வருக' என்று கூறி அவனுக்கு எதிராக நிற்பது போலும் (எ-று.)

5. 'மாரி, இப்பானுமன் நாடு பாரின்மிக்கது; இஃதே பேரின் மிக்கதும் ஆம்; (ஆதலின்) இங்குப் பெய்வம் என மூவெழு வள்ளியர் ஆம் எனத் தண்பொலம் வெற்பின்கண் தாரை கான்றன' என இயைக்க.

(மேகங்கள்) சூரிய வமிசத்து அரசர்களுடைய நாடாகிய இக்கோசல நாடு, இப்பூமியின்கண் உள்ள மற்றெல்லா நாடுகளினுஞ் சிறந்ததாகும்; இதுவே புகழின் மிக்கதுமாகும்; இங்கு நீரைச் சொரிவோம் என்று தமக்குள் பேசிக்கொண்டு (அந்நாட்டின்கண் உள்ள) குளிர்ந்த பொன்மயமாகிய மலையின்மீது மூவெழு வள்ளல்கள் இரவலருக்குப் பொன்னைச்சொரிந்தது போல நீர்த்தாரைகளைச் சொரிந்தன (எ-று.)

6. 'இந்திரமானம் அங்கு வந்தது என்னலாம்' என்று இயைக்க.

அந்த மேகங்கள் வானினின்றும் அம்மலையின்மீது அங்ஙனம் நீர்த்தாரைகளைச் சொரிந்துகொண்டிருந்தபோது ஏற்பட்ட தோற்றம், அந்த அழகியமலை (விமானத்தின்) அடித்தட்டைப்போலவும், அந்த வானகம் அதன் மேல்தட்டைப்போலவும், சூரியன் அதன் மேற்கலசத்தைப்போலவுமிருந்ததால், (அப்போது) அந்த நாட்டில் இந்திர விமானம் வந்ததென்று சொல்லுதற்குரியதாயிருந்தது (எ-று.)

'விமானம்' என்பது முதற்குறையாய் 'மானம்' என நின்றது.

மளமள, சளசள - ஒலிக்குறிப்பிடைச் சொற்கள்; 'சளசள' என்பதன் ஈற்று அகரந்தொக்கு 'என்று' என்பதனோடு கூடிச் 'சளசளென்று' என்றாயிற்று.

உளஉள - இவ்வடுக்கு 'உள்ள உள்ள' என்பது தொகுத்தலாய் உளஉள என்றாயிற்று.

பாசுர இலக்கம்:

8. நீத்தம் - வெள்ளம்.

9. மணப்பெண்ணுக்கும், வெள்ளத்திற்கும் சிலேடை.

'சேலையுற்று ...................உற்றெழலால்'

மணப்பெண்ணுக்கு: மணப்பெண் மணத்திற்கு உரிய சேலையை உடுத்து, சிறந்த இரத்தினாபரணங்கள் தன்மேற் பொருந்தக் கலியாண மாலையைச் சூடிக்கொண்டு, கையிலுள்ள வளையல்கள் ஒலிக்க ஓலையினால் அமைக்கப்பட்ட பந்தலில் உட்கார்ந்து எழுதலால் எனவும்;

வெள்ளத்திற்கு: சேல் மீன்களைக் கொண்டு, தன்கண் சிறந்த மணிகள் மிகுதியாகப் பொருந்தப் (பல இடங்களினின்று வாரிக்கொண்டு வரும்) பூமாலைகளோடு கூடி, (காட்டில்) ஓலையினால் அமைக்கப்பட்ட பந்தல்கட்குள் சென்று வருதலால் எனவும் பொருள் கொள்க.

10. தொம்பரத்திக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடை.

'கம்பநின்று ......................சுழன்று ஓடலால்'

தொம்பரத்திக்கு: கம்பத்தின்மீது நின்று, இரண்டு கம்பங்களின் உச்சியில் குறுக்காகக் கட்டப்பெற்ற கயிற்றின்மேல் நடந்து சென்று, ஒரு கொம்பைக் கையில் எடுத்துக்கொண்டும் கொடியை எடுத்துக்கொண்டும் ஆடி, (ஒரு கம்பத்தின் உச்சியில் படுத்துச்) சிறந்த பம்பரத்தைப் போலச் சுழன்றுவிட்டுக் குறுக்குக் கயிற்றின்மேல் ஓடுதலால் எனவும்;

வெள்ளத்திற்கு: தன்கண் (தன்னால் அடித்துக்கொண்டு வரப்பெறும்) தூண்கள் பொருந்தப்பெற்றுத் (தரையிற் கிடக்கும்) கயிறுகளின்மேற் சென்று, (அலைகளால்) பல மாக்கிளைகளை வாரிக்கொண்டும் தரையிற் படர்ந்துள்ள கொடிகளை எடுத்துக்கொண்டும் ஆடி, சிறந்த பம்பரங்கள் விரைவாகச் சுழலுதல் போலத் தன்கண் நீர்ச்சுழிகள் சுழலப்பெற்று ஓடுதலால் எனவும் பொருள் கொள்க.

அறல் - நீர்.

பாசுர இலக்கம்:

11. வீரனுக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடை.

'வாளை வீசி......................ஆர்த்து'

வீரனுக்கு: வாளை எடுத்து வீசி, மண்டலமாகச் சுற்றி, முழந்தாளைப் பூமியில் இட்டு, உடனே கையிலே தண்டைக்கொண்டு, ஆரவாரம் செய்து எனவும்;

வெள்ளத்திற்கு: வாளைமீன்களை வீசிக்கொண்டு, (மலையினின்றும்) பூமியின்கண் வந்து சேர்ந்து, கொல்லையின்கண்ணுள்ள முழத்தின் அளவான வரகு முதலிய பயிர்களின் தாள்களையும் தண்டுகளையும் வாரிக்கொண்டு, மிகவும் ஒலித்து எனவும் பொருள் கொள்க.

ஒரு வேளை வென்ற நல் மெய்யுடைப் போர்த்தொழில் ஆளை - ஒப்பற்றவனாய் விளங்கும் மன்மதனை வென்ற அழகிய உடம்பினை உடைய போர்த்தொழிலையுடைய வீரனை. 'மண்டலமாய்' என்பதை வீரனுக்குக் கொள்ளும்போது மண்டலம் ஆய் எனவும், வெள்ளத்திற்குக் கொள்ளும்போது மண்தலம் ஆய் எனவும் பிரிக்க.

12. போக்கிரிப்பையனுக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடை.

'மாக்கிரிக்கலே..........................ஓடலால்'

போக்கிரிப்பையனுக்கு: பெரிய மலைக் கற்களை எடுத்து, அவ்வேடர்களைப்போல அக்கற்கள் தூளாகும்படி அக்கற்களாற் பிறரைத் தாக்கி, பூமியில் நின்றவர்களைத் தூக்கிக் கீழே விழச்செய்து, பிறகு தூரமாகிய இடத்திற்கு ஓடிப்போதலால் எனவும்;

வெள்ளத்திற்கு: பெரிய மலைகளில் உள்ள மான்களை வாரிக்கொண்டு, அவ்வேடரின் வீடுகளைத் தூளாகும்படி மோதி, பூமியில் நின்றவர்களை எடுத்துத் தரையில் விழச்செய்து, பிறகு தூரமான இடத்திற்கு ஓடிப்போதலால் எனவும் பொருள் கொள்க.

பையல் என்பது ஐகாரத்திற்கு அகரம் போலியாய்ப் பயல் என்றாயிற்று

13. பிரமாவுக்கும் வெள்ளத்திற்கும் சிலேடை.

'உந்தித் தாமரை......................மேவலால்'

பிரமாவுக்கு: இறைவனுடைய உந்தியினின்று தோன்றிய செந்தாமரை மலரில் பொருந்தி, அவ்விடத்தில் மேன்மையோடு (இருந்து), இந்தப் பூமியில் உள்ள எல்லா உயிர்களும் தன் படைப்புக்கு உள்ளாகும்படி செய்து, அழகிய நான்கு திக்கு முகங்கள் பொருந்தியிருத்தலால் எனவும்;

வெள்ளத்திற்கு: தாவியோடும் மரை என்னும் மான்களைத் தள்ளிக் கொண்டு வந்து, மேன்மையோடு இந்த உலகிலுள்ள எல்லா உயிர்களும் தன்னால் வளரும்படி (செய்து), முடிவில் நான்கு திக்குகளிலும் உள்ள எல்லா இடங்களிலும் சென்று பரவுதலால் எனவும் பொருள் கொள்க.

உந்தித் தாமரையுற்று என்பதனை வெள்ளத்திற்குக் கொள்ளும் பொழுது தாமரை உந்தி உற்று என இயைத்துக் கொள்க. தன்னில்ஆய் என்பதிலுள்ள ஆய் என்னும் வினையெச்சத்தை ஆக என்றாக்கி, அதனோடு செய்து என்னுஞ் சொல்லைக் கூட்டிக்கொள்க. இஃது இரண்டினுக்கும் ஒக்கும்.

பாசுர இலக்கம்:

14. சிவபிரானுக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடை.

'தமரகம்.................. .. ....புகுதலால்'

சிவபிரானுக்கு: உடுக்கையோடு மழுவைக் கையிற்கொண்டு, பாம்புகள் தன் உடம்பிற் பொருந்தப்பெற்று, தாவுமானை ஏந்தி, பொறுமையின்றி இடுகாட்டிற் புகுதலால் எனவும் ;

வெள்ளத்திற்கு: ஒலியைச் செய்யும் ஆட்டுக் கடாக்களுடன் காடுகளை (காட்டிலுள்ள பொருள்களை அலைகளாகிய கைகளால்) வாரிக்கொண்டு, அங்குள்ள பாம்புகளையும் தம்முடம்பின் தன்மையால் தாவியோடும் மான்களையுங்கொண்டு, மூங்கில்களின் ஒன்றோடொன்று தேய்தலாகிய செயல் பொருந்திய காடுகளிற் புகுதலால் எனவும் பொருள் கொள்க.

சிவபிரானுக்குக் கொள்ளும்போது தமரகம் - உடுக்கை எனவும், தண்ணம் - மழு எனவும், சமரி - பாம்புகள் எனவும், கமையின்று - பொறுமை இன்றி எனவும், இடுகாடு - சுடுகாடு எனவும்,

வெள்ளத்திற்குக் கொள்ளும்போது தமரகம்-ஒலியைச்செய்யும் ஆட்டுக் கடா எனவும், தண்ணம்-காடு (இடவாகு பெயராகக் கொண்டு காட்டிலுள்ள பொருள்கள்) எனவும், கமையின் தேய் இடு காட்டில்-மூங்கில்களின் ஒன்றோடொன்று தேய்தலாகிய செயல் பொருந்திய காட்டில் எனவுங்கொள்க.

'இன்றி' என்னும் வினையெச்சம் 'இன்று' எனத்திரிந்து நின்றது.

15. விநாயகருக்கும் வெள்ளத்திற்கும் சிலேடை.

'ஆனை ......... ..............உண்டு'

விநாயகருக்கு: சிறந்த யானை முகத்தைக்கொண்டு, தோட்டியும் பாசமும் ஆகிய படைகளை ஏந்தி, சோலைகளினின்று கொண்டுவரப்படும் மாம்பழம்

பலாப்பழம், வாழைப்பழம், களாப்பழம், விளாம்பழ முதலிய பழங்களோடு உண்ணுதற்குத் தக்கதான மாவுருண்டை, மொச்சை, அவல் முதலிய பலகாரங்களை உண்டு எனவும் ;

வெள்ளத்திற்கு: தன்பால் யானைகளைக்கொண்டு, அழகிய தருப்பைகளையும் கயிறுகளையும் வாசனையையுடைய மா பலா வாழை களம் விளம் முதலிய மரங்களுடன் பொருந்திய பெரிய கல் முதலியவற்றின் உருண்டைகளையும் முடுகி ஈர்த்துக்கொண்டு, அழகிய பல குளங்களையும் பலவகையான பொற்சன்னங்களையும் தனக்குள் கொண்டு எனவுங் கொள்க.

விநாயகருக்குக் கொள்ளும்போது அங்குசம் பாசம் என்பன ஆயுதங்கள் எனவும், மா வருக்கை வாழை களம் விளம் என்பன அவற்றின் பழங்கள் எனவும், ஆனமா உருண்டை - உண்ணுதற்குத் தக்க மாவினாற் செய்யப்பட்ட உருண்டை எனவும், மொச்சை - வெந்த மொச்சைக்கொட்டையாகிய பலகாரம் எனவும், அவல் - அவல் ஆகிய பலகாரம் எனவும் கொள்க.

வெள்ளத்திற்குக் கொள்ளும்போது முகம் - தன்னிடம் எனவும், ஆனைமா - யானையாகிய மிருகம் எனவும், அங்குசம் - அழகிய தருப்பைகள் எனவும், பாசம் - கயிறு எனவும், மாமுதல் விளம் வரையினும் கூறப்பட்டவைகளுள் களம் செடி எனவும், மற்றவை மரங்கள் எனவும், ஆனமா உருண்டை - வழியிற் பொருந்திய பெரிய கல் உருண்டைகள் எனவும், மொச்சை என்பதை மொச்சு ஐ எனப்பிரித்து அவற்றுள் மொச்சு என்பது மொய்த்து என்பதன் போலியாம் எனவும், அதன் பொருள் முடுகி ஈர்த்து என்பது எனவும், ஐ - அழகு எனவும், பல ஐ அவல் என இயைத்து அதற்குப் பல அழகிய குளங்கள் என்பது பொருளாம் எனவும், காரம்-பொன் எனவும் கொள்க.

பாசுர இலக்கம்:

16. சரஸ்வதிக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடை.

'கரகம்..................................எழுதலால்,'

சரஸ்வதிக்கு: கமண்டலத்தையும் வெள்ளிய படிகக்கற்களாலான மாலையையும் வீணையையும் நூற்களையும் ஏந்தி, ஏழு சுரங்களுடன் பாடி, எங்குஞ் சென்று, பரிசுத்தமான வெண்மையாகிய திருமேனியுடன் சிறந்த அபயாத்தம் (வரந்தருங்கை) தோன்றத் தன்னுருவத்தை அமைத்துக்கொண்ட அடியவர்களின் மனத்தின்கண் தோன்றுதலால் எனவும் ;

வெள்ளத்திற்கு: பாளைகளையும் வெள்ளிய படிகக் கற்களையும் கரும்பாலை முதலிய ஆலைகளையும் கின்னரப்பறவைகளையும் மீன்களையும் (அலைகளாகிய கரங்களால்) வாரிக்கொண்டு, காடுகளிலும் காட்டு நிலத்தூர்களிலுஞ் சென்று, தூய வெள்ளிய நிறத்துடன் உயிர்கள் எல்லாவற்றிற்கும் நன்மையை அளிக்கும் நீர் தோன்றப் பூமியில் எழுதலால் எனவும் பொருள் கொள்க.

வையகத்து - பூமியின்கண் என்னும் பொருளைச் சரஸ்வதிக்குக் கொள்ளும்போதும் கொள்ளலாம். திரை கெழு நீத்தமாகலின், தூயவெண்மேனியோடு வரதநற் பாணி காணப்படுவது ஆயிற்று. நல்வரதப்பாணி என இயைக்க. (உயிர்களுக்கு) நன்மை அருளும் நீர் என்பது அதன் பொருள்.

பாசுர இலக்கம்:

17. குபேரனுக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடை.

'அங்குசம்............................ஏறலால்,'

குபேரனுக்கு: (கயிலையாகிய) அவ்விடத்திற் சிவபிரானைச் சாரச்சென்று, அளகாபுரியில் வீற்றிருந்து, (பிறருக்கு) அரியனவாகிய சங்கநிதி பதுமநிதி முதலிய சிறந்த எல்லாச் செல்வங்களையும் கொண்டு, எல்லா இடங்களிலும் விரைந்து செல்லுகின்ற புட்பக விமானத்தில் ஏறுதலால் எனவும்;

வெள்ளத்திற்கு: அழகிய தருப்பைகள் வளையச்சென்று, அன்னப்பெடைகளைத் தன்பாற்கொண்டு, சங்கு தாமரை முதலியவற்றையும் மிருகங்களையும் பொன்னாதி நிதிகளையும் வாரிக்கொண்டு, எல்லா இடங்களிலும் விரைந்து செல்வனவாகிய நீர்ப்பறவைகளும் கொக்குகளும் தன்மேல் வந்து தங்கப் பெறுதலால் எனவும் பொருள் கொள்க.

அங்குசம் படுக்கச் சென்று என்பதை அங்கு சம்பு அடுக்க எனவும், அம்குசம் படுக்க எனவும் பிரிக்க. அங்கு சம்பு என்று பிரிக்கின் அங்கு என்பதன்முன் ச் என்பது மிகுதல் வேண்டும். அது செய்யுள் விகாரமாக மிகாதாயிற்று. புட்பகம் என்பதைப் புட்பகம் என ஒரு சொல்லாகவும், புள் பகம் என இரண்டு சொல்லாகவும் பிரிக்கவும். அளகை என்பதனை ஒரு சொல்லாகவும் அளகு ஐ என இரண்டு சொல்லாகவும் கொள்க. அளகு - அன்னப்பெடை, ஐ வேற்றுமையுருபு.

18. சுப்பிரமணியருக்கும் வெள்ளத்திற்கும் சிலேடை.

'சரவணப்பொய்கை..............................ஏகலால்,'

சுப்பிரமணியருக்கு: சரவணப் பொய்கையிற் பிறந்து, ஆறு சிரங்களைப் பெற்று, இளமையாகிய பருவத்திலேயே கிரௌஞ்ச மலை பிளவு படும்படி

வேலை எய்து, காட்டிற்சென்று வள்ளித்தேவியைப் புணர்ந்து, பகைவர்களுக்குக் கொடுமையைச்செய்வதும் மாறுபாட்டை யுடையதுமாகிய வேலைக் கையில் ஏந்தி, மயிலின்மீது ஏறிச் செல்லுதலால் எனவும்;

வெள்ளத்திற்கு: சரவணத்தையுடைய குளநீரிற் படிந்து, சிறந்த காணுறுகளிற் படிந்து, இளமையாகிய ஆடுகளுடனே மலையின் பிளவுகளாகிய கற்களை வீசி, காடுகளிற்சென்று, வள்ளிக்கொடியைத் தன்னிடம் கொண்டு, கொடிய மாறுபாடுடைய வேல்மரங்களை அடித்துக்கொண்டு மலையின் மேலிடத்திலிருந்து வருதலால் எனவும் பொருள் கொள்க.

சரவணப் பொய்கை - புற்கள் நிறைந்த குளம்.

தலை ஆறு உற்று - ஆறு சிரங்கள் பொருந்தி, சிறந்த காணுறுகளிற் படிந்து, இளமையோடு - இளமைப் பருவத்தோடு, இளயனவாகிய ஆடுகளுடன், வரை பகவெறிந்து என்பதை வரை பக எறிந்து எனவும், வரை பகவு எறிந்து எனவும் பிரிக்க. இவற்றிற்கு முறையே மலை பிளவு படும்படி வேலை எய்து எனவும், மலையின் பிளவாகிய கற்களை வீசி எனவும் முறையே சுப்பிரமணியருக்கும் வெள்ளத்திற்கும் பொருள் கொள்க.

பாசுர இலக்கம்:

19. திருமாலுக்கும் வெள்ளத்திற்கும் சிலேடை.

'அனைத்தையும்..................................பரவலால்,'

திருமாலுக்கு: உலக முழுதையும் உட்கொண்டு, பிறகு ஆலிலையிற் பள்ளிகொண்டு, திருஉந்தியின்கண் செந்தாமரைப் பூவை உண்டாக்கி, கொல்லைகளில் உண்டாகும் துளசி மாலையும் கவுத்துவாபரணமுமாகிய இவற்றுடன் திருமகளையும் மார்பிற்கொண்டு, உலகில் உள்ளவர்கள் யாவரும் மனிதர்களான தங்களைக் காத்தற்காக வேண்டி வணங்குதலால் எனவும்;

வெள்ளத்தினுக்கு : (வழியிலேயுள்ள) எல்லாப் பொருள்களையும் தனக்குள்ளாக்கி, பிறகு ஆலமரங்களைத் தரையில் விழச்செய்து, சுழியைத் தன்பால் தோன்றச்செய்து, வயல்களில் உள்ள ஏர்த்தொழிலுக்குரிய தளவாடங்களோடு பொற்சன்னங்களையும் தன் வலிமையினால் தாங்கி, உலகின்கண் உள்ள மனிதர்களைக் காத்தற்காக உலகமுழுதும் பரவுதலால் எனவும் பொருள் கொள்க.

ஆல் - ஆலிலை, ஆலமரம் எனவும், உந்தி - கொப்பூழ், நீர்ச்சுழி எனவும் முறையே திருமாலுக்கும் வெள்ளத்திற்கும் பொருள் கொள்க.

புனத்துளவணியினேடு - கொல்லையிலுள்ள துளசியும் ஆபரணங்களு மாகிய இவற்றுடன் (இப்பொருளில் புனம் துளவு அணியினேடு எனப் பிரிக்க. (புனம் - கொல்லை; துளவு - துளசி) வயல்களிலுள்ள உழு தொழி லுக்குரிய தளவாடங்களோடு (இப்பொருளில் புனத்து உள்ள அணி எனப் பிரிக்கவேண்டும்.) புனம் - வயல்; அணி உழவுக்குரிய தளவாடங்கள்.

பொன் - இலக்குமி, பொற்சன்னங்கள்.

பாசுர இலக்கம்:

20. இலக்குமிக்கும் வெள்ளத்திற்கும் சிலேடை.

'தாமரை மேவி................................அளித்தலால்.'

இலக்குமிக்கு: செந்தாமரை மலரில் எழுந்தருளி, திருமேனி பொன்மயமாகப் பொருந்தப்பெற்று, அழகிய சிவந்த ஆடையைத் தரித்து, ஆபரணங்களை அணிந்து, காவலையுடைய பொக்கிஷங்களையும் பொன்னையும் உலகில் உள்ளவர்களுக்கு அளித்தலால் எனவும்;

வெள்ளத்திற்கு: தாமரைக் கொடிகள் தன்பாற் பொருந்தப்பெற்று, பொன்னிறத்தையுற்று, சோலைகளில் உள்ள மருக்கொழுந்து சிவந்த ஆடைகள் என்பவற்றைத் தன்பாற் காணக்கொண்டு, பாம்புகளை ஏற்று, காவலாகிய நிதிகளையும் பொற்சன்னங்களையும் உலகில் உள்ளவர்களுக்கு அளித்தலால் எனவும் பொருள் கொள்க.

22. பாகவதர்களுக்கும் வெள்ளத்திற்குஞ் சிலேடை.

'எல்லையில்................................இறைத்து,'

பாகவதர்களுக்கு: ஒப்பில்லாத காவேரி நதியில் நீராடி, துளசி மணி மாலையையும் தாமரைமணி மாலையையும் மார்பில் தரித்தலோடு ஞான வளப்பத்தினைச் செய்யும் திருமண்ணை நெற்றி முதலிய இடங்களிலே இட்டுக் கொண்டு, மிக்க அன்பினுற் கூத்தாடி, சிறந்த இயற்றமிழ்ப் பாவாலாகிய தமிழ் மறையான நாலாயிர திவ்விய பிரபந்தத்தைப் பாடிக்கொண்டுவந்து, அவன் திருத்தாள்களிலே நல்ல வாசனையுடைய மலர்களை இறைத்து எனவும்;

வெள்ளத்திற்கு: ஓர் எல்லையில்லாத ஆற்றிடைக்குறைகள் தன்பால் பொருந்தப்பெற்று, இணையில்லாத சோலைகளும் ஏரிகளும் தனக்குள்ளாகச் செய்து, துளசி பூவரும்பு முதலியவற்றுடன் (சென்று) வளப்பமாகிய அழ கிய நிலத்திலே பொருந்தி யாடி, நல்ல தன்மையை உடைய ஊர்களிற்புக்கு, நல்ல வாசனையைக்கொண்ட மலர்களை வீசி எனவும் பொருள் கொள்க.

காவேரி - ஓர் யாறு, (சோலைகளும் ஏரிகளும் என்னும் பொருளில் கா ஏரி எனப் பிரிக்கவும்.)

குல்லை - துளசி, அது காரணவாகு பெயராய் அதனாலாகிய மணிகளை உணர்த்த, அதுவும் அவ்வாகுபெயராய் அம்மணியாலாகிய மாலையை உணர்த்தியது.

கன்னிகை - தாமரைக்கொட்டை; அது காரணவாகு பெயராய் அதனாலாகிய மாலையை உணர்த்தியது. இதனை நளினாக்ஷ மாலை யென்பர்.

---

## இரண்டாவது நாட்டுப் படலம்

பாசுர இலக்கம்:

1. தண் - குளிர்ச்சி, விரைபொழில் - வாசனையை உடைய சோலைகள், விருக்கங்கள் - மரங்கள், அம் வயல்கள் - நீரையுடைய வயல்கள்.

2. சித்திரச்சிகரி - சித்திரங்களைக்கொண்ட கோபுரம், தேவர்தம் தலம்-கோயில்கள், வித்துவச்சனங்கள் - புலவர்கள்.

3. களமர் வேளாளர் - உழு தொழில் செய்வோராகிய வேளாளர்.

4. சுபாசுபங்கள் செய்விப்போர் - புரோகிதர்கள், ஐந்தொழிலில் வல்லார் - தட்டார் கன்னார் கருமார் தச்சர் கல்தச்சர் என்பார். இவர்களைப் பஞ்சாளர் என்பர்; இவர்களுள் கன்னார் பித்தளை முதலியவற்றால் செம்பு தவலை முதலியன செய்வோர்; கருமார் இரும்புவேலை செய்பவர்; தச்சர் மரவேலை செய்பவர்; கல்தச்சர் கல்லைச் செதுக்கி வேலை செய்பவர் (சிற்பிகள்); தாலம் - பூமி.

5. இயம் - வாத்தியங்கள், குடிச்சுதர் - பணி செய்வோர் (இவர்களை இக்காலத்தில் பணிச்சவர் என்பர்.)

6. கொழு - (கலப்பையின் ஓர் உறுப்பு) காறு, கொழுமண்காண் பொன்னும் முத்தும் - கொழுவினால் தோண்டப்பட்ட மண்ணினின்றும் வெளிப்பட்டுக் காணப்படும் பொன்னையும் முத்தையும், குரம்பு - வரம்பு.

8. நல் நிமித்தங்கள் - நல்ல சகுனங்கள், பொங்கின் - களிப்பினால், கூய் - கூவி, சும்மை - ஒலி, கருனை - பொரிக்கறி.

9. அரவம் - ஒலி, தொனி - ஒலி, அறல் - நீர், செய் - வயல், இசை - ஒலி, மள்ளர் - உழவர்.

பாசுர இலக்கம்:

10. ஓதை - ஒலி, மேதிக்கூட்டம் - எருமைகளின் கூட்டம், கயம் - குளம், உழக்கும் - கலக்கும், புயல் - மேகம்.

12. அங்கு எழும் - அங்கு (வயல்களில்) வளரும், பயிர்க்கண் - பயிர்களின் இடையில், மள்ளர்க்கு ஆய - உழவர்களுக்கு இனியவர்களாகிய, தம் மனைவிமார் தம் - அவர்களுடைய மனைவியருடைய, முகம் - முகங்களையும், செவ்வாய் - சிவந்த வாய்களையும், கொடுஞ்செயல் -(ஆடவர்களின் மனத்தை வாட்டும்) கொடிய செயலை உடைய, கண்ணும் - கண்களையும், போன்ற - ஒப்பாகிய, பங்கயம் முகை - தாமரை மொக்கையும், பகர் அல்லி - (உயர்த்திச் சொல்லப்படும்) அல்லி மலரையும், காவி - நீலோற்பல மலரையும், இங்கு யாம் களையோம் என்று ஏங்கி - இங்கு யாம் களையமாட்டோம் என்று ஏக்கமுற்றிருந்து, பின் களைவர் - பின் (உலக நலத்தின் பொருட்டுக் களைய வேண்டிய அவசியத்தைக்கொண்டு) களைவார்கள்.

14. இறால் - தேன் கூடு, ஆரியம் - கேழ்வரகு, முதிரை - துவரை, குரம் - கடலை.

15. சிகி - மயில், இயல் - தன்மை, சாயல்.

19. விடை - எருது, பாண்டில் - வண்டி, உறை - தானியங்களை இட்டு வைக்கப்படுவது.

20. கன்னல் - கரும்பு, மா - மாமரம், வருக்கை - பலா மரம், பணிபதி - ஆதிசேடன் (பாம்புகளுக்கு அரசன்.)

21. கா - சோலை, பணிலம் - சங்கு, ஞிமிறும் தேனும் என்பன வண்டுகளின் வகைகள், புடை - பக்கம்.

23. செனம் - ஜனங்கள், தண்ணுமை - மத்தளம், சதி - தாளம், பண் - இசை, மாடி உம்பர் - மெத்தையின்மேல்.

24. வேய் - புல்லாங்குழல், ததி - காலம்.

25. மாதவி - ஒருவகைக்கொடி (பந்தல் என்பது லகரமெய்க்கு ரகரமெய் போலியாய்ப் பந்தர் என நின்றது.) கோகிலம் - குயில்.

26. நெய் பிழி - நெய்யைப் பிழிகின்ற, செக்கு இனம் - செக்குக் கூட்டம், கலிப்பு - ஓசை.

27. நெய்தலர் - நெய்தல் நிலத்து ஆடவர், ஒலி கடல் - ஒலிக்கின்ற கடலின்கண், புணைவிடற்கு - கட்டுமரங்களை விடுதற்காக, ஒருங்கு எழ - ஒன்றாக எழும்படி, கருங்கண் அம்நலார் - கரிய கண்களையுடைய நெய்தல் நிலத்து

அழகிய பெண்கள், ஒருங்கு - ஒன்ருய்க்கூடி, நெய்தலிற்கழறு செவ்வழி - நெய்தல் நிலத்திற் பாடும் செவ்வழி என்னும் பண்ணின் ஓசை, முல்லேயின் திரங்கொள் - முல்லே நிலத்தில் வசிக்கும் திடமான, திருமகள் அனேயவர் - அழகிஞல் திருமகளேப் போன்றவர்களாகிய ஆயர் மாதர்கள், மின்னின் மருங்குல் - மின்னலேப்போன்ற தங்கள் இடைகள், ஒல்குற - துவளும்படி, வள் தயிர் - வளப்பமான தயிரை, கடைந்திடற்கு - கடைய, எழுப்பும் - (அவர்களே) எழுப்பும்.

நெய்தல் நிலத்துப் பெண்கள் தங்கள் ஆடவர்களேப் புணேவிடத் துயிலி னின்றெழுப்புதற்குப் பாடும் செவ்வழியானது முல்லே நிலத்தவர்களாகிய ஆயர் மாதர்களேத் தயிர் கடைய எழுப்பும் என்க. இது திணே மயக்கம்.

பாசுர இலக்கம்:

29. உச்சியில் - நடுப்பகலில், ஆதவன் - சூரியன், மா - பெரிய, கந்தி மரத்து (உச்சியில்) - பாக்கு மரத்தின் உச்சியிலே, காண்டல் - காணப்படுதல் (இம்பர் இந்திரற்கு) விந்தை ஆம் தம்பத்து (இட்ட) - விநோதமாகிய ஒரு தூணிலே அமைத்த, ஆடி விளக்கு என விளங்கும் - கண்ணுடி விளக்கைப் போலத் தோன்றும், அந்த தாரு - அந்த மரத்தினது, மேல் அண்டையில் - மேல் பக்கத்தில், அது அமர்தல் - சூரியன் வந்து சேர்ந்த தோற்றம் (இம்பர் இந்திரற்கு) இட்ட பொன் விசிறிபோல் இசையும் - அமைத்த பொ விசிறியைப்போல அமைந்திருக்கும்.

இம்பர் இந்திரற்கு என்பதை இரண்டிடத்திலும் இயைக்க. அத பொருள் : இப்பூமியிலுள்ள மக்கள் இந்திரனுக்காக என்பது. உச்சி என் தற்கு நடுப்பகல் எனவும் மரத்தின் உச்சி எனவும் பொருள்கொள்ளுக.

30. அம்புலி - சந்திரன்.

31. கொடிச்சியர் - குறிஞ்சி நிலப்பெண்கள்.

32. வங்கம் - மரக்கலம், கப்பல். புங்கம் மாளிகை விளக்கு எ உயர்ந்த மாளிகையின்மேல் இட்ட விளக்கைப்போல (கலங்கரை விளக்கை போல), பொலியும் - தோன்றும்.

33. என்ன அல்லினும் - எவ்வித இரவிலும் (எவ்வளவு இருட்டை யுடைய இரவினும்), அமைப்பார் - வைப்பார்கள், அது - தீபத்தை.

34. தேசு - ஒளி, அத்திருமால் - கண்ணன், கா - கற்பகச்சோலே, பீசரம் - (விருப்பத்திஞல்) விரைவுடன், அத்திருமால் என்பதில் அகரம் உலகறி சுட்டு, திருமால் என்பது ஈண்டுப் பண்பி யொற்றுமையிஞற் கண் ணனே உணர்த்திற்று.

பாசுர இலக்கம்:

39. நளினத் தொட்டிலை - தாமரை மலராகிய தொட்டிலை, கயல் - கயல்மீன், நல் அனை என - பெற்ற தாயைப்போல, அசைப்ப - அசைக்கவும், களிவண்டு - களிப்பினை உடைய வண்டு, ஆங்குக் கைத்தாய் என - அங்குக் கைத் தாயைப்போல, கனிந்து - அன்புகொண்டு, அவண் - அங்கு, பாட - பாடவும், ஒளிர் நல் காவி - பிரகாசிக்கும் சிறந்த கருங்குவளை மலர், கண்திறந்து - மலர்ந்து, கள் செவிலியின் ஊட்ட - செவிலித் தாயைப்போலக் கள்ளை உண்பிக்கவும், இள அம் தூ அனம் - இளமையாகிய அழகிய சிறகுகளை உடைய அன்னங்கள், தடந்தொறும் - தடாகங்கள்தோறும், கண் வளர்ந்திருக்கும் - துயிலும்.

41. ஆற்று அறல் - ஆற்று நீர், அம்பகம் - கண்.

42. நல்லார் - பெண்கள், பயோதரம் - மேகங்கள்.

43. திங்கட்குள் - ஒரு மாதத்திற்குள், பங்கப்பட்டு - பங்கம் அடைந்து, சேற்றில் இருந்து; பண்ணைகள் - வயல்கள்.

44. கொண்டல் - மேகம், துடி - உடுக்கை, இறுமாப்பு - கருவம், வெறியாளர் - வெறியாட்டாளர் (பூசாரிகள்), தொங்கும் - தொங்கிக்கொண்டிருக்கும், இறுமாப்படங்கித் தங்கியிருக்கும்.

45. மல்லிகை வாசக் கூந்தல் - மல்லிகை மலர்களின் வாசனையை உடைய கூந்தல், எல்லில் - பகலில், அவர் - அப்பெண்கள், புல் இதழ் போர்த்து - அற்பமாகிய (சிறிய) புற இதழ்களால் தன்னை மூடிக்கொண்டு, அம் அல்லி இதழ் - அழகிய அக இதழ்கள், சலத்தில் - சஞ்சலத்தினால், நீரில்.

46. அந்நாட்டு இருப்பவர் - அந்த நாட்டில் வசிக்கும் மக்கள், எத் தீங்கும் இயற்றல் இல்லை - எவ்விதத் தீமையுஞ் செய்தல் இல்லை, அத் தூயர்க்கு - அந்தத் தூய்மையை உடையவர்களாகிய மாந்தர்க்கு, ஆதுலர் தருவிச் சேர்தல் - (அந்நாட்டில் செல்வமில்லாதவர் கிடைப்பது அருமை ஆகையால்) யாசகர்களைத் தேடி அடைதல், தொல்லை - துன்பமாகும், கொல்லை - புன்செய்ந்நிலம், பொன்னும் முத்தமும் - பொன்னையும் முத்துக்களையும், கொள்ளும் தானம் - எடுக்கும் இடமாம், அந்நாட்டு வேந்தர்க்கு எல்லை - (அந்நாட்டு வேந்தராகிய தசரதச் சக்கரவர்த்தியாருடைய) அரசாட்சியின் எல்லை, ஏழ் உலகு அளவும் - ஏழ் உலகத்தின் முடிவு வரையினுமாகும்.

49. ஆங்கு - அந்நாட்டில், யாரும் - எல்லாரும், ஒருமித்து உண்மையால் - ஒற்றுமையாய் இருத்தலால், ஒவ்வாரே இல்லை - ஒருவர்க்கொருவர் பகை கொண்டிருப்பவர் இல்லை.

பாசுர இலக்கம்:

50. இழையும் - இழை அளவும் (சிறிதும்), மை இல்லா வேந்தன் - குற்றமில்லாத அச்சக்கரவர்த்தியாருடைய, உழையின் - மான் போன்ற, மை விழியினர்தம் - மை இட்ட கண்களையுடைய பெண்களுடைய.

---

## மூன்றாவது நகரப் படலம்

1. சிகரி - கோபுரம், எலும் மதியும் - சூரியனும் சந்திரனும்.

'எல்லும்' என்பது தொகுத்தல் விகாரம் பெற்று 'எலும்' என நின்றது.

3. இகலும் - போர் புரியும், தோற்றம் - காட்சி, சிந்து - கடல்.

4. ஓங்கல் - மலை.

5. வாரி - (அகழியின்) நீரில், களங்கம் - குற்றம்.

7. பொன் அணங்கு - இலக்குமி.

9. தச்சு - தைத்து (எழுத்துப்போலியமைந்த சொல்.)

10. சுதை - சுண்ணும்பு.

11. குழுமி - கூடி.

12. இருட்பிழம்பு - இருளின் திரட்சி, விரவிய - கலந்த, வேதண்டம் - மலை.

13. அசைவு இலது ஆகி - (பகைவர்களுக்குச் சிறிதும்) அசையாததாகி, விண் வரையினும் ஓங்கி - விண்ணுலகம் வரையினும் உயர்ந்து, அந்நகர் சூழ்தரும் புரிசை - அந்த நகரத்தைச் சூழ்ந்துள்ள மதில், திசை ஒரு நான்கினும் - நான்கு திசைகளிலும், முடிச்சிரம் ஆம் என - கிரீடத்தோடு கூடிய சிரசைப்போல, நான்கு சிகரி பெற்றுளதால் - நான்கு கோபுரங்களைக் கொண்டிருத்தலின், திசைமுகன் போன்றுளது - பிரமாவைப்போன்றிருப்பது, அனைத்தையும் உள் கொடு - எல்லாப் பொருள்களையும் தனக்குள் கொண்டு, திகிரி சங்கு ஏற்றலின் - சக்கரத்தையும் சங்கையும் ஏந்தி இருத்தலால், அரி ஆம் - அரியைப்போன்றது ஆம், இசை - யாவராலும் புகழ்ந்து சொல்லப்படும், மதி தன் தலைமேல் உற - சந்திரன் தன் உச்சியில் பொருந்தி இருக்க, மழு ஏற்றலின் - மழுப்படையை ஏந்தி இருத்தலால், சிவன் எனப்படும் - அரன் என்று சொல்லப்படும் (எ-று.)

14. கடும்பெருங்குளிர் உடன் - கொடிய பெரிய சூலத்தோடு பொருந்தி, உக்கிரம் மேவலின் - உக்கிரங்கொண்டிருத்தலால், காளியை

நிகர்க்கும் - காளியைப்போன்றிருக்கும், எழு - வளை தடியையும், ஆம் - (நன்கு) அமைந்த, நெடும்பெரு முசலமும் - நீண்ட பெரிய இரும்பு உலக்கையும், கட்கமும் - வாளும் ஏற்றலின் - ஏந்தி இருத்தலால், நிசிசரர் - அரக்கரை, போன்றுளது - போன்றிருப்பது, அரிய - அருமையாகிய, கொடுந்தனு - வளைந்த விற்களையும், வேல்களை - வேல்களையும், தாங்கிடலால் - தாங்குதலால், கொற்றவர் தம்மை நிகர்த்துளது - அரசர்களை ஒத்திருப்பது, ஆம் அச் சதுர வல் மதில் - இங்ஙனமாகிய அந்தச் சதுரமாகிய வலிய மதில், பொறிகளை அடக்கலின் - பொறிகளை அடக்கிக்கொண்டிருத்தலால், முனிவரர் அனையது - சிறந்த முனிவர்களைப்போன்றிருப்பது.

உக்கிரம் என்பதனைக் காளிக்குக் கொள்ளும்போது 'கோபம்' எனவும், மதிலுக்குக் கொள்ளும்போது 'பயங்கரம்' எனவும் பொருள் கொள்க.

'பொறிகள்' என்பதனை முனிவர்களுக்குக் கொள்ளும்போது 'மெய்வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்து ஞானேந்திரியங்கள்' எனவும், மதிலுக்குக் கொள்ளும்போது 'எந்திரங்கள்' எனவும் பொருள் கொள்க.

பாசுர இலக்கம்:

15. வச்சிராயுதங்கொடு - வச்சிராயுதத்தை ஏந்தி, விண்ணகம் மேவலின் - விண்ணுலகிற் பொருந்துதலால், வானவர்க்கு இறைவனை - தேவர்களுக்கு அரசனான இந்திரனை, நிகர்க்கும் - ஒக்கும், உச்சம் ஆய் - உயரம் அமைந்து (அல்லது மேன்மையுடையதாகி), வளைந்து - சூழ்ந்து, அந்தமா நகர்க் காத்தலின் - அந்தப் பெரிய நகரைக் காத்தலால், கலை ஊர்தியை - துர்க்கையை, பொருவும் - ஒக்கும், பிச்சுவா கேடயம் தண்டுவாள் கோடலின் - பிச்சுவா கேடயம் கதை வாள் இவைகளைக் கொண்டிருத்தலால், பெருவலி வீரரை - மிக்க வலிமையினைக்கொண்ட வீரரை, புரையும் - ஒக்கும், நான்கு எனும் - நான்கு வகை என்று சொல்லப்படும், சிகரிவாய்தமைக் கொடு - கோபுரவாயில்களைக் கொண்டிருத்தலால், நிச்சம் ஆம் - நித்தியமாகிய, நிகமங்கள் நான்கையும் - வேதங்கள் நான்கையும், நிகர்க்கும் - ஒக்கும்.

18. தவமணி - சிறந்த குதிரைகளுக்கு உரிய சுழிகளில் இது மிகவும் சிறந்தது.

24. தேசு - ஒளி.

46. கேதனங்கள் - கொடிகள், கேது - கொடி, மாடம் - உப்பரிகை, பித்தி - சுவர்.

## நான்காவது அரசியற்படலம்

பாசுர இலக்கம்:

7. பவனம் பாற்கடல் என்று-இருப்பிடம் பாற்கடல் என்று கொண்டு.

---

## ஐந்தாவது உபய வேள்விப் படலம்

8. (மேலே பிரார்த்திக்கப்பட்ட எம்மானாகிய திருமால்) இருசுடர் - சந்திரனும் சூரியனுமாகிய இரண்டு சுடர்களையும், வியாழன் - குரு கிரகத்தையும், வெள்ளி - சுக்கிர கிரகத்தையும், இந்திர தனு - இந்திர வில்லையும், மின் - மின்னலையும், கொண்டு - (தன்பாற்) கொண்டு, ஒரு முகில் - ஒப்பற்ற மேகமானது, பொன் குன்று ஏறி - பொன் மலையின்மேலேறிக்கொண்டு, ஒப்பு இலாது - தனக்கு ஒப்பாகியது வேறொன்றும் இல்லாததாகி, எழுந்தது என்ன - எழுந்தாற்போல, வரி வளை - கீற்றுக்களை உடைய சங்கையும், ஆழி - சக்கரத்தையும் ஏந்தி, மணிக்குழை - இரத்தினங்களைப் பதித்த குண்டலங்களையும், பல் ஆரம் - பல வகையாகிய இரத்தின மாலைகளையும், பூண்டு - அணிந்துகொண்டு, அருந்திருவோடு - பிறர் காணற்கு அரிய குண நலங்களை உடைய திருமகளுடன், புள் வேந்தின் அம்புயமிசை வந்தான் - பறவைகளுக்கு அரசனாகிய கருடனுடைய அழகிய புஜங்களின்மீது எழுந்தருளி வந்தான்.

இரு சுடர் சங்கு சக்கரங்களுக்கும், வியாழன் வெள்ளி இரண்டு குண்டலங்களுக்கும், இந்திரன் வில் பல வகையாகிய இரத்தின மாலைகளுக்கும், மின்னல் பிராட்டிக்கும், பொன் மலை பெரிய திருவடிக்கும் (கருடனுக்கும்) உவமையாம் என்று கொள்க. இது நிரல் நிறைப்பொருள் கோளில் வந்த முற்றுவமையணி எனப்படும்.

---

## ஆறாவது திருவவதாரப் படலம்

12. 'சக்கரவர்த்தியாரே! கரும்பைப்போன்ற மொழியுடையவளாகிய கோசலை அளித்த கரிய மேகம் போன்ற இராமபிரான் அவதரித்ததாகிய கடக இலக்கினத்தில், குரு என்னும் கிரகம் உச்சம் பெற்றுளது. சோடச கலைகளோடு கூடிய சந்திரக்கிரகம் ஆட்சி பெற்றுளது. நிலைபெற்ற அழகிய துலா ராசியில் சனிக்கிரகம் உச்சம் பெற்றுளது. மகர ராசியில் செவ்வாய் என்னுங் கிரகம் உச்சம் பெற்றுளது. நீரில் வசிப்பதற்குரிய மீன ராசியில் சுக்கிரக்கிரகம் உச்சம் பெற்றுளது. மேடராசியில் சூரியக்கிரகம் தன்னுடன் புதக்கிரகமும் இருக்க உச்சம் பெற்றது. தனுசு ராசியில் இராகு இருக்க அவனுக்கு நேராம் ஏழாம் இராசியாகிய மிதுனத்தில் கேதுக் கிரகம் உளது.

சொல்லுதற்கு அரிய கோசலை பாக்கியத்தோடு தங்களுடைய பாக்கியத்தை யும் என்னவென்று சொல்லுவோம்! பூமியில் எவருக்கு இவ்வாறு கிரகங்கள் அமைந்திருந்தன!' என்று சொல்லி, மேலும் சொல்லலானார்கள்.

பாசுர இலக்கம்:

13. 'இலக்கினாதிபதியாகிய சந்திரக்கிரகமானது அந்த இலக்கினத்தில் ஆட்சி பெற்றுளது. ஒன்பதாம் இடத்திற்கும், ஆறும் இடத்துக்கும் உரிய தான குரு என்னுங்கிரகம் இலக்கினத்தில் உச்சம் பெற்றுளது. இரண்டாம் இடத்துக்கு உரியதாகிய சூரிய கிரகமானது பத்தாம் இடத்தில் உச்சம் பெற்றுத் தனக்கு உகந்ததும் மூன்றும் இடத்துக்கும் (பன்னிரண்டாம் இடத்துக்கும்) உரியதுமான புதக்கிரக சகிதமாய் இருக்கின்றது. நன்மையே பயக்கக்கூடிய ஏழாம் இடத்துக்கும் எட்டாம் இடத்துக்கும் உரியதாகிய சனிக்கிரகமானது உச்சம் பெற்று நான்காம் இடத்தில் வந்து நிற்கின்றது. மலையைப்போலச் செல்வத்தைக் கொடுத்தற்கு உரியதும் பதினோராம் இடத்துக்கும் நான்காம் இடத்துக்கும் உரியதுமாகிய சுக்கிரக் கிரகமானது பாக்கியம் குவிதற்குரிய ஒன்பதாம் இடத்தில் உச்சம் பெற்றுளது. தனுர் ராசியாகிய ஆறும் இடத்தில் இராகுவும், மிதுன இராசியாகிய பன்னிரண் டாம் இடத்தில் கேதுக் கிரகமும் சொல்லுதற்கரிய நற்பலன்களைக் கொடுப் பதற்கு உரியனவாய் இருக்கின்றன. (உச்சக்கிரக மைந்தில்) சூரிய னொழிந்த மற்ற நான்கு கிரகங்களும் பதினோராமிடத்திற் குரியனவாகி யிருக்கின்றன. வேந்தர் வேந்தரே! இவ்விதமாகக் கிரக நிலைகள் யாவருக்கு அமைந்தன ?' என்று சோதிடர்கள் கூறி மேலுங்கூறுவாரானார்கள்.

14. 'மற்ற மனைவியர் இருவரும் ஈன்ற மற்ற மூன்று பிள்ளைகளின் சாதகங்களும் சாலச்சிறந்தனவே. அவர்களால் தங்களுக்கு நன்மையே உண் டாம். வேந்தர் வேந்தரே! தங்களுக்குத் தோன்றிய பிள்ளைகள் நால்வருள் இராமன் சூரியனையும், இலக்குமணன் சந்திரனையும், பரதன் குருவையும், சத்துருக்கனன் சுக்கிரனையும் போன்று விளங்குவார்கள்.' இச்செய்யுளில் இரண்டாம் அடியில் 'மிக்க' என்று இருப்பதைச் 'சால' எனத் திருத்திக் கொள்க.

42. வெண்மையாகிய மணியும் கருமையாகிய மணியும் தசரதருடைய பிள்ளைகளைப்போல உருவம் பெற்றுப் பார்ப்பவர்களின் கண்கள் (ஒளி மிகுதியினால்) கூசுதற்குக் காரணமாகிய மாளிகைகளையுடைய தெருக்களி லும் சோலைகளிலும் உலாவுதல் போல ஆதிசேடனுடைய அவதாரமாகிய இலக்குமணரும், திருமாலின் அவதாரமாகிய இராமரும் கவளத்தினைக் கைக்கொள்ளும் யானையின் கதியையொக்கச் செல்வார்கள். 'சேடனும் கரிய மாலும் கவள யானையின் கதியின் ஏகுவார்' என இயைக்க.

பாசுர இலக்கம்:

43. 'கரிய மாவொடு..................................ஏகுவார்.'

'மற்று இரு மைந்தரும் கரியமாவொடு வெளிய மாத்தரு கன்றின் அரிய வீதி நற்சோலை குன்றாறு எங்கணும் ஏகுவார்' என இயைக்க.

மற்றை இரண்டு மைந்தர்களாகிய பரதரும், சத்துருக்கனரும் கரிய யானையும் வெள்ளை யானையும் ஈன்ற (இரண்டு) கன்றுகளைப்போல வீதிகளும், சோலைகளும், ஆறுகளும், குன்றுகளுமுதலிய எல்லா இடங்களிலும் செல்வார்கள்.

44. 'தரையுளார்..........................என்பர்.'

(முகிலின் மேனியன் - இராமன்) மேகம்போன்ற திருமேனியினை உடைய இராமன் தம்முடைய நாட்டில் இருப்பவர்களை நோக்கிக் கருணையுடன் 'உங்கள் வீட்டிலிருப்பவர்கள் நிறைந்த மேன்மையாகிய மகிழ்ச்சியை உடையவர்களாயிருக்கின்றார்களோ?' என்று (கேட்பன்; அங்ஙனம்) கேட்க அவர்கள் 'உன்னுடைய சிறந்த நகரில் வாழும் எங்களுக்கு எப்பொழுதும் இன்பமே உண்டாகின்றது (துன்பம் சிறிதும் உண்டாதலின்று), நீ பல ஊழிக்காலத்திற்குப் பிறகும் உலகத்தைக் காத்து வாழக்கடவாய்' என ஆசி கூறுவார்கள்.

---

## ஏழாவது கையடைப் படலம்

1. அன்னணம் - அப்படி, அளக்கர் - கடல், மூன்றும் ஐந்தும் - காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றும், பஞ்சேந்திரியங்களும்.

---

## எட்டாவது தாடகை வதைப் படலம்

5. சிற்சிறு காலை - விடியற்காலை.

6. 'மன்குல மூன்றினுள் மதிப்பு மிக்கதாம் என் குல மைந்தர்கள், வன்சுரம் இறையும் செல்கிலர்; ஐய! நீ அன்னவர்க்கு மறைசொல்' என்பவன் போன்று இரவி தோன்றினன் என இயைக்க. வன்சுரம் - வலிய பாலை நிலத்தில், இறையும் - சிறிதும், மறை - மந்திரம்.

7. அப்பாலை நேர் - பாலைக்கு நேரில் வரும், (மின்னும் மேகமும் என இயைக்க).

11. படி அளந்தவன் பாயலாம் அவன் - உலகளந்த திருமாலுக்குப் படுக்கையாகிய ஆதிசேஷ அவதாரமாகிய இலட்சுமணன்.

பாசுர இலக்கம்:

15. சுரதம் - புணர்ச்சி இன்பம்.

21. இட்டி - யாகம்.

22. பூதரம் - மலை.

25. தெறும்-அழிக்கும் (இங்கு அழிப்பாள் என்று பொருள் கொள்க.)

26. பகழி - பாணம்.

## ஒன்பதாவது கௌசிக வேள்விப் படலம்

1. பொன்னி நாயகன் - இராமன், (பொன்னி - திருமகள்.)

23. கொலைபுரிவோரிற் கூரன் - கொலைபுரிகின்றவர்களைவிடக் கொடியவன், கூரன் - கொடியவன் ('குரூரன்' என்பதன் மரூஉ)

30. சேதம் செய்திட - அழிக்க, செற்று - அழித்து.

32. ஊறி நிற்றலின் - மனம் படிந்து இருந்ததனால்.

33. நாகம் மாதரு பறித்து - மலைகளையும் பெரிய மரங்களையும் பிடுங்கி.

35. இராமனை அண்டி - இராமனை அணுகி.

39. நிசி - இரவு, மூவர் - விசுவாமித்திரரும் இராம லக்ஷ்மணரும்.

## பத்தாவது அகலிகைப் படலம்

4. யாத்து - பிணித்து.

6. வாரணம் - யானை.

7. பொங்கடி - யானை, அமலை - பரிசுத்தையாகிய திருமாமகள்.

9. வடம் - கயிறு.

10. இந்திரைக்கு நாயகன் - இலட்சுமிக்கு நாயகன்.

18. போசனப்பேர் உடைய சுதன் அயனமானுன் - போசனன் என்னும் பெயரையுடைய பிள்ளை பிறந்தான், (அயனம்-பிறப்பு) கூர்மம் - ஆமை.

20. தளம் - சேனை.

பாசுர இலக்கம்:

42. விதேக நாடு - மிதிலை.

43. ஆரைப்புடை உறும்-மதிலின் பக்கத்திற் பொருந்திய, (ஆர்- மதில்.)

45. வலாரி - இந்திரன்.

47. புரம் எலாம் - அவயவங்கள் யாவும் (புரம் - உடம்பு, அது முதலாகு பெயராய் அவயவங்களை உணர்த்தியது.) அதுபோல் - அம்முனிவர் சொன்னபடியே, சசி பதி - இந்திராணியின் நாயகனுகிய இந்திரன்.

55. கனகையின் கேள்வன் - திருமகள் நாயகன் (கனகம் - பொன், கனகை-பொன்னுக்கு உரியாள், இது பொன்னி என்பதன் பரியாயப்பெயர்.)

---

## பதினோராவது மிதிலைக்காட்சிப் படலம்

3. பின் இரண்டு அடிகளின் பொருள்: மேகங்கள் வந்து பொருந்தப் பெற்ற முற்றத்தினையுடைய சிறந்த உப்பரிகைகள்மீது கொடிச்சீலைகள் ஆடுங்காட்சி எப்படி இருந்தது என்றால்.

4. உலக நங்கையானவள் தன் உந்தியில் தோன்றிய திலகவாள் நுதற் சீதைக்கு அங்கு ஏற்ற ஓர் சிலை கொள் நாதன் தெருவில் வந்தான் என்று (எண்ணி) அவள் அலகு இல் கைகளால் அழைப்பது போன்ம் என இயைக்க.

உலக நங்கை - பூமியாகிய பெண், தன் உந்தியின் தோன்றிய - தன் வயிற்றில் தோன்றிய, திலகம் வாள் நுதல் சீதைக்கு - பொட்டை அணிந்த ஒளியைக்கொண்ட நெற்றியை உடைய சீதாபிராட்டிக்கு, ஓர் சிலை கொள் நாதன் - ஒப்பற்ற வில்லை ஏந்திய நாயகனுகிய சீராமன், அவள் - அந்தப் பூதேவி, தன் அலகு இல் கைகளால் - தன் அளவு இல்லாத கைகளால், போன்ம் - ஒக்கும், ('போலும்' என்னும் சொல் ஈற்றயல் உகரங்கெட்டு லகரமெய் னகரமெய்யாகத் திரிந்து 'போன்ம்' என்றாயிற்று.)

5. சதங்கைகளும் வெண்மையாகிய முத்துமாலைகளும் தம்பால் அமையப்பெற்று, ஐந்து வகையாகிய பட்டினால் ஆக்கப்பெற்ற பல வகையாகிய கொடிகள் நெருங்கிய மாடங்கள்தோறும் (இருந்து) ஆடுதல், கூத்தாடும் பெண்கள் (அரங்கில்) நின்று ஆடுதலை ஒக்கும். ('ஆடுவன' என்பதில் உள்ள ஆடுதல் என்னுஞ் தொழிற்பெயரைக்கொண்டு அதனை எழுவாயாக்கி 'மானும்' என்னும் பயனிலையோடு கூட்டி முடிக்க.

6. பொங்கடி - யானை, (உயர்ந்த அடியை உடையது; இது வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 'காட்சியை வீதியிற் கண்டார்' என இயைக்க.)

பாசுர இலக்கம்:

11. நகிலம் - தனம், கந்துகம் - பந்து.

12. தேவரை அளிக்க வந்த சேவகன் காண - தேவர்களைப் பாதுகாத்தற்காகப் புவியின்கண் அவதரித்தருளிய ஸ்ரீராமனைத் தரிசித்தற்காக, வானின் மேவு அரமகளிர் - வானத்தின்கண் உள்ள தெய்வ மாதர்கள்.

13. பண் தரும் மொழியினர் தம் பதியொடும் மேவி - இசைப் பாட்டைப்போன்ற சொற்களை உடைய பெண்களுள் ஒவ்வொருத்தியும் தன் தன் நாயகனோடு கூடி (இது பன்மையில் ஒருமை வந்த வழுவமைதி, 'ஏவலிளைஞர் தாய் வயிறு கரிப்ப' என்பது காண்க.)

தண்டலை - சோலை (தண் தலை - குளிர்ச்சியாகிய இடத்தை உடையது என்பது இதன் பொருள். இது பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.)

14. பளிங்கு கற்படிகள் மேவும் பட்டங்கள் தோறும் - பளிங்கு கற்களினால் அமைக்கப்பட்ட படிகளை உடைய ஒவ்வொரு குளத்தினும், மாதர் - பெண்கள், உளங்களின் வெளிய நீரில் - தூய்மையாகிய தங்கள் மனம்போல வெண்மையாகிய நீரிலே.

15. கந்திகள் இரண்டின் நாப்பண் - இரண்டு பாக்கு மரங்களுக்கு இடையில் (குறுக்காகத் தொடுக்கப்பட்ட சிறிய கம்பத்தினின்றும்), கனக சங்கிலிகள் பூட்டும் சந்தனப்பலகைமீது ஆம் - பொற்சங்கிலிகளினால் பூட்டப்பட்ட சந்தன மரத்தினாற் செய்யப்பட்ட பலகையின்மீது அமைக்கப்பட்டுள்ள, தமனியத்தவிசில் ஏறி - பொன்னாசனத்தின்மீது ஏறி இருந்து, மைந்தரோடு ஆடும் மாதர் - தங்கள் கணவர்களுடன் ஊசலாடும் பெண்கள், வான் அஃது ஏகற்கு அஞ்சி-விண்அளவும் அவ்வூசல் செல்லுதற்குப் பயந்து.

19. தேவரே ஆதி யாவர் தேசிற்கும் - தேவர் முதலிய எல்லாருடைய அழகிற்கும், ஒப்பாச்சொல்வோன் யாவன் - உவமையாகச் சொல்லப்படும் (அழகையுடையவன்) எவன், அவன் - அவனுடைய (மன்மதனுடைய) அழகு, இராமன் எழில் எனும் கடலின்கண் - இராமனுடைய அழகாகிய கடலில், மேவு அலைத்திவலை என்னில் - தோன்றும் (அளவில்லாத அலைகளுள்) ஓர் அலையின் துளிகள் பலவற்றுள் ஒரு துளியாம் என்றால், விளம்பு அவன்கு - (பெரியோர் யாவராலும் புகழ்ந்து) சொல்லப்பெறும் அந்த இராமனுக்கு, உவமையாவார் யாவர் - உவமையாகக் கூடியவர் எவருளர் (ஒருவரும் இலர்), திருமால் ஆய இவன்கு - திருமாலின் அவதாரமாகிய இவனுக்கு, இவன் உவமை - இவனே உவமையாவான் (எ-று.)

('யாவன் அவன்' என்னுந் தொடரில் அவன் என்பது அவனுடைய அழகு என்னும் பொருளதாய் நின்றது.)

பாசுர இலக்கம்:

21. 'மந்தரம் அனையது ஆய மாளிகை மேல்மாடிக்கண் அந்தரி உமை பாமாது அனைய பல் சேடியரோடு சீதை தோன்றிட, மால் கண்டான்' என் இயைக்க.

அந்தரி - துர்க்கை, உமை - பார்வதி, பாமாது - சரஸ்வதி, தானே இந்திரையாவாள் - தானே இலக்குமியாய் இருப்பவளும், இணை இலா அகில லோக சுந்தரியாய சீதை - எந்த உலகினும் தனக்கு ஒப்பாவார் ஒருவரும் இன்மையின் எல்லா உலகங்களுக்கும் தானே தனிச்சுந்தரியாய் இருப்பவளாகிய சீதாப்பிராட்டி.

30. கிரௌஞ்சம் என்னு மலையின்மேல் சுப்பிரமணியன் எறிந்த வேலானது அம்மலையிற் பாய்ந்தது போலப் பூங்கொடி போன்ற பிராட்டி நின்று எறிந்த கண்களாகிய வேல்கள் இராமபிரானுடைய தோள்களாகிய மலைகளிற்பாய, அப்பொழுது மன்மதன் மலர்களாகிய பாணங்களை எய்தல் போல இராமபிரான் அப்பிராட்டியின் கொங்கைகளாகிய மலைகளின்மீது கண் தாமரையாகிய அம்பை எய்தனன்.

கண் தாமரை - கண்ணாகிய தாமரை; மன்மதனுடைய மலர் அம்புகள் ஐந்தனுள் தாமரை மலர் ஒன்றாதல் கொண்டு 'தாமரை எய்தான்' என்றார்.

32. செம் அயிலானும் - செவ்விய வேலை ஏந்திய இராமபிரானும்.

34. அம்மேல் மாடிக்கண் இருந்த சீதாப்பிராட்டி மேகம் போன்ற நிறத்தினைக்கொண்ட இராமனுடைய திருமேனியின் அழகைக்கண்டு அவனுடைய அத்திருமேனியில் தான் படிதற்குக் கூடாமையால் மயக்கம் கொண்டவளானாள். அவளுடைய கொங்கைகளாகிய குன்றுகள்மேல் அக் குல வேந்தன் எய்த (கண்ணாகிய) தாமரையின் குணம் இதுவன்றோ?

முப்பதாம் செய்யுளில், 'அவள் கொங்கைக் குன்றுகள்மேல் கட்டாமரை விட்டான் குலவேந்தே' என்றதை ஈண்டு நோக்குக. மன்மதனுடைய மலரம்புகள் ஐந்தனுள் தாமரை மயக்கத்தைச் செய்யும் என்பவாகலின் 'தூய்முலை, ஏகுந்தாமரையின் குணம் ஈதன்றே?' என்றார்.

36. 'மங்கையின் பெண்மையும் நிறையும் அன்னவன் பின் செல்லுதலால் அறையும் கைவளை அம்தரை வீழ நின்றனள்' என இயைக்க.

கைவளை அம்தரை வீழ - கைகளில் உள்ள வளைகள் அழகிய பூமியில் விழ.

39. மெல் மலர் ஆதிய - (படுக்கையில் இடப்பட்ட) அந்த மென்மையாகிய மலர் முதலியன, விரக வெப்பத்துக் கருகி - விரகத்தால் உண்டாகிய

வெப்பத்தினுற் கருகிப்போக, காய் சந்தம்-(அவ்விரக வெப்பத்தால்) காய்ந்த சந்தனம், கண் அறல் பெருகி - கண்ணீர் மிகுந்து, கொங்கைமேல் வீழ்தலின் - தனங்களின்மீது விழுதலால், பேர் அளறு ஆய் - மிக்க சேருகி, அந்தத்திரு வெம் மூச்சினுல் - அந்தத் திருமகளின் அவதாரமாகிய சீதாப் பிராட்டியின் வெப்பமான மூச்சினுலே, சிக்கெனக் காயும் - விரைவில் காய்ந்துவிடும்.

பாசுர இலக்கம்:

40. தோடு உலாம் செவி - தோடுகள் பொருந்திய காதுகளையுடைய, தோகையின்மேல் - மயில் போலும் சாயலை உடைய பிராட்டியின்மேல், மதவேடன் விட்டு எறி - மன்மதனுகிய வேடன் எய்த, வெம் சரப்புண்வழி - கொடிய பாணத்தினுல் உண்டான புண்ணில், வாடையும் புக - வாடைக்காற் றும் சேருதலால், வாள் அங்கிமேல் இட்ட - ஒளியையுடைய நெருப்பை மேலே இடப்பெற்ற, தோடு உலாவு பூங்கொம்பு என - இதழ்களைக்கொண்ட மலர்களை உடைய கொம்பு போல, சோர்ந்தனள் - சோர்வை அடைந்தனள்.

புண்வழி என்பதில் 'வழி' ஏழாம்வேற்றுமை உருபு. பிராட்டியைத் தோகை என்றதற்கேற்ப, மன்மதனை 'வேடன்' என்ருர். தோகை - மயிலின் வால்; அது சினையாகு பெயராய் மயிலை உணர்த்த, அஃது உவமையாகு பெயராய்ப் பிராட்டியை உணர்த்திற்று.

42. ஆசுகம் - காற்று.

43. 'அந்தித் தேவி கூந்தலில் மலர்கள் சூடி, மெல்மொழி ஆடி, அடிச் சிலம்பு ஒலிக்கத் தன் குழலின் வாசனையுடன் கூடிய தென்றலோடு உற்ருள்' என இயைக்க.

அந்தித்தேவி - அந்திக் காலமாகிய தெய்வப்பெண், கா எனும் கூந்தல் தன்னில் - சோலையாகிய கூந்தலிலே, பல மலர் சூடி - பல வகையாகிய மலர்களை அணிந்துகொண்டு, மேவும் மாங்குயிலின் ஓதை மெல் மொழி ஆடி - பொருந்திய மாமரத்துக் குயிலின் ஓசையாம் மென்மையாகிய சொற்க ளைப்பேசி, ஏகும் ஆ இனம் மணியின் ஓதை அடிச்சிலம்பு ஒலிக்க - (மனையினை நோக்கிச்) செல்லும் பசுக்கூட்டங்களின் கழுத்தில் கட்டப்பட்ட மணிகளின் ஓசையாகிய பாதச்சிலம்பு ஒலிக்க, தன் குழலின் வாசத்தென்றலோடு - (காவெனும்) தன் குழலினுள்ள மலர்களின் வாசனையோடு கூடிய தென்றற் காற்றுடன், உற்ருள் - வந்தாள்.

44. 'இரவு என்று ஓதும் வேறு ஒரு பெண்ணும் அணங்கினுக்கு அணங்கு செய்வான் திலகம் இட்டு, மலர்கள் சூடி, இருள் மிக்காக வேக மோடு போந்தாள்' என இயைக்க.

இரவு என்றோதும் வேறு ஒரு பெண்ணும் - இராக்காலம் என்று சொல்லப்படும் வேறு ஒரு பெண்ணும், அணங்கினுக்கு - சீதாப்பிராட்டிக்கு, அணங்கு செய்வான் - துன்பத்தை உண்டாக்கும் பொருட்டு, மாகம் ஆம் முகத்தின்கண் - ஆகாயமாகிய முகத்தில், மதி எனும் திலகம் இட்டு - சந்திரனாகிய பொட்டினை இட்டுக்கொண்டு, மேகம் ஆம் அளகந்தன்னில்-மேகமாகிய கூந்தலிலே, மீன்கள் ஆம் மலர்கள் சூடி - உடுக்களாகிய மலர்களைச் சூடிக்கொண்டு, ஆகம் ஆம் இருள் மிக்கு ஆக - தன் உடம்பாகிய இருள் சிறந்து பொலிவுடையது ஆக, வேகமோடு போந்தாள் - விரைவோடு வந்தாள்.

பாசுர இலக்கம்:

45. அந்தி நங்கை சென்ற பின் - மாலைக்காலமாகிய பெண் சென்ற பிறகு, அந்திசியாம் பெண் - அந்த இரவாகிய பெண், மன்றல் - வாசனையினையுடைய, அம்கோதை - அழகிய கூந்தலையும், செவ்வாய் - சிவந்த வாயையும், மதி முகம் - சந்திரனைப்போன்ற முகத்தினையும், கற்கண்டு இன்சொல் - கற்கண்டைப்போன்ற இனிய சொல்லையும், குன்று உறழ் கொங்கையாள்கு - மலையைப்போன்ற கொங்கைகளையும் உடைய பிராட்டிக்கு, கொடுமை செய்திருக்கும் வேலை - கொடுமையைச் செய்துகொண்டிருக்கும் சமயத்தில், ஆங்கு அன்றிலும் ஒன்று போந்து - அங்கு ஒரு அன்றிற் பறவையும் வந்து, அறைதல் கேட்டு - கூவுதலைக் கேட்டு, உரைப்பாள் - (பிராட்டி) சொல்லலானாள்.

அன்றிலும் என்பதன்கண் உள்ள உம்மையானது, இரவாகிய பெண் முன்னமே வந்து வருத்திக்கொண்டிருப்பதோடு அன்றிற் பறவையும் வருத்த வந்தது என்னும் பொருளைத் தருதலின், இறந்தது தழுவிய எச்சப் பொருட்டு என்க.

46. அன்றில் - அன்றிற்பறவையே, நின் அகன்றில் தன்னை - நின் (காதற்குரிய) ஆண் அன்றிலை, அகன்று - (நீ) விட்டு நீங்கி, உளம் வாடி நிற்கும் - மனம் வாடியிருக்கும், என்றனை இன்னும் வாட்டற்கு - என்னை இன்னும் (மனம்) வாடச்செய்தற்பொருட்டு, இவண் எய்ந்து - என்னிடம் வந்து, கூவல் என் - கூவுதற்குக் காரணம் யாது? இங்கு யான் நின்றனக்கு இடுக்கண் இயற்றியது உளதோ - இவ்வுலகின்கண் யான் உனக்குத் துன்பஞ் செய்ததுண்டோ? (இல்லையே ஆகையால்), இன்னே சென்றிலையாகில் - இப்பொழுதே இவ்விடத்தைவிட்டுப் போகாமல் (நீ) இருப்பின், யான் வானம் சேர்வன் - யான் வானத்தை அடைவேன் (இறந்துவிடுவேன்), என்னும் காலை - என்று சொன்ன போதே.

என்னுங்காலை என்பதில், இயல்பினால் இறந்த காலத்தில் எதிர்காலம் மயங்கியது.

பாசுர இலக்கம்:

47. கோமேதகத்தாற் செய்த குடம்பெருந்தீபம் ஒன்று - கோமேதக மணியினுற் செய்த குடவடிவமாகிய ஒரு விளக்கு, ஓதம் ஆம் - குளிர்ச்சி அமைந்த, கடலின் நாப்பண் - கடலின் நடுவில், அரிவைக்கென்று எழுந்தது என்ன - (பிராட்டிக்காகத்) தோன்றினுற்போல, தாமோதரப்பேர் அண்ணல் - தாமோதரன் என்னும் பேரையுடைய பெரியோன் (சுவாமி), சலதியைக் கடைபோது - திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில், உற்றது ஆம் ஏக மதியம் - அக்கடலினின்று தோன்றியதாகிய பூரண சந்திரன், கீழைச் சலதிக்கண் - கிழக்குக் கடலினின்று, எழுந்தது - உதயமாயிற்று.

'சலதியினின்று' என ஐந்தனுருபு இருக்க வேண்டிய இடத்தில் 'சலதிக்கண்' என ஏழனுருபு வந்து மயங்கியது.

88. அன்னுன் அதுபோல் இயம்பினன் - அவ்வசிட்ட முனிவர் அப்படியே விசுவாமித்திரரைப் பிரமரிஷி என்று கூறினுர், தனை நிகர் அன்னுன் - தனக்குத்தானே ஒப்பாகிய அவ்விசுவாமித்திரர்.

89. கோதமப்பேர் உடையன் நல்புதல்வன் - கௌதமர் என்னும் பெயரைக்கொண்ட முனிவருடைய மைந்தராகிய சதாநந்த முனிவர், விண்மணி - சூரியன்.

92. யாம் வந்த வீதியில் - (நெஞ்சே!) நாம் வந்த வீதியில், அகம் மேல் - மேல் மாடியில், ஏவும் பணி மடவார் மெல்கொடிகள் இடை - ஏவிய தொழிலைச் செய்யும் தோழியர்களாகிய பூங்கொடிகளின் நடுவில், பூவும் - ஒரு செந்தாமரை மலரும், சிவந்த கனியும் - செந்நிறத்தினை உடைய (கொவ்வைப்) பழமும், நல்குவளைப்போது இரண்டும் - சிறந்த இரண்டு குவளை மலர்களும், தேவும் விரும்பும் இரு செவ்விளநீர்களும் - கடவுளும் விரும்பும் இரண்டு செவ்விளநீர்களும், சேர்ந்து ஒளிர - கூடி விளங்க, பசும்பொற்கொடி ஒன்று மேவும் - ஒரு பசும்பொற்கொடி இருக்கின்றதே! இதுவென்ன வியப்பு!

பூ என்பது முகத்தையும், கனி என்பது அதரத்தையும், குவளை நற்போது இரண்டு என்பது கண்களையும், தேவும் விரும்பு இரு செவ்விளநீர்கள் என்பது தனங்களையும் குறித்து நின்றன. இவை உருவகங்களாம் என்க.

93. ஒரு சேயிழை - ஒப்பற்றமாது (ஒருத்தி), சுருள் கருங்கூந்தல் - சுருண்ட கரிய கூந்தலும், மதிமுகம் - (பூரண) சந்திரனைப்போன்ற முகமும், மானின் துணைவிழிபோல் மருள் இருகண் - மான்களின் இரு கண்களைப்போல மருண்டு பார்க்கும் இருகண்களும், மணிமூரல் - முத்துக்களைப் போன்ற பற்களும், பந்து எனத்திரள் இரு கொங்கை - பந்துகளைப்போலத் திரண்ட

இரு தனங்களும், உடன் - (ஆகிய) இவற்றுடன், பொலன்பாவை - பொன்னாலாகிய பதுமை, திகழ்வதுபோல் - விளங்குவது போல, தெருள் ஒரு மாளிகைமீது - (உண்மைப்பொருளை உணர்ந்தவர்களின்) தெளிந்த அறிவைப்போல மாசின்றி விளங்கும் ஒரு மாளிகைமீது, (நாம் வருகையில்) நின்றாள் - நின்றிருந்தாள்.

முன் செய்யுளும் இதுவும் கோவைப் பிரபந்தத்திற்குரிய 'காட்சி' என்னுந் துறையின் கருத்தமைந்தனவாகும்.

பாசுர இலக்கம்:

94. பேதை நெஞ்சே - அறிவில்லாத மனமே, மாளிகைமேல் நின்ற வாட்கருங்கண் பெண் அகம் - அந்தமாளிகைமீது நின்ற (கண்டார் மனத்தை) வாளைப்போல அறுக்கின்ற கரிய கண்களையுடைய அப்பெண்ணின் இடம், விண் அகமோ - தேவலோகமாகிய இடமாயிருக்குமா! கடல் என் அகமோ - (அன்றித்) திருப்பாற்கடல் என்று சொல்லப்படும் இடமாயிருக்குமா! மலர் மேல் உறைவோன் - (உலகநாயகனுடைய) உந்திக் கமலத்திலே வசிப்பவனாகிய பிரமன், நண் அகமோ - பொருந்தியிருக்கும் சத்திய லோகமாகிய இடமாயிருக்குமா! பணிமேவு அகமோ - நாகர் உறையும் இடமாயிருக்குமா! ஒரு நால்வகையாம் மண் அகமோ - குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என ஒரு நான்கு வகையாய் அமைந்துள்ள பூமியாகிய இடமாயிருக்குமா! எற்கு ஐயம் ஏகுற ஓதுக - எனக்குச் சந்தேகம் நீங்கும்படி நன்குரைப்பாயாக.

'மனமே! அப்பெண்ணை அடைதற்குரிய முயற்சியைச் செய்யாமல் நீ அவள்பால் காதல் கொண்டிருத்தல் அறிவின்மையாம்'' என்பார் 'பேதை நெஞ்சே' என்றார்.

இஃது 'ஐயம்' என்னுந் துறையின் கருத்தமைந்ததாகும்.

95. கண் இமை கொட்டின - கண்கள் இமைத்தன, பூத்தொடை வாடின - பூமாலைகள் வாடின, மேல் நிலை - மாளிகையின் மேலிடத்தில், கால் இரண்டும் நண்ணின - இரண்டு கால்களும் பொருந்தின, ஆல் - ஆதலால், அவள் நல் மானவ நங்கையே - அவள் சிறந்த மானிட மாதே, எண்ணும் - நாம் நினைக்கின்ற, அன்னவள் அம் முகம் நோக்கின் - அவளுடைய அழகிய முகத்தை நோக்கினால், இறைக்குலத்துப் பெண் எனல் ஆம் - அரசர்குலப் பெண் என்று சொல்லுதலாம் (ஆதலின்), மணஞ்செய்வதற்கு ஏற்ற பெற்றியளே - நாம் மணம்புரிந்துகொள்ளுதற்குத் தகுதியாகிய தன்மையை உடையவளே.

இது 'தெளிதல்' என்னுந் துறையின் கருத்தமைந்ததாகும்.

மனமானது ஆய்ந்து, 'அவள் மானிட மாதே. அரசர் குலத்துப் பெண்ணாகவும் இருக்கின்றாள். அங்ஙனம் ஆயினும், அவளை நாம் விரும்புதல் போல அவளும் நம்மை விரும்பினன்றோ அவளை நாம் மணம் புரிதல் கூடும்?' என்று கேட்ட கேள்விக்கு இராமபிரான் விடை கூறுதலை அடுத்த செய்யுளிற் காண்க.

பாசுர இலக்கம்:

96. காவியை நேர் விழி - கருங்குவளை மலரைப் போன்ற கண்கள், நஞ்சு என காண்கினும் - விஷம்போலக் காணப்பட்டாலும், காதல் கொள் - தன்னிடம் காதல்கொண்ட, நம் ஆவியை ஓம்புறும் - நம்முடைய உயிரைக் காத்தற்குக் காரணமாகிய, அமிழ்து உறும் - அமுதம் பொருந்திய, செங்கனி வாயதன்கண் - சிவந்த (கோவைப்) பழம்போன்ற வாயின்கண், மேவிய புன்நகை - பொருந்திய புன்சிரிப்பு, நம்மேல் விருப்பை விளக்குதலால் - நம்மீது அந்நங்கைக்கு விருப்பம் உள்ளமையைத் தெரிவித்தலால், ஓவியம் அன்னவள் உள்ளக்கருத்தையும் ஓர்ந்தனம் - சித்திரப் பாவைபோன்ற அவள் உள்ளத்தின் கருத்தையும் நாம் அறிந்துகொண்டோம்.

இது 'முறுவல் குறிப்புணர்தல்' என்னுந் துறையின் கருத்தமைந்தது.

'ஆதலின், அதில் ஐயம் உறுதற்குக் காரணம் இல்லை' என்பது எஞ்சி நின்றது.

97. ஆஇனும் - ஆ! இன்னும் (ஒன்று சொல்லுகின்றேன்: அஃதியாதெனில் அவள் கன்னிகையோ, மணம் புரிந்துகொண்டவளோ என்னும் ஐயம் உண்டாதல் கூடும் என்பதே), அன்னவள் நல் கன்னி மாடத்து அமர்ந்து - அவள் சிறந்த கன்னிமாடத்திலே இருந்து, பல சேயிழையாரொடு மேவியது அன்றி - பல பெண்களோடு பொருந்தி இருப்பதல்லாமல், திரு அனையாள் - திருமகளைப்போன்ற அப்பெண்ணினுடைய, சாயலை நோக்கிடில் கன்னிகையே - சாயலைப்பார்த்தாலும் அவள் கன்னிகையே என்பது தெரிகின்றது, அதில் சங்கை இன்று - அதில் ஐயம் இல்லை, ஆல் - ஆகையால், மேய நம் வேட்கையில் கோது இலை - அவள்பாற் பொருந்திய நம்முடைய வேட்கையிலே குற்றம் இன்று, மேல் எத்தனம் செய்வம் - இனி (அவளை அடைவதற்குரிய) முயற்சி செய்வோம். இல்லையென்பது இலையெனத் தொகுத்தல் பெற்றது.

98. என்று இந்தவாறு - என்று இப்படி, மனத்தோடும் ஓதி இருப்பவன்மேல் - தம் மனத்தின்பாற்கூறி இருக்கும் பெரிய பெருமாள்மீது, அந்த நிசிதனில் - அந்த இரவில், அந்த வேளும் - அந்த மன்மதனும், சென்று நின்று பகழி விட்டான் - சென்று நின்று மலர்க்கணைகளை எய்தனன்.

அந்த மாமதி - அந்தச் சிறந்த சந்திரன், அத்த மின்சார தீபம் - கண்ணுடியில் இடப்பட்ட மின்சார விளக்கு, சேண் உறல் போல் - வானத்தில் இருப்பது போல, ஈர் எண் கலை விரித்து - பதினறு கலைகளின் ஒளி எங்கும் பரவச் செய்து, தோன்றி நின்றனன் - தோன்றி இருந்தனன்.

'நின்று தோன்றினன்' என்பதைத் 'தோன்றி நின்றனன்' என விகுதி பிரித்து இயைக்க. ஈண்டு 'நிலவு' என்பது நிலவினல் உண்டாக்கப் படும் ஒளியை உணர்த்தியது. 'அத்தம்' என்பது தெலுங்கினின்று வந்த திசைச்சொல்.

---

## பன்னிரண்டாவது கார்முகப் படலம்

பாசுர இலக்கம்:

1. பரிமா - குதிரை.

2. உவகை - சந்தோஷம்.

3. அருத்தி - ஆசை, நிவந்தனை - (நிபந்தனை) உறுதி, மாறு ஆய் - விரோதம் ஆகி.

7. கொற்றமும் - வெற்றியும், ஏர் இயல் - அழகு பொருந்திய.

14. விற்பனர் - புலவர்கள்.

16. மைதிலியை - சீதையை.

---

## பதினுன்காவது வழி விளையாட்டுப் படலம்

1. வாயசம் - காக்கை.

3. கல்லகம் ஆம் மணி - மலைகளில் உண்டாகும் இரத்தினங்கள், எல் எழும் - பகலில் தோன்றும்.

4. நத்து அனை - சங்கைப்போன்ற (வெண்ணிறமாகிய)

5. ஆக்கு அறுசுவை - ஆக்கிய ஆறு சுவையை உடைய (ஊண்).

6. மரைப்பூ - தாமரைப்பூ ('தாமரை' என்பது முதற்குறையாகி 'மரை' என நின்றது.)

10. ஐம்மயில் - ஐந்து மயில், இப்பரிசு - இந்தப் பந்தயப் பொருள், எனவும் - என்று கூறலும்.

பாசுர இலக்கம்:

11. மல்லரல் (மல்லாரல்) - வயிறு முகம் முதலிய முன்புறம் மேலாய்க் கிடத்தல்.

('மல்லாரல்' என்பது குறுக்கல் விகாரம் பெற்று 'மல்லரல்' என்றாயிற்று.) பானல் - கருங்குவளை.

13. நானம் சாந்தமும் - நீராடுதலால் வந்து சேர்ந்த சந்தனமும், அகலம் சாந்தமும் - மார்பினின்று வந்து சேர்ந்த சந்தனமும், மஞ்சனப் பொடி - நீராடுகையில் உடலில் தேய்த்துக்கொள்ளும் வாசனைப்பொடியும்.

30. அனிகம் - சேனை.

## பதினைந்தாவது எதிர்கோள் படலம்

2. மகுட தோரணம் - தோற்ற வேந்தர் அணிந்திருந்த கிரீடங்கள் தொங்கவிடப்பட்ட தோரணம்.

3. வனசக்கண்ணன் - இராமபிரான்; (செந்தாமரை மலர் போலுங் கண்களையுடையவன்; பெரிய பெருமாள்).

12. கய துரக பதாதி - யானைப்படையும், குதிரைப்படையும், காலாட் படையும்.

இம்மூன்றையுங் கூறியதனால் தேர்ப்படையுங் கொள்க. இங்ஙனம் கொள்ளுதல் உபலக்ஷணம் எனப்படும்.

14. பனக பூடணன் - சிவபிரான் (பாம்புகளை ஆபரணமாக அணிந்தவன்; 'பன்னகம்' என்பது தொகுத்தலாய்ப் 'பனகம்' என்றாயிற்று.)

இருதிறப்படைகள் - அயோத்திப்படைகளும் மிதிலைப் படைகளும்.

## பதினாறாவது நகரலங்காரப் படலம்

4. தீபம் படல்களால் மறைப்பார்போல் - விளக்கைக் குறுக்காகப் படல்களை இட்டு மறைப்பவர்களைப்போல, ('பிராட்டியினுடைய திருமேனியின் அழகை அணிந்த அணிகள் மறைத்தன' என்பது கருத்து).

13. தொத்து அலர் - கொத்தாகிய மலர்கள்.

14. தாரணம் செய்துகொண்ட - தரித்துக்கொண்ட.

15. பொலிவு உற - அழகு பொருந்த, இதைப் பொற்புறவென்று மாற்றிக்கொள்க.

## பதினேழாவது திருமணப் படலம்

பாசுர இலக்கம்:

2. பீதாம்பரங்கள் - பொன் ஆடைகள், ('பீதாம்பரம்' என்பது குறுக் கல்விகாரமாய்ப் 'பிதாம்பரம்' என்றாயிற்று. பீத அம்பரம் பீதாம்பரம் என்றானது தீர்க்க சந்தி.)

9. கூரிய - கூர்மையான அறிவினை உடைய, இப்பர் - வணிகர், கொழுப் படையாளர் - வேளாளர்.

17. அனகை - பரிசுத்தை (சீதாபிராட்டி).

22. வதுவரர் - மணநாயகனும் நாயகியும்.

27. அவண் கார் மின்னோடும் புகுந்தால் என - அங்கு மேகம் மின்ன லோடு வந்தாற்போல.

---

## பதினெட்டாவது பரசிராமப் படலம்

14. வலாரி - இந்திரன், (வலன் என்னும் அசுரனை அழித்தவன்.)

15. பிஞ்ஞகன் - சிவபிரான்.

17. நாண் - கயிறு (இங்கு வில்லின் கயிறு)

22. ஓகை - சந்தோஷம்.

## இராமாயண சூடாமணிப் பால காண்டத்தின்
அருங்கவி யுரையும், அரும்பதவுரை முதலிய உரைகளும்
முற்றுப்பெற்றன.

---

## இவ்வுரைகளைப்பற்றிய விவரங்கள்.

இப் பாலகாண்டத்தில் பற்பல அருங்கவிக ளிருப்பினும் அவற்றில், கற்றோர்களே பொருளுணருதற்குச் சிறிது மயங்கக்கூடியனவாகிய பல அருங் கவிகளில் சில கவிகளுக்கு இயைபுகாட்டிய பதவுரையும், சில கவிகளுக்கு அத்தகைய பொழிப்புரையும், சிற்சில கவிகளுக்கு ஒவ்வோரடி விகிதமும், இரண்டிரண்டடி விகிதமும், மும்மூன்றடி விகிதமும் அத்தகைய வுரைக ளும் எழுதியிருப்பதேயன்றி ஏனைய அருங்கவிகளுக்கும், சாதாரண கவிகளுக் கும் அரும்பதவுரைக ளெழுதியிருக்கின்றோம். இவற்றின் தாரதம்மியங்களை அறிஞர்கள் ஆங்காங்கு உய்த்துணர்ந்து கொள்க.

ஸ்ரீ

**இது வெறும் பக்கமாய் நின்றதால், இதையும் நறும்பக்க மாக்கும் பொருட்டு இந்நூலாசிரிய ராகிய விஷ்ணுபாத சேகரால் இயற்றப்பட்டுள்ள பல தோத்திரச் சந்தப் பதிகங்களிலொன்று இங்குப் பதிப்பிக்கப் பெற்றது.**

*விரையே யளையோ டதரேய் மணையும் விழுங்குன் திருவாய்போல்*
*அருணா னியரீ ரறுவோ ரருள்செம் மொழிகொண் டருளுன்றன்*
*இருகா தடியே னதிபுன் கவிகொண் டிடுமோ தெரியேனால்*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (1

*பரிமா முகனோ டொருநா ரதனும் பழமா மறையாவும்*
*சுரமே ழுடன்பா டிடவோர்ந் திடுமுன் றுணைக்கா தகந்தாமோர்*
*நரிகூ விடல்போ லொலிகா ணடியேன் நவைப்பா கொளுமோசொல்*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (2

*இருநா னிலமே லொருதாய் வயினின் றெழுநாள் முதலாவுன்*
*அருளேய்ந் திலனா யவமாங் கடலேய்ந் தமிழ்வேன் றனையாள்வான்*
*வருவேன் திருவோ டெனவே யுனதந் திருவாய் மலர்ந்தேய்வாய்*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (3

*அருமா மலரா ளுடனாங் கிளையா னவனோ டிருங்கானந்*
*தரைமேல் நடந்தாய் தவரோ டமரர் தமையாண் டருள்வான்முன்*
*மருளே யெனையாண் டருள்வா னுடனே வருவாய் திருவோடே*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (4)

*அருமா மறையை முதலில் முடிவி லரியோ மெனவோதும்*
*பெருமா முனிவோ ருளமேய்ந் தொளிரெம் பெருமா னெனுநீயே*
*இருளேய் மனனென் னுளமேய்ந் தருள்வா யெமையீன் றவளோடே*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (5)

*அரியா யயனா யரனோ டுயிரா யகிலாண் டமுமான*
*பரனே யுனையா ளினைந்தேன் பணிந்தேன் பரிவோ டெனையாள்வாய்*
*கருணா கரனே திருவா ழுரனே கலையீ றொளிர்வோனே*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (6)

*ஒருமூன் றுலகோ டுயிர்யா வையுமா யுளநீ யவையாவும்*
*பரிபா லனமே முதலாஞ் செயல்கள் பணுமூ வடிவாகி*
*யருமா மறையா யதுகாண் கிலனா யதுவோ திடநின்றாய்*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (7)

*புரிசூ ததனால் வணங்கா முடியான் புவிகொண் டிடவந்தோ*
*பரதே சிகள்போல் வனமே கிடுமைம் பலசா லிகளுய்வான்*
*ஒருதூ துவனாய் ரதசா ரதியா யுலகோர்ந் திடநின்றாய்*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (8)

*கரமார் சிலையேய் கணையா லுயிர்போங் கலைமான் பிணங்கொள்வான்*
*மரமார் வனமாள் விலிதான் புரமா வனமாள் விலிநீதான்*
*அரனார் சிலையே முறிசெய் துயிரோ டலர்மான் மணங்கொண்டாய்*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (9)

*ஒருபான் முடியோன் படைபோய்த் தனியே யுடல்சேர்ந் தறுமன்னே*
*அரிவாள் கொடுதன் சிரம்வாங் கிலைநீ யணியோ டினிநாளை*
*வருவா யெனவோ தினதே னதுபோ ரறமோ மறமோசொல்*
*தெருவேய் மணிமீ னுருவேய்ந் தொளிருந் திருவேங் கடநின்றாய்.* (10)